சங்க இலக்கியங்களில்
இற்செறித்தலும் உடன்போக்கும்
(எட்டுத் தொகை)

அழகப்பா பல்கலைக்கழக முனைவர் (Ph.D.) பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வேடு

ஆய்வாளர் :

இரா. ரேணுகா காந்தி

மேற்பார்வையாளர் :

முனைவர். **இரா. பாலசுப்பிரமணியன்**

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
P1317

தமிழ்த் துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி - 630 003.

பிப்ரவரி - 2004

முனைவர். இரா. பாலசுப்பிரமணியன். எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,டி.ஜி.டி.,
பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி – 630 003.

நாள் : 12 . 2 . 04

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"**சங்க இலக்கியங்களில் இற்செறித்தலும் உடன்போக்கும்**" எனும் தலைப்பில் **திருமதி. இரா. ரேணுகா காந்தி** அவர்கள் முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காகச் செய்த இவ்வாய்வு, அழகப்பா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப்பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இரா. பா

(இரா. பாலசுப்பிரமணியன்)
மேற்பார்வையாளர்

துறைத்தலைவர்
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003.

திருமதி. இரா. ரேணுகா காந்தி, எம்.ஏ., எம்.ஃபில்,
பிஎச்.டி. ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி –630 003.

நாள்: 12.2.04

ஆய்வாளர் உறுதிமொழி

"சங்க இலக்கியங்களில் இற்செறித்தலும் உடன்போக்கும்" எனும் தலைப்பில் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்காக எழுதப்பெற்ற இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியால் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்குமுன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

இரா. ரேணுகாகாந்தி
(இரா. ரேணுகா காந்தி)

ஆய்வாளர்.

உறுதிக் கையொப்பம்

துறைத்தலைவர்
தமிழ்த்துறை.
அழகப்பா பல்கலைக்கழகம்.
காரைக்குடி-630 003.

முனைவர். இரா. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,டி.ஜி.டி.,
பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி – 630 003.

<u>நன்றியுரை</u>

அழகப்பா பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையில் ஆய்வு நிகழ்த்த அனுமதி வழங்கிய அழகப்பா பல்கலைக் கழகத்தாருக்கும், முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் தே. சொக்கலிங்கம் அவர்களுக்கும் நன்றி.

ஆய்வுத் தலைப்பைத் தெரிவு செய்து ஆய்வு நெறியாளராக இருந்து வழிகாட்டி ஆய்வில் எழுந்த ஐயங்களை நீக்கி, ஆய்வைச் செழுமையுறச் செய்த ஆய்வு நெறியாளர் முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

ஆய்விற்குப் பலவகைகளில் துணைபுரிந்த அழகப்பா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் மு. பாண்டி, முனைவர் சே.செந்தமிழ்ப் பாவை, முனைவர் க. இராசாராம், திரு. மு. நடேசன் ஆகியோருக்கும் என் நன்றிகள்.

இன்முகம் குறையாமல் ஆய்வேடு செம்மை பெறத் தகுந்த ஆலோசனை நல்கிய முனைவர் திரு. க.காந்தி, திரு. மா.கார்மேகம், திருமதி கண்ணாத்தாள் ஆகியோர்களுக்கும் நன்றி. ஆய்விற்குப் பல்லாற்றானும் உதவி நல்கிய செல்வி மு. பஞ்சவர்ணம் அவர்களுக்கும் முனைவர் இரா.கருணாநிதி, செ.சு.நா. சந்திரசேகரன், க.சொல்லேருழவன், சோ. முத்தமிழ்ச் செல்வன், தி. ரமா, பி. மாலதி, சி. விமலா, க. அமுதா, கரு. சமத்துவம், ப. செல்வமீனாள், சி. பரமேஸ்வரி, தாமரைச் செல்வி மற்றும் ஆய்வாளர் நண்பர்களுக்கும் நன்றிகள்.

எனது ஆய்வுப் பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து ஆதரவளிக்கின்ற எனது கணவர் திரு. துரை. கர்ணன் எம்.காம், பிசிடிசிஏ, பிசிடிபிஏ அவர்களுக்கும் நன்றி.

எனது கல்வி வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உதவிய தாய் தந்தையருக்கும், எனது குடும்பத்தை சார்ந்த அத்தை, மாமா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி.

இவ்வாய்வேடு செம்மையாக அமைய உதவிபுரிந்த சகோதரர்கள் திரு.இரா.கணேஷ்குமார், தெ. சந்திரசேகர், நா. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் நன்றி.

ஆய்வேட்டைச் செவ்வனே தட்டச்சு செய்த செல்வி சித்ரா எம்.எஸ்.சி அவர்களுக்கும் நன்றி. ஆய்வுப் பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த திருமதி. கவிதா பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் நன்றி. திரு.வெள்ளைச் சாமி அவர்களுக்கும் நன்றி.

சுருக்கக் குறியீடு

அகம்	–	அகநானூறு
அம்.கோ.	–	அம்பிகாபதிக் கோவை
ஆ.ப	–	ஆறாம் பதிப்பு
ஆ.பெ	–	ஆசிரியர் பெயர்
இ.ப	–	இரண்டாம் பதிப்பு
இளம்	–	இளம்பூரணர்
உ.ஆ.	–	உரையாசிரியர்
ஏ.ப	–	ஏழம் பதிப்பு
ஐங்.	–	ஐங்குறுநூறு
ஒ.ப	–	ஒன்பதாம் பதிப்பு
கலி.	–	கலித்தொகை
கப்.கோ.	–	கப்பற்கோவை
குறுந்.	–	குறுந்தொகை
தஞ். கோ.	–	தஞ்சைவாணன் கோவை
திரு. கோ.	–	திருக்கோவையார்
தொல்,பொருள்,அகம்,	–	தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல்
தொல்,பொருள்,களவு கற்பு,பொருள்	–	தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்,கற்பியல்,பொருளியல்
நச்சர்	–	நச்சினார்க்கினியர்
நற்.	–	நற்றிணை
நா.ப	–	நான்காம் பதிப்பு

நூ.	–	நூற்பா
நூ.ள்.	–	நூற்பாக்கள்
நூ.பெ.	–	நூற்பெயர்
ப.	–	பக்கம்
பக்.	–	பக்கங்கள்
ப.ஆ.	–	பதிப்பாசிரியர்
பா.எ.	–	பாடல் எண்
பா.கோ.	–	பாண்டிக்கோவை
பா.ள்.	–	பாடல்கள்
ம.ப	–	மறு பதிப்பு
மூ.ப	–	மூன்றாம் பதிப்பு
மொ.பெ.ஆ	–	மொழி பெயர்ப்பு ஆசிரியர்
மேலது	–	மேலே உள்ள நூல்
F.E	-	Fifth Edition
PP	-	Pages

உள்ளடக்கம்

		பக்க எண்
1.	முன்னுரை	1-10
2.	இலக்கண மெய்ம்மைகள்	11-150
3.	சங்க இலக்கியத்தில் இற்செறித்தல்	151-214
4.	சங்க இலக்கியத்தில் உடன்போக்கு	215-294
5.	அகமாந்தர்கள்	295-342
6.	பிற்கால வளர்ச்சி	343-371
7.	முடிவுரை	372-383
	துணைநூற்பட்டியல்	384-399

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு - 1

இலக்கண மெய்ம்மைகள் - நூற்பாக்கள் (இரண்டாமியல் தொடர்பானவை)

(அ) இற்செறித்தலைச் சுட்டும் நூற்பாக்கள்

(ஆ) உடன்போக்கினை உணர்த்தும் நூற்பாக்கள்

பின்னிணைப்பு -2

இற்செறித்தல் தொடர்பான துறைப்பாடல்கள் (மூன்றாமியல் தொடர்பானவை)

அட்டவணை:1 -இற்செறித்தலைப் பாடிய புலவர் வகைப்பாடு

அட்டவணை:2 - திணையும் இற்செறித்தலும்

அட்டவணை:3 -கூற்றும் இற்செறித்தலும்

அட்டவணை:4 -இற்செறித்தலைப்பாடிய புலவர்களின் பாடல்கள்

பின்னிணைப்பு -3

உடன்போக்குத் தொடர்பான துறைப்பாடல்கள் (நான்காமியல் தொடர்பானவை)

அட்டவணை:5 -உடன்போக்கைப் பாடிய புலவர் வகைப்பாடு

அட்டவணை:6 -திணையும் உடன்போக்கும்

அட்டவணை:7 -கூற்றும் உடன்போக்கும்

அட்டவணை:8 -உடன்போக்கைப் பாடிய புலவர்களின் பாடல்கள்

இயல் –1

முன்னுரை

அன்றையத் தமிழ்ச் சமூகத்தின் அளப்பரிய நன்கொடை சங்க இலக்கியங்கள் ஆகும். செம்மையான வாழ்வியல் சூழலில் செம்மாந்த சிந்தனையுடன் எழுந்தவை சங்கஇலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் என்பதற்கான தகுதிகளைப் பெற்றவை. கிரேக்க, ரோமானிய இலக்கியங்களுக்கு இணையாகக் கூறப்பெறுவதால் மேலான இலக்கியங்கள் என்றே கூறலாம்.

அகம், புறம் என்ற தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகளையும், இலக்கியக் கொள்கைகளையும் பதிவாக்கிய சங்க இலக்கியங்களைப் பேசும் ஓவியங்கள் என்று குறிப்பிடலாம். உலக இலக்கியங்களில் காணப்பெறும் சிறந்த இலக்கியப் பண்புகளும் இலக்கிய உத்திகளும் சங்க இலக்கியங்களில் இயல்பாய் மிளிர்கின்றன. "சிறந்த இலக்கியங்களில் காணப்படும் மகோன்னதமான மாண்புமிகு பண்பு (excellence) உலகப் பொதுமை (universality) பொதுச்சார்பு நிலை (objectivity) கண்ணியம் (dignity) கட்டுப்பாடு (moderation) கற்பனைத்திறம் (imagination) எளிமை (simplicity) கவிதை அழகு (poetic beauty) பெருந்தன்மை கொண்ட பெருமையான போக்கு (nobility) கருவும் உருவும் ஒன்றி இணைந்து இரண்டறக் கலந்து உள்ளத்தே பசுமரத்தாணி போன்று சென்று உறையும் நிலை (proportion of structure and the union of form) சமன் நிலை (balance) போன்ற பண்புகளைப் பெற்றவை சங்க இலக்கியங்கள் என்று அறிஞர்"[1] மதிப்பிடுவர்.

அத்தகு சங்க இலக்கியங்கள் அகலமான ஆய்வுக்களத்தைப் பெற்றிருப்பது ஆய்வாளர்க்குக் கிடைத்த அளப்பரிய வாய்ப்பாகும். அள்ள அள்ளக் குறையாமல் தமிழரின் சிந்தனைகளை மரபில் நின்று, புதுமையில் சிந்திக்க வைக்கும்

ஆற்றல்மிக்க இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவ்விலக்கியங்களின் பெருமையும், திறமும் கருத்தில் கொள்ளப்பெற்று, ஆய்வாளர் தம் ஆய்விற்குரிய ஆய்வுக்களமாகச் சங்க இலக்கியக் களத்தை அமைத்துக் கொண்டார்.

சங்க இலக்கியம் சார்ந்த ஆய்வுகள் பல்திறத்தனவாக வளர்ச்சி பெற்று வந்துள்ளமையைக் காணலாம். சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட ஆய்வுப் பொருளைக் கருத்தில் கொள்ளுதல், தனிநூல், தனிப்புலவர், தனித்திணை, தனித்துறை என்பன போன்றவைகளைக் கருத்தில் கொள்ளுதல் என்ற நிலையில் ஆய்வு நிகழ்த்தும் முறை பரவலாக உள்ளது. தொல்காப்பியக் கோட்பாடுகளைச் சங்க இலக்கியங்களுடன் பொருத்தி மதிப்பீடு செய்யும் முறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி என மதிப்பிடலாம். சங்க இலக்கியத்தில் பொருள் (content) மட்டும் அல்லாமல் வடிவம் (form), புலப்பாட்டு உத்திகள் (expression Techniques) ஆகியவைகளும் கருத்தில் கொள்ளப்பெற்று ஆய்வுகள் நிகழ்ந்துள்ளமையை அறியமுடிகிறது. அண்மைக்காலங்களில் பல அணுகுமுறைச் சிந்தனைகள், கோட்பாடுகள், பிறதுறைகள் போன்றவைகளையும் சங்க இலக்கியத்தில் தொடர்புபடுத்தி ஆராயும் போக்குக் கவனத்தில் கொள்ளப்பெற்றன. மேற்குறித்தவற்றில் தனித்தனித் துறைகளை மையமிட்டு ஆய்வு நிகழ்த்தும் போக்கு ஆய்வாளரின் கருத்தில் கொள்ளப்பெற்றது.

ஆய்வுத் தலைப்பு

சங்க இலக்கியங்களில் திணை, துறைகள் பலவாக உள்ளன. வரையறை கருதி "சங்க இலக்கியங்களில் இற்செறிப்பும், உடன்போக்கும்" என்ற ஆய்வுத்தலைப்பில் இருதுறைகள் ஆய்விற்குரிய பொருள்களாக அமைத்துக் கொள்ளப்பெற்றன.

ஆய்வு முன்னோடிகள்

துறைகளை மட்டும் ஆய்வுப் பொருளாக்கிய நிலையில் இராம. சண்முகத்தின் சங்க இலக்கியங்களில் 'வரைவு கடாதலும், அறத்தொடு நிற்றலும்' என்ற ஆய்வினைக் குறிப்பிடலாம். இவ்வாய்வு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின்வழி நிகழ்த்தப்பெற்றது. மேலும் இவ்வாய்வு நூலாகவும் வெளிவந்துள்ளது (1993). இவ்வாய்வே அகத்துறைகளில் தனித்துறையைச் சார்ந்த ஆய்வுகளின் முன்னோடியாகத் திகழ்கிறது. இக்கருத்தினை தமிழண்ணல் பதிப்பித்த 'தமிழியல் ஆய்வு'[2] தரும் செய்திகளின் வழியாக அறியமுடிகிறது.

இத்துறைகளைக் குறித்து சங்கஇலக்கியத்தைப் பொதுநிலையில் ஆய்பவர்களும், அகப்பொருள் நிலையில் ஆய்பவர்களும் ஆய்வுசெய்திருக்கலாம். அவ்வாய்விலிருந்து துறைகளைச் சார்ந்த இவ்வாய்வு குறிப்பிட்ட துறைகளை மட்டும் கருத்தில் கொண்டு ஆய்வுசெய்யும் முயற்சியில் அமைந்துள்ளது.

கருதுகோள்

இற்செறித்தல், உடன்போக்குக் குறித்துத் தொல்காப்பியம் மற்றும் பிற இலக்கண நூல்களின் இலக்கண மெய்ம்மைகளை அறிந்து கொள்ளும் முயற்சி கருதுகோளின் முதற்பகுதியில் அடங்கும். இம்முயற்சியின் பின்னணியில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற இற்செறித்தல், உடன்போக்குத் துறைப்பாடல்களை மதிப்பிடும் முயற்சியும், இறுதியில் இத்துறைகளின் பிற்கால வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப் பெற்றநிலையில் கருதுகோள் அமைகிறது.

அணுகுமுறைகள்

இலக்கண மெய்ம்மைகள் குறித்த ஆய்விற்கு விளக்கவியல் அணுகுமுறை (Descriptive approach), வரலாற்று நோக்கு (Historical approach) ஆகியவை அணுகுமுறைகளாக அமைந்தன. இலக்கண மெய்ம்மைகளைச் சங்க இலக்கியங்களுடன் இணைத்துப் பார்க்கும் சூழல், இருதுறைகளின் பிற்கால வளர்ச்சி ஆகியவற்றில் ஒப்பீட்டு அணுகுமுறையும் (comparative approach) பாடிய புலவர்களைப் பற்றி ஆராயும் சூழலில் வரலாற்று அணுகுமுறையுடன், பகுப்பாய்வு அணுகுமுறையும் (Analytical approach) செயல்முறைப்படுத்தப் பெற்றுள்ளன. அகமாந்தர்கள் குறித்த ஆய்வில் சமுதாயவியல் அணுகுமுறை (sociological approach) இணைத்துப் பார்க்கப் பெற்றுள்ளது.

ஆய்விற்கான சான்றாதாரங்கள்

தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப் பொருள், களவியற் காரிகை, இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியன இவ்வாய்விற்குரிய முதன்மைச் சான்றாதாரங்களாக (primary sources) அமைகின்றன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு எழுந்த உரைகளும், இறையனார் களவியலுரையும், நம்பியகப் பொருள் உரையும், களவியற் காரிகை உரையும், இலக்கண விளக்க உரையும், முத்துவீரிய உரையும், சுவாமிநாதம் உரையும், சங்க அக இலக்கியங்களுக்கு எழுந்த உரைகளும், சங்க அகப்பொருள் தொடர்பான நூல்கள், ஆய்வுகள் போன்றவையும் இவ்வாய்விற்குரிய துணைமைச் சான்றாதாரங்களாகக் (secondary sources) கொள்ளப்பெற்றன.

ஆய்வுப் பகுப்பு

"சங்க இலக்கியங்களில் இற்செறிப்பும், உடன்போக்கும்" என்னும் இவ்வாய்வு கீழ்கண்ட ஏழு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

1. முன்னுரை
2. இலக்கண மெய்ம்மைகள்
3. சங்க இலக்கியத்தில் இற்செறித்தல்
4. சங்க இலக்கியத்தில் உடன்போக்கு
5. அகமாந்தர்கள்
6. பிற்கால வளர்ச்சி
7. முடிவுரை

முன்னுரையில், ஆய்வுத் தலைப்பு, ஆய்வு முன்னோடிகள், ஆய்வின் கருதுகோள், ஆய்விற்கான அணுகுமுறை, ஆய்விற்கான சான்றாதாரங்கள், ஆய்வின் பகுப்பு ஆகியன இடம்பெற்றுள்ளன.

இரண்டாமியலில் பொருளும் பாகுபாடும், களவும் வகையும், தோழியிற் புணர்வு-தோழியிற் கூட்டம், இற்செறித்தலைக் குறிக்கும் சொற்கள், இற்செறித்தல் சொல்லாய்வு, இற்செறித்தல் விளக்கம், தொல்காப்பியம் குறிப்பிடும் இற்செறித்தல், தலைவி கூற்று, தோழி கூற்று, தலைவன் கூற்று, இறையனார் களவியல் குறிப்பிடும் இற்செறித்தல், களவியலுரை குறிப்பிடும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், நம்பியகப்பொருள் சுட்டும் இற்செறித்தல், நம்பியகப் பொருளில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், நாற்கவிராச நம்பியின் சிந்தனை, களவியற் காரிகையில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், இலக்கண விளக்கம் கூறும் இற்செறித்தல் கூற்றுப் பற்றிய செய்திகள், சுவாமிநாதம் சுட்டும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள் மற்றும் உடன்போக்கும் பிறசொற்களும், உடன்போக்குச் சொல்லாய்வு, உடன்போக்கு

விளக்கம், தொல்காப்பியம் சுட்டும் உடன்போக்கு, உடன்போக்கும் கூற்றுகளும், தலைவனும் உடன்போக்கும், தொல்காப்பியமும் மேற்கோள் பாடல்களும், தலைவன் கூற்றும் உரையாசிரியர்களும், தலைவியும் உடன்போக்கும், தலைவி கூற்றும் உரையாசிரியர்களும், தோழியும் உடன்போக்கும், தொல்காப்பியத் தோழி கூற்றுகள், தோழி கூற்றும் உரையாசிரியர்களும், நற்றாயும் உடன்போக்கும், நற்றாய் கூற்றுகள், உரையாசிரியர்களும் நற்றாய் கூற்றுகளும், செவிலியும் உடன்போக்கும், உரையாசிரியர்களும் செவிலி கூற்றும், கண்டோரும் உடன்போக்கும், கண்டோர் கூற்றுகள், கண்டோர் கூற்றும் உரையாசிரியர்களும், இறையனார் களவியல் குறிப்பிடும் உடன்போக்கு, நக்கீரர் சிந்தனை, நம்பியகப் பொருள் குறிப்பிடும் உடன்போக்கு, உடன்போக்கும் அறத்தொடு நிற்றலும், உடன்போக்கின் வகையும் விரியும், நாற்கவிராச நம்பியின் சிந்தனை, கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைவிரியும் மேற்கோள் பாடல்களும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், களவியற் காரிகை குறிப்பிடும் உடன்போக்கு, காரிகை குறிப்பிடும் உடனிலைச் செலவு, இலக்கண விளக்கம் தரும் உடன்போக்குச் செய்திகள், உடன்போக்கின் வகையும் விரியும், உடன்போக்கின் கூற்றுகள், கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், முத்துவீரியம் சுட்டும் உடன்போக்கு, உடன்போக்கிற்குரிய கூற்றுகள், சுவாமிநாதம் குறிப்பிடும் உடன்போக்கு, உடன்போக்கின் வகையும் விரியும், சுவாமிநாதமும் உடன்போக்கிற்குரிய கூற்றுகளும், கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், இற்செறித்தலும் மேற்கோள் பாடல்களும், உடன்போக்கும் மேற்கோள் பாடல்களும், இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், உடன்போக்கிற்குரிய கூற்றுகள் ஆகியன சிறுசிறு உட்தலைப்புகளுடன் சான்றுகாட்டி விளக்கப்பெற்றுள்ளன.

மூன்றாமியலில் இற்செறித்தல் விளக்கம், சங்க இலக்கியத்தில் இற்செறித்தல், மிகுதியும் குறைவும், புலவர் வகைப்பாடு, ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், திணையும் இற்செறித்தலும், குறிஞ்சியில் மிகுதி, நெய்தலில் குறைவு, கூற்றும் இற்செறித்தலும், மிகுதியும் குறைவும், பாடிய புலவர்கள், கபிலர் பாடல்கள், உலோச்சனார் பாடல்கள், அம்மூவனார் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல்கள் பாடிய புலவர், மருதனிளநாகனார், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், ஓரம்போகியார், இளவேட்டனார், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், நக்கீரர், பரணர், ஒருபாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள், இலக்கண மெய்ம்மைகள் பொருத்தம், இற்செறித்தலின் தனித்தன்மைகள், இற்செறித்தல் சொல்லாட்சி, இற்செறித்தலின் காரணங்கள், இற்செறித்தலின் களம், இற்செறிக்கும் முறை, இற்செறிக்கும் பொழுது போன்றவை காட்டுகளுடன் உட்தலைப்புக்களில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

நான்காவது இயலில் உடன்போக்கு விளக்கம், சங்க இலக்கியமும் உடன்போக்கும், மிகுதியும் குறைவும், புலவர் வகைப்பாடு, ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், திணையும் உடன்போக்கும், ஐந்திணையில் அடங்குமா? பாலையின் உரிப்பொருள், உடன்போக்குப் பிரிவு, பாலையில் உடன்போக்கு, பாலையில் மிகுதி?, குறிஞ்சியல் உடன்போக்கு, நெய்தலில் குறைவு? கூற்றும் உடன்போக்கும், மிகுதியும் குறைவும் பாடிய புலவர்கள், மிகுதியும் பொருத்தமும், கயமனார் பாடல்கள், பெருங்கடுங்கோ பாடல்கள், கபிலர் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல் பாடிய புலவர், மாமூலனார், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், அம்மூவனார், குடவாயிற் கீரத்தனார், மருதனிளநாகனார், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், ஔவையார், பெரும்பதுமனார், வெள்ளிவீதியார்,

ஒருபாடல் பாடிய புலவர்கள், நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், ஆவூர்க்காவிதிகன் சாதேவனார், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், மதுரை ஆசிரியன் கோடன் கொற்றனார், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் இலக்கண மெய்ம்மைகள் மதிப்பிடல், உடன்போக்கின் தனித்தன்மைகள், உடன்போக்கு சொல்லாட்சி, உடன்போக்கிக் காரணங்கள், உடன்போக்கு நிகழும் சூழல்கள், உடன்போக்கின் பொழுதும் காலமும், உடன்போக்கின் களம், உடன்போகும் முறை முதலானவை எடுத்துக்காட்டுகளுடன் சிறுசிறு தலைப்புகளில் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

ஐந்தாவது இயலில் தொல்காப்பியம் சுட்டும் கூற்றிற்குரியோர். இற்செறித்தலில் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தோழி தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தோழி செவிலியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தோழி உழவரிடம் நிகழ்த்தும் கூற்று, தோழி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவன் நிகழ்த்தும் கூற்றுக்கள், கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் மற்றும் உடன்போக்கில் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்கள், நற்றாய் செவிலியிடம் நிகழ்த்திய கூற்று, நற்றாய் அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்று, தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்று,

செவிலி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்று, கண்டோர் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், கண்டோர் தலைமக்களிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், கண்டோர் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், கண்டோர் நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவன் தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்று, தலைவன் தோழியிடம் நிகழ்த்திய கூற்று, தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவி கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்று, கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் போன்றவை சான்றுகளுடன் சிறு தலைப்புக்களில் விளக்கப்பெற்றுள்ளன.

ஆறாமியலில் இலக்கணங்களில் வளர்ச்சி, இலக்கியங்களில் வளர்ச்சி, சங்க மருவிய கால இலக்கியம் திருக்குறள், திணைமாலை நூற்றைம்பது, பக்தி இலக்கியம், நாலாயிரத்திவ்விய பிரபந்தம், காப்பிய இலக்கியம், கம்பராமாயணம், புராண இலக்கியம், கந்தபுராணம், சிற்றிலக்கியம், திருக்கோவையார், நந்திக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், முத்தொள்ளாயிரம் இருபதாம் நூற்றாண்டு இலக்கியம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், அனிச்ச அடி நாடகம், இராவணகாவியம் என்பன சில எடுத்துக்காட்டு விளக்கங்களின்வழி ஆராயப்பெற்றுள்ளன.

முடிவுரையில் ஐந்து இயல்களிலும் இருந்து பெறப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

துணைநூற்பட்டியலில் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பெற்ற நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், ஆங்கில நூல்கள் ஆகியவை பட்டியலிடப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பு :

பின்னிணைப்பில் இற்செறித்தலைச் சுட்டும் நூற்பாக்கள், உடன்போக்கினை உணர்த்தும் நூற்பாக்கள், இற்செறித்தல், உடன்போக்குத்துறைப் பாடல்கள், இற்செறித்தலைப் பாடிய புலவர் வகைப்பாடு, திணையும் இற்செறித்தலும், கூற்றும் இற்செறித்தலும், இற்செறித்தலைப் பாடிய புலவர்கள், உடன்போக்கினைப் பாடிய புலவர் வகைப்பாடு, திணையும் உடன்போக்கும், கூற்றும் உடன்போக்கும், உடன்போக்கினைப் பாடிய புலவர்கள் என்ற தலைப்புகளில் தரவுகள் அட்டவணையிடப்பட்டுத் தரப்பெற்றுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. ச. அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, ப,20.
2. தமிழண்ணல் (ப.ஆ), தமிழியல் ஆய்வு, ப,127

இயல் –1

முன்னுரை

அன்றையத் தமிழ்ச் சமூகத்தின் அளப்பரிய நன்கொடை சங்க இலக்கியங்கள் ஆகும். செம்மையான வாழ்வியல் சூழலில் செம்மாந்த சிந்தனையுடன் எழுந்தவை சங்கஇலக்கியங்கள். அவ்விலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்கள் என்பதற்கான தகுதிகளைப் பெற்றவை. கிரேக்க, ரோமானிய இலக்கியங்களுக்கு இணையாகக் கூறப்பெறுவதால் மேலான இலக்கியங்கள் என்றே கூறலாம்.

அகம், புறம் என்ற தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகளையும், இலக்கியக் கொள்கைகளையும் பதிவாக்கிய சங்க இலக்கியங்களைப் பேசும் ஓவியங்கள் என்று குறிப்பிடலாம். உலக இலக்கியங்களில் காணப்பெறும் சிறந்த இலக்கியப் பண்புகளும் இலக்கிய உத்திகளும் சங்க இலக்கியங்களில் இயல்பாய் மிளிர்கின்றன. "சிறந்த இலக்கியங்களில் காணப்படும் மகோன்னதமான மாண்புமிகு பண்பு (excellence) உலகப் பொதுமை (universality) பொதுச்சார்பு நிலை (objectivity) கண்ணியம் (dignity) கட்டுப்பாடு (moderation) கற்பனைத்திறம் (imagination) எளிமை (simplicity) கவிதை அழகு (poetic beauty) பெருந்தன்மை கொண்ட பெருமையான போக்கு (nobility) கருவும் உருவும் ஒன்றி இணைந்து இரண்டறக் கலந்து உள்ளத்தே பசுமரத்தாணி போன்று சென்று உறையும் நிலை (proportion of structure and the union of form) சமன் நிலை (balance) போன்ற பண்புகளைப் பெற்றவை சங்க இலக்கியங்கள் என்று அறிஞர்"[1] மதிப்பிடுவர்.

அத்தகு சங்க இலக்கியங்கள் அகலமான ஆய்வுக்களத்தைப் பெற்றிருப்பது ஆய்வாளர்க்குக் கிடைத்த அளப்பரிய வாய்ப்பாகும். அள்ள அள்ளக் குறையாமல் தமிழரின் சிந்தனைகளை மரபில் நின்று, புதுமையில் சிந்திக்க வைக்கும்

ஆற்றல்மிக்க இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் ஆகும். அவ்விலக்கியங்களின் பெருமையும், திறமும் கருத்தில் கொள்ளப்பெற்று, ஆய்வாளர் தம் ஆய்விற்குரிய ஆய்வுக்களமாகச் சங்க இலக்கியக் களத்தை அமைத்துக் கொண்டார்.

சங்க இலக்கியம் சார்ந்த ஆய்வுகள் பல்திறத்தனவாக வளர்ச்சி பெற்று வந்துள்ளமையைக் காணலாம். சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட ஆய்வுப் பொருளைக் கருத்தில் கொள்ளுதல், தனிநூல், தனிப்புலவர், தனித்திணை, தனித்துறை என்பன போன்றவைகளைக் கருத்தில் கொள்ளுதல் என்ற நிலையில் ஆய்வு நிகழ்த்தும் முறை பரவலாக உள்ளது. தொல்காப்பியக் கோட்பாடுகளைச் சங்க இலக்கியங்களுடன் பொருத்தி மதிப்பீடு செய்யும் முறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி என மதிப்பிடலாம். சங்க இலக்கியத்தில் பொருள் (content) மட்டும் அல்லாமல் வடிவம் (form), புலப்பாட்டு உத்திகள் (expression Techniques) ஆகியவைகளும் கருத்தில் கொள்ளப்பெற்று ஆய்வுகள் நிகழ்ந்துள்ளமையை அறியமுடிகிறது. அண்மைக்காலங்களில் பல அணுகுமுறைச் சிந்தனைகள், கோட்பாடுகள், பிறதுறைகள் போன்றவைகளையும் சங்க இலக்கியத்தில் தொடர்புபடுத்தி ஆராயும் போக்குக் கவனத்தில் கொள்ளப்பெற்றன. மேற்குறித்தவற்றில் தனித்தனித் துறைகளை மையமிட்டு ஆய்வு நிகழ்த்தும் போக்கு ஆய்வாளரின் கருத்தில் கொள்ளப்பெற்றது.

ஆய்வுத் தலைப்பு

சங்க இலக்கியங்களில் திணை, துறைகள் பலவாக உள்ளன. வரையறை கருதி "சங்க இலக்கியங்களில் இற்செறிப்பும், உடன்போக்கும்" என்ற ஆய்வுத்தலைப்பில் இருதுறைகள் ஆய்விற்குரிய பொருள்களாக அமைத்துக் கொள்ளப்பெற்றன.

ஆய்வு முன்னோடிகள்

துறைகளை மட்டும் ஆய்வுப் பொருளாக்கிய நிலையில் இராம. சண்முகத்தின் சங்க இலக்கியங்களில் 'வரைவு கடாதலும், அறத்தொடு நிற்றலும்' என்ற ஆய்வினைக் குறிப்பிடலாம். இவ்வாய்வு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின்வழி நிகழ்த்தப்பெற்றது. மேலும் இவ்வாய்வு நூலாகவும் வெளிவந்துள்ளது (1993). இவ்வாய்வே அகத்துறைகளில் தனித்துறையைச் சார்ந்த ஆய்வுகளின் முன்னோடியாகத் திகழ்கிறது. இக்கருத்தினை தமிழண்ணல் பதிப்பித்த 'தமிழியல் ஆய்வு'[2] தரும் செய்திகளின் வழியாக அறியமுடிகிறது.

இத்துறைகளைக் குறித்து சங்கஇலக்கியத்தைப் பொதுநிலையில் ஆய்பவர்களும், அகப்பொருள் நிலையில் ஆய்பவர்களும் ஆய்வுசெய்திருக்கலாம். அவ்வாய்விலிருந்து துறைகளைச் சார்ந்த இவ்வாய்வு குறிப்பிட்ட துறைகளை மட்டும் கருத்தில் கொண்டு ஆய்வுசெய்யும் முயற்சியில் அமைந்துள்ளது.

கருதுகோள்

இற்செறித்தல், உடன்போக்குக் குறித்துத் தொல்காப்பியம் மற்றும் பிற இலக்கண நூல்களின் இலக்கண மெய்ம்மைகளை அறிந்து கொள்ளும் முயற்சி கருதுகோளின் முதற்பகுதியில் அடங்கும். இம்முயற்சியின் பின்னணியில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்ற இற்செறித்தல், உடன்போக்குத் துறைப்பாடல்களை மதிப்பிடும் முயற்சியும், இறுதியில் இத்துறைகளின் பிற்கால வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப் பெற்றநிலையில் கருதுகோள் அமைகிறது.

அணுகுமுறைகள்

இலக்கண மெய்ம்மைகள் குறித்த ஆய்விற்கு விளக்கவியல் அணுகுமுறை (Descriptive approach), வரலாற்று நோக்கு (Historical approach) ஆகியவை அணுகுமுறைகளாக அமைந்தன. இலக்கண மெய்ம்மைகளைச் சங்க இலக்கியங்களுடன் இணைத்துப் பார்க்கும் சூழல், இருதுறைகளின் பிற்கால வளர்ச்சி ஆகியவற்றில் ஒப்பீட்டு அணுகுமுறையும் (comparative approach) பாடிய புலவர்களைப் பற்றி ஆராயும் சூழலில் வரலாற்று அணுகுமுறையுடன், பகுப்பாய்வு அணுகுமுறையும் (Analytical approach) செயல்முறைப்படுத்தப் பெற்றுள்ளன. அகமாந்தர்கள் குறித்த ஆய்வில் சமுதாயவியல் அணுகுமுறை (sociological approach) இணைத்துப் பார்க்கப் பெற்றுள்ளது.

ஆய்விற்கான சான்றாதாரங்கள்

தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப் பொருள், களவியற் காரிகை, இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியன இவ்வாய்விற்குரிய முதன்மைச் சான்றாதாரங்களாக (primary sources) அமைகின்றன.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு எழுந்த உரைகளும், இறையனார் களவியலுரையும், நம்பியகப் பொருள் உரையும், களவியற் காரிகை உரையும், இலக்கண விளக்க உரையும், முத்துவீரிய உரையும், சுவாமிநாதம் உரையும், சங்க அக இலக்கியங்களுக்கு எழுந்த உரைகளும், சங்க அகப்பொருள் தொடர்பான நூல்கள், ஆய்வுகள் போன்றவையும் இவ்வாய்விற்குரிய துணைமைச் சான்றாதாரங்களாகக் (secondary sources) கொள்ளப்பெற்றன.

ஆய்வுப் பகுப்பு

"சங்க இலக்கியங்களில் இற்செறிப்பும், உடன்போக்கும்" என்னும் இவ்வாய்வு கீழ்கண்ட ஏழு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

1. முன்னுரை
2. இலக்கண மெய்ம்மைகள்
3. சங்க இலக்கியத்தில் இற்செறித்தல்
4. சங்க இலக்கியத்தில் உடன்போக்கு
5. அகமாந்தர்கள்
6. பிற்கால வளர்ச்சி
7. முடிவுரை

முன்னுரையில், ஆய்வுத் தலைப்பு, ஆய்வு முன்னோடிகள், ஆய்வின் கருதுகோள், ஆய்விற்கான அணுகுமுறை, ஆய்விற்கான சான்றாதாரங்கள், ஆய்வின் பகுப்பு ஆகியன இடம்பெற்றுள்ளன.

இரண்டாமியலில் பொருளும் பாகுபாடும், களவும் வகையும், தோழியிற் புணர்வு-தோழியிற் கூட்டம், இற்செறித்தலைக் குறிக்கும் சொற்கள், இற்செறித்தல் சொல்லாய்வு, இற்செறித்தல் விளக்கம், தொல்காப்பியம் குறிப்பிடும் இற்செறித்தல், தலைவி கூற்று, தோழி கூற்று, தலைவன் கூற்று, இறையனார் களவியல் குறிப்பிடும் இற்செறித்தல், களவியலுரை குறிப்பிடும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், நம்பியகப்பொருள் சுட்டும் இற்செறித்தல், நம்பியகப் பொருளில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், நாற்கவிராச நம்பியின் சிந்தனை, களவியற் காரிகையில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், இலக்கண விளக்கம் கூறும் இற்செறித்தல் கூற்றுப் பற்றிய செய்திகள், சுவாமிநாதம் சுட்டும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள் மற்றும் உடன்போக்கும் பிறசொற்களும், உடன்போக்குச் சொல்லாய்வு, உடன்போக்கு

விளக்கம், தொல்காப்பியம் சுட்டும் உடன்போக்கு, உடன்போக்கும் கூற்றுகளும், தலைவனும் உடன்போக்கும், தொல்காப்பியமும் மேற்கோள் பாடல்களும், தலைவன் கூற்றும் உரையாசிரியர்களும், தலைவியும் உடன்போக்கும், தலைவி கூற்றும் உரையாசிரியர்களும், தோழியும் உடன்போக்கும், தொல்காப்பியத் தோழி கூற்றுகள், தோழி கூற்றும் உரையாசிரியர்களும், நற்றாயும் உடன்போக்கும், நற்றாய் கூற்றுகள், உரையாசிரியர்களும் நற்றாய் கூற்றுகளும், செவிலியும் உடன்போக்கும், உரையாசிரியர்களும் செவிலி கூற்றும், கண்டோரும் உடன்போக்கும், கண்டோர் கூற்றுகள், கண்டோர் கூற்றும் உரையாசிரியர்களும், இறையனார் களவியல் குறிப்பிடும் உடன்போக்கு, நக்கீரர் சிந்தனை, நம்பியகப் பொருள் குறிப்பிடும் உடன்போக்கு, உடன்போக்கும் அறத்தொடு நிற்றலும், உடன்போக்கின் வகையும் விரியும், நாற்கவிராச நம்பியின் சிந்தனை, கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைவிரியும் மேற்கோள் பாடல்களும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், களவியற் காரிகை குறிப்பிடும் உடன்போக்கு, காரிகை குறிப்பிடும் உடனிலைச் செலவு, இலக்கண விளக்கம் தரும் உடன்போக்குச் செய்திகள், உடன்போக்கின் வகையும் விரியும், உடன்போக்கின் கூற்றுகள், கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், முத்துவீரியம் சுட்டும் உடன்போக்கு, உடன்போக்கிற்குரிய கூற்றுகள், சுவாமிநாதம் குறிப்பிடும் உடன்போக்கு, உடன்போக்கின் வகையும் விரியும், சுவாமிநாதமும் உடன்போக்கிற்குரிய கூற்றுகளும், கற்பொடு புணர்ந்த கவ்வை, கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும், மீட்சி, மீட்சியின் வகைகளும் விரிகளும், இற்செறித்தலும் மேற்கோள் பாடல்களும், உடன்போக்கும் மேற்கோள் பாடல்களும், இற்செறித்தலுக்குரிய கூற்றுகள், உடன்போக்கிற்குரிய கூற்றுகள் ஆகியன சிறுசிறு உட்தலைப்புகளுடன் சான்றுகாட்டி விளக்கப்பெற்றுள்ளன.

மூன்றாமியலில் இற்செறித்தல் விளக்கம், சங்க இலக்கியத்தில் இற்செறித்தல், மிகுதியும் குறைவும், புலவர் வகைப்பாடு, ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், திணையும் இற்செறித்தலும், குறிஞ்சியில் மிகுதி, நெய்தலில் குறைவு, கூற்றும் இற்செறித்தலும், மிகுதியும் குறைவும், பாடிய புலவர்கள், கபிலர் பாடல்கள், உலோச்சனார் பாடல்கள், அம்மூவனார் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல்கள் பாடிய புலவர், மருதனிளநாகனார், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், ஓரம்போகியார், இளவேட்டனார், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், நக்கீரர், பரணர், ஒருபாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள், இலக்கண மெய்ம்மைகள் பொருத்தம், இற்செறித்தலின் தனித்தன்மைகள், இற்செறித்தல் சொல்லாட்சி, இற்செறித்தலின் காரணங்கள், இற்செறித்தலின் களம், இற்செறிக்கும் முறை, இற்செறிக்கும் பொழுது போன்றவை காட்டுகளுடன் உட்தலைப்புக்களில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

நான்காவது இயலில் உடன்போக்கு விளக்கம், சங்க இலக்கியமும் உடன்போக்கும், மிகுதியும் குறைவும், புலவர் வகைப்பாடு, ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள், திணையும் உடன்போக்கும், ஐந்திணையில் அடங்குமா? பாலையின் உரிப்பொருள், உடன்போக்குப் பிரிவு, பாலையில் உடன்போக்கு, பாலையில் மிகுதி?, குறிஞ்சியல் உடன்போக்கு, நெய்தலில் குறைவு? கூற்றும் உடன்போக்கும், மிகுதியும் குறைவும் பாடிய புலவர்கள், மிகுதியும் பொருத்தமும், கயமனார் பாடல்கள், பெருங்கடுங்கோ பாடல்கள், கபிலர் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல் பாடிய புலவர், மாமூலனார், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், அம்மூவனார், குடவாயிற் கீரத்தனார், மருதனிளநாகனார், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், ஔவையார், பெரும்பதுமனார், வெள்ளிவீதியார்,

ஒருபாடல் பாடிய புலவர்கள், நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், ஆவூர்க்காவிதிகன் சாதேவனார், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், மதுரை ஆசிரியன் கோடன் கொற்றனார், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார் இலக்கண மெய்ம்மைகள் மதிப்பிடல், உடன்போக்கின் தனித்தன்மைகள், உடன்போக்கு சொல்லாட்சி, உடன்போக்கிக் காரணங்கள், உடன்போக்கு நிகழும் சூழல்கள், உடன்போக்கின் பொழுதும் காலமும், உடன்போக்கின் களம், உடன்போகும் முறை முதலானவை எடுத்துக்காட்டுகளுடன் சிறுசிறு தலைப்புகளில் எடுத்துக் கூறப்பெற்றுள்ளன.

ஐந்தாவது இயலில் தொல்காப்பியம் சுட்டும் கூற்றிற்குரியோர். இற்செறித்தலில் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தோழி தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தோழி செவிலியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தோழி உழவரிடம் நிகழ்த்தும் கூற்று, தோழி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவன் நிகழ்த்தும் கூற்றுக்கள், கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் மற்றும் உடன்போக்கில் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், நற்றாய் தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்கள், நற்றாய் செவிலியிடம் நிகழ்த்திய கூற்று, நற்றாய் அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்று, தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், செவிலி தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்று,

செவிலி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்று, கண்டோர் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், கண்டோர் தலைமக்களிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், கண்டோர் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், கண்டோர் நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவன் தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள், தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்று, தலைவன் தோழியிடம் நிகழ்த்திய கூற்று, தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவி கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்கள், தலைவி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்று, கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் போன்றவை சான்றுகளுடன் சிறு தலைப்புக்களில் விளக்கப்பெற்றுள்ளன.

ஆறாமியலில் இலக்கணங்களில் வளர்ச்சி, இலக்கியங்களில் வளர்ச்சி, சங்க மருவிய கால இலக்கியம் திருக்குறள், திணைமாலை நூற்றைம்பது, பக்தி இலக்கியம், நாலாயிரத்திவ்விய பிரபந்தம், காப்பிய இலக்கியம், கம்பராமாயணம், புராண இலக்கியம், கந்தபுராணம், சிற்றிலக்கியம், திருக்கோவையார், நந்திக் கலம்பகம், கச்சிக் கலம்பகம், முத்தொள்ளாயிரம் இருபதாம் நூற்றாண்டு இலக்கியம், பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், அனிச்ச அடி நாடகம், இராவணகாவியம் என்பன சில எடுத்துக்காட்டு விளக்கங்களின்வழி ஆராயப்பெற்றுள்ளன.

முடிவுரையில் ஐந்து இயல்களிலும் இருந்து பெறப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

துணைநூற்பட்டியலில் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பெற்ற நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், ஆங்கில நூல்கள் ஆகியவை பட்டியலிடப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பு :

பின்னிணைப்பில் இற்செறித்தலைச் சுட்டும் நூற்பாக்கள், உடன்போக்கினை உணர்த்தும் நூற்பாக்கள், இற்செறித்தல், உடன்போக்குத்துறைப் பாடல்கள், இற்செறித்தலைப் பாடிய புலவர் வகைப்பாடு, திணையும் இற்செறித்தலும், கூற்றும் இற்செறித்தலும், இற்செறித்தலைப் பாடிய புலவர்கள், உடன்போக்கினைப் பாடிய புலவர் வகைப்பாடு, திணையும் உடன்போக்கும், கூற்றும் உடன்போக்கும், உடன்போக்கினைப் பாடிய புலவர்கள் என்ற தலைப்புகளில் தரவுகள் அட்டவணையிடப்பட்டுத் தரப்பெற்றுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. ச. அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, ப,20.

2. தமிழண்ணல் (ப.ஆ), தமிழியல் ஆய்வு, ப,127

இயல் –2

இலக்கண மெய்ம்மைகள்

அன்பின் ஐந்திணை ஒழுகலாறு தமிழ்ப்பண்பாட்டுக்குரியதாகும். இவ்வொழுகலாற்றை, 'களவு, கற்பு' என இரண்டாகப் பிரிக்கலாம். இவற்றுக்கு இலக்கணமும், இலக்கியமும் கண்டது தமிழ்மொழி. இலக்கணங்களில் தொல்காப்பியமும், இலக்கியங்களில் சங்க இலக்கியமும் குறிப்பிடத்தக்கன. தொல்காப்பியம் களவினை நான்கு வகையாகப் பிரித்துள்ளது. இதில் நான்காவதாக அமைவது தோழியிற்கூட்டம் ஆகும். இத்தோழியிற் கூட்டம் பல்வேறு பகுப்புகளைத் தன்னகத்தில் கொண்டுள்ளது . இவற்றுள் இற்செறித்தலும் , உடன்போக்கும் இடம்பெறும்.

அகப்பொருளையும், களவின் வகையையும், அறிமுக நிலையில் விளக்கியபின் இற்செறித்தலும், உடன்போக்கும் விளக்கப்பெறுகின்றன. அவற்றின் சொற்பொருள் விளக்கப் பின்னணியில், கருத்து விளக்கம் தரப்பெறுகிறது. இவ்விரு துறைகள் குறித்து தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, நம்பியகப் பொருள், களவியற் காரிகை, இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இலக்கணங்கள் கூறும் மெய்ம்மைகளை விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

பொருளும் பாகுபாடும்

தமிழ்மொழியில் அகம், புறம் என்னும் இருதிணைப் பொருள் பொதிந்த பாகுபாடு சிறப்புடையதாகக் கருதப்பெறுகிறது. தமிழ் மக்கள் பொருளை அகம், புறம் எனப் பகுத்து இவ்விரு பிரிவினுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் அடக்கிய பாங்கு கருதத்தக்கதாகும்.

"அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆயபயன் தானே அகம் என்றும், புறப்பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான்

அவற்றான் ஆயபயன் பிறர்க்குப் புலனாதலின் புறம்"[1] என்றும் இளம்பூரணர் அகம், புறம் குறித்துப் பேசுவர்.

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார்தாமே யன்றி எல்லார்க்குள் துய்த்துணரப் படுதலானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறமெனவேபடும்"[2] என்று நச்சினார்க்கினியர் இவ்விரு பொருள்கள் குறித்தும் கூறுவர்.

மேற்கூறிய இன்பம் அகப்பொருளிலும், ஏனைய அறம், பொருள், வீடு ஆகிய மூன்றும் புறப்பொருளிலும் அடங்கும். அவ்விருவகை ஒழுக்கங்களில் அகவொழுக்கம் வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைந்து இன்பத்தை உண்டாக்குகிறது. புறவொழுக்கம் அவ்வாழ்க்கைக்குத் துணைநிற்கிறது.

உலகில் உயிர்களின் தோற்றத்திற்கு அகவொழுக்கம் காரணமாக இருப்பதால், எல்லாப் பொருள்களையும்விட அவ்வகப்பொருள் சிறப்புடையதாக அமைகின்றது. அகப்பொருள் காதல் அடிப்படையில் தோன்றி, ஆணும் பெண்ணும் தம்முள் ஒருவரையொருவர் விரும்புவதற்குக் காரணமாகின்றது. உலகில் உள்ள எல்லா உயிர்களும் அகவாழ்வில் ஈடுபட்டு இன்பத்தைத் துய்க்கின்றன என்பதை தொல்காப்பியர்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"[3]

என்ற நூற்பாவின் மூலம் கூறியுள்ளார். இவ்வகம் களவு, கற்பு என்னும் இருபகுப்புகளைத் தன்னகத்தில் கொண்டது.

களவும் வகையும்

பிறரறியாமல் தலைவனும், தலைவியும் தம்முள் இன்பம் துய்த்தல் களவு எனப்படும். களவு என்பதற்குக் 'கரந்து ஒழுகும் ஒழுக்கம்', 'மறையிற் கோடல்' என்றும் பொருள் உண்டு. இக்களவிற் கூட்டத்தைக்

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே"[4]

என்று தொல்காப்பியர் வகைப்படுத்துவர்.

காமப்புணர்ச்சி என்பது இயற்கைப் புணர்ச்சி; இடந்தலைப்படல் என்பது இடந்தலைப்பாடு; பாங்கொடு தழாஅல் என்பது பாங்கற் கூட்டம்; தோழியிற் புணர்வு என்பது தோழியிற் கூட்டம்"[5] என்பர். தோழியிற் புணர்வு என்பது களவில் நான்காவதாக அமைந்துள்ளது. ஆகையால் தோழியிற் கூட்டத்தைக் களவில் நான்காம் நாள் நிகழும் கூட்டம் என்று கொள்வர்.

தோழியிற் புணர்வு – தோழியிற் கூட்டம்

தோழியிற் கூட்டம் என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியம் எவ்விடத்திலும் கையாளவில்லை. தொல்காப்பியர் தோழியிற் புணர்வு என்று கூற, முதல்

உரையாசிரியராகிய இளம்பூரணர், தோழியிற் கூட்டம் என்று கொண்டார். இளம்பூரணர் ஆட்சியால் இது தொன்றுதொட்டு வந்த மரபிலக்கணச்சொல் என்பது புலனாகிறது.

"தோழியிற் கூட்டமாவது இவற்றின் பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல்"[6] என்பர். தலைவன், தன்னுடன் தலைவியைச் சேர்த்து வைக்குமாறு தோழியிடம் இரந்து வேண்டுகிறான். இதன் வாயிலாகத் தலைவனும், தலைவியும், தோழியால் கூடுங் கூட்டம் தோழியிற் கூட்டம் என்பது பெறப்பெறுகிறது.

களவு என்னும் கைகோளில் நான்காவதாகத் தோழியிற் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதனுள் பாங்கி மதியுடன்பாடு, பகற்குறி, இரவுக்குறி, அலர், மடலேறுதல், வெறியாட்டு, நொதுமலர் வரைவு, வரைவு கடாதல், அறத்தொடு நிற்றல், ஒருவழித் தணத்தல் என்று பல்வேறு பிரிவுகள் அடங்கியுள்ளன. இப்பிரிவுகளில் இற்செறித்தலும், உடன்போக்கும் அடங்கும்.

இற்செறித்தலைக் குறிக்கும் சொற்கள்

தோழியிற் கூட்டத்தில் 'இற்செறித்தல்' என்ற ஒன்றைத் தொல்காப்பியமும், உரையாசிரியர்களும் ஏற்றுக்கொண்டு இருக்கின்றனர். இற்செறித்தல் என்ற சொல்லைக் குறிக்க மனைப்பட்டுக் கலங்குதல் (தொல்.களவு-21;12) காப்பின் கடுமை, (தொல்.களவு-24;30) தமர் தற்காத்தல் (தொல்.களவு-21;26) காப்புச்சிறை (இறை.களவு.உரை-30) ஆகிய சொற்களை இலக்கணிகள் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் பிற்கால இலக்கண நூலாகிய நம்பியகப் பொருள்"[7] உள்ளிட்ட இலக்கண நூல்கள் இற்செறித்தல் என்ற சொல்லாட்சியை நேரடியாகக் கையாண்டுள்ளன.

இற்செறித்தல் சொல்லாய்வு

இற்செறித்தல் என்ற தொடர் இல் + செறித்தல் என்ற இரு கிளவிகளின் இயைபு. இல் என்ற சொல்லுக்கு "இடம், வீடு உள்ளிட்ட பொருள்களைத் தமிழ்ப் பெயரகராதி"[8] குறிப்பிடுகின்றது. இவற்றுள் வீடு என்பது ஈண்டு இயைவது. செறித்தல் என்ற சொல்லிற்கு அழித்தல், கொல்லல், சேர்த்தல், நெரித்தல், பாதீடு, சூழ்கல், இறுக்குதல், அடைத்தல், அடக்குதல், பத்திரமாகவைத்தல், திரட்டுதல், திணித்தல்.... அடங்கிய பதினேழு பொருள்களைச்"[9] சுட்டுவர். இவற்றுள் அடைத்தல், அடக்குதல், பாத்திரமாகவைத்தல் என்பன பொருத்தமுடையன. இக்குறிப்புகளான் தலைவியைப் புறத்தே செல்லவிடாது, பெற்றோர் வீட்டினுள் அடைத்துப் பத்திரமாகவைத்தல் இற்செறித்தல் என்பது புலனாகிறது.

பிங்கல நிகண்டு 'இல்' என்பதற்கு "மனைவி, வீடு, இல்லையெனல், இடம், இராசி"[10] என்ற ஐந்து பொருள்களைச் சுட்டுகிறது. இதில் வீடு என்பது ஈண்டு பொருந்தும்.

“செறித்தல் என்பது அளித்தல், பெய்தல்"[11] என்ற பொருள்களைக் குறிப்பிடுகிறது. இக்குறிப்புகளான் பெற்றோர் தலைவியை வீட்டினுள் பெய்தல், இற்செறித்தல் ஆகும் என்ற கருத்துப் புலனாகிறது.

இற்செறித்தல் விளக்கம்

மதுரைத் தமிழ்ப் பேரகாரதி "இற்செறிப்பு என்பதற்குக் கன்னியை வீட்டிலிருத்திக் காப்பாற்றுதல்"[12] என்று பொருள் விளக்கம் கூறுகிறது. செந்தமிழ் பேரகரமுதலி இற்செறித்தலுக்கு விளக்கம் கூறும் பொழுது "தலைவனைச்

சந்தித்தற்கிடமின்றிப் பெற்றோர் தலைவியை அவள் அகவை நோக்கி வீட்டினுள் இருத்துதல்"[13] (திருக்;134) (To restrain the heroine within the parental house in view of her adolescene and thus indirectly impede her meeting her lover) எனச் சுட்டுகிறது.

தலைவிக்குத் தினைப்புனத்தைக் காவல் புரியும் தொழில் இன்மையால் அவள் வீட்டினின்று வெளிச்செல்லமாட்டாள். இதனை இற்செறிப்பு என்பர். எனவே தலைவி தலைவனைச் சந்திக்க இயலாமற் போய்விடும்"[14] என்று குறிப்பிடுவர்.

மேற்கூறிய கருத்துக்களில் இருந்து பருவம் எய்திய தலைவியைப் பெற்றோர் வீட்டினுள் வைத்துப் பாதுகாத்தல் இற்செறித்தல் என்ற பொருளில் ஆளப்பெற்றுள்ளதும், தலைவி புறத்தே செல்லாததால் தலைவனைச் சந்திக்க இயலாமற் போனதும் புலப்படுகிறது. தலைவி தான் வினைமேற் சென்ற காலம் முடிந்தபிறகு வீட்டினுள் இயல்பாகத் தங்கிவிடுகிறாள். இவ்வாறு தலைவி வீட்டின் புறத்தே செல்லாது வீட்டினுள் இருத்தலுக்கும் இற்செறித்தல் என்ற சொல்லாட்சி ஆளப்பெறுகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் இற்செறித்தல்

இந்நூல் இலக்கண நூல்களுள் மிகவும் பழமையானது; எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது; பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் ஆகிய ஐந்து இயல்களில் அகப்பொருள் பற்றிக் கூறப்பெறுகின்றது. செய்யுளியலிலும் சில செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தலைவி கூற்று

தொல்காப்பியக் களவியலில் "இற்செறித்தல் பற்றிய செய்தி இருபத்தென்றாவது நூற்பாவில் (கழகப்பதிப்பு - இளம் உரை)"[15] இடம்பெற்றுள்ளது. இந்நூற்பா தலைவி கூற்றுகளைத் தொகுத்துக் கூறுகின்றது. இவ்வாறு இடம்பெற்றுள்ள தலைவி கூற்றில் 'இற்செறித்தல்' என்ற சொல்லிற்கு ஈடாக 'மனைப்பட்டுக் கலங்குதல்', தமர் தற்காத்தல் என்ற சொற்களைத் தொல்காப்பியர் கையாண்டுள்ளார்.

தொல்காப்பியத்தில் இற்செறித்தல் இடம்பெறும் செய்தியைக் குறிக்கும் நூற்பாவானது முப்பத்தாறு அடிகள் கொண்டது. இதில் பன்னிரெண்டாவது அடியிலும், இருபத்து ஆறாவது அடியிலும் இடம்பெறும் இற்செறித்தலின் கூற்றுக்களை,

"மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்நவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தனும்"[16]
"தமர் தற்காத்த காரண மருங்கினும்"[17]

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

இளம்பூரணர் "மனைப்பட்டு அருமறை யுயிர்த்தலும் என்பது -புறத்து விளையாடுதல் ஒழிந்து மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்குச் சூழ்தலமைந்த அரிய மறைப்பொருளைச் சொல்லலும்"[18] என்றும் "எனவே

சிதையாதவழித் தோழிக்குச் சொல்லாளாம் என்பது போந்தது"[19] என்றும் விளக்குவர்.

"மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்த வழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும் –காப்பு மிகுதிக்கண் மனையகப்பட்டுக் கலங்கி உணர்வு அழிந்தவழித் தலைவி ஆராயிச்சியுடைத்தாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறுதலும் உள"[20] என நச்சர் உரைப்பர்.

மேற்குறித்த கருத்துக்களில் இருந்து தலைவி வீட்டின் புறத்தே போகாதவாறு, பெற்றோரால் வீட்டின் உள்ளேயே அடக்கி வைக்கப்பட்டுள்ளமையும், தலைவியின் இந்நிலையே மனைப்பட்டுக் கலங்குதல் என்பதும் பெறப்பெறுகிறது. மனைப்பட்டதன் காரணமாகத் தலைவி கலங்கிச் சிதைந்தாள் என்று இளம்பூரணர் குறிக்க, நச்சர் இதைச் சற்று விரிவாகத் தலைவி உணர்வு அழிந்து கலங்கினாள் என்று கூறுவர்.

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும் என்ற கூற்றிற்கு இளம்பூரணர் காட்டிய சான்றினை நச்சினார்க்கினியரும் எடுத்தாண்டுள்ளார். அச்சான்றுகள் திணைமொழி ஐம்பது (பா.எண்;10) குறுந்தொகை (161) ஆகியவற்றிலிருந்து கையாளப்பட்டுள்ளன. இதுதவிர கூடுதலாக மற்றொரு சான்றினையும் (நற்;61) நச்சர் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தலைவியின் மற்றொரு கூற்று

இற்செறித்தல் துறையில் தலைவி நிகழ்த்தும் மற்றொரு கூற்றானது தமர் தற்காத்தல் நிலையில் நிகழ்த்தப் பெற்றுள்ளது. இக்கூற்றிற்கு உரை எழுதிய இளம்பூரணர் தமர் தற்காத்த காரணமருங்கினும் என்பது தன்னைத் தமர் காத்த காரணப் பக்கத்தினும்"[21] என்றும் ஐயமுற்றுக் காத்தல்"[22] என்றும் கூறுவர்.

நச்சர் சிந்தனை

இக்கருத்தினைச் சற்று விரிவாக விளக்கும் நச்சர் தமர் தற்காத்த காரண மருங்கினும் – அங்ஙனம் அதன்றலைச் செவிலி முதலிய சுற்றத்தார் தலைவியைக் காத்தற்கு ஏதுவாகிய காரணப்பகுதிக்கண்ணும்"[23] என்றும் காரணமாவன தலைவி தோற்றப்பொலிவும், வருத்தமும், அயலார் கூறும் அலருமாம்"[24] என்றும் உரை வரைகுவர். இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 1 தொல்காப்பியமும் நச்சினார்க்கினியரும்

வ.எ.	தொல்காப்பியம்	நச்சினார்க்கினியர்
1.	தமர் தற்காத்த காரணமருங்கினும் கூறல்	1. செவிலி முதலிய சுற்றத்தார் தலைவியைக் காத்தற்கு ஏதுவாகிய காரணப் பகுதிக் கண் கூறல்.
		2. தலைவியின் தோற்றப் பொலிவுகண்டு தமர் தற்காத்தற்கண் கூறல்.
		3. தலைவியின் வருத்தம் (உள்ள வேறுபாடு) கண்டு தற்காத்தற்கண் கூறல்.
		4. அயலார் கூறும் அலர் காரணமாக தமர் தற்காத்தற்கண் கூறல்.

தலைவியின் வேறுபாடு கண்டு இற்செறித்தமை தன்னுள்ளே கூறியதற்கும் (குறுந்;401) பிறர் கூற்றால் தமர் தற்காத்தற்கும் (அகம்;20, குறுந்;246) தோற்றப் பொலிவு கண்டு தமர் காத்தற்கும் (அகம்;7) சான்றுகள் காட்டியுள்ளார்.

வெள்ளைவாரணர் "பெற்றோர் தன்னைப் புறத்துப் போகாதவாறு இல்லிக்கண் செறித்தல் காரணமாக அமைந்த பக்கத்தும்"[25] என்பர். மேலும் "தலைவி தன் உள்ளக் கருத்தினைத் தோழிக்கு உரைத்தல் என்பது தான் இற்செறிக்கப்பட்டுக் கலங்கித் தன் மேனி மெலிவுற்ற நிலையிலேயேயாம். தலைவி இற்செறிக்கப்பெற்ற நிலையில் தலைவனைக் கண்டு அளவளாவும் நிலையேற்படுதல் இயல்பாதலின் இது பற்றித் தோழிக்கு உரைக்க வேண்டிய இன்றியமையாமை நேராது"[26] என்பர்.

இக்கருத்துகளில் இருந்து இளம்பூரணரும் வெள்ளைவாரணரும் தொல்காப்பியர் கருத்திற்கு உடன்படுகின்றனர். நச்சர், தொல்காப்பியம் சுட்டிய 'காரணமாவன' என்பதைக் கொண்டு புதியதாக மூன்று கூற்றினை அமைத்து உரை வரைந்திருந்திருப்பது கருதத்தக்கது.

நச்சர் காட்டும் புதுமை

இதற்கு அடுத்த கூற்றின்கண்ணும் நச்சர் இற்செறித்தலின் கூற்றினை அமைத்துள்ளார். அஃதாவது தன்குறி தள்ளிய தெருளாக் காலை வந்தனன் பெயர்ந்த வருங்களம் நோக்கித் தன் பிழைப்பாகத் தழீஇத் தேறலும் – தலைவி தன்னாற் செய்யப்பட்ட குறியிடங்கள் இற்செறிப்பு முதலிய காரணங்களான் இழக்கப்பட்டனவற்றை, இவை இழக்குமென முன்வரவே உணராத காலத்து, முற்கூறிய குறியிடமே இடமாக வந்து தலைவன் கூடாது பெயர்தலால், தமக்கும் பயம் படாத வறுங்களத்தை நினைந்து, அதனைத் தலைவற்கு முந்துறவே

குறிபெயர்த்திடப்பெறாத தவறு தன்மேல் ஏற்றிக்கொண்டு தோழியையும் அது கூறிற்றிலளெனத் தன்னொடு தழீஇக் கொண்டு தலைவி தெளிதற்கண்ணும்; ஆகவே அவன் தவற்றைத் தன் தவறு ஆக்கினளாம். தழீஇ, தோழியைத் தழீஇ. அத்தவறு அவன்கட் செல்லாமல் தனதாகத் தேறினாள்"[27] என்பர். இக்கூற்றின் கண்ணும் நச்சர் இற்செறித்தலில் தலைவி நிகழ்த்தும் கூற்றினை அமைத்திருப்பது கருதத்தக்கதாகும்.

இளம்பூரணர் தலைவி நிகழ்த்தும் கூற்றாக இரண்டினைக் குறித்துள்ளார். நச்சினார்கினியர் ஆறாகச் சுட்டிச் செல்கிறார். அனைத்துக் கூற்றுகளுக்கும் சான்றுகள் காட்டி உரை வரைந்திருப்பது குறிக்கத்தக்கது. வெள்ளைவாரணர் சான்று எதையும் காட்டவில்லை.

தோழி கூற்று

களவியலில் மற்றொரு இடத்திலும் (நூ.எ;112) தொல்காப்பியர் இற்செறித்தலைக் குறிப்பிட்டுச் செல்கிறார். இக்கூற்றுத் தோழிக்குரிய கூற்றாகத் திகழ்கிறது. இந்நூற்பா நாற்பத்தாறு அடிகள் கொண்டது. இதில் முப்பதாவது அடியில் இற்செறித்தலைக் குறிக்க 'காப்பின் கடுமை' என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். இதனை,

"காப்பின் கடுமை கையற வரினும்"[28]

என்ற நூற்பா அடியின்வழி அறியலாம்.

இதற்கு இளம்பூரணர் "காவற் கடுமை வரையிறந்ததனானும்"[29] என்று பொருள் கூறுவர். இக்கருத்தினைச் சற்று விரிவாக, "காப்பின் கடுமை கையற

வரினும் – காத்தற்றொழிலால் உண்டாங் கடுஞ்சொற்கள் களவொழுக்கத்தடத்தே எல்லையற வருமிடத்தும்"[30] என்று குறிப்பர்.

இதற்கு வெள்ளைவாரணர் "தலைமகளை இற்செறித்துக் காத்தலின் எல்லை கடந்தமையாலும்"[31] என்பர்.

மேற்கூறிய கருத்துக்களில் இருந்து காப்பின் கடுமை கையற வரினும் என்ற கூற்றிற்கு இளம்பூரணர் எளிமையான உரையினை வரைந்திருப்பதும், காப்பின் கடுமை எல்லை கடந்த நிலையில் தோழி கூற்று நிகழ்த்துகிறாள் என்ற கருத்திற்கு நச்சரும் வெள்ளைவாரணரும் உடன்பட்டிருப்பதும் பெறப்பெறுகிறது. நச்சினார்கினியர் 'காப்பின் கடுமை' என்று பொதுவாகக் குறிக்க, வெள்ளைவாரணரோ தலைமகளை இற்செறித்துக் காத்தலின்கடுமை என்று காப்பிற்கு உரியவள் தலைவி என்று தெளிவாக வரையறை செய்துள்ளமை குறிக்கத்தக்கது.

காப்பு வரையிறந்ததற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளை இளம்பூரணர் குறித்துள்ளார். அக்காட்டுகள் குறுந்தொகையிலிருந்து (244,69) எடுத்தாளப்பட்டுள்ளன. இக்கூற்றிற்கு நச்சினார்க்கினியர் ஒரு சான்றினை (அகம்;2) மட்டும் காட்டி உரை வரைந்துள்ளார்.

தலைவன் கூற்று

இற்செறித்தல் துறையில் தலைவனுக்குரிய கூற்றினைத் தொல்காப்பியர் அமைக்கவில்லை. இந்நூலின் முதல் உரையாசிரியராகிய இளம்பூரணரும் தலைவன் கூற்றினைச் சுட்டவில்லை. ஆனால் நச்சர் இற்செறித்தல் துறையில் தலைவன் நிகழ்த்தும் கூற்றினைக் குறித்துச் செல்கிறார்.

நச்சர் காட்டும் புதுமை

தலைவன் இருவகைக் குறியிலும், பல்வேறு சூழல்களில் வருந்தும் போதெல்லாம், கூற்று நிகழ்த்துவதாக நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். இச்சூழல்களை உணர்த்துவது களவியலில் பனிரெண்டாவது நூற்பாவாகும். இந்நூற்பாவில் 'பரிவுற்று மெலியினும்' என்பதற்குப் புணர்ந்து நீங்கும் தலைவன் ஆற்றாது கூறுவனவும், வறும்புனங்கண்டு கூறுவனவும், இற்செறிப்பறிவுறுப்ப ஆற்றானாய்க் கூறுவனவும், தோழியிற் புணர்ச்சிக்கண் தன்னிலைக் கொளீஇக் கூறுவனவும், இரவுக்குறிக்கண் வருகின்றான் தலைவியை ஐயுற்றுப் பாங்கற்குக் கூறுவனவும் இதன்கண் அமைக்க"[32] என்பர். அவ்வகையில் இற்செறித்தல் துறையில், தலைவன் நிகழ்த்தும் கூற்றினை, இந்நூற்பாவின் உரையில் நச்சர் மட்டும் குறித்துச் செல்வது கருதத்தக்கது.

இறையனார் களவியல் குறிப்பிடும் இற்செறித்தல்

இறையனார் களவியல் (கி.பி.8) என்னும் நூல் அறுபது நூற்பாக்கள் கொண்டது. சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் பெற்றித்தாய் மிளிர்கின்றது. கடல்போல் பரந்த அகப்பொருள் விரிவை அங்கை நெல்லியெனச் சுருக்கி விளக்குவது இவ்வரிய அகப்பொருள் நூலாகும். வரைவு கடாவும், இலக்கணம் எல்லாம் தொகுத்துச் சொல்லும் விரிவான சூத்திரம் ஒன்றும், இவ்விறையனார் அகப்பொருளில் காணப்பெறுகிறது. இச்சூத்திரம் ஒன்பது அடிகள் கொண்டது. இதில் இற்செறித்தல் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. இற்செறித்தலைக் குறிக்க 'காப்புச் சிறை' என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். இதனை,

"காம மிக்க கழிபடர் கிளவியும்

காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்....."[33]

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம்.

இந்நூற்பாவின் இரண்டாவது அடியாகக் 'காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்' என்பது அமைகிறது. இதற்கு நக்கீரர் 'காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும் என்பது - காப்புச் சிறை மிகவினாற் கையற்றுச் சொல்லுஞ் சொல்"[34] என்பர்.

தொல்காப்பியர் இற்செறித்தலுக்கு ஈடாகக் 'காப்பின் கடுமை' என்ற சொல்லைக் குறிக்க, இறையனார் களவியல் 'காப்புச் சிறைமிக்க' என்று சிறை என்ற சொல்லாட்சியைக் கூடுதலாகக் கையாண்டுள்ளது. ஆனால் நக்கீரர் தனது உரையில் இற்செறித்தல் (நூ.எ;18) என்ற சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். இறையனார் களவியலுரை இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை நேரடியாக நூற்பாவில் சுட்டவில்லை. நக்கீரர் சூத்திரம் 12-க்கு உரை வரையும்போதும், சூத்திரம் 18-க்கு உரை எழுதும்போதும், இற்செறித்தலைப் பற்றியும், இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களைப் பற்றியும் விளக்கிச் செல்கிறார்.

நக்கீரர் சிந்தனை

குறியின் வகைகளை விளக்குமிடத்தும்(சூ.எ.18) முன்னுறு புணர்ச்சியை குறிக்குமிடத்தும்(சூ.எ;12)இற்செறித்தலுக்குரியகூற்றுகளை நக்கீரர் விளக்கியுள்ளார். அவ்விளக்கம் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பெற்றுள்ளது.

2 : 2 களவியலுரை குறிப்பிடும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்[35]

வ.எண்.	இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்	சான்றில் இடம்பெறும் கூற்றுகள்
1.	தோழி சிறைப்புறமாகத் தலைமகனுக்கு இற்செறிப்பு உணர்த்தல்	(1) தாயறிவுரைத்தல் (2) புனத்தொடுவைத்துக் குறிப்புரை கிளத்தல்
2.	தோழி தலைமகற்கு முன்னின்று சொல்லுதல்	---
3.	தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழியாக இற்செறிப்பு அறிவுறுத்தல்	பணிமொழிப்பாங்கி கணியொடு கூறல்
4.	தோழி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்	சூளுறூஉந் தோன்றற்குத் தோழி கூறல்
5.	சிறைபுறக் கிளந்து சேட்பட நிறுத்தல்	தோழி இற்செறிப்பறிவுறுப்ப, தலைவன் ஆற்றனாகியதைத் தோழி கூறல்

என்பதாகும். இதில் நக்கீரர் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளாக ஐந்து கூற்றுகளை வரையறுக்கிறார். இவை ஐந்தும் தோழி கூற்றாக அமைந்துள்ளன. நச்சர் தலைவன் கூற்றாகச் சுட்டியதை இந்நூல் தோழி கூற்றில் கொண்டு கூறியுள்ளது. அக்கூற்று இத்துறையின் இறுதிக் கூற்றாகும். தொல்காப்பியர் தலைவிக்கு இரு கூற்றினையும் தோழிக்கு ஒரு கூற்றினையும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளாக வரையறை செய்துள்ளார். ஆனால் இந்நூல் ஐந்தாக விரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2 : 3 நக்கீரரின் மேற்கோள் பாடல்கள்[36]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	தாயறிவுரைத்தல்	நீர்வண்ணன் வெண்திரை	பா.கோ;150
		உளமலை யாமைத்	–
2.	புனத்தொடுவைத்துக்	செயல்மன்று மாவது	பா.கோ;151
	குறிப்புரை கிளத்தல்	என்னேர் அழியா	பா.கோ;152
3.	பணிமொழிப்பாங்கி	திரையார் குருதிப்	பா.கோ;153
	கணியொடு கூறல்	வானுடை யான்முடி	பா.கோ;154
		நன்றுசெய் தாயல்ல	பா.கோ;155
		உலம்புனை தோள்மன்னர்	–
		பொருங்கண்ணி சூடிவந்	–
		பைந்நின்ற ஆடர	பா.கோ;158
4.	சூளுறூஉந் தோன்–	நெய்யொன்று வேல்நெடு	பா.கோ;159
	றற்குத்தோழி கூறுதல்	திரைப்பால் இரும்புனற்	–
		வெள்ளி விழுத்தொடி	அகம்; 286

நக்கீரர் பாண்டிக்கோவை மற்றும் அகநானூறு ஆகியவற்றிலிருந்து இக்கூற்றுகளுக்குச் சான்றுகள் தந்துள்ளார் பணிமொழிப்பாங்கி கணியொடு கூறல் என்பதற்கு ஆறு பாடல்களையும், சூளுறூஉந் தோன்றற்குத் தோழி கூறலுக்கு மூன்று பாடல்களையும், தாயறிவுரைத்தலுக்கு இரண்டு பாடல்களையும். புனத்தொடுவைத்துக் குறிப்புரை கிளத்தல் என்ற கூற்றிற்கு இரண்டு பாடல்களையும் சான்றாகக் கூறியுள்ளார். தோழி தலைமகற்கு முன்னின்று சொல்லுதல் என்ற ஒரு கூற்றிற்கும் தலைவன் ஆற்றனாகியதைத் தோழி கொண்டு கூறியதற்கும் மேற்கோள் காட்டவில்லை என்பது கருதத்தக்கது.

நம்பியகப் பொருள் சுட்டும் இற்செறித்தல்

நாற்கவிராச நம்பியின் அகப்பொருள் விளக்கம் (கி.கி.12) அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் முதலாவதாக இடம்பெறும் அகத்திணையியலில் அகத்துறை சார்ந்த செய்திகள் சுருக்கமாக வரையறுத்துக் கூறப்பெற்றுள்ளன. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாயாக அமைந்த ஏழு அகத்திணைகள், அவற்றிற்குரிய நிலம், பொழுது, கருப்பொருட்கள், இயற்கைப் புணர்ச்சி, உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி, பகற்குறி, இரவிக்குறியின் இலக்கணம், வரைவின் இலக்கணம் ஆகியன விளக்கப்பெற்றுள்ளன. இவை போன்ற அகம் சார்ந்த செய்திகளைக் கூறி வருங்கால் இற்செறிப்புப் பற்றிய குறிப்பையும் குறித்துச் செல்கிறார்.

இந்நூலில் ஒருசார் பகற்குறியின் வகையில் இற்செறித்தல் பற்றிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. இதனை,

"இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி"[37]

என்பர்.

"இரங்கலும்,வன்புறையும், இற்செறிப்புணர்த்தலும் என மூன்று வகையினை உடைத்து ஒரு கூற்றுப் பகற்குறி"[38] என்று நாற்கவிராச நம்பி குறிப்பிடுவர்.

தொல்காப்பியர் இற்செறித்தலை 'மனைப்பட்டுக் கலங்குதல் என்ற பெயரால் கையாண்டுள்ளார். ஆனால் நாற்கவிராச நம்பி இற்செறித்தல் என்ற சொல்லாட்சியை நேரடியாகக் கையாண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இற்செறித்தலை

ஒருவகையாக்கி, ஒருசார் பகற்குறியின் வகைகளில் ஒன்றாக அடக்கியிருப்பது சிறப்புடையதாகும்.

நம்பியகப் பொருளில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்

"நம்பியகப் பொருளின் களவியலில் ஒருசார் பகற்குறியின் விரியினை உணர்த்தும் நூற்பா இடம்பெற்றுள்ளது. இந்நூற்பா பதினான்கு அடிகள் கொண்டது. இதில் ஒன்பதாம் அடி முதல் பதின்மூன்றாவது அடி வரையுள்ள செய்திகள் இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களை உணர்த்துபவை ஆகும்."[39]

இதில் ஐந்து துறைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் நான்கு தோழி கூற்றாகவும் ஒன்று தலைவன் கூற்றாகவும் சுட்டப்பெற்றுள்ளன. இங்கு தலைவன் கூற்றினைக் கேட்கும் பாத்திரமாகப் படைக்கப்பெற்றுள்ளன. தலைவன் கூற்றில் மட்டும் அவனது நெஞ்சம் கூற்றினைக் கேட்கும் முகமாக அமைக்கப்பெற்றுள்ளது.

நாற்கவிராச நம்பியின் சிந்தனை

இப்பகுதிக்கு உரை எழுதிய நம்பி இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களைப் பற்றிக் கூறுவன.

(1) தோழி சிறைப்புறமாகத் தலைமகற்குச் செறிப்பறிவுறுத்தல்

(2) தோழி தலைமகற்கு முன்னிலைப்புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்.

(3) பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தல்

(4) பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்.

(5) தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்

என்பதாகும். இறையனார் களவியலைப் போன்று இந்நூலும் இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களை ஐந்தாக வரையறை செய்துள்ளது. இத்துறைக்குரிய கூற்றுகளைத்

தொல்காப்பியர் தலைவிக்கும், தோழிக்கும் வரையறை செய்ய, நம்பியகப் பொருளோ தோழிக்கும், தலைவனுக்கும் இக்கூற்றுக்களை வரையறை செய்துள்ளமை கருதத்தக்கதாகும்.

நம்பியகப் பொருளும் மேற்கோள் பாடல்களும்

நம்பியகப் பொருள் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளாக ஐந்திணைக் குறிப்பிடுகின்றது. இவைகள் எல்லாவற்றிற்கும் நம்பி மேற்கோள் காட்டியுள்ளார். இதனைப் பின்வரும் அட்டவணையின் வழி அறியலாம்.

2 : 4 நம்பியகப்பொருளில் மேற்கோள் பாடல்கள்[40]

வ.எ.	கூற்றகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	தோழி சிறைப்புறமாகத் தலை-மகற்குச் செறிப்பறிவுறுத்தல்	தொடைக்கணி	த.கோ;151
		வினைவிளையச்	தி.நூ;5
2.	தோழி தலைமகற்கு முன்னிலைப் புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்	பயில்காள பந்திப்	த.கோ;152
		முறஞ்செவி யானைத்	நற்;376
3.	பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தல்	கானலங் கான்மலர்க்	த.கோ;153
		மால்வரை வெற்ப	ஐ.ஐ;12
4.	பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்	கனஞ்சாய நல்கிய	த.கோ;154
		எறிந்தெமர் தாமுழுத	ஐ.ஐ;18
5.	தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்	ஏவல ரேய்	த.கோ;155
		பெறுவதியையா	குறுந்;199

மேற்குறித்த அட்டவணையின் வழி நாற்கவிராச நம்பி இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களுக்கு தஞ்சைவாணன் கோவை, திணைமாலை நூற்றைம்பது,

குறுந்தொகை, நற்றிணை, ஐந்திணை ஐம்பது ஆகியவற்றிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். ஒவ்வொரு கூற்றிற்கும் இரண்டு மேற்கோள்கள் வீதம் தரப்பெற்றுள்ளன.

களவியற் காரிகையில் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்

இந்நூலின் (கி.பி.13) ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. இதில் 23 நூற்பாக்கள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளன. இது அகவொழுக்கம், களவொழுக்கம், தோழியாலாய கூட்டம், கற்பொழுக்கம் என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இதில் தோழியாலாய கூட்டத்தில் இற்செறித்தல் பற்றிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது"[41]. ஆனால் நூற்பா சிதைந்த நிலையில், உரையில் இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களை விளக்கிச் செல்லும் இந்நூல்,

1. இற்செறிவு உரைத்தல்
2. சிறைப்புறக் கிளவி (தோழி முன்னிலைப் புறமொழியாக இற்செறிவுரைத்தல்)
3. வெளிப்பட உரைத்தல் (தோழி தலைமகன் முன்னின்று சொல்லுதல்)
4. தோழி சூளென நினைந்து கூறுதல்
5. திங்கட் குரைத்தல்
6. அன்னத்தொலி யுரைத்தல்
7. கடலொலி உரைத்தல்

என்று வகைப்படுத்தியது.

இக்கூற்றுகள் ஏழும் தோழி கூற்றுகளாக அமைந்துள்ளன. இந்நூல் இறையனார் அகப்பொருளை அடியொற்றி இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை வரையறுத்த போதிலும், கூடுதலாக இரு கூற்றினைச் சுட்டுவது கருதத்தக்கதாகும்.

காரிகை குறிப்பிடும் ஏழு கூற்றுகளுக்கும் மேற்கோள் பாடல்களைத் தந்துள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 5 காரிகையும் மேற்கோள் பாடல்களும்[42]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	இற்செறிவுரைத்தல்	ஈவிளை யாட	திருக். 133
		நீர்வண்ண வெண்டிரை	பா.கோ;170
		நாகைக் குலமுதல்	பழம்பாட்டு
		அன்னை வாழி	பொருள் 61
		அன்னை நெருநல்	கிளவித்தெளிவு
2.	சிறைப்புறக் கிளவி உரைத்தல்	கணியார் கருத்தின்று	திருக்.கோ;145
		உலம்புனை தோண்மன்ன	பா.கோ;177
		திரையார் குருதி	பா.கோ;174
		பாங்கின ராகித்	பொருள் 62
3.	வெளிப்பட உரைத்தல்	வடிவார் வயிற்றில்லை	திரு.கோ;139
		செயன்மன்னு மாவது	பா.கோ;172
		ஊசல் தொழிலிழக்கும்	கண்டலங்காரம்
		பண்சிலபே வண்டாடும்	"
4.	தோழி சூளென நினைந்து கூறுதல்	நெய்யொன்று வேல்நெடு	பா.கோ;181
		அம்மென் சாயல்	பொருளியல் 64.
		வெள்ளி விழுத்தொடி	அகம்;286
5.	திங்கட் குரைத்தல்	நாகந் தொழ	திரு.கோ;171
		தாளிணை	பா.கோ;151
		வாள்வரி	பழம்பாட்டு
6.	அன்னத்தொலி யுரைத்தல்	மின்னநங்	திரு.கோ;172
		அறைவா	பா.கோ;158
		வணர்சுரி	பொருளியல்;76
7.	கடலொலி உரைத்தல்	சேர்த்துன்	திரு.கோ;173
		அறம்புரி	பா.கோ;143
		புன்னை	பழம்பாட்டு
		புன்னை மலர்	"

இந்நூலின் ஆசிரியர் இற்செறிவுரைத்தலுக்கு ஐந்து சான்றுகளையும், சிறைப்புறக் கிளவி உரைத்தல், வெளிப்பட உரைத்தல் ஆகியவற்றிற்கு நான்கு எடுத்துக்காட்டுகளையும், தோழி சூளென நினைந்து கூறல் என்பதற்கு மூன்று காட்டுகளையும் அமைத்துள்ளார். திங்கட்குரைத்தல், அன்னத்தொலி உரைத்தல் ஆகியவற்றிற்கு மும்மூன்று சான்றுகளையும் கடலொலி உரைத்தலுக்கு நான்கு மேற்கோள் பாடல்களையும் தந்துள்ளார்.

இலக்கண விளக்கம் கூறும் இற்செறித்தல்

இந்நூலின் (கி.பி.17) அகத்திணையியல் களவு, கற்பு எனும் இருபிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் களவியலில் இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல், இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் பகற்குறி ஆகியவற்றைக் கூறும்போது இற்செறித்தல் பற்றிய செய்தியும் குறிக்கப் பெற்றுள்ளது. பகற்குறி பற்றி விளக்குமிடத்து இந்நூலின் ஆசிரியர் இற்செறித்தலை ஒருசார் பகற்குறியின் வகையாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வகையாவது,

" இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி"[43]

என்பர்.

நம்பியகப் பொருளைப் போன்றே, இலக்கண விளக்கமும் 'இற்செறித்தல்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளது. நம்பியகப் பொருளைப் பின்பற்றியே, இந்நூலும் இற்செறித்தலை ஒருசார் பகற்குறியின் வகைகளுள் ஒன்றாக அடக்கியிருப்பது கருதத்தக்கது.

கூற்றுப் பற்றிய செய்திகள்

நம்பியகப் பொருள் இற்செறித்தலுக்கு உரியனவாகச் சுட்டிய "அடிகளைச் சிறிதும் மாற்றம் இல்லாமல், இலக்கண விளக்கமும் கையாண்டுள்ளது"[44] குறிப்பிடத்தக்கதாகும்.

இற்செறித்தலுக்குரிய கூற்றுக்களை இலக்கண விளக்க ஆசிரியர்

(1) தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் செறிப்பறிவுறுத்தல்

(2) தோழி முன்னிலைப் புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்

(3) பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப்புணர்த்தல்

(4) பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்

(5) தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்

என்று ஐந்து கூறுகளாகக் கூறுவர். இதில் நான்கு கூற்றுகள் தோழிக்கும் ஒருகூற்று மட்டும் தலைவனுக்கும் உரியதாக அமைகின்றன. இறையனார் களவியலைப் போன்று இந்நூலும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை ஐந்து என வரையறை செய்துள்ளமை குறிக்கத்தக்கது.

இலக்கண விளக்கமும் மேற்கோள் பாடல்களும்

"இலக்கண விளக்க ஆசிரியர் இற்செறித்தல் துறைக்குரிய கூற்றுகளாக ஐந்தினைக் குறிப்பர். இவைகள் ஐந்திற்கும் சான்றுகள் காட்டி உரைவரைந்துள்ளமையைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 6இலக்கண விளக்கத்தில் மேற்கோள் பாடல்கள்[45]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	தோழி சிறைப்புறமாகத் தலை - மகற்குச் செறிப்பறிவுறுத்தல்	இயலுங் கலவ மயிலுமென்	அம்.கோ;176
2.	தோழி முன்னிலைப் புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்	பயில்காள பந்தி	த.கோ;152
3.	பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிப்புணர்த்தல்	மால்வரை வெற்ப	ஐ.ஐ;12
4.	பாங்கி தலைவன் முன்னின்று இற்செறிவுப்புணர்த்தி ஓம்படை சாற்றல்	காவைப் பொருவு	க. கோ;134
5.	தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்	-	-

தஞ்சைவாணன் கோவை, கப்பற்கோவை உள்ளிட்ட நூல்களில் இருந்தும் சான்று காட்டியிருப்பது தெளிவுறும்.

சுவாமிநாதம் சுட்டும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்

சுவாமிநாதத்தில் (கி.பி.19) இரண்டாவது இயலாக கைக்கோண்மரபு இடம்பெற்றுள்ளது. "இவற்றில் பகற்குறியும், பகற்குறி இடையீடும் ஒரே நூற்பாவில் விளக்கம் பெற்றுள்ளன. அந்நூற்பா எட்டு அடிகள் கொண்டது. இவற்றில் இற்செறித்தலுக்குரிய கூற்றுக்கள்"[46] இடம்பெற்றுள்ளன.

சுவாமிநாதம் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறது.

(1) தோழி சிறைப்புறமாகத் தலைவியின் செறிப்பு (வீட்டிலேயே) வைக்கப்பட்டது கூறுதல்

(2) தோழி தலைமகனுக்கு முன்னிலைப் புறமொழி கூறி இற்செறிப்பை உணர்த்துதல்

(3) முன்னே நின்று செறிப்பு அறிவித்தல்

(4) முன்னே நின்று செறிப்பு உணர்த்தி ஓம்படை கூறுதல்

(5) தலைமகன் அடைக்கலம் பெறாது நெஞ்சொடு கிளத்தல்

என்ற ஐந்து கூற்றுக்களைக் குறிப்பிடுகின்றது.

இந்நூலில் இற்செறித்தல் தொடர்பாக ஒரு சூத்திரம் மட்டும் இடம்பெற்றுள்ளது. நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் உள்ளிட்ட இலக்கண நூல்களைப் பின்பற்றி இந்நூலும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை ஐந்து என வரையறை செய்துள்ளது. ஆனால் இந்நூலாசிரியர் இற்செறித்தலுக்குரிய கூற்றுகள் எதற்கும் சான்றுகள் காட்டவில்லை.

உடன்போக்கும் பிற சொற்களும்

தோழியிற் கூட்டத்தில் உடன்போக்கு என்ற ஒன்றைத் தொல்காப்பியரும், உரையாசிரியர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தொல்காப்பியர் உடன்போக்கு என்ற சொல்லாட்சியை நேரடியாகச் சுட்டவில்லை. தொல்காப்பியத்தில் உடன்போக்கோடு தொடர்புடைய செய்திகள் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் உடன்போக்கிற்கு ஈடாகக் 'கொண்டு தலைக்கழிதல்' (அகம்;17) 'போகிய திறத்து' (அகமு;39) போக்கற் கண்ணும் (அகம்;42) கடைக்கொண்டு பெயர்தல் (அகம்;44)

போக்குடன் (களவு;113) (பொருள்;194) உடன்போகிய (கற்பு;141) போக்கு (பொருள்;194) ஆகிய சொற்களைக் கையாண்டுள்ளார்.

தொல்காப்பியர் உடன்போக்கு என்ற சொல்லை நேரடியாகச் சுட்டவில்லை என்றாலும், அச்சொல்லிற்கு ஈடாக ஏழு சொற்களை அமைத்துள்ளார். ஆனால் இளம்பூரணர், நச்சர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் உடன்போக்கு என்ற சொல்லாட்சியை நேரடியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

உடன்போக்கு சொல்லாய்வு

உரையாசிரியர்களால் குறிக்கப்பெறும் உடன்போக்கு என்ற தொடர் உடன் + போக்கு என்ற இரு கிளவிகளின் இயைபு. உடன் என்ற சொல்லுக்கு

"ஒருங்கு சேர முழுவதும்"[47] என்று பலபொருள்களைத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. இவற்றுள் ஒருங்கு, சேர என்பனவே ஈண்டு இயைவன.

"போக்கு என்பதற்கு அறையிருப்பு சாட்டு சாவு பழக்கம் போகுதல் போக்கென் னேவல் யாதென்று செல்லுந்துவாரம்"[48] என்று பலபொருள் குறிப்பர். இவற்றுள் போகுதல், என்பது ஈண்டு பொருந்துவது. இக்குறிப்புகளான் தலைவனும், தலைவியும் ஒருங்கு சேர்ந்து போகுதல் போக்குடன் (அ) உடன்போக்கு என்பது தெளிவு.

'கொண்டு' என்புது தலைவன் தலைவியைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு என்ற பொருளிலும், 'கழிதல்' என்பது நீங்குதல் என்ற பொருளிலும், அமைவதால் தலைவன் தலைவியைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு தலைவியின் ஊரினின்று நீங்குதல் கொண்டுதலைக் கழிதல் ஆகும்.

கடை என்பது 'பின்' என்ற பொருளிலும், கொண்டு என்பது 'தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு என்ற பொருளிலும், பெயர்தல் என்பது போகுதல் என்ற பொருளிலும் ஆளப்பெறுவதால், தலைவன் தலைவியைத் தன்பின் அழைத்துக் கொண்டு போகுதல் கடைக்கொண்டு பெயர்தல் என்பது பெறப்பெறுகிறது.

உடன்போக்கு விளக்கம்

உடன்போக்கு அகப்பொருள் இலக்கணத்தில் இடம்பெறும் துறையாகும். "உடன்போக்கு என்னும் தொடர் உடன்போக்குகை எனப் பொருள்படும். இது தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவு வெளிப்படுதற்குரிய கிளவிகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி பெற்றோர் அறியாது தோழியின் உதவியால் தலைவனொடு வேற்றிடம் செல்வது உடன்போக்காகும்"[49] என்று விளக்குவர்.

"படிகடவாத இளமங்கை ஒருத்தி பிறந்த வீட்டைத் துறந்து, பெற்றோரை மறந்து முன்பின் அறியாத ஆடவனைக் காதற் கொழுநன் என நம்பிக் கரடுமுரடான வழியில் செல்வது உடன்போக்கு"[50] என்று வ.சுப.மாணிக்கனார் குறிப்பிடுவர்.

இக்கருத்தினைப் புலவர் குழந்தை குறிக்கும்போது "உடன்போக்காவது தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு தன்னூர் செல்லுதல், அதாவது தலைவனுடன் அவனூர்க்குத் தலைவி செல்லுதல்"[51] என்கிறார்.

தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்ளும்போது அவர்கள் செல்லும் ஊரினை 'வேற்றிடம்' என்று பொதுவாகக் குறிப்பது ஒருநிலையாகும்.

புலவர் குழந்தை அவர்கள், தலைவனும் தலைவியும் செல்லும் அவ்விடத்தினைப் பொதுவாகக் குறிப்பிடாமல் தலைவனது ஊர் என்று வரையறை செய்வது இங்கு கருதத்தக்கது.

மேற்சொல்லப்பெற்ற கருத்துக்களில் இருந்து உடன்போக்கு என்பது களவினை வெளிப்படுத்தும் கிளவியாகவும், தலைவன் தலைவியின் களவினைப் பெற்றோர் அறியாத நிலையிலும், தோழியின் உதவியால் தலைவனும் தலைவியும் ஒன்று சேர்ந்து தலைவியின் ஊரைவிட்டு நீங்கி, தலைவனது ஊருக்குச் செல்வதும் பெறப்பெறுகிறது.

தொல்காப்பியம் சுட்டும் உடன்போக்கு

ஒருசார் உறுப்புப்பொருளில் உடன்போக்கினை விளக்கும் தொல்காப்பியர்,

"கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான"[52]

என்பர்.

கொண்டு தலைக்கழிதலும், பிரிந்து அவண் இரங்கலும் உண்டு- கொண்டுதலைக் கழிதலும் உண்டு, பிரிந்து அவண் இரங்கலும் உண்டு. ஓர் இடத்தான் என மொழிப-ஒரோ இடத்துக்கண் என்று கூறுப என்றும் கொண்டு தலைக் கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல்"[53] என்றும் இளம்பூரணர் பொருள் உரைப்பர்.

நச்சினார்க்கினியர் கொண்டுதலைக் கழியினும் தலைவன் தலைவியை உடன்கொண்டு அவள் தமரிடத்து நின்று பிரியினும், பிரிந்து அவண் இரங்கினும் -

தலைவன் உடன்கொண்டு போகாது தானே போதலில் தலைவி மனையின்கண் இருந்து இரங்கினும்; ஓரிடத்தான – இவ்விரண்டும் ஓரிடத்தின் கண்ணே ஒரோழுக்கமாயின; உண்டென மொழிப-இவ்வொழுக்கந்தான் நான்கு வருணத்திலும் வேளாண் வருணத்திற்கு உண்டென்று சொல்லுவார் ஆசிரியர்"[54] என்று உரை கூறுவர்.

உரையாசிரியர்களின் கருத்துக்களின்வழி தலைவன் தலைவியை உடன்கொண்டு பெயர்வதைக் கொண்டுதலைக் கழிதல் என்ற பெயரால் சுட்டியிருப்பது புலனாகிறது. மேலும் நச்சினார்க்கினியர் இளம்பூரணரைவிடக் கூடுதலாக அகநூனூற்றிலிருந்து சான்று காட்டியுள்ளார். அப்பாடலில் கொண்டுதலைக் கழிதற்கண் தலைவன் தலைவியின் நடையைக் கண்டு வியந்ததைக் குறிப்பிடுகிறார்.

"............ சுரம்

அரியார் சிலம்பின் சீறடி சிவப்ப"[55]

என்பதில் 'சீறடி சிவப்ப' என்னும் குறிப்பைக் கொண்டு தலைவன் தலைவியைக் கொண்டுதலைக் கழிந்ததும், வல்லுவை மண்ணால் நடையே' என்ற தொடரைக் கொண்டு தலைவியின் நடைவன்மையை நினைத்துத் தலைவன் வியந்ததும் பெறப்பெறுகிறது.

உடன்போக்கும் கூற்றுகளும்

தொல்காப்பியர் உடன்போக்கில் கூற்று நிகழத்துவதற்கு உரியவர்களாகத் தலைவன், தோழி, நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோரைக் கூறுவர். ஆனால்

தலைவிக்கு மட்டும் உடன்போக்கிற்குரிய கூற்றினை தனித்த நூற்பாவில் அமைக்கவில்லை. "இளம்பூரணர்"[56], நச்சினார்க்கினியர்"[57] உள்ளிட்ட உரையாசிரியர்கள் உரையில் உடன்போக்கில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளை அமைத்துள்ளனர்.

தலைவனும் உடன்போக்கும்

தொல்காப்பியர் அகத்திணையியலில், தலைவனுக்குரிய கூற்றுகளை "நாற்பத்து நான்காவது நூற்பாவாகத் தொகுத்து அமைத்திருக்கிறார். இந்நூற்பா இருபத்து நான்கு அடிகள் கொண்டது. இதில் முதல் ஆறு அடிகள் உடன்போக்கிற்கு உரியவை ஆகும்"[58.]

தலைவன் கூற்றுகள்

தலைவன் உடன்போக்கில் நிகழ்த்தும் கூற்றுகள்,

(1) தலைவியின்தமர் உடன்போக்கு மறுக்கும் நிலையில் கூறுதல்,

(2) உடன்போக்கிற்குரிய பருவம் குறித்து ஆராய்தற்கண் கூறுதல்,

(3) தோழியோடு ஆராய்ந்து உடன்போக்கினைத் துணிதற்கண் கூறுதல்,

(4) தலைவியைக் கொண்டு போதலைத் தவிர்த்தற்கண் கூறுதல்,

(5) தலைவியை உடன்கொண்டு செல்லும் சுரத்தின்கண் கூறுதல்,

(6) இடைச்சுரத்தில் தலைவியை அவள் தமர் பெயர்த்துச் செல்ல வந்தபோது,

தலைவி தமர்பால் செல்லாது, தவைவனைச் சார்ந்தமை கண்டோர், இவள் தலைவன் உடைமையாய்க் கற்பொடு கூடிவிட்டான் என்று பலரும் அறியக் கூறும்போது தலைவன் கூற்று நிகழ்த்துவான்.

தொல்காப்பியர் உடன்போக்கில் தலைவன் ஆறு இடங்களில் கூற்று நிகழ்த்துவான் என்பர். இக்கூற்றுகளுக்கு இளம்பூரணர் மேற்கோள் பாடல்களை வரைந்துள்ளார். இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 7 தொல்காப்பியமும் மேற்கோள் பாடல்களும்[59]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	வரைவுடன்வடாத தமர்கண் கூறுதல்	-	-
2.	பருவத்தின்கண் கூறுதல்	-	-
3.	சுரத்தின்கண் கூறுதல்	அழிவில் முயலும்	நற்;9
4.	தலைமகளை உடன்கொண்டு போகத்துணியினும் கூறுதல்	ஆறுசெல் வருத்தத்து வேட்டச் செந்நாய்	-
5.	தலைமகளை விடுத்துப்போகினும் கூறுதல்	-	-
6.	தலைமகளை இடைச்சுரத்தின் வழியாக அழைத்துச் செல்லும்போது தலைவியின் தமர் வந்து மீட்டுக் கொள்வர் என வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த கவ்வை உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின்கண் தலைவன் கூறுதல்.	-	-

மேற்குறித்த அட்டவணையின்வழி இரண்டு கூற்றுகளுக்கு மேற்கோள் பாடல்கள் கொடுத்தும், ஏனைய கூற்றுகளுக்கு மேற்கோள் கொடுக்காமலும் உரை வரைந்துள்ளமையை அறியமுடிகிறது.

உரையாசிரியர்களும் தலைவன் கூற்றும்

உடன்போக்கில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்களின் கருத்துகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப் பெற்றுள்ளன.

அட்டவணை - 2 : 8

தலைவன் கூற்றும் உரையாசிரியர்களும் [60]

வ.எ.	தொல்	இளம்	நச்சர்	பாரதியார்	அருணாச்சலம் பிள்ளை
1.	வரைவிற்கு உடன்படாத தமர்கண் கூறுதல்	+	+	1. ஒன்றாத்தமர்கண் உடன்படுமாறு தலைமகன் சான்றோரை விடுத்ததை தோழி கூற்றில் கொண்டு கூறல்	+
2.	பருவத்தின்கண் கூறல்	+	1. இற்செறிப்பாற் தலைவி புரம் போகற்கு ஒன்றாத பருவத்தின்கண் கூறுதல் 2. தலைவனொடு கூட்டம் பெறாது ஆற்றியிருக்கும் பருவத்தின்கண் கூறுதல்	+	1. தலைவியின் இளமைக்கு ஏலாத வேனிற்பருவத்தின் கண் கூறுதல் 2. தலைவியின் மென்மைக்கு ஏலாத வேனிற்பருவத்தின் கண் கூறுதல்
3.	சுரத்தின்கண் கூறுதல்	+	+	+	+
4.	தலைமகளை உடன்கொண்டு போகத் துணியினும் கூறுதல்	+	1. தலைவியின் தமர்கூறும் கடுஞ்சொற் ஆற்றாது உடன்போக்கினைத் துணி-யுமிடத்து தோழியொடு ஆராய்தல் 2. நொதுமலர் வரைவிற்கு ஆற்றாது உடன்போக்கி-னைத் துணிதற்கண் கூறல்.	+ +	+ +
5.	தலைமகளை விடுத்தற்கண் கூறுதல்	1. தோழிக்குக் காட்டது கடுமை கூறி விடுத்தல் 2. தலைவிக்கு காட்டதுகடுமை கூறி விடுத்தல்	+		1. தலைவன்பால் தலைவி-யை ஓம்படை கூறி விடுத்தற் கண் கூறல்

வ.எ.	தொல்	இளம்	நச்சர்	பாரதியார்	அருணாச்சலம் பிள்ளை
6.	தலைமகளை இடைச்சுரத்தின் வழியாக அழைத்துச் செல்லும் போது தலைவியின் தமர்வந்து மீட்டுக் கொண்டு பெயர்வர் என்று வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த கவ்வை உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின்கண் கூறல்	1. தலைவியின் தமர் வருவர் எனத் தலைவன் கூறுதல்	1. தலைவியின் தமர் வருவர் எனத் தலைவன் கூறுதல்	1. இடைச்சுர மருங்கில் தலைவியின் தமர்வர தலைவன் மறைந்ததைத் தலைவி கொண்டு கூறல் 2. தேடிப் பின்வந்த தலைவியின் தமருக்கு ஊறு செய்யாது மறைந்த தலைவன் தானே கூறிக் கொள்ளுதல்	+ +
7.	அப்பாற்பட்ட ஒரு திறத் - தானும் தலைவன் கூற்று நிகழ்த்தல்	+	1. தலைவன் தலைவியை மருட்டிக் கூறுதல் 2. உடன்போக்கில் தலைவன் புகழ்ச்சிக்கு நாணிக் கண் - புதைத்துழித் தலைவன் கூறுதல் 3. தலைவியிடம் வழிவந்த நன்மைகூறி வருந்தாது ஏகுக எனத் தலைவன் கூறுதல்	+	+

இளம்பூரணர் சிந்தனை

உடன்போக்கில் தலைவன் கூற்று நிகழ்த்தும் நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர், தொல்காப்பியம் சுட்டிய ஆறு கூற்றுகளை விடக் கூடுதலாகச் சில கூற்றுகளைக் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியர் உடன்போக்கில் தலைவனுக்குரிய கூற்றுகளில் ஐந்தாவதாக இடம்பெற்றுள்ள 'விடுத்தல்' என்பதற்கு தோழிக்குக் காட்டதுகடுமை கூறி விடுத்துக் கூறுதல், தலைவிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தல் என்ற இருகூற்றுகளைப் புதிதாகக் கூறியுள்ளார். இறுதியில் இடம்பெற்றுள்ள 'தலைமகளை இடைச்சுரத்தின் வழியாக அழைத்துச் செல்லும்போது, தலைவியின் தமர் வந்து மீட்டுக் கொண்டு பெயர்வர் என வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த கவ்வை உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின்கண்' என்பதற்கு தலைவியின் தமர் வருவரெனக் கூறல் என்ற ஒரு கூற்றினைப் புதியதாகவும், தலைவியின் தமர் வந்தவழிக் கூறல் என்ற கூற்றினை, அக்கூற்றிலிருந்து வகைப்படுத்தியும் கூறுவர். இளம்பூரணர் கற்பொடு புணர்ந்த கவ்வைக்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க என்று உரை வரைந்துள்ளார்.

இளம்பூரணர் காட்டும் புதுமை

தொல்காப்பியர் சுட்டாத கூற்றுகள், நற்றிணை, கலித்தொகை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. 'இரும்புலிக் கிரிந்த'[61] என்ற பாடல் உடன்கொண்டு பெயர்தல் வேண்டுமென்ற தோழிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தது என்பதாய் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது. இப்பாடலில் 'நம்மொடு வருமெனின்

பெருங்கல் ஆறே' (3,4,5) என்று வரும் குறிப்புகளைக் கொண்டு இப்பாடலை இளம்பூரணர் தோழிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தலுக்குக் காட்டுகிறார். இக்கூற்று, தொல்காப்பியத்தில் இடம்பெறாமல் இளம்பூரணர் உரையில் குறிக்கப்பெற்றுள்ளது.

கலித்தொகையில் இடம்பெற்றுள்ள 'கிளிபுரை' என்ற பாடல் தலைவிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தது என்பதாய் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது. இதற்கு,

".......... எம்மொடு நீவரின்

..........

முளியரில் பொத்திய முழங்கழல் இடைபோழ்ந்த

வளியுறின் அவ்வெழில் வாடுவை யல்லையோ"[62]

என்ற அடிகளைக் காட்டுவர். இதில் இடம்பெற்றுள்ள 'முழங்கழல் வளியுறின் வாடுவை யல்லையோ' என்ற தொடரைக் கொண்டு தலைவிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தலுக்குக் காட்டுகிறார். இக்கூற்று தொல்காப்பியத்தில் இல்லாமல் இளம்பூரணர் உரையில் புகுத்தப்பெற்றுள்ளது.

"அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்

நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே"[63]

என்ற பாடல் தமர் வருவர் என ஐயுற்றுக் கூறியதாகும். இதற்கு, "உடன்போகா நின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது"[64] என்ற துறைக்குறிப்பினை கூறுவர். 'நுமர்வரின் மறைகுவென்' என்றுவரும் குறிப்பைக் கொண்டு உடன்போகா நின்ற

தலைமகன் தலைமகட்குச் சொல்லியதற்குக் காட்டுகிறார். இக்கூற்று நற்றிணையில் இடம்பெற்று இளம்பூரணர் உரையில் குறிக்கப்பெற்றது.

உடன்கொண்டு போயவிடத்து இடைச்சுரத்திற் கூறியதற்கு

"........ நின்
நலமென் பணைத்தோள் எய்தினம்
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
குறும்பல் ஊரயாஞ் செல்லுமாறே"[65]

என்ற பாடலைக் கூறுவர். இதற்கு, "உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்கு உரைத்தது"[66] என்று துறைக்குறிப்பினை வரையறுப்பர். இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள நின் நலமென் பணைத்தோள் எய்தினம்' என்னும் குறிப்பால் தலைவன் தலைவிக்குக் கூறியதும் 'வருந்தாது ஏகுமதி.......... குறும்பல் ஊர யாம் செல்லும் ஆறே' என்றமையால் உடன்போக்கு உணர்த்தப்பெறுவதும் அறியப்பெறுகிறது. இக்கூற்றினை தலைமகளை உடன்கொண்டு போகத்துணியுமிடத்து இடைச்சுரத்தில் கூறியதற்குச் சான்றாகக் காட்டுகிறார். இக்கூற்று தொல்காப்பியத்தில் இடம்பெறாமல் நற்றிணையில் இடம்பெற்று, இளம்பூரணர் உரையில் அமைக்கப் பெற்றுள்ளது.

நச்சினார்க்கினியர் சிந்தனை

உடன்போக்கில் தலைவன் கூற்றுக்கு உரை எழுதிய நச்சர் தொல்காப்பியரைவிடக் கூடுதலாகச் சில கூற்றுகளை உரையில் அமைத்துச் செல்கிறார்.

தொல்காப்பியத்தில் தலைவன் கூற்றில் இடம்பெற்றுள்ள ‘பருவத்தின்கண் கூறல்’ என்பதற்கு இற்செறிப்பாற்புறம் போகற்கு ஒன்றாத பருவத்தின்கண் கூறல், தலைவனொடு கூட்டம் பெறாது ஆற்றியிருக்கும் பருவத்தின்கண் கூறல் என்ற இரு கூற்றினைப் புதியதாகக் கூறுவர். தலைமகளை உடன்கொண்டு போகத்துணியினும் கூறல் என்ற கூற்றிற்கு, தலைவியின் தமர் கூறும் கடுஞ்சொற்கு ஆற்றாது உடன்போக்கிற்கு ஒருப்பட்டெழுந்தவிடத்துக் கூறல், நொதுமலர் வரைவிற்கு ஆற்றாது உடன்போக்கினைத் துணிதற்கண் கூறல் என்ற இருகூற்றினைப் புதியதாகக் கூறுவர். மேற்சுட்டிய நான்கு புதிய கூற்றுகளுக்கும் சான்று காட்டாமல் நச்சர் உரை வரைந்துள்ளார்.

தொல்காப்பியத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள ‘இடைச்சுர மருங்கில் அவள் தமர் எய்திக் கற்பொடு புணர்ந்த கவ்வை உளப்பட அப்பகுதிப்பட்ட திறத்தின்கண் கூறல்’ என்பதற்கு தலைவியின் தமர் வருவர் எனத் தலைவன் கூறல் என்ற புதிய கூற்றினை இளம்பூரணரை அடியொற்றித் தருவர் தொல்காப்பியர் சுட்டிய அப்பாற்பட்ட ஒரு திறத்தானும் என்பதற்கு தலைவன் தலைவியை மருட்டிக் (மயக்கிக்) கூறல், உடன்போக்கில் தலைவன் புகழ்ச்சிக்கு நாணிக் கண்புதைத்துழித் தலைவன் கூறல், தலைவியிடம் வழிவந்த நன்மை கூறி வருந்தாது ஏகுக எனத் தலைவன் கூறல் என்ற மூன்று கூற்றினைப்புதியதாக மொழிவர். இளம்பூரணரைப் போலவே இவரும் கற்பொடு புணர்ந்த கவ்வைக்குச் சான்றினை வந்தவழிக் கண்டு கொள்க என்கிறார்.

சோமசுந்தர பாரதியாரின் சிந்தனை

தொல்காப்பியர் சுட்டிய வரைவுடன்படாத தமர்கண் கூறல் என்பதை, ஒன்றாத் தமர்கண் உடன்படுமாறு சான்றோரை விடுத்த தலைவன் கூற்றைத் தோழி கூற்றில் கொண்டு கூறல் என்று மாற்றி மொழிந்துள்ளார். தொல்காப்பியத்தில் இறுதியாக இடம்பெற்றுள்ள கூற்றிற்கு இடைச்சுர மருங்கில் தலைவியின் தமர்வரத் தலைவன் மறைந்து கூறியதைத் தலைவி கொண்டு கூறல், இடைச்சுர மருங்கில், தலைவியின் தமருக்கு ஊறுசெய்யாது மறைந்த தலைவன் தானே கூறல் என்ற இரு கூற்றினைப் புதியதாகச் சுட்டுவர்.

அருணாச்சலம் பிள்ளையின் சிந்தனை

தொல்காப்பியம் குறிப்பிடும் பருவத்தின்கண் கூறல் என்பதற்குத் தலைவியின் இளமைக்கும், மென்னைக்கும் ஏலாதவேனிற் பருவத்தின்கண் கூறல் என்ற புதிய கூற்றுகளைச் சுட்டுவர். தலைவன் தலைவியைக் கொண்டு போதலைத் தவிர்த்தற்கண் கூறல் என்ற பொருளினை மூன்று உரையாசிரியர்களும் சுட்டுவர். ஆனால் இவர் தலைவன்பால் தலைவியை ஓம்படைகூறி விடுத்தற்கண் கூறல் என்ற பொருளினை மாற்றி மொழிந்து, அதற்கு இயைபும் காட்டுகிறார்.

தலைவியும் உடன்போக்கும்

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கின்கண் தலைவி நிகழ்த்தும் கூற்றாக எதனையும் சுட்டவில்லை. "தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழமையாற் பெயர்த்து எழுதுவோர் விழ எழுதினார் போலும்"[67] என்று இளம்பூரணர் கருதுகின்றார். தொல்காப்பியர் பொருளியலில்

"அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்குமென

றஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்

போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்"[68]

என்ற மரபினைத் தலைவிக்கு உரியதாக மொழிந்தார். எனவே அவர் உடன்போக்கில் தலைவி கூற்றுக்களை அகத்திணையியலில் கூறியிருக்க வேண்டுமென்று இளம்பூரணர் கருதியதில் காரணம் இருக்கத்தான் செய்கின்றது என்கிறார்.

உரையாசிரியர்களும் தலைவி கூற்றும்

"தொல்காப்பியர் களவியலில் தலைவனுக்குரிய கூற்றினைக் குறித்துச் செல்கிறார்"[69]. இந்நூற்பாவில் இடம்பெறும் "நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்' என்னும் கூற்றை உடன்போக்கில் தலைவிக்குரிய கூற்றாக நச்சினார்க்கினியர் கொள்கின்றார்"[70]. இந்த ஒரு கூற்றில் மட்டும் உடன்போக்கில் தலைவி நிகழ்த்தும் அனைத்து கூற்றுகளையும் அடக்க இயலவில்லை. ஆகவே நச்சினார்க்கினியர் "எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே"[71] என்ற நூற்பாவின் கண்ணும் உடன்போக்கில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளை அமைத்துக் கொள்கின்றார். இளம்பூரணரும்"[72], அருணாசலம் பிள்ளையும்"[73], உடன்போக்கில் தலைவியின் கூற்றுகளை இந்நூற்பாவில் மட்டும் குறித்துச் செல்கின்றனர்.

அட்டவணை - 2 : 9
தலைவி கூற்றும் உரையாசிரியர்களும் [74]

வ.எ.	தொல்	இளம்	நச்சர்	அருணாச்சலம் பிள்ளை
1.	எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே	(1) தலைவி உடன்போக்கு ஒருப்பட்டமை கூறுதல் (2) தலைவி உடன்போகியவழி இடைச்சுரத்தில் ஆயத்தார்க்குச் சொல்லி விடுதல் (3) தலைமக்கள் உடன்போகிய விடத்து தலைவியின் தமர் வந்துற்றவழித் தலைவி கூறுதல் (4) உடன்போய் மீண்டுவரும் தலைவி ஆயத்தார்க்குக் கூறிவிடுதல்	(1) போக்குடன்பட்ட தலைவி கூறுதல் (2) தலைவி நாண் நீங்கியது கூறல் (3) தலைவி அலர்அச்சம் நீங்கியதைக் கூறுதல் (4) தலைவி யான் போகின்றமை ஆயத்-தார்க்கு உரைமின் என்று கூறுதல் (5) தலைவி உடன்போக்கில் தேரில் ஏறி வருத்தமின்றிப் போவதை தாய்க்கு உரைமின் எனக் கூறல் (6) உடன்போய் மீண்டுவரும் தலைவி என் வரவு ஆயத்தார்குக் கூறுமின் என்றல் (7) உடன்போய் மீண்ட தலைவியின் வழிவரல் வருத்தம் கண்டு வருந்திய தோழிக்குத் தலைவி கூறுதல் (8) உடன்போய் மீண்ட தலைவியின் நாட்டி-னைப் பற்றி வினவிய தோழிக்குத் தலைவி கூறுதல் (9) உடன்போக்கின்போது தலைவியின் ஐயன்மார் வந்தபோது நிகழ்ந்தது என்னென்ற தோழிக்குத், தலைவி தலைவனை மறைத்த மலையை வாழ்த்திக் கூறுதல்	(1) தோழி உடன்போக்கு உணர்த்திய வழி, அதனை மறுத்துத் தலைவி கூறுதல் (2) தலைவி போக்கிற்கு உடன்பட்டுக் கூறுதல் (3) இடைச்சுரத்திலிருந்து மீண்டு வரும் தலைவி தாய்க்கும் தன் ஆயத்-தார்க்கும் தன்வருகை-யைக் கூறுமாறு சொல்லிவிடுத்தல்
2.	நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்		(10) நாணுநெஞ் சலைப்ப தலைவி விடுத்தற்கண் கூறுதல்	

மேற்குறித்த அட்டவணையின்வழி உடன்போக்கில் தலைவி நிகழ்த்தும், கூற்றுகளை இளம்பூரணர் நான்காகவும், நச்சர் பத்தாகவும், அருணாச்சலம் பிள்ளை மூன்றாகவும் வரையறுப்பதை அறியமுடிகிறது. சோமசுந்தர பாரதியார் பிரிவில் தலைவிக்குரிய கூற்றினை அமைத்தாரேயன்றி உடன்போக்கிற்குரிய கூற்றினைச் சுட்டவில்லை. போக்குடன்பட்ட தலைவி கூறல், உடன்போய் மீண்டுவரும் தலைவி தன் வருகையை ஆயத்தார்க்குக் கூறி விடுத்தல் ஆகிய இருதுறைகளையும் மூன்று உரையாசிரியர்களும் ஒன்று போலக் கையாண்டுள்ளனர். இவர்கள் வரைந்த உரையினையும் மேற்கோள் பாடல்களையும் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 10 உரையாசிரியர்களும் மேற்கோள் பாடல்களும்[75]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
	இளம்பூரணர் உரை:		
1.	தலைவி உடன்போக்கு ஒருப்பட்டமை கூறுதல்	சிலரும் பலருங்	நற்;149
2.	தலைவி உடன்போகியவழி இடைச்-சுரத்தில் ஆயத்தார்க்குச் சொல்லி விடுத்தல்	சேட்புல முன்னிய	ஐங்;384
3.	தலைமக்கள் உடன்போகியவிடத்து தலைவியின் தமர் வந்துற்றவழித் தலைவி கூறுதல்	அறஞ்சா லியரோ	ஐங்;312
4.	உடன்போய் மீண்டுவரும் தலைவி ஆயத்தார்க்குக் கூறி விடுதல்	கவிழ்மயி ரெருத்திற்	ஐங்;397
	நச்சர் உரை:		
5.	போக்குடன்பட்ட தலைவி கூறுதல்	பைபயப் பசந்தன்று	அகம்;95

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
6.	தலைவி நாண் நீங்கியது கூறுதல்	அளிதோ தானே	குறுந்;149
7.	தலைவி அலர்அச்சம் நீங்கியதைக் கூறல்	சிலரும் பலரும்	நற்;149
8.	தலைவி யான் போகின்றமை ஆயத்தார்க்கு உரைமின் என்று கூறுதல்	சேட்புலமுன்னிய	ஐங்;384
9.	தலைவி உடன்போக்கில் தேரில் ஏறி வருத்தமின்றிப் போவதைத் தாய்க்கு உரைமின் எனக்கூறல்	கடுங்கட் காளை	ஐங்;385
10.	உடன்போய் மீண்டுவரும் தலைவி என் வரவு ஆயத்தார்க்குக் கூறுமின் என்றல்	கவிழ்மயிர் எருத்திற்	ஐங்;397
11.	உடன்போய் மீண்ட தலைவியின் வழிவரல் வருத்தம் கண்டு வருந்திய தோழிக்குத் தலைவி கூறுதல்	வேய்வனப் பிழந்த	ஐங்;392
12.	உடன்போய் மீண்ட தலைவியின் நாட்டினைப் பற்றி வினவிய தோழிக்குத் தலைவி கூறுதல்	அன்னாய் வாழிவேண்	ஐங்;203
13.	உடன்போக்கின்போது தலைவியின் ஐயன்மார் வந்தபோது, தலைவனை மறைத்த மலையைத் தலைவி வாழ்த்திக் கூறுதல்	அறஞ்சாலியரோ	ஐங்;312
14.	நாணுநெஞ் சலைப்ப தலைவி விடுத்தற்கண் கூறல்	-	-
	அருணாச்சலம் பிள்ளை:		
15.	உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி அதனை மறுத்துக் கூறுதல்	-	-
16.	தோழி போக்கிற்கு உடன்பட்டுக் கூறல்	-	-
17.	உடன்போய் மீண்ட தலைவி தாய்க்கும் தன் ஆயத்தார்க்கும் தன் வருகையைக் கூறுமாறு சொல்லிவிடுத்தல்	-	-

தலைவி கூற்றுக்கு உரையாசிரியர்கள் காட்டிய மேற்கோள் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு ஆகியவற்றிலிருந்து எடுத்தாளப்பெற்றுள்ளன. அருணாச்சலம் பிள்ளை சான்றுகள் காட்டாமல், கூற்றுகளை மட்டும் குறிப்பிட்டு உரை வரைந்துள்ளார். நச்சர் தலைவி கூற்றுக்கு இளம்பூரணரைவிடக் கூடுதலாக ஐந்து கூற்றினை அமைத்துள்ளதும் அறியப்பெறுகிறது.

தோழியும் உடன்போக்கும்

"தொல்காப்பியர் அகத்திணையியலில் தோழிக்குரிய கூற்றுக்களைத் தொகுத்துக் கூறியுள்ளார். இந்நூற்பா பத்து அடிகள் கொண்டது"[76]

தொல்காப்பியத் தோழி கூற்றுகள்

1. தலைவியை உடனழைத்துச் செல்லாவிடில் அவளுக்கு நேரும் துன்பங்களை எடுத்துத் தலைவனுக்குக் கூறுமிடத்தும்
2. தலைவனொடு தலைவியைப் போக்கற்குத் துணிந்தவிடத்தும்
3. தலைவியைத் தலைவனொடு வழியனுப்புமிடத்தும்
4. தமரினின்று நீக்கப்பெறுதலால் தானும் தலைவியும் அடையும் துன்பம் கூறுமிடத்தும்.
5. மெய்யும் பொய்யும் பகுத்துணர்ந்தோர் சுட்டியநெறி இஃதென்று கூறித் தலைவியைத் தேடிச் செல்ல முற்பட்டதாயைச் செல்லவிடாது மீட்டுக் கொள்ளும் நிலையில் தோழி கூறல்.
6. வருந்திய தாயை நடந்தன மறந்து, நடக்க வேண்டியவை நினைதல் வேண்டும் என்றுகூறி வற்புறுத்துமிடத்தும் தோழி கூறல்.

தோழி கூற்றும் உரையாசிரியர்களும்

தோழிக்கு உடன்போக்கில் கூற்றுகள் நிகழ்கின்றன. இக்கூற்றுகள் குறித்த உரையாசிரியர்களின் கருத்துக்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப் பெற்றுள்ளன.

அட்டவணை - 2 : 11

தோழி கூற்றும் உரையாசிரியர்களும் [77]

வ.எ.	தொல்	இளம்	நச்சர்	பாரதியார்
1.	தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல்	+	1. தலைவன் கொண்டுதலைக் கழியாவிடின் தலைவிக்கண் தோன்றும் துன்பநிலையைத் தலைவிக்குக் கூறுதல்	1. தோழி தலைவற்குத் தலைவி விழுமம் கூறல் 2. தோழி தலைவிக்குத் தலைவன் விழுமம் உரைத்தல்
2.	போக்கற்கண் கூறுதல்	+	1. தலைவன் போக்கு ஒருப்பட்டெழுதல் 2. உடன்கொண்டு போகற்கு தலைவன் வந்தான் எனப் பாயலுணர்த்தித் தோழி கூறல் 3. தலைவி போக்கு ஒருப்பட்டெழுதல் கூறல்	1. போக்கற்கண் தோழி தலைவற்குக் கூறல் 2. போக்கற்கண் தோழி தலைவிக்குக் கூறல்
3.	விடுத்தற்கண் கூறல்	1. தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டமை கூறி தோழி தலைமகளை விடுத்தற்கண் கூறுதல் 2. தலைமகளை உடன்போக்கு நயக்குமாறு கூறுதல்	1. தலைவனிடம் தலைவியைப் பாதுகாக்கவெனத் தோழி கைப்படுத்துவித்துக் கூறல்	+
4.	நீக்கலின் வந்த தம்முறு விழுமம் கூறல்	1. தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண் தலைமகளிடம் கூறுதல்	+	+

வ.எ.	தொல்	இளம்	நச்சர்	பாரதியார்
5.	மெய்யும் பொய்யும் பகுத்துணர்ந் -தோர் சுட்டியநெறி இஃதென்று கூறித் தலைவியைத் தேடிச் செல்ல முற்பட்டதாயைச் செல்ல- விடாது மீட்டுக் கொள்ளும் நிலையில் தோழி கூறல்	1. தலைமகனைச் சுட்டிக் கூறல் 2. தாய்நிலை நோக்கித் தலைபெயர்த்துக் கொள்ளுதற்கண் கூறல்	+ செவிலித் தாயை மீட்டற்கண் கூறல்	+ நற்றாயின் பருவரலைக் கருதி மறுத்தரத் (திரும்பிவரும்) தலைவியை வரவேற்றுக் கொள்ளுதலினும் கூறல்
6.	வருந்திய தாயை நடந்தன மறந்து, நடக்க வேண்டியவை நினைதல் வேண்டும் என்றுகூறி வற்புறுத்- துமிடத்தும் தோழி கூறல்	தலைமகன் மொழிந்தது கூறித் தாயை வற்புறுத்தற்கண் கூறல்	தாயை வற்புறுத்தற்கண் கூறல்	1. தலைவன் விடுத்தல ஆற்றாமையால் மிக நொந்து மனங்கலங்கும் தலைவியைத் தலைவன் கூறியதை, எடுத்துக் கூறி ஆற்றுவிக்குமாறு கூறல்
	என்றிவை எல்லாம் இயல்புறநாடின்	1. பருவம் வந்தது எனக் கூறல் 2. பருவம் அன்று எனக் கூறல் 3. பிரியுங்காலத்துத் தலைவற்கு உரைத்தல். 4. தலைமகட்குத் தலைமகன் பிரியார் எனக் கூறல்	1. தலைவன் கரணவகையால் வரைந்தனாக, எதிர் சென்ற தோழிக்கு யான் வரைந்தமை நுமர்க்குணர்த்தம் வேண்டு மென்றாற்கு தோழி உணர்த்தினேன் என்றல் 2. தலைவி மீண்டு வந்துழி ஊரது நிலைமை கூறல் 3. போக்கு நேர்ந்தமைத் தோழி தலைவிக்குக் கூறல்	1. பருவமன்று எனக் கூறி ஆற்றுவித்தல்

இளம்பூரணர் சிந்தனை

தொல்காப்பியம் உடன்போக்கில் தோழிக்குரியனவாகச் சுட்டிய கூற்றுகளைவிட இளம்பூரணர் கூடுதலான கூற்றுகளை அமைத்துச் செல்கிறார். தொல்காப்பியம் சுட்டிய விடுத்தற்கண் கூறுதல் என்பதற்குத் தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டமை தோழி தலைமகளுக்குக் கூறுதல், தலைமகளை உடன்போக்கு நயக்குமாறு கூறுதல் என்ற இரு கூற்றுகளையும், நீக்கலின் வந்த தம்முறு விழுமம் கூறல் எனப்தற்குத் தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண் தலைமகளிடம் கூறுதல் என்ற கூற்றினையும் புதியதாகச் சேர்த்துள்ளார்.

தொல்காப்பியர் தோழி கூற்றில் ஐந்தாவதாகச் சுட்டிய கூற்றினை, இளம்பூரணர் இரண்டு கூற்றுகளாகப் பகுத்துள்ளார். அவையாவன தலைமகனைச் சுட்டிக் கூறல் தாய்நிலை நோக்கித் தலைபெயர்த்துக் கொள்ளுதற்கண் கூறல் என்பவை ஆகும். ஆறாவதாகக் குறிக்கப்பெறும் தொல்காப்பியக் கூற்றுக்கு 'தலைமகன் மொழிந்ததுகூறித் தாயை வற்புறுத்தற்கண் கூறல்' என்ற புதிய கூற்றினை அமைத்துள்ளார். 'என்றிவை எல்லாம் இயல்புற நாடின்' என்பதற்கு நான்கு கூற்றுகளை கூடுதலாகச் சுட்டியுள்ளார்.

இளர்பூரணர் காட்டும் புதுமை

தொல்காப்பியர் கூறாத கூற்றுகள் அகநானூறு, சிற்றெட்டகம் ஆகியவற்றில் காணப்பெறுகின்றன. சங்கநூற் குறிப்புக் கொண்டு இளம்பூரணர் புதுமைக் கூற்றுகளை வகுத்துத் தந்துள்ளார்.

"அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம்

ஈரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்

சேரியம் பெண்டிர் கவ்வையும் ஒழிகம்

.........

......... அழுங்கிய செலவே"[78]

என்ற பாடல் உடன்போக்கு நயப்பித்தது ஆகும். நயப்பித்தது என்பது விரும்பி ஒருப்படச்செய்தது ஆகும். இதன்வழி இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'அழுங்கிய செலவே' (அகம்.65;20) என்ற குறிப்பைக் கொண்டு தலைவியைத் தோழி உடன்போக்கு ஒருப்படச் செய்ததையும், 'வாழி தோழி' என்றதனால் தோழி தலைமகளுக்குக் கூறியதும் அறியப்பெறுகிறது. இப்பாடலின் முதற்பகுதியில் தலைவன் உடன்போக்கு நயப்பித்தற்குரிய காரணம் தெளிவுறுத்தப்பெறுகிறது. 'அன்னை சொல்லும் உய்கம், பெண்டிர் கவ்வையும் ஒழிகம்' என்ற குறிப்புக்களான் தோழி தலைவியை உடன்போக்கிற்கு நயப்பித்தது அறியப்பெறுகிறது. தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண் தோழி தலைமகளிடம் கூறுதல் என்பதற்குச் சிற்றெட்டகத்தில் (நாளும்) இருந்து எடுத்துக் காட்டியுள்ளார்.

தலைமகனைச் சுட்டிக் கூறலுக்கு கலித்தொகையில் இருந்தும் (பா.எ;20) தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொண்டதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டு கொள்க என்றும் உரைவந்துள்ளார். தலைமகன் மொழிந்தது கூறித்தாயை வற்புறுத்தற்கண் கூறலுக்குக் கலித்தொகையில் இருந்தும் (பா.எ;11) பருவம் வந்தது என்பதற்கு திணைமாலை நூற்றைம்பது (பா.எ;66) நூலிலிருந்தும், பருவம் அன்று என்பதற்குக் குறுந்தொகையில் (பா.எ;66) இருந்தும், விலக்கிற்று என்பதற்கு ஐங்குறுநூற்றின் (பா.எ;364) வழியும், தலைமகட்குக் கூறியதற்கு ஐந்திணை ஐம்பதின் (பா.எ;321) வழியும் சான்றுகள் காட்டியுள்ளார்.

நச்சர் சிந்தனை

தொல்காப்பியம் சுட்டிய 'தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல்' என்பதற்குத் தலைவன் கொண்டுதலைக் கழியாவிடின் தலைவிக்கண் தோன்றும் துன்பநிலையைத் தலைவிக்குக் கூறல் என்ற கூற்றினையும், 'போக்கற்கண் கூறல்' என்பதற்குத் தலைவன் போக்கு ஒருப்பட்டெழுதல், உடன்கொண்டு போதற்குத் தலைவன் வந்தான் என பாயலுணர்த்தித் தோழி கூறல், தலைவி போக்கு ஒருப்பட்டெழுதல் உள்ளிட்ட மூன்று கூற்றுகளையும் 'விடுத்தற்கண்' கூறலுக்குத் தலைவனிடம் தலைவியைப் பாதுகாக்கவெனத் தோழி கைப்படுத்துவித்துக் கூறல் என்பதையும் புதியதாகக் கூறியுள்ளார்.

தொல்காப்பியம் குறித்துச் செல்லும் ஐந்தாவது கூற்றிற்கு செவிலித்தாயை மீட்டற்கண் கூறல் என்ற கூற்றினையும், தொல்காப்பிய ஆறாவது கூற்றிற்கு தாயை வற்புறுத்தற்கண் கூறல் என்ற கூற்றினையும், என்றிவை எல்லாம் இயல்புற நாடின் என்பதற்கு மூன்று கூற்றுகளையும் கூடுதலாகச் சுட்டியுள்ளார்.

நச்சர் காட்டும் புதுமை

நச்சினார்க்கினியர் புதுமைக் கூற்றுகளுக்கு, சங்கநூற் குறிப்புகளைக் கொண்டு சான்றுகள் காட்டியுள்ளார். உடன்போக்கில் தலைவியைத் தலைவனுடன் விடுத்தற்கண் கூறியதற்கு,

"நீத்த லோம்புமதி

........

........ கிழவோன்

பழையன் வேல்வாய்த் தன்னநின்

பிழையா நன்மொழி தேறிய விவட்கே"[79]

என்ற பாடலைக் காட்டுவர். இப்பாடலின் துறைக்குறிப்பாவது, "உடன்போக்குந் தோழி கையடுத்தது"[80]என்பதாகும். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'நீத்தல் ஓம்புமதி' என்ற குறிப்பைக் கொண்டு பாதுகாக்கவெனக் கையடை கொடுப்பது கூறப்பெறுகிறது. ஆகவே இப்பாடல் தோழி விடுத்தற்கண் கூறியது என்பதாய் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது.

செவிலித் தாயை மீட்டற்கண் கூறல், தாயை வற்புறுத்தற்கண் கூறல் என்ற கூற்றுகளுக்கு சான்றுகள் காட்டி, அந்நூல்களின் பெயர்களைத் தெரிவிக்காமலும், தலைவன் கரணவகையால் வரைந்ததைத் தோழி தமர்க்கு உணர்த்தி கூறலுக்கு ஐங்குறுநூற்றில் இருந்தும் (பா.எ;280,298) போக்கு நேர்ந்தமை கூறலுக்கு குறுந்தொகையின் வழியும் சான்றுகள் காட்டியுள்ளார்.

சோமசுந்தர பாரதியார் சிந்தனை

'தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல்' என்பதை தோழி தலைவற்குத் தலைவி விழுமம் கூறல், தோழி தலைவிக்குத் தலைவன் விழுமம் கூறல் என்ற இரு கூற்றுகளாக விரித்துள்ளார். மேலும் 'போக்கற்கண் கூறல்' என்பதற்குப் போக்கற்கண் தோழி தலைவற்குக் கூறல், போக்கற்கண் தோழி தலைவிக்குக் கூறல் என்றும் விரித்து மொழிந்துள்ளார்.

தொல்காப்பியம் தோழி கூற்றில் ஐந்தாவதாகக் குறிக்கும் கூற்றிற்கு நற்றாயின் பருவரலைக் கருதி மறுத்தரத் (திரும்பிவரும்) தலைவியை வரவேற்றுக் கொள்ளுதலினும் கூறல் என்ற கூற்றினையும் ஆறாவதாகச் சுட்டிய கூற்றிற்கு தலைவன் விடுத்தகல ஆற்றாமையால் மிக நொந்து மனங்கலங்கும் தலைவியைத் தலைவன் கூறியதை எடுத்துக் கூறி ஆற்றுவிக்குமாறு கூறல் என்ற கூற்றினையும்

புதியதாகச் சேர்த்துள்ளார். இப்புதிய கூற்றினைத் தொல்காப்பியர் தோழி தாய்க்கு கூறியதாகச் சுட்டுவர். ஆனால் பாரதியார் தோழி தலைவிக்கு கூறியது என மாற்றி மொழிந்திருப்பது கருதத்தக்கது. என்றிவை எல்லாம் இயல்புற நாடின் என்பதற்கு பருவமன்று என்ற ஒரு கூற்றினையும் கூடுதலாகக் குறித்துள்ளார்.

சோமசுந்தர பாரதியார் காட்டும் புதுமை

தோழி தலைவற்குத் தலைவி விழுமம் கூறுதற்கு பாலைக்கலியையும் (5), தோழி தலைவிக்குத் தலைவன் விழுமம் உரைத்தற்கு குறுந்தொகையையும், (217) சான்று காட்டியுள்ளார். போக்கற்கண் தோழி தலைவற்குக் கூறியதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளையும் (குறுந்-115, நற்-10), போக்கற்கண் தோழி தலைவிக்குக் கூறியதற்கு ஒரு சான்றினையும் (குறுந்;262) குறித்துச் செல்கிறார்.

தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளற்கு ஒரு சான்றினையும் (ஐங்;398) மனங்கலங்கும் தலைவிக்குத் தலைவன் கூறியதை எடுத்துக்கூறி ஆற்றுவிக்குமாறு கூறலுக்கு இரண்டு காட்டினையும் (கலி;10, அகம்;59), பருவமன்று என்பதற்கு ஒரு சான்றினையும் (குறுந்;66) காட்டி உரை வரைந்துள்ளார்.

நற்றாயும் உடன்போக்கும்

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கில் நற்றாய்க்குரிய கூற்றுகளைத் தொகுத்துக் கூறியுள்ளார். இக்கூற்று முப்பத்து ஒன்பதாவதாகத் திகழ்கிறது"[81] இந்நூற்பா எட்டு அடிகள் கொண்டது"[82]என்பர். இவைகள் அனைத்தும் உடன்போக்குத் தொடர்பானவைகள் ஆகும். மேலும் களவியலில் செவிலிக்கு உரியனவாகக் கூறப்படும் பதின்மூன்று கூற்றுகள்"[83] இவளுக்குப் பொருந்தி வருவதும் உண்டு"[84]என்றும் இயம்புவர். இதில் உடன்போக்கில்

நற்றாய்குரிய கூற்றுகளாக நான்கு கூற்றுகள் அமைகின்றன. நச்சினார்க்கினியர் உடன்போக்கில் நற்றாய் நிகழ்த்தும் கூற்றினை 'ஏம்ப் பேரூர்'[85] என்ற அகத்திணையியல் நூற்பாவின் கண்ணும் அமைத்துள்ளார். இந்நூற்பா செவிலிக்குரிய திறன் உணர்த்தும் நூற்பாவாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

நற்றாய் கூற்றுகள்

தொல்காப்பியர் உடன்போக்கில் நிகழும் நற்றாயின் கூற்றுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துகிறார். அவையாவன: 1. தலைமகள் உடன்போகியவழி நற்றாய் தன்னையும் தலைவனையும் தலைவியையும் சுட்டிக் கூறுதல், 2. தலைமகள் மீண்டு வருதற்குப் பார்க்கும் நிமித்தத்தின்கண் கூறுதல், 3. விரிச்சியாம் நற்சொல் கேட்டல், 4. தெய்வம் பராயவிடத்துக் கூறுதல், 5. மகளின் நன்மை கருதுமிடத்துக்கண் கூறுதல், 6. மகளின் தீமை கருதுமிடத்துக்கண் கூறுதல், 7. தலைவனுடன் போன கொடிய வழி கருதி அச்சம் சார்தற்கண் கூறுதல், 8. முன்பு இத்தன்மையளாயிருந்தாள். இப்பொழுது இத்தன்மையளானாள். இனி எத்தன்மையளாகுவளோ என மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்தற்கண் கூறல், 9. தோழிமாட்டுப் புலம்பல், 10. கண்டோர்மாட்டுப் புலம்பல், 11. தெய்வம் வாழ்த்தற்கண் கூறல், 12. தலைவி தலைவனுடன் போயினாள் என்பதறிந்து, தோழியொடு பொருந்தி, செவிலியிடம் சென்று, தலைவி தனக்குரிய காதல் தலைவனைக் கூடிக் கற்புக்கடம் பூண்டாள் எனக் கூறல், 13. தலைவி உடன்போனவழி பின்செல்லாது இல்லிருந்து வருந்தற்கண் கூறல், 14. மகளது நெஞ்சு உடன்போக்குத் துணிந்ததைக் கூறல், 15. நற்றாய்ச் சேரிக்கு சென்று கூறல் என்பனவாகும்

உரையாசிரியர்களும் நற்றாய் கூற்றும்

நற்றாய்க்குரிய கூற்றுகளை உரையாசிரியர்கள் மூன்று நூற்பாக்களில் விளக்கிச் செல்கின்றனர். இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

அட்டவணை - 2 : 12

உரையாசிரியர்களும் நற்றாய் கூற்றுகளும்[86]

வ.எ	தொல்	இளம்.	நச்சர்	பாரதியார்	அரு. பிள்ளை
1.	தலைமகள் உடன்போகிய வழி நற்றாய் தன்னையும் அவனையும் அவளையும் சுட்டிக் கூறல்	+	+	+	+
2.	நிமித்தத்தின்கண் கூறுதல்	1. நற்றாய் உடன்போய தலைமகள் பொருட்டுக் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தல் பல்லி சொல்லல், காக்கை கரைதல், கண்,தோள் துடித்தல்	பல்லி சொல்லல்	1. இடக்கண், இடத்தோள் துடித்தல் 2. ஓந்திநிலை கொண்டு அறிதல் காக்கை கரைதல், பல்லி ஒலி	
3.	மொழிப்பொருள் தெய்வத்தின் கண் கூறுதல்		கட்டினும், கழங்கினும் அறிதற்கண் கூறல்	1. மொழிப்பொருள் என்ற நற்சொல் -லாம் விரிச்சியொடு படுத்து நற்றாய் புலம்பல் 2. தெய்வத்தொடு படுத்து நற்றாய் கூறல்	கட்டினும் குறிகேட்டல் கழங்கினும் குறிகேட்டல்
4.	மகளின் நன்மையின்கண் கூறல்	+	+	+	+
5.	மகளின் தீமையின்கண் கூறல்	+	+	+	+
6.	மகளது அச்சத்தின்கண் கூறுதல்	+	1. தலைவி விலங்கு, புள், ஆறலைப் போர் முதலியன கண்டு அஞ்சும் அச்சம் நற்றாய் கூறல் 2. தலைவியின் தந்தை, தன்னையரால் ஏற்படும் தீங்கிற்கு அஞ்சும் அச்சம் கூறல்	+	+

வ.எ	தொல்	இளம்.	நச்சர்	பாரதியார்	அரு. பிள்ளை
7.	சார்தல்	1. தலைவி சென்று சாரும் இடத்தின்கண் தெய்வத்தோடு படுத்து நற்றாய் கூற்று நிகழ்தல் 2. மீண்டு வந்து சாரும் இடத்தின்கண் தெய்வத்தோடு படுத்து கூறுதல்	+	+	+
8.	தலைவியின் மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல்	+	+	+	+
9.	தோழி மட்டும் புலம்பல்		1. தோழியை நற்றாய் வெகுண்டு கூறுதல்		தோழியினிடத்து நற்றாய் மருண்டு கூறல்
10.	கண்டோர்மாட்டுப் புலம்பல்	1. நற்றாய் தலைமகளின் உடன்–போக்கு எண்ணிப் படிமத்–தானை வினாதல்			
11.	அன்ன பிறவும்		1. தலைவன் மிகவும் அன்பு செய்கவென்று பராவுதல் 2. தலைவி தனக்கு வருத்தம் உண்டாகும்படி உடன்–போயினாள் என்றல் 3. நற்றாய் உடன்போன தலைவி தன்னை நினைப்–பாளோ என வருந்துதல்	1. தலைவியின் தாய் தலைவனின் தாயினை வெறுத்துக் கூறுதல் 2. நற்றாய் தனிமையிற் புலம்பல்	
12.	ஈன்றவள் புலம்பலும்	தலைமகள் உடன்போயவழி நற்றாய் கவன்று உரைத்தல்	+	+	+

இளம்பூரணர் சிந்தனை

உடன்போக்கில் நற்றாய்க்குரிய கூற்றுகளை விளக்கும் நூற்பாவிற்கு உரை வரைந்த இளம்பூரணர், தனது உரையில் கூடுதலாகச் சில கூற்றுகளை அமைத்துக் காட்டுகிறார்.

தொல்காப்பியத்தில் இரண்டாவதாக இடம்பெற்றுள்ள 'நிமித்தத்தின்கண் கூறுதல்' என்ற கூற்றிற்குக் காகத்திற்குப் பாராய்க்கடன் உரைத்தல் பல்லி சொல்லல், காக்கை கரைதல், கண், தோள் துடித்தல் என்ற ஐந்து கூற்றுகளைக் கூடுதலாகச் சுட்டியுள்ளார். மேலும் மூன்றாவதாகக் குறிக்கப்பெற்றுள்ள 'மொழிப்பொருள் தெய்வத்தின்கண் கூறுதல்' என்பதற்குப் படிமத்தானை வினாதல்' என்பதைப் புதியதாகச் சேர்த்துள்ளார்.

இளம்பூரணர் காட்டும் புதுமை

இவர் கூறிய புதுமைக் கூறுகளை நிலைநாட்டிச் சங்க நூலில் இருந்து சான்று காட்டுகிறார். சங்கநூல் குறிப்புகள் கொண்டு கூற்றுகளைப் புதிதாக வகுத்திருக்கிறா

"பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே"[87]

என்ற பாடல் காகத்திற்கு பாராய்க்கடன் உரைத்ததாகும். இதற்கு "இஃது உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டுத் தாய்காகத்திற்குப் பாராய்க்கடன்

உரைத்தது"[88] என்று துறைக் குறிப்புரைப்பர். இப்பாடல் நற்றாயின் கூற்றாக உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது.

".........நின்னை வினவுவேன் தெய்வத்தால்

கூறாயோ"[89]

என்ற பாடல் படிமத்தானை வினாயதாகும். இதற்கு "நற்றாய் தலைமகளின் உடன்போக்கு எண்ணிப் படிமத்தானை வினாஇயது"[90] என்று துறைக் குறிப்பினைக் கூறுவர். இப்பாடல் நற்றாய் படிமத்தானை வினாயவழி உடன்போக்கிற்கு உரியதாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

நச்சர் சிந்தனை

உடன்போக்கின்போது நற்றாய் நிகழ்த்தும் இரண்டாவதாகக் குறிக்கப்பெற்றுள்ள 'நிமித்தத்தின்கண்' கூறல் என்பதற்கு பல்லி சொல்லல் என்ற கூற்றினை நச்சர் புதியதாகப் படைத்துள்ளார். 'மொழிப்பொருள் தெய்வத்தின்கண் கூறல்' என்ற கூற்றிற்குக் கட்டினும், கழங்கினும் அறிதற்கண் கூறல் என்ற இரு கூற்றினையும், மகளது அச்சத்தின்கண் கூறலுக்குத் தலைவி விலங்கு, புள், ஆறலைப்போர் முதலியன கண்டு அஞ்சும் அச்சம் கூறல், தலைவியின் தந்தை தமையனரால் ஏற்படும் தீங்கிற்கு அஞ்சும் அச்சம் கூறல் என்ற இரு கூற்றினையும், தோழிமாட்டுப் புலம்பலுக்குத் தோழியை நற்றாய் வெகுண்டு கூறுதல் என்ற கூற்றினையும் புதியதாக மொழிந்துள்ளார்.

தொல்காப்பியம் சுட்டிய அன்ன பிறவும் என்பதற்குத் தலைவன் மிகவும் அன்பு செய்கவென்று நற்றாய் தெய்வத்திடம் பராவுதல்,. தலைவி தனக்கு வருத்தம்

உண்டாகும்படி உடன்போயினாள் என்றல், நற்றாய் உடன்போன தலைவி நினைப்பாளோ என வருந்துதல் என்ற மூன்று கூற்றுகளையும், சார்தல் என்ற கூற்றிற்குத் தலைவி சென்றுசாரும் இடத்தின்கண் தெய்வத்தோடுபடுத்து நற்றாய் கூற்று நிகழ்த்துதல், மீண்டுவந்து சாரும்இடத்தின்கண் தெய்வத்தோடுபடுத்துக் கூறுதல் என்று இரண்டு கூற்றுகளையும் கூடுதலாக அமைத்துள்ளார். இப்புதிய கூற்றுகளுக்குச் சான்றுகளையும்"[91] கூறியுள்ளார்.

பாரதியார் சிந்தனை

'நிமித்தத்தின்கண் கூறல்' என்பதற்கு இடக்கண், இடத்தோள் துடித்தல், ஓந்திநிலை கொண்டு அறிதல், காக்கை கரைதல், பல்லி ஒலி உள்ளிட்ட புதிய கூற்றுகளை வரையறுத்துள்ளார். 'மொழிப்பொருள் தெய்வத்தின்கண் கூறல்' என்ற ஒரு கூற்றினை மொழிப்பொருள் என்ற நற்செல்லாம் விரிச்சியொடு படுத்து நற்றாய் புலம்பல், தெய்வத்தொடுபடுத்து நற்றாய் புலம்பல் என இரண்டாக விரித்துள்ளார். 'அன்ன பிறவும்' என்பதற்குத் தலைவியின் தாய் தலைவனின் தாயினை வெறுத்துக் கூறுதல், நற்றாய் தனிமையிற் புலம்பல் என்ற இரண்டு கூற்றுக்களும் புதியனவாகச் சுட்டப்பெற்றவை ஆகும்.

அருணாச்சலம் பிள்ளை சிந்தனை

தொல்காப்பியம் சுட்டிய மொழிப்பொருள் தெய்வத்தின்கண் கூறலுக்குக் கட்டினும் குறிகேட்டல், கழங்கினும் குறிகேட்டல் என்ற இரு கூற்றினையும் தோழிமாட்டுப் புலம்பல் என்பதற்குத் தோழியினிடத்து நற்றாய் மருண்டு கூறல் என்ற கூற்றினையும் புதியதாக வரைந்துள்ளார்.

செவிலியும் உடன்போக்கும்

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கில் செவிலிக்குரிய கூற்றுகளைத் தனியாகத் தொகுத்துச் சுட்டவில்லை. ஆனால் செவிலிக்குரிய திறன் உணர்த்தும் முகமாக நூற்பா ஒன்றினை மொழிந்துள்ளார்"[92] இந்நூற்பா உடன்போக்கில் நிகழும் செவிலியின் கூற்றுகளைக் கூறுவதாகும்.

இந்நூற்பா ஒன்றில் மட்டும் உடன்போக்கில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகளை வகைப்படுத்த இயலவில்லை. ஆகவே இளம்பூரணர் உடன்போக்கில் நற்றாய் கூற்றாகக் குறிக்கப்பெறும் சூத்திரத்திலும் செவிலி கூற்றுகளை அமைத்துள்ளார். இதனை 'பிறவும் அன்ன ஈன்றவள் புலம்பலும்' என்ற உம்மையால் செவிலி புலம்பலும் கொள்ளப்படும்'[93] என்று இளம்பூரணர் மொழிகிறார்.

நச்சினார்க்கினியர் உடன்போக்கில் செவிலிக்குரிய கூற்றுகளை "எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே"[94]என்ற நூற்பாவின்கண் சுட்டிச் செல்கின்றார். தொல்காப்பியர் "களவியலில் செவிலிக்குரிய கூற்றுகளை 'களவு அலராயினும்' என்ற நூற்பாவின்கண் தொகுத்துக் கூறியுள்ளார்"[95] அந்நூற்பாவிலும் உடன்போக்கில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகளை உரையாசிரியர் குறித்துள்ளனர். அவ்வகையில் உடன்போக்கில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப் பெற்றுள்ளன.

அட்டவணை - 2 : 13

உரையாசிரியர்களும் செவிலி கூற்றும்[96]

வ.எ	தொல்	இளம்.	நச்சர்	பாரதியார்	அரு.பிள்ளை
1.	எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே (தொ.பொ.அ.42)	-	1. உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கிக் கூறுதல் 2. செவிலி தெருட்டுவார்க்குக் கூறுதல் 3. மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்தில் பெண்மானைக் கண்டு சொல்லுதல் 4. செவிலி கானவர் மகளைக் கண்டு கூறுதல் 5. செவிலி கடத்திடைத் தன்நெஞ்சிற்குச் சொல்லுதல் 6. செவிலி குரவொடு புலம்பல் 7. குரவினை வழிகாட்டுமாறு புலம்பல் 8. தன்னை யாரென்று வினவியோர்க்கு செவிலி கூறல்	-	-
2.	தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும் (தொ.பொ.அ.43)	-	-		1. செவிலி சுரத்தில் இரங்கிக் கூறல்
3.	செவிலி சேரியோரை வினாதல்	+	-	1. செவிலி சேரியின் கண் வினாதல்	1. செவிலி சேரியின் கண் இரங்கிக் கூறல்

வ.எ	தொல்	இளம்.	நச்சர்	பாரதியார்	அரு. பிள்ளை
4.	செவிலி சுரத்திடை வினாதல்	1. செவிலி சுரத்திடை முக்கோற் பகவரை மீண்டும் வினாதல் 2. செவிலித்தாய் செயலற்றுக் கூறல்	1. செவிலி சுரத்தில் தேடத்துணிந்து வினாதல்	2. செவிலி சுரத்தின் கண் வினாதல்	
5.	தன்னும் அவனும் ஈன்றவள் புலம்பலும்	1. உடன்போக்கிய செவிலி கவன்று உரைத்தல் 2. செவிலி தலைமகன் கொடுமை நினைந்து கூறல் 3. செவிலி தெய்வம் பராவுதல்	–	–	1. செவிலி இல்லத்தின்கண் இரங்கிக் கூறல்
7.	தெய்வம் வாழ்த்தல்	1. தலைவி உடன்போனதை அறிந்த செவிலி தெய்வத்தை வேண்டுதல்	1. தலைமகனுடன் தலைவி கொண்ட ஒழுக்கம் நன்மைத்தாகவென்று செவிலி பலிகொடுத்து தெய்வத்தைப் பராவுதல்		
8.	செவிலி போக்குடன் அறிந்த பின் தோழியொடு கெழுகற்பின் ஆக்கத்து நிற்றல் கண் கூறல்	1. தலைவி தலைவனுடன் போயினாள் என்பதறிந்து தோழியொடு இல்லத்தின்கண் வருந்திக் கூறல்	1. உடன்போக்கு அறிந்தபின் செவிலி தலைவியின் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண் கூறல் 2. செவிலி தலைவியின் கற்பின் ஆக்கத்து நின்றதைத் தோழி கொண்டு கூறல்		
9.	பிரிவின் எச்சத்து மகள் நெஞ்சு வலிப்பினும் கூறல்	–	1. தலைவி உடன்போய வழித் தான் (செவிலி) பின் செல்லாது எஞ்சுதல் கண் கூறல். 2. உடன்போக்கிற்குத் தலைவியின் நெஞ்சு துணிந்தமை கூறல் 3. தலைவிக்கு செவிலியின் மீது அன்பு நீங்கினமை கூறல்		

செவிலி கூற்றுகளுக்கு உரையாசிரியர்கள் காட்டிய சான்றுகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப் பெற்றுள்ளன.

2 : 14 செவிலி கூற்றுகளும் மேற்கோள் பாடல்களும்[97]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
	இளம்பூரணர்:		
1.	செவிலி சேரியோரை வினாதல்	இதுதான் பாவைக்	ஐங்;375
2.	செவிலி சுரத்திடை வினாதல்	எறித்தரு கதிர்தாங்கி	கலி.பா;8
3.	செவிலி முக்கோற்பகவரை மீண்டும் வினாதல்	செய்வினைப்பொலிந்த	ஐங்;389
4.	செவிலித்தாய் செயலற்றுக் கூறுதல்	காலே பரிதப்	குறுந்;44
5.	உடன்போக்கிய செவிலி கவன்று உரைத்தல்	பெயர்த்தனென்	குறுந்;84
6.	செவிலி தலைமகன் கொடுமை நினைந்து கூறல்	என்னும் உள்ளினன்	ஐங்;372
7.	செவிலி தெயவம் பராவுதல்	ஈன்று புறந்	அகம்;35
8.	தலைவி உடன்போனதை அறிந்த செவிலி தெய்வத்தை வேண்டுதல்	-	-
9.	தலைவி தலைவனுடன் போயினாள் என்பதறிந்து செவிலி தோழியொடு இல்லத்தின்கண் வருந்திக் கூறல்	பறைபடப்	குறுந்;15
	நச்சர் உரை:		
1.	உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கிக் கூறல்	கிளியும் பந்துங்	அகம்;49
2.	செவிலி தெருட்டுவார்க்குக் கூறல்	அத்த நீளிடை	ஐங்;380
3.	மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்தில் பெண்மானைக் கண்டு சொல்லுதல்	முலைமுகஞ்	அகம்;7

4.	செவிலி கானவர்மகளைக் கண்டு கூறல்	-	-
5.	செவிலி கடத்திடைத் தன் நெஞ்சிற்குச் சொல்லுதல்	காலே பரிதப்	குறுந்;44
6.	செவிலி குரவொடு புலம்பல்	இடிதுடிக் கம்பலையு	-
7.	செவிலி குரவினை வழிகாட்டுமாறு புலம்பல்	தான்றாயாக்	தி.நூ;65
8.	தன்னை யாரென்று வினவியோர்க்கு செவிலி கூறல்	குடம்புகாக்	-
9.	செவிலி சுரத்தில் தேடத்துணி- தற்கண் கூறல்	நிலந்தொட்டுப்	குறுந்;130
10.	தலைவனுடன் தலைவி கொண்ட ஒழுக்கம் நன்மைத்தாகவென்று செவிலி பலிகொடுத்து தெய்வத்தைப் பராவுதல்	நாடற்கின்றீம்	அகம்;282
11.	உடன்போக்கு அறிந்தபின் செவிலி தலைவியின் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண் கூறல்	எம்மனை	அகம்;195
12.	செவிலி தலைவியின் கற்பின் ஆக்கத்து நின்றதைத் தோழி கொண்டு கூறல்	முயங்குகம்	-
13.	தலைவி உடன்போகியவழித் தான் பின்செல்லாது எஞ்சுதற்கண் கூறல்	தெறு வ தம்ம	ஐங்;313
14.	உடன்போக்கிற்குத் தலைவியின் நெஞ்சு துணிந்தமை செவிலி கூறல்	-	-
15.	தலைவிக்கு செவிலியின் மீது அன்பு நீங்கின்மை கூறல்	பெயர்த்தனென்	குறுந்;84

பாரதியார் உரை:

1.	செவிலி சேரியின் கண் வினாதல்	காலே	குறுந்;44

2. செவிலி சுரத்தின்கண் வினாதல் எறித்திரு -

அருணாச்சலம் பிள்ளை:

1. செவிலி சுரத்தின்கண் இரங்கிக் கூறல் - -
2. செவிலி சேரியின்கண் இரங்கிக் கூறல் - -
3. செவிலி இல்லத்தின்கண் இரங்கிக் கூறல் - -

கண்டோரும் உடன்போக்கும்

தொல்காப்பியர் அகத்திணையியலில் கண்டோர் கூற்றினை அமைத்துள்ளார். இதில் ஒன்பது அடிகள் குறிக்கப்பெற்றுள்ளன"[98] இக்கூற்று நாற்பத்து மூன்றாவது நூற்பாவாக இடம்பெற்றுள்ளது"[99]என்பர்.

கண்டோர் கூற்றுகள்

தொல்காப்பியர் கண்டோர் கூற்றாக, ஏழு கூற்றுக்களைக் குறிப்பர். இவையாவும் உடன்போக்குத் தொடர்பானவை ஆகும்.

1. தலைவன் தலைவியொடு செல்லும் காலமும் வழியும் குறித்து அச்சம் தோன்றக் கூறி அவற்றால் வரும் துன்பத்தைக் காட்டுதல், 2. எம்மூர் அணிமைத்து எனவும் நீவிர் செல்லும் ஊர் சேய்மைத்து எனவும் கூறுதல், 3. உடன்போகியவழித் தலைமக்கள் பால் அன்பு கொண்டு, அவர்கள் நிலைமைக்கு மனம் கலங்கிக் கூறி விடுத்தற்கண் கூறுதல், 4. செவிலித்தாயைத் தடுத்தற்கண் கூறுதல், 5.செவிலித்தாயைத் தொடர்ந்து விடுத்தற்கண் கூறுதல், 6. சேய்மையிடத்தே அகன்றோர் செலவின்கண் கூறுதல், 7. சேய்மையிடத்தே அகன்றோர் வருதற்கண் கூறுதல் என்பதாகும்.

இளம்பூரணர் பொழுதும் ஆறும் உட்குவரத்தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டல், ஊரது சார்பும், செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பல் ஆகிய இரு கூற்றினையும் ஒன்றாக இணைத்து ஒரு சான்றினை மட்டும் அக்கூற்றுகளுக்குக் குறித்துள்ளார். அச்சான்று 'எம்மூர் அல்லது'[100] என்னும் தொடக்கத்தினை உடையதாய் சிற்றெட்டகத்தில் இருந்து குறிக்கப் பெற்றுள்ளது.

புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்தெதிர் கூறி விடுத்தலுக்கு நற்றிணையிலிருந்தும் (பா.எ;2) தாய்நிலைகண்டு தடுத்தற்குச் சான்று காட்டி, அந்நூலின் பெயரைத் தெரிவிக்காமலும் உரை வரைந்துள்ளார். தாய்நிலை கண்டு விடுத்தற்கு ஐங்குறுநூற்றிலிருந்தும் (பா.எ;388) சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் என்ற கூற்றிற்கு குறுந்தொகையிலிருந்தும் (பா.எ;7) எடுத்துக்காட்டுகள் அமைத்துள்ளார். சேய்நிலைக்கு அகன்றோர் வரவின்கண் கூறலுக்கு மேற்கோள்பாடல் தராமலும் உரை வரைந்துள்ளார்.

அட்டவணை – 2 : 15
கண்டோர் கூற்றும் உரையாசிரியர்களும் [101]

வ.எ	தொல்	இளம்.	நச்சர்	பாரதியார்
1.	பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டிக் கூறுதல்	–	–	–
2.	ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் செப்பல்	–	–	ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் கூறுதல்
3.	புணர்ந்து செல்கின்றோர்பால் விரும்பின் நெஞ்சத்தோடு அழிந்தெதிர்கூறி விடுத்தற்கண் கூறுதல்	–	–	–
4.	தலைவியைத் தேடிச்சென்ற செவிலித்தாயின் நிலைகண்டு தடுத்தற்கண் கூறுதல்	1. செவிலி வினாயவழிக் கண்டோர் கூறுதல்	–	–
5.	செவிலித்தாய் நிலைகண்டு விடுத்தற்கண் கூறுதல்	–	1. தலைமக்களைக் கண்டு வியந்து கூறுதல்	–
6.	சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறுதல்	–	1. இடைச்சுரத்துக் கண்டோர் கூற்றினைச் சிலர் கொண்டு கூறல் 2. தலைமக்களைப் பற்றி குறும்பின் பெண்டிர் கோள் இழைப்புற்றோர்க்குக் கூறல்	–
7.	சேய்நிலைக்கு அகன்றோர் வரவின்கண் கூறுதல்	–	–	–

இளம்பூரணர் சிந்தனை

உடன்போக்கில் கண்டோர் கூற்றுக்கு உரை எழுதிய இளம்பூரணர் புதியதாக ஒரு கூற்றினைக் குறித்துச் செல்கிறார். தொல்காப்பியத்தில் கண்டோர் கூற்றில் நான்காவதாக இடம்பெற்றுள்ள 'செவிலித்தாயின் நிலைகண்டு தடுத்தற்கண் கூறுதல்' என்பதற்கு 'செவிலி வினாயவழிக் கண்டோர் கூறுதல்' என்ற கூற்று அப்புதிய கூற்றாக அமைகிறது.

தொல்காப்பியர் கண்டோருக்குரிய கூற்றாக ஏழினைச் சுட்டுவர். இளம்பூரணர் புதியதாக ஒரு கூற்றினைச் சேர்த்து மொத்தம் கண்டோருக்குரிய கூற்றாக எட்டினைக் குறிப்பர்.

இளம்பூரணர் காட்டும் புதுமை

தொல்காப்பியர் குறிப்பிடாத கூற்று ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ளது. 'அறம்புரி அருமறை'[102] என்ற பாடல் செவிலி வினாஅயவழிக் கூறல் என்பதாய் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது. இப்பாடலில் 'அந்தணிர் தொழுவலென்று ஒண்டொடி வினவும்'(2,3) என்ற தொடரைக் கொண்டு அந்தணனிடம் செவிலி வினவியதும், 'கண்டனெம்' (387;4) என்ற குறிப்பைக் கொண்டு அந்தணராகிய கண்டோர் கூறியதும் அறியப்பெறும். இக்குறிப்புகளைக் கொண்டு இளம்பூரணர் இப்பாடலை செவிலி வினாஅயவழிக் கண்டோர் கூறியதற்குக் காட்டுகிறார். இக்கூற்று தொல்காப்பியத்தில் இடம்பெறாமல், இளம்பூரணர் உரையில் அமைக்கப் பெற்றுள்ளது.

நச்சினார்க்கினியர் சிந்தனை

கண்டோர் கூற்றுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் தொல்காப்பியரை விடக் கூடுதலாகச் சில கூற்றுகளை அமைத்துக் காட்டுகிறார்.

தொல்காப்பியத்தில் கண்டோர் கூற்றில் ஐந்தாவதாக இடம்பெற்றுள்ள 'செவிலித்தாய் நிலைகண்டு விடுத்தற்கண் கூறல்' என்பதற்கு 'தலைமக்களைக் கண்டு வியந்து உரைத்தல்' என்ற கூற்றுனைப் புதியதாகக் கூறுவர். தொல்காப்பியத்தில் ஆறாவதாகக் குறிக்கப்பெற்றுள்ள 'சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறல்' என்ற கூற்றிற்கு, இடைச்சுரத்துக் கண்டோர் கூற்றினைச் சிலர் கொண்டு கூறல், தலைமக்களைக் கண்டு குறும்பின் பெண்டிர் கோள் இழைப்புற்றார்க்குக் கூறல் என்ற இரு கூற்றினைப் புதியதாகக் கூறுவர். தொல்காப்பியம் சுட்டிய 'சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண்' கூறுதல் என்ற கூற்றினை நச்சர் செவிலி வரவின்கண் கூறுதல் என்று மாற்றிப் பொருள் கூறியுள்ளார். ஆனால் இளம்பூரணர் சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட உரையாசிரியர்கள் தொல்காப்பியர் கருத்திற்கே உடன்படுகின்றனர்.

நச்சினாரக்கினியர் காட்டும் புதுமை

நச்சினார்க்கினியர் காட்டும் 'சிலம்புஞ் சிறு நுதலும்' என்னும் தொடக்கத்தினைக் கொண்ட பாடல் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது. இப்பாடலில் அருஞ்சுரத்து(5), 'அவிர்சடையெம் அண்ணல்'(7) போன்ற குறிப்புகள் உள்ளன. அவிர்சடையெம் என்பது தலைமக்கள் சிவபெருமானைப் போலக் காட்சியளித்ததும், அருஞ்சுரத்து என்றதன்வழி அவர்கள் (கண்டோர்) சுரத்தில்

கண்டதும் அறியப்பெறும். ஆகவே இப்பாடலை நச்சர் 'தலைமக்களைக் கண்டு கண்டோர் வியந்து உரைத்தலுக்குக்"[103]காட்டுகிறார். இதுதவிர இவர் காட்டிய புதுமைக் கூற்றுகள் "திணைமாலை நூற்றைம்பது (பா.எ;71), நற்றிணை" (பா.எ;2) ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

நச்சினார்க்கினியர் பொழுதும் ஆறும் உட்குவரத்தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலுக்கு இளம்பூரணர் காட்டிய சான்றினை விடக், கூடுதலாக மற்றொரு சான்றினை குறுந்தொகையில் (பா.எ;370) இருந்து குறித்துள்ளார். ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ செஞ்சமொடு செப்பல், அழிந்தெதிர் கூறி விடுத்தல் ஆகிய இரண்டிற்கும் மேற்கோள் அளித்து, அந்நூலின் பெயரைத் தெரிவிக்காமல் உரை வரைந்துள்ளார். தாய்நிலைகண்டு தடுத்தல், தாய்நிலைகண்டு விடுத்தல், சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறல் ஆகிய மூன்றிற்கும் இளம்பூரணர் காட்டிய சான்றினை இவரும் காட்டியுள்ளார். செவிலி வரவின்கண் கூறல் என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுகளையு அளித்துள்ளார். அவற்றில் ஒன்று ஐங்குறுநூற்றிலும், மற்றொன்று கலித்தொகையிலும் (9) இடம்பெற்றுள்ளன. எஞ்சிய இரண்டு சான்றுகளுக்கு நூலின் பெயரைத் தெரிவிக்காமல் உரை எழுதியுள்ளார்.

சோமசுந்தர பாரதியாரின் சிந்தனை

தொல்காப்பியர் கண்டோருக்குரிய கூற்றுகளாகச் சுட்டிய அனைத்துக் கூற்றிற்கும் பாரதியார் உடன்படுகிறார். தொல்காப்பியர் குறிப்பிடும். “ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வு நெஞ்சமொடு கண்டோர் செப்பல்" என்ற கூற்றிற்கு ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் கூறல் என்ற புதிய கூற்றினைப் பிரித்துக் கூறியுள்ளார்.

சோமசுந்தர பாரதியார் காட்டும் புதுமை

தொல்காப்பியர் சுட்டாத கூற்றுகள் குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. 'வில்லோன் காலன' என்னும் தொடக்கத்தினையுடைய குறுந்தொகைப் பாடல்"[104]ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் கூறியது என்பதாய் உடன்போக்கிற்கு உரியதாக அமைகிறது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'யார்கொல் அளியர்' (குறுந்;7,3), வேய்பயில் அழுவம் முன்னி யோரே"(7;6) என்ற குறிப்புகளைக் கொண்டு இப்பாடலைச் சோமசுந்தர பாரதியார் ஆர்வ நெஞ்சமொடு கண்டோர் கூறியதற்குக் காட்டுகிறார். இக்கூற்று தொல்காப்பியத்தில் குறிக்கப் பெறாமல், பாரதியார் உரையில் புகுத்தப்பெற்றுள்ளது.

சோமசுந்தர பாரதியார் பொழுதும் ஆறும் உட்குவரத்தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டல் (குறுந்;390) ஊரது சார்பும் செல்லும் தேயமும் கூறல், அழிந்தெதிர்கூறி விடுத்தல், தாய்நிலைகண்டு தடுத்தல், தாய்நிலைகண் விடுத்தல் ஆகிய ஐந்து கூற்றிற்கும் நச்சர் காட்டிய மேற்கோள் பாடல்களை இவரும் காட்டியுள்ளார். இதுதவிர சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறலுக்கு ஐங்குறுநூற்றிலிருந்தும் (389), சேய்நிலைக்கு அகன்றோர் வரவின்கண் கூறலுக்குக் குறுந்தொகையிலிருந்தும்(299) சான்று காட்டியுள்ளார்.

இறையனார் களவியல் குறிப்பிடும் உடன்போக்கு

இறையனார் களவியலில் நக்கீரர் இருபத்து மூன்றாவது நூற்பாவிற்கு உரை எழுதும்போது உடன்போக்குப் பற்றிக் குறிப்பிட்டுச் செல்கிறார். இதனை, "வெளிப்பட்ட பின்றையும் உரிய கிளவி" என்பர். "வெளிப்பட்ட பின்றையும் உரிய

கிளவி என்றாரெனினும், வெளிப்பட்டபின்றைக் கிளவியும் உரிய என மொழிமாற்றிக் கொள்க. கிளவி என்பது மகட்கூறுதல்; அதுவும் உரித்து என மற்றும் ஒன்றுண்டு கூறற்பாலது அஃதியாதோ எனின் அவனுடன் போக்கும் உரித்து"[105] என்று நக்கீரர் கூறுவர்.

இந்நூல் உடன்போக்கினை நேரடியாகச் சூத்திரத்தில் குறிப்பிடவில்லை. நக்கீரர் தனது உரையில் உடன்போக்கினைக் குறித்துச் செல்கிறார். மேலும் வெளிப்பட்ட பின்றைக்கிளவியும் உரிய என்று இயைபுகூறி மற்றும் ஒன்று உண்டு அது உடன்போக்கு என வருவித்துக் கொண்டு உடன்போக்குத் தொடர்பான செய்திகளைக் கூறுகிறார்.

நக்கீரர் சிந்தனை

நக்கீரர் தனது உரையில் உடன்போக்கிற்குரிய கூற்றுகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்துவர். அவையாவன: 1. அலரறிவுறுத்தல் 2. மகட்பேச்சுரைத்தல் 3. பொன்னணிவுரைத்தல் 4. முலைவிலை கூறல் 5. ஆதரங்கூறல் 6. நாணழிந்து வருந்தல் 7. ஓம்படுத்துரைத்தல் 8. மெல்லக் கொண்டேகல் 9. நெறிவிலக்கிக் கூறல் 10. நகரணிமை கூறல் 11. கவன்று உரைத்தல் 12. சுரம்நினைந்திரங்கல் 13. அடிநினைந்திரங்கல் 14. குரவொடு வருந்தல் 15.சுரத்திடைக் கண்டோர் குறிப்பொடு கூறல் 16. வேதியரை வினாதல் 17.வியந்துரைத்தல் 18.அழுங்குதாய்க்குரைத்தல் 19.உலகியல்புரைத்தல் 20. செவிலி மனையகத்திலிருந்து சொல்லுதல் 21. வழிச்செல்வோரை வரவுரைமின் என்றல் 22. வேலனை வினாதல் 23. நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல் என்பவை ஆகும். இதில் செவிலிக்கு மிகுதியான கூற்றுகள் இடம்பெற்றுள்ளன.

தோழி கூற்றில் ஆறு கூற்றுகளும், செவிலிக்கு ஏழு கூற்றுகளும், கண்டோர் கூற்றில் ஐந்து கூற்றுகளும், தலைவனுக்கு ஒரு கூற்றும், தலைவி, நற்றாய் ஆகியோருக்கு ஈரிரண்டு கூற்றுகளும் குறிக்கப்பெற்றுள்ளன. தொல்காப்பியம் கண்டோருக்குரியனவாகச் சுட்டிய ஏழு கூற்றுகளை இந்நூல் குறைத்துக் (5) கையாண்டுள்ளது. தொல்காப்பியம் தலைவனுக்குரிய கூற்றாக ஆறினைக் குறிக்க, இந்நூல் ஒன்றாகவும், தலைவிக்குரிய கூற்றினை (நச்சர் உரை) தொல்காப்பியம் பத்தாகச் சுட்ட இந்நூல் இரண்டாகவும் குறித்துள்ளது.

மேலும் தொல்காப்பியம் செவிலிக்குரிய கூற்றாக பதின்மூன்றினை விரிக்க இந்நூல் ஏழாகவும், நற்றாய்க்குரிய கூற்றினைப் பதினொன்றிலிருந்து இரண்டாகவும் சுருக்கியுள்ளது. தொல்காப்பியம் சுட்டிய தோழிக்குரிய கூற்றுடன், இந்நூலும் ஒத்துச் செல்கின்றது.

2 : 16 நக்கீரரும் மேற்கோள் பாடல்களும்[106]

வ.எ.	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	அலரறிவுரைத்தல்	பலராய் எதிர்நின்று	165
		பொருள்தான் என நின்ற	166
		அறிந்தோர் அறனில்	நற்;227
2.	மகட்பேச்சுரைத்தல்	நீரணி வேலி	167
		வேலைத் துளைத்தகண்	168
		போர்மலி தெல்வரைப்	169
		வேயும் புரையுமென்	170
3.	பொன்னணிவுரைத்தல்	குன்றொத்த யானைச்செங்	171
		நலம்புரி தெய்வமென்	172
4.	முலைவிலை கூறல்	என்னால் இதுசெய்	-
5.	ஆதரங் கூறல்	மால்புரை யானை	-
		கழலணி போர்மன்னர்	175

6.	நாணிழந்து வருந்தல்	ஏனும் இகலும்	176
		அளிதோ தானே	குறுந்;149
		சிலரும் பலரும்	நற்;149
7.	ஓம்படுத்துரைத்தல்	கொங்கை தளரினும்	178
		மென்முலை வீழினும்	-
		அண்ணாந் தேந்திய	நற்;10
		பெருநன் றாற்றிற்	குறுந்;115
		நனைமுதிர் ஞாழல்	குறுந்;397
		இவளே நின்னல்	-
8.	மெல்லக் கொண்டேகல்	பண்தான் அனையசொல்	180
		சிறியனபங் கட்களி	181
		அழவிலர் முயலும்	நற்;9
9.	நெறிவிலக்கிக் கூறல்	அலைமன்னு பைங்கழற்	-
		நின்றாய் கெதிர்ந்தார்	183
		எம்மூர் அல்ல	ஐங்;5
10.	நகரணிமை கூறல்	நீயும் இவளுமின்	184
11.	கவன்றுரைத்தல்	ஒன்முத்த வாரகழற்	-
		பெயர்த்தனென் முயங்கயான்	குறுந்;84
12.	சுரம்நினைந்திரங்கல்	வேடகம் சேர்ந்த	186
13.	அடிநினைந்திரங்கல்	நளிமுத்த வெண்மணல்	187
14.	குரவொடு வருந்தல்	மழைகெழு கார்வண்கை	188
		நினைப்பரும் புண்ணியக்	189
		வில்லவன் தானை	190
15.	சுரத்திடைக்கண்டோர் குறிப்பொடு கூறல்	வில்லான் விறலடி	191
		வில்லோன் காலன	குறுந்;7
16.	வேதியரை வினாதல்	நிழலார் குடையொடு	-
		குடையார் நிழலூறி	-
17.	வியந்துரைத்தல்	செறிகழல் வேந்தரைக்	194
		கொடுவிற் படைமன்னர்	195
18.	அழுங்குதாய்க்குரைத்தல்	ஆளையும் சீறும்	196
		நகுவா யன பல	197

19.	உலகியல்புரைத்தல்	கடவரை காதலனோடு	198
		வெந்நீர் அருஞ்சுரம்	199
		நெடுங்கடல் வேல்நெடு	200
		எறித்தரு கதிர்தாங்கி	(கலி-பாலை;8)
20.	செவிலி மனையகத்திலிருந்து சொல்லுதல்	-	-
21.	வழிச்செல்வோரை வரவு-	அறத்தொரு நிலையின்	-
	ரைமின் என்றல்	செம்மைத் தனிக்கோல்	201
		கோடரில் நீள்மதிற்	202
		கவிழ்மயிர் எருத்திற்	ஐங்;397
22.	வேலனை வினாதல்	அங்கண் மலர்த்தார்	203
		உருமினை நீள்கொடி	-
		அருஞ்சுரம் இறந்தென்	அகம்;195
23.	நற்றாய் மனையர்	தாளை வணங்கா	205
	வேட்கையிற் செவிலியை	புல்லா வயமன்னர்	206
	வினாதல்	மையே றியபொழில்	207
		நும்மனைச் சிலம்பு	(ஐங்;399, 23)

மேற்குறித்த அட்டவணையின்வழி நக்கீரர் உடன்போக்கிற்குரிய துறைகளாக இருபத்து மூன்றினை வரையறை செய்தமை தெளிவாகிறது. இத்துறைகளுக்கு

மேற்கோள் பாடல்களைத் தந்து அகவொழுக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். அம்மேற்கோள்கள் பாண்டிக்கோவை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றில் இருந்து இடம்பெற்றுள்ளன.

நம்பியகப் பொருள் குறிப்பிடும் உடன்போக்கு

நாற்கவிராச நம்பி அகத்திணையியலில், அகம் சார்ந்த செய்திகளைக் கூறிவருங்கால் உடன்போக்குப் பற்றிய செய்தியையும் குறித்துச் செல்கிறார். இந்நூலில் உடன்போக்குத் தொடர்பாக பதினைந்து நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன"[107] களவு வெளிப்பட்ட நிலையில், உடன்போக்கிற்கு முக்கியத்துவம் வழங்கப் பெறுகிறது. அவ்வகையில் அவ்வுடன்போக்கினை உணர்த்தும் நூற்பாவானது மூன்று அடிகளில் விளக்கப் பெற்றுள்ளது"[108]

இந்நூற்பாவிற்கு "புணர்ந்து உடன்போய்த் தலைமகன் தன்னூரின் கண்ணே வரைதலும், மீண்டு வந்து தம்மூரின் கண்ணே வரைதலும், உடன்போக்கிடையீடுபட்டுத் தலைமகள் தமரை வழிபட்டு வரைதலுமாகிய இவை களவு வெளிப்பட்டபின் வரைதலாம்"[109] என்று நம்பி உரை வரைகுவர்.

இதற்கு அடுத்த நூற்பாவிலும் உடன்போக்குச் சுட்டப்பெற்றுள்ளதை

"அவற்றுள்

உடன்போய் வரைதல் ஒருவகைத் தாகும்"[110]

என்பர். எனவே களவு வெளிப்பட்டபின் நிகழும் வரைதலின் வகைகளில் ஒன்றாக உடன்போக்குச் சுட்டப்பெற்றிருப்பது புலனாகும்.

உடன்போக்கும் அறத்தொடு நிற்றலும்

களவினைக் கற்பாக்கும் முயற்சிகளுள் ஒன்று அறத்தொடு நிற்றல் மற்றொன்று உடன்போக்கு ஆகும். அறத்தொடு நின்றால் உடன்போக்கு நிகழ்வதில்லை. உடன்போக்கு நிகழ்ந்த பிறகு அறத்தொடு நிற்பதால் பயனில்லை. ஆனால் இவ்விரு முயற்சிகளும் நம்பிகப்பொருளில் இணைத்துக் கூறப்பெற்றிருப்பதை,

"ஆங்குடன் போயுழி அறத்தொடு நிற்ப
பாங்கியுஞ் செவிலியும் பயந்த தாயும்"[111]

என்ற நூற்பாவின் மூலம் அறியலாம். "தலைமகளும், தலைமகனும் புணர்ந்துடன் போய காலத்து அறத்தொடு நிற்பார் தோழியும், செவிலியும், நற்றாயும்"[112] என்று இந்நூற்பா கூறுகிறது. இதிலிருந்து தலைவனும் தலைவியும் உடன்போய காலத்தும் அறத்தொடு நிலை தோன்றும் என்பதை நம்பி அகப்பொருள் வாயிலாகத் தெளியமுடிகிறது.

உடன்போக்கின் வகையும் விரியும்

இந்நூல் வரைவியல் என்ற பகுதியில் உடன்போக்குச் செய்திகளை மீண்டும் தருகின்றது. இதில் உடன்போக்கின் வகையும் விரியும் அடுத்தடுத்த இரு நூற்பாக்களில் (கஅக, கஅஉ) விளக்கப் பெற்றுள்ளன. "முதல் நூற்பாவில் உடன்போக்கின் வகை தொகுத்துக் கூறப்பெற்றுள்ளது. இந்நூற்பா நான்கு அடிகள் கொண்டது"[112]ஆகும். இவ்வகைகளை உள்ளடக்கிய உடன்போக்கின் விரி அடுத்த நூற்பாவில் இடம்பெற்றுள்ளது. "இது பதினாறு அடிகள் கொண்டது"[113]என்பர்.

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல், அவளுடன்படுத்தல், தலைவிக்கு உடன்போக்குணர்த்தல், கற்புமேம்பாடு பாங்கி கழறல், பாங்கி கையடை கொடுத்தல், பாங்கி வைகிருள் விடுத்தல் ஆகிய ஆறும் தோழி கூற்றுகள் ஆகும். தலைமகன் மறுத்தல், தலைவன் போக்குடன்படுதல், தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல், தலைமகன் தலைமகள் அசைவறிந் திருத்தல், உவந்தலர்சூட்டி யுண்மகிழ்ந்துரைத்தல், தலைவன் தன் பதியடைந்தமை சாற்றல் உள்ளிட்ட ஆறும் தலைவன் கூற்றுகள் ஆகும். தலைவி நாணழிபிரங்கல் தலைவி ஒருப்பட்டெழுதல், பாங்கி சுரத்தியல்புரைத்துழித் தலைமகள் சொல்லல் ஆகிய மூன்றும் தலைவிக்கும் கண்டோர் அயிர்த்தல், கண்டோர் காதலின் விலக்கல், கண்டோர் தன்பதியணிமை சாற்றல் ஆகிய மூன்றும் கண்டோருக்கும் உரியவை ஆகும்.

இப்பகுதிக்கு உரை எழுதிய நாற்கவிராச நம்பி உடன்போக்கிற்குரிய கூற்றுகளைப் பற்றிக் குறிப்பிடுவதாவது,

2 : 17நாற்கவிராச நம்பியின் சிந்தனை[114]

வ.எ.	தொகுத்துக் கூறியது	விரித்துக் கூறியது
1.	போக்கறிவுறுத்தல்	1. பாங்கி தலைமகற்கு உடன்போக்குணர்த்தல்
		2. பாங்கி தலைவிக்கு உடன்போக்குணர்த்தல்
2.	போக்குடன்படாமை	3. தலைமகன் மறுத்தல்
		4. தலைவி நாணழிபிரங்கல்
3.	போக்குடன்படுத்தல்	5. பாங்கி தலைவனை உடம்படுத்தல்

		6. தலைவிக்குக் கற்புமேம்பாடு கூறல்
4.	போக்குடன்படுதல்	7. தலைவன் போக்குடன்படுதல்
		8. தலைவி ஒருப்பட்டெழுதல்
		9. பாங்கி சுரத்தியலுரைத்துழிச் சொல்லல்
5.	போக்கல்	10. பாங்கி கையடை கொடுத்தல்
		11. வைகிருள் விடுத்தல்
		12. தலைமகன் தலைமகளைச் சுரத்து உய்த்தல்
6.	விலக்கல்	13. தலைவன் தலைவி அசைவறிந்திருத்தல்
		14. கண்டோர் காதலின் விலக்கல்
7.	புகழ்தல்	15. தலைவன் தலைவியை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்
		16. கண்டோர் அயிர்த்தல்
8.	தேற்றல்	17. கண்டோர் தன்பதி அணிமை சாற்றல்
		18. தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்கு உணர்த்தல்.

தொல்காப்பியத்தைப் போல இந்நூலும் தலைவனுக்குரிய கூற்றுகளை ஆறாக வரையறுக்கிறது. தொல்காப்பியம் தலைவிக்குரிய கூற்றாக (நச்சர் உரை) பத்தினைக் குறிப்பிட நம்பிகப் பொருள் தலைவிக்குரிய கூற்றினை மூன்றாகச் சுட்டியுள்ளது. தொல்காப்பியம் தோழிக்குரிய கூற்றினை ஆறாகவும், கண்டோர்க்குரிய கூற்றினை ஒன்பதாகவும் குறிக்க, நம்பியகப் பொருள் தோழிக்குரிய கூற்றினை ஆறாகவும், கண்டோர்க்குரிய கூற்றினை மூன்றாகவும் வரையறை செய்திருப்பது குறிக்கத்தக்கது.

2 : 18நம்பியகப் பொருளும் மேள்கோள் பாடல்களும்[115]

வ.எ.	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்	மைந்நீர் நெடுங்கண்	த.கோ;305
	" "	மூத்தோ ரன்ன	அகம்;90
2.	தலைவன் உடன்போக்கு மறுத்தல்	பாரோ முலைவிலை	த.கோ;306
	" "	இரும்புலிக் கிரிந்த	தொல்.பொருள் அகம்;41 –ஆம் சூ.உரை.மே.
3.	பாங்கி தலைமகனை உடன்படுத்தல்	சுருளேய் குழலுஞ்	த.கோ;307
	" "	நீர்கால் யாத்த	குறு;388
4.	தலைவன் போக்குடன்படுதல்	நஞ்சோ வழலோ	த.கோ;308
	" "	ஆறுசெல்	தொ.பொருள் அகம்.41 –ஆம் சூ.உரை.மே.
5.	பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்	பாலன்ன பாயற்	த.கோ;309
	" "	குன்றக் குறவ	ஐங்;254
6.	தலைவி நாணழிபு இரங்கல்	மறவாகை வேலங்கை	த.கோ;310
	" "	அளிதோ தானே	குறு;149
7.	கற்புமேம்பாடு பூண்முலைப் பாங்கி புகறல்	செந்நாண் மலரிற்	த.கோ;311
8.	தலைவி ஒருப்பட்டு எழுதல்	பலரே சுமந்த	த.கோ;312
	" "	சிலரும் பலருங்	நற்;149

9.	பாங்கி சுரத்தியல் உரைத்துழித் தலைமகள் சொல்லல்	செல்லிற்கொடிய	த.கோ;313
	" "	கடக்கருங் கானத்துக்	நாலடி;398
10.	பாங்கி தலைமகளைத் தலை-மகற்குக் கையடைகொடுத்தல்	பறந்திருந் தும்பர்	திருக்.கே;213
	"	நீற்கட லுண்ட	தி.வா.கோ;226
	"	நனைமுதிர் ஞாழற்	குறு;397
	"	இவளே நின்னில	
11.	பாங்கி வைகிருள் விடுத்தல்	பொழிநானமன்றலம்	த.கோ;315
	"	வேலும் விளங்கின	அகம்;259
12.	தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்	தளிபோற் கொடைபயில்	த.கோ;316
	"	அழிவில முயலு	நற்;9
13.	தலைமகன் தலைமகள் அசைவு அறிந்திருத்தல்	வரமானம வேற்படை	த.கோ;317
14.	தலைமகன் தலைமகளை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்	அடிமலர் போற்றவும்	த.கோ;318
	"	வண்புறப் புறவின்	நற்;384
15.	கண்டோர் அயிர்த்தல்	சையத் திரள்புயன்	த.கோ;319
	"	வில்லோன் காலன	குறு;7
16.	கண்டோர் காதலின் விலக்கல்	மாலுந் திருவு	த.கோ;320
		எம்மூ ரல்ல	தொ.பொருள் அகம்.40ஆம் சூ.உரை மேற்கோள்
17.	கண்டோர் தன்பதி அணிமை சாற்றல்	தொடங்கும் பிறைநுதற்	த.கோ;321
18.	தலைமகன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல்	சந்தனந் தோய்ந்து	த.கோ;322

மேற்குறித்த அட்டவணையின்வழி நாற்கவிராச நம்பி உடன்போக்கிற்குரிய துறைகள் பதினெட்டிற்கும் சான்றுகள் அளித்திருப்பது புலனாகிறது. இச்சான்றுகள் தஞ்சைவாணன் கோவை, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, திருவாரூர்க்கோவை, நாலடியார், தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் சூத்திர உரைமேற்கோள் ஆகியவற்றிலிருந்து கையாளப்பெற்றுள்ளன.

கற்பொடு புணர்ந்த கவ்வை

நாற்கவிராச நம்பி உடன்போக்குத் துறையில் தலைவன், தலைவி, தோழி, கண்டோர் கூற்றுக்களை வரையறுக்கிறார். ஆனால் இத்துறையில் செவிலிக்கும் நற்றாய்க்கும் உரிய கூற்றுகளைப் பற்றிய செய்திகளைத் தெரியப்படுத்தவில்லை. உடன்போக்கில் செவிலியும், நற்றாயும் நிகழ்த்தும் கூற்றுகளை வரையறுக்க நம்பி கற்பொடு புணர்ந்த கவ்வை என்ற தனித்துறையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். இக்கூற்றுகள் வகை, தொகை, செய்து கொடுக்கப் பெற்றுள்ளன.

கற்பொடு புணர்ந்த கவ்வை ஐந்து வகையாக அமைகிறது. அந்நூற்பாவானது நான்கு அடிகள் கொண்டது"[116] அவைகளாவன செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், அனைமருட்சி, கண்டோர் இரங்கம், செவிலி பின்தேடிச் சேறல் என்பனவாகும். இவற்றுள் செவிலி புலம்பல், செவிலி பின்தேடிச் சேறல் என்ற இரண்டும் செவிலிக்குரிய கூற்றுகளையும், நற்றாய் புலம்பல், அனைமருட்சி இரண்டும் நற்றாய்க்குரிய கூற்றுகளையும், கண்டோர் இரக்கம் கண்டோருக்குரிய கூற்றுகளையும் வரையறுக்கிறது.

செவிலி புலம்பலுக்கு மூன்று கூற்றுகளும்"[117]நற்றாய் புலம்பலுக்கு ஆறு கூற்றுகளும்"[118]அனைமருட்சி என்ற துறைக்கு ஐந்து கூற்றுகளும்"[119]கண்டோர் இரங்கலுக்கு ஒரு கூற்றும்"[120]செவிலி பின்தேடிச் சேறல் என்பதற்கு ஒன்பது கூற்றுகளும்"[121]நம்பியகப் பொருளில் குறிக்கப்பெற்றுள்ளன. கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளையும், விரிகளையும், அதற்குரிய மேற்கோள் பாடல்களையும் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 19 கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைவிரியும் மேற்கோள் பாடல்களும் [122]

வ.எ	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
	செவிலி புலம்பல்:		
1.	செவிலி பாங்கியை வினவல்	நலம்புனை	த.கோ;323
2.	பாங்கி செவிலிக்கு உணர்த்தல்	வெறுத்தா செவ்வாய்க்	த.கோ;324 திணை.நூற்;73
3.	பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்துமொழிதல்	மாறாவளவயல் அத்த நீளிடை	த.கோ;325 ஐங்;380
4.	செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தல்	வழியா முலைக்கண்ணு	த.கோ;326 நால;399
5.	செவிலி தெய்வம் வாழ்த்தல்	இணங்கிப் ஞாயிறு	த.கோ;327 குறுந்;378
	நற்றாய் புலம்பல்:		
1.	செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்	சகநல்க பறைபடப்	த.கோ;328 குறுந்;15
2.	நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்	முன்னே தன்னம	த.கோ;329 ஐங்; 379

3.	அதுகேட்ட தோழி அழுங்கல் கண்டு நற்றாய் புலம்பல்	இல்லுங் / செல்லிய	த.கோ;330 / ஐங்;378
4.	நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்	நேயம் / இதுவென்	த.கோ;331 / ஐங்; 375
5.	நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்	மேனாள் / ஒருமக ளுடை	த.கோ;332 / நற்;184
6.	நற்றாய் தலைமகள் பயிலிடந் தம்மொடு புலம்பல்	செயலைத் / கொன்றாய்	த.கோ;333 / தி.நூ;81

அனைமருட்சி:

1.	நிமித்தம் போற்றல்	வடியேய் / மறுவில்	த.கோ;334 / ஐங்;391
2.	நற்றாய் சுரந்தணிவித்தல்	வெஞ்சுர / மன்னர்	த.கோ;335 / ஐங்;371
3.	நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்	தாமே / உவக்கின்ற / அரக்காம்ப	திரு.கோ;228 / திரு.வா.கோ;395 / நால;396
4.	நற்றாய் தன்மகன் இளமைத் தன்மைக்கு உளமெலிந்திரங்கல்	இரும்பா / பல்லூழ்	த.கோ;337 / ஐங்;374
5.	நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல்	நண்மா / கேளாய்	த.கோ;339 / அகம்;63
1.	கண்டோர் இரங்கல்: தலைமகள் ஆயத்தாரும் நற்றாயும் இரங்குமாறு கண்டு அன்பினால் கண்டோர் இரங்கல்	நொந்துங் / கயந்தலை	த.கோ;339 / அகம்;165

செவிலி பின்தேடிச் செல்லல்:

1.	செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல்	நன்றே	த.கோ;340
2.	ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்	ஒருவெண் / சேயின்	த.கோ;341 / நற்;198

3.	மிக்கோர் ஏதுக்கேட்டால்	இயங்கா சீர்கெழு	த.கோ;342 கலி.பாலை;9
4.	செவிலி எயிற்றியொடு புலம்பல்	செருமக முலைமுகஞ்	த.கோ;343 அகம்;7
5.	செவிலி குரவொடு புலம்பல்	இரவேய் தான்றாயாக்	த.கோ;344 தி.நூ;65
6.	செவிலி சுவடுகண்டு இரங்கல்	தொடுசிலை	த.கோ;345
7.	செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்	யானகம்	த.கோ;346
8.	கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்	யான்கண்ட நண்ணிநீர்	த.கோ;347 தி.நூ;89
9.	செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்	நாணினுந் காலே பரிதப்	த.கோ;348 குறுந்;44

நாற்கவிராச நம்பி கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகையாகிய செவிலி புலம்பல் துறைக்கு கூடுதலாக இரு கூற்றினை உரையில் சுட்டியுள்ளமையும், கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரிகள் அனைத்திற்கும் மேற்கோள் பாடல்கள் கொடுத்து உரை வரைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மீட்சி

மீட்சி என்ற துறையானது தலைமக்கள் உடன்போய் மீண்டு வரும்போது நிகழும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக விளங்குகின்றது. "மீட்சியின் வகைகள் நான்காகவும், இரண்டு அடியிலும் குறிக்கப்பெறுவது கருத்தத்தக்கதாகும்"[123]. மீட்சியின் விரிகள் ஆறாகும்"[124] என்பர். மீட்சியின் வகை, விரியும் அவற்றிற்குரிய மேற்கோள் பாடல்களும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப் பெற்றுள்ளன.

2 : 20மீட்சியின் வகைகளும் விரிகளும் [125]

வ.எ.	வகைகள்	விரிகள்
1.	தெளித்தல்	1. தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்
		2. தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்
2.	மகிழ்ச்சி	1. தலைவி முன்செல்வோர் தம்மொடு தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்தி விடுத்தல்
		2. பாங்கியர் நற்றாய்க்குணர்த்தல்
3.	வினாதல்	1. நற்றாய் தலைமகன் உளங்கொள வேலனை வினாதல்
4.	செப்பல்	2. முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல்

2 : 21 மீட்சியின் விரிகளும் மேற்கோள் பாடல்களும் [126]

வ.எ	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்	ஏடார் தெறுவ	அம்;கோ;409 ஐங்;313
2.	தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்	நினையா முனிவயிர்ப்	தரு;கோ;350 ஐங்;395
3.	தலைவி முன்செல்வோர் தம்மொடு தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்	புனையல கவிழ்மயி	தஞ்;கோ;351 ஐங்;397
4.	முன்சென்றோர் பாங்கியர்க்கு உணர்த்தல்	போதலர்ந்	தஞ்;கோ;352
5.	பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்	வாளேய் மானதர்	தஞ்;கோ;353 தொ.பொ.அ.42 சூ.உ.மே.

6.	நற்றாய் தலைமகனுளங்கோள் வேலனை வினாதல்	தென்மாறை வேறாக	தஞ்;கோ;354 திணை.நூற்;90

மேற்குறித்த அட்டவணையின்வழி செவிலி(1), தலைவன்(1), தலைவி(1), கண்டோர்(1), பாங்கி(1) நற்றாய்(1) ஆகியோர் கூற்று நிகழ்த்தியதை அறியமுடிகிறது. அனைத்துக் கூற்றிற்கும் மேற்கோள் பாடல்கள் கொடுக்கப் பெற்றுள்ளன.

களவியற் காரிகை குறிப்பிடும் உடன்போக்கு

களவியற் காரிகை உடன்போக்குப் பற்றி இரண்டு நூற்பாக்களில் குறித்துச் செல்கின்றது. அந்நூற்பாக்கள் தோழியாலாய கூட்டம், கற்பொழுக்கம்"[127] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. தோழியாலாய கூட்டக் கிளவித் தொகையில் இடம்பெறும் உடன்போக்குச் செய்திகள் நூற்பா சிதைந்த நிலையில் உரையில்"[128] சுட்டப்பெற்றுள்ளன. இதனை, 1. அலரறிவித்தல் 2. அயன்மணம் உரைத்தல் 3. மணமுரசு அறைதல் 4. பரிசங் கிளத்தல் 5. உடன்போக்கு உரைத்தல் 6. செலவுடன் படுத்தல் 7. செலவழுங்குவித்தல் , என்பதன்வழி அறியலாம். இதில் 'செலவுடன் படுத்தல்' என்ற ஒரு கூற்று மட்டும் தலைவன் கூற்றாகும். ஏனைய ஆறு கூற்றும் தோழி கூற்றுகளாக அமைகின்றன.

காரிகை மேற்குறித்த அனைத்துக் கூற்றிற்கும் மேற்கோள் பாடல்களைக் கொடுத்து உரை வரைந்துள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 22 காரிகையும் மேற்கோள் பாடல்களும் [129]

வ.எ	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	அலர் அறிவுறுத்தல்	அலரா யிரந்தந்து	திருக்.கோ;180
		பலரா லெதிர் சென்று	பா.கோ;189
		அறிந்தோர் அறனிலர்	நற்; 227
		நிலவோ ரன்ன	பொருள்;86
		அம்பல் பெருகி	கிளவித்தெளிவு
2.	அயன்மணம் உரைத்தல்	மணியக் கணியு	திருக்.கோ;195
		நீரணி வேலி	பா.கோ;191
		அணிகொணர்ந் தனரே	பொருள்;87
		பொன்னிதழிற் பைந்தாதும்	கண்டனங்காரம்
3.	மணமுரசு அறைதல்	பாப்பணி	திருக்.கோ;196
		வேலைத் தொலைத்	பா.கோ;192
		அணிவர் அயலார்பொன்	பழம்பாட்டு
4.	பரிசங்கிளத்தல்	எலும்பா வணியிறை	திருக்;கோ;197
		நல்லளந் தாளு	நறையூரந்தாதி
		என்னா லிதுசெய்	பா.கோ;197
		யானெவ னறிகோ	பொருள்;89
		பூஞ்சுணங்கின்	கிளவிமாலை
		கொங்கைக்குந்	கிளவித்தெளிவு
5.	உடன்போக்குரைத்தல்	பிணையுங்	திருக்.கோ;202
		மால்புரை	பா.கோ; 198
		வெம்மைய	பொருளியல்;90
		மன்னொடு	கிளவிமாலை
		தீய வெருவனமும்	கிளவித்தெளிவு

6.	செலவுடன்படுத்தல்	மற்பாய் விடையோன்	திருக்.கோ;201
		ஏனு மிகலு	பா.கோ;200
		அளிதோ தானே	குறுந்;149
		சிலரும் பலருங்	நற்; 149
		ஊருஞ் சேரியு	பொருள்;92
7.	செலவழுங்குவித்தல்	பாயப் புரவி	பா.கோ; 201
		விளம்பழங் கமழும்	நற்; 12
		எழினுத னும்முட	புறம்பாட்டு

காரிகை குறிப்பிடும் உடனிலைச் செலவு

இந்நூல் கற்பொழுக்கம் என்னும் இயலில் மீண்டும் உடன்போக்குச் செய்திகளைக் குறித்துச் செல்கின்றது. "இந்நூற்பாக்களில் உடன்போக்கிற்குரிய கூற்றுகளாக மேலும் இருபத்தைந்தினைக் கூறியுள்ளது"[130]. இதில் தலைவனுக்கு ஒரு கூற்றும், தலைவிக்கு இரண்டு கூற்றுகளும், தோழிக்கு ஒரு கூற்றும், நற்றாய்க்கு ஆறு கூற்றுகளும், செவிலிக்கு ஒன்பது கூற்றுகளும், கண்டோருக்கு ஆறு கூற்றுகளும் வரையறுக்கப் பெற்றுள்ளன இந்நூற்பாவிற்கு உரை எழுதிய காரிகை ஆசிரியர் உடன்போக்கிற்குரிய கூற்றுகளாகப் பின்வருவனவற்றைச் சுட்டுவர். அவையாவன, 1. கையடை கொடுத்தல் 2. சுரத்துய்த்தல் 3. விருந்து விலக்கல் 4.பதியள வுரைத்தல் 5. தோழியை வினாதல் 6. செவிலி இரங்கல் 7. மென்மை கூறல் 8. நற்றாய்க்கு உரைத்தல் 9. நற்றாய் இரங்கல் 10. செஞ்சுடர்ப் பரவல்

11. கருமகட்கு உரைத்தல் 12. பின்செல வலித்தல் 13. சுரத்து இரங்கல் 14. புறவொடு உரைத்தல் 15. அடிச்சுவடு உரைத்தல் 16. சுரத்திறம் வினாதல் 17.ஐயம் உரைத்தல் 18. சேர்விடம் உரைத்தல் 19. செவிலியை ஆற்றல் 20.துடரகங் தணித்தல் 21. வரவுமுந் துறுத்தல் 22. கிளையது மகிழ்ச்சி 23.வேலனை வினாதல் 24. ஈன்றாட் புகழ்தல் 25. மணங்கண்டு உரைத்தல் என்பனவாகும்.

2 : 23 உடனிலைச் செலவும் மேற்கோள் பாடல்களும் [131]

வ.எ	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	கையடை கொடுத்தல்	பறந்திருந் துபேர்	திருக்.கோ;213
		மென்முலை வீழினும்	பா.கோ;203
2.	சுரத்துய்த்தல்	ஈண்டொல்லை	திருக்.கோ;214
		பண்டான்அனையசொல்	பா.கோ;340
		அழிவிலர் முயலு	நற்;9
		மெல்ல மெல்லநிண்	பொருள்;114
		அன்ன நடைமடவா	கிளவித்தெளிவு
3.	விருந்து விலக்குதல்	விடலையுற்	திருக்.கோ;218
		அலைமன்னு	பா.கோ;206
		எம்மூ ரல்ல	சிற்றெட்டகம்
		நல்லோள்	பொருள்
		செங்கதிர்ச்	பொருள்117
		எங்களூர்	கிளவித்தெளிவு
		வெஞ்சுரமும்	பழம்பாட்டு
		நாளை வரகுணர்	பழம்பாட்டு
4.	பதியளவுரைத்தல்	மின்றங் கிடையொடு	திருக்.கோ;221
		நீயும் இவளும்	பா.கோ;208
		வில்லார் நுதலியும்	பல்சந்தமாலை
5.	தோழியை வினாதல்	மயிலெனப் போர்ந்திள	திருக்.கோ;224
		ஒண்முத்த வார்கழற்	பா.கோ;209
		பெயர்த்தனென்	குறுந்;84
		வலியை மன்ற	பொருளியல்120

6.	செவிலி இரங்கல்	வடுத்தான் வகிர்மலர்	திருக்.கோ;226
		வேடகம் சேர்ந்தவெங்	பா.கோ;210
		அத்த நீளிடை	ஐங்; 380
		வண்டார் கோதை	பொருளியல்119
7.	மென்மை கூறல்	தாமே தமக்கொப்பு	திருக்.கோ;228
		நளிமுத்த வெண்மணல்	பா.கோ;211
8.	நற்றாய்க்கு உரைத்தல்	தழுவினை கையிறை	திருக்.கோ;229
		பறை படப் பணில	குறுந்; 15
9.	நற்றாய் இரங்கல்	யாழியன் மென்மொழி	திருக்.கோ;230
		தன்மை ராயமொடு	ஐங்;379
		ஒருமக ளுடையேன்	நற்;184
		சூன்முதிர் கொண்மூ	பொருளியல்121
10.	செஞ்சுடர்ப்பரவல்	பெற்றே னொடுங்	திருக்.கோ;232
11.	கருமகட்குரைத்தல்	வைம்மலர் வாட்படை	திருக்.கோ;233
		பல்லூழ் நினைப்பினு	ஐங்;374
		கேளாய் வாழியோ	அகம்;63
12.	பின்செல வலித்தல்	வேயின தோளி	திருக்.கோ;234
		நிலந்தொட்டுப் புகாஅர்	குறுந்;130
13.	சுரத்து இரங்கல்	பாயும் விடையோன்	திருக்.கோ;241
		மழைகெழு கார்வண்கை	பா.கோ;212
		வெய்யோன் சாபத்	பொருளியல்122
		காய்ந்திலை மறவை	பொருளியல்123
		தான்றாயாக் கோங்கம்	தி.நூ;65
14.	புறவொடுரைத்தல்	புயலன் றலர்சடை	திருக்.கோ;240
15.	அடிச்சுவடு உரைத்தல்	தெள்வன் புனற்சென்னி	திருக்.கோ;237
		பாலொத்த சிற்றம்	" , 238
16.	சுரத்திறம் வினாதல்	சுத்திய பொக்கணத்	திருக்.கோ;242
		நிழலார் குடையொடு	பா.கோ; 216
17.	ஐயம் உரைத்தல்	வில்லான் விறலடி	பா.கோ;215
		வில்லோன் காலன	குறுந்;7
18.	சேர்விடம் உரைத்தல்	மீள்வது செல்வதன்	திருக்.கோ;247
		ஆளையுஞ் சீறுங்	பா.கோ;220

		நகுவா யனபல	பா.கோ;221
19.	செவிலியை ஆற்றல்	சுரும்பிவர் சந்தும்	திருக்.கோ;248
		கடவரை காதல	பா.கோ;622
		வெந்நீர் அருஞ்சுரம்	பா.கோ;223
		நெருங்கடல் வேல்நெடு	பா.கோ;224
		மடவரல் மாதர்க்கு	பொருளியல்125
20.	துடரகந் தணித்தல்	ஆண்டில் எடுத்தவ	திருக்.கோ;249
		என்னுமுள்ளினள்	ஐங்;372
21.	வரவு முந்துறுத்தல்	செம்மைத் தனிக்கோல்	பா.கோ;225
		கோடரில் நீள்மதிற்	பா.கோ;226
		கவிழ்மயிர் எருத்திற்	ஐங்;397
		வளங்கெழு கானம்	பொருளியல்131
22.	கிள்ளையது மகிழ்ச்சி சொல்லுதல்	மானதர் மயங்கிய	பொருளியல்132
23.	வேலனை வினாதல்	அங்கண் மலர்த்தார்	பா.கோ;227
		உருமினை நீள்கொடி	" ;228
		முதுவாய் வேல	பொருளியல்133
		வேறாக நின்னை	தி.நூ;90
24.	ஈன்றாட் புகழ்தல்	துறந்ததற்	ஐங்;393
25.	மணங் கண்டுரைத்தல்	தாளை வணங்கா	பா.கோ;229
		புல்லா வயமன்னர்	" ;230
		நும்மனைச் சிலம்பு	ஐங்;399

இலக்கண விளக்கம் தரும் உடன்போக்குச் செய்திகள்

இந்நூலின் அகத்திணையியலில் வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவு இடம்பெற்றுள்ளது. இதனுள் உடன்போக்குப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவிகளுள் ஒன்றாக உடன்போக்கு குறிக்கப் பெற்றுள்ளதை,

"போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் நாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவி வெளிப்படு தொகையே"[132]

என்ற நூற்பா விளக்கும். இதனை "போக்கு முதலாக மீட்சி ஈறாகச் சொல்லப்பட்ட மூன்றுங் களவு வெளிப்பாட்டிற்கு உரிய கிளவித்தொகை"[133] என்பர்.

உடன்போக்கினைக் குறிக்க இந்நூலாசிரியர் போக்கு என்ற சொல்லாட்சியைக் கையாண்டிருப்பதும், களவினை வெளிப்படுத்தும் வழிவகைகளில் ஒன்றாக உடன்போக்கு இடம்பெற்றிருப்பதும் புலனாகும். இந்நூலாசிரியர் உடன்போக்கினை களவினை வெளிப்படுத்தும் கிளவியாகக் கருதுகிறார். ஆனால் நம்பியகப் பொருள் உள்ளிட்ட இலக்கண நூல்கள் உடன்போக்கினைக் களவினை வெளிப்படுத்தும் கிளவியாகக் கருதியது மட்டும் அல்லாமல், அதற்குப் பின்னால் நிகழும் வரைதலுக்கும் வழிவகை செய்ததாகக் குறிப்பது குறிப்பிடத்தக்கது.

உடன்போக்கின் வகையும் விரியும்

இந்நூல் நம்பியகப் பொருளைப் பின்பற்றியே உடன்போக்கு குறித்த செய்திகளைக் குறித்துச் செல்கிறது. மேலும் அகப்பொருளைப் போன்று இந்நூலும் "உடன்போக்கின் வகையினை நான்கு அடிகளில் தொகுத்துக் கூறியும்"[134] உடன்போக்கின் விரியினை பதினாறு அடிகளில் விரித்துக் கூறியும்"[135] செய்திகளை விளக்கிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இந்நூற்பாக்களுக்கு உரை எழுதும்போது உடன்போக்கிற்குரிய கூற்றுகளைப் பின்வருமாறு வகைப்படுத்துவர்.

2 : 24 உடன்போக்கின் கூற்றுகள் [136]

தொகுத்துக் கூறிய கூற்றுகள்		விரித்துக்கூறிய கூற்றுகள்
1.	போக்கறிவுறுத்தல்	1. பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல்
		2. பாங்கி தலைவிக்கு உடன்போக்குணர்த்தல்
2.	போக்குடன்படாமை	3. தலைவன் (உடன்போக்கு) மறுத்தல்
		4. தலைவி நாணழிபிரங்கல்
3.	போக்குடன்படுத்தல்	5. பாங்கி தலைமகனை உடன்படுத்தல்
		6. கற்புமேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறல்
4.	போக்குடன்படுதல்	7. தலைவன் போக்குடன்படுதல்
		8. தலைவி ஒருப்பட்டெழுதல்
		9. பாங்கி சுரத்தியல்பு உரைத்துழித் தலைமகள் சொல்லல்
		10. தலைவி ஒருப்பட்டெழுந்தமை பாங்கி தலைவற்குணர்த்தல்
5.	போக்கல்	11.பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்
		12.பாங்கி வைகிருள் விடுத்தல்
		13.தலைவியைத் தலைவன் சுரத்துய்த்தல்

6.	விலக்கல்	14. தலைமகன் தலைமகள் அசை வறிந்திருத்தல்
		15.கண்டோர் காதலின் விலக்கல்
7.	புகழ்தல்	16.தலைமகன் தலைமகளை உவந்து அலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்
		17.கண்டோர் அயிர்த்தல்
8.	தேற்றல்	18.கண்டோர் மகிழ்தலும் இரங்கலும்
		19.கண்டோர்தம்பதி அணுமை சாற்றல்
		20.தலைவிக்குத் தலைவன் தன்பதியணுமை சாற்றல்
		21.தலைவிக்குத் தன்நகர் காட்டல்
		22.தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல்
		23.தலைவன் தலைவியொடு தன்னகர் சார்தல்

இந்நூல் உடன்போக்கிற்குரிய கூற்றுகளை இருபத்து மூன்று கூற்றுகளாக விரித்துக் கூறுகிறது. நம்பியகப் பொருளைவிட இந்நூல் கூடுதலாக ஐந்து கூற்றுகளை அமைத்துள்ளது. அக்கூற்றுகளாவன தலைவி ஒருப்பட்டெழுந்தமை பாங்கி தலைவற்கு உணர்த்தல், கண்டோர் மகிழ்தலும், இரங்கலும், தலைவிக்குத் தலைவன் தன்பதியணுமை சாற்றல், தலைவிக்குத் தன்னகர் காட்டல், தலைவன் தலைவியொடு தன்னகர் சார்தல் ஆகியவை ஆகும்.

நம்பியகப் பொருள் தலைவனுக்குரிய கூற்றினை ஆறாகவும், தலைவிக்குரிய கூற்றினை மூன்றாகவும், தோழிக்குரிய கூற்றினை ஆறாகவும், கண்டோருக்குரிய கூற்றினை மூன்றாகவும் குறிக்க, இந்நூல் தலைவனுக்குரிய கூற்றினை ஒன்பதாகவும், தலைவிக்குரிய கூற்றினை மாற்றாமல் நம்பியகப் பொருளைப்போல மூன்றாகக் கூறியுள்ளது. தோழிக்குரிய கூற்றினை ஏழாகவும், கண்டோருக்குரிய கூற்றினை நான்காகவும் விரித்துள்ளது.

இலக்கண விளக்கம் உடன்போக்கிற்குரிய கூற்றுகளாக இருபத்து மூன்றினைக் குறிப்பிடுகின்றது. இக்கூற்றுகள் எல்லாவற்றிற்கும் வைத்தியநாத தேசிகர் சான்று காட்டியுள்ளார். இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 25 இலக்கண விளக்கமும் மேற்கோள் பாடல்களும் [137]

வ.எ	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்	மைந்நீர் நெடுங்கண்	த.கோ;305
2.	தலைவன் உடன்போக்கு மறுத்தல்	மெல்லியல் கொங்கை	திரு.கோ;201
3.	பாங்கி தலைமகனை உடன்படுத்தல்	பிணையுங் கலையும்வன்	திரு.கோ;202
4.	தலைவன் போக்குடன்படுதல்	இன்னாத கானு	அம்.கோ;366
5.	பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்	குறப்பாவை நின்குழல்	திரு.கோ;205
6.	தலைவி நாணழிபு இரங்கல்	மறவாகை வேலங்கை	த.கோ;310

7.	கற்புமேம்பாடு பூண்முலைப் பாங்கி புகறல்	தாயிற் சிறந்தன்று	திரு.கோ;204
8.	தலைவி ஒருப்பட்டெழுதல்	மற்பாய் விடையோன்	திரு.கோ;208
9.	தலைவி ஒருப்பட்டெழுந்தமை பாங்கி தலைவற்குணர்த்தல்	மின்னே மருங்குல்	அம்.கோ;369
10.	பாங்கி சுரத்தியல் உரைத்துழித் தலைமகள் சொல்லல்	செல்லிற்கொடிய	த.கோ;313
11.	பாங்கி தலைமகளைத் தலை-மகற்குக் கையடைகொடுத்தல்	பறந்திருந் தும்பர்	திரு.கோ;213
12.	பாங்கி வைகிருள் விடுத்தல்	ஊருங் கலிகெழு	அம்.கோ;372
13.	தலைவியைத் தலைவன் சுரத்துய்த்தல்	பேணத் திருத்திய	திரு.கோ;213
14.	தலைமகன் தலைமகள் அசை-வறிந்திருத்தல்	வரமாவை வேற்படை	த.கோ;317
15.	தலைமகன் தலைமகளை உண்மகிழ்ந்துரைத்தல்	உவந்தவர்அடிமலர்	த.கோ;318
16.	கண்டோர் அயிர்த்தல்	கருவார் புயலென்றுங்	அம்.கோ;378

17.	கண்டோர் மகிழ்தலும்	முன்செல்ல நாணு	அம்.கோ;379
	இரங்கலும்	பேதைப் பருவங்	அம்.கோ;381
18.	கண்டோர் காதலின் விலக்கல்	எம்மூ ரல்ல	ஐந்.தனி;5
19.	கண்டோர் தம்பதி யணுமை சாற்றல்	மின்றங்	திரு.கோ;221
20.	தலைவிக்குத் தலைவன் தன்பதி -யணுமை சாற்றல்	முன்னோ	திரு.கோ;217
21.	தலைவிக்குத் தன் நகர்காட்டல்	மின்போல்	திரு.கோ;222
22.	தலைமகன் தன்பதி அடைந்தமை தலைவிக் குணர்த்தல்	செய்குன்	திரு.கோ;223
23.	தலைவன் தலைவியொடு தன்னகர் சார்தல்	சங்க முழங்க	அம்.கோ;385

மேற்குறித்த அட்டவணையின்வழி இலக்கண விளக்க உரையாசிரியர் எல்லாக் கூற்றிற்கும் மேற்கோள் அளித்திருப்பதும், அம்மேற்கோள்கள் தஞ்சைவாணன் கோவை, திருக்கோவையார், அம்பியாபதிக்கோவை, ஐங்குறுநூறு ஆகியவற்றில் இருந்து குறிக்கப் பெற்றுள்ளதும் அறியப்பெறுகிறது.

கற்பொடு புணர்ந்த கவ்வை

இலக்கண விளக்கம் கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகள் அடங்கிய நூற்பாவினை நான்கு அடிகளிலும்"[138] அவற்றின் விரிகளை இருபத்து நான்கு அடிகளிலும்"[139] குறித்துச் செல்கின்றது.இந்நூல் நம்பியகப் பொருளை அடியொற்றி கற்பொடு புணர்ந்த கவ்வையின் செய்திகளை விளக்கிச் செல்கிறது. இதனைப் பின்வருமாறு விளக்குவர்.

2:26 கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும் [140]

வகைகள்	விரிகள்
1. செவிலி புலம்பல்	1. செவிலி பாங்கியை வினாதல்
	2.பாங்கி செவிலிக்கு உணர்த்தல்
	3. பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்
	4. செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல்
	5. செவிலி தெய்வம் வாழ்த்தல்
	6. செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

2. நற்றாய் புலம்பல்	1. நற்றாய் தன்னுள்ளே இரங்கல்
	2. நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்
	3. தோழியழுங்க நற்றாய் புலம்பல்
	4. நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்
	5. அயலார் தம்மொடும் புலம்பல்
	6. தந்தையொடு புலம்பல்
	7. நற்றாய் தலைமகள் பயிலிடந்தன்னொடு புலம்பல்
3. மனைமருட்சி	1. நிமித்தம் போற்றல்
	2. தலைவன் மிக அன்புசெய்கவென்று தெய்வத்திற்குப் பராவுதல்
	3. நற்றாய் சுரந்தணிவித்தல்
	4. நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்
	5. நற்றாய் தலைமகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்து இரங்கல்
	6. நற்றாய் தலைமகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல்
4. கண்டோர் இரக்கம்	1. தலைமகள் ஆயமும் தாயும் அழுங்கக் கண்டு காதலின் இரங்கும் கண்டோர் இரக்கம்

5. செவிலி பின்தேடிச்

சேறல்

1. செவிலி ஆற்றாத்தாயைத் தேற்றல்

2. முக்கோற்பகவரை வினாதல்

3. மாவிரதியரை வினாதல்

4.உய்த்துணர்வோரைஉரைமின் என்றல்

5. மிக்கோர் ஏதுக்காட்டல்

6. செவிலி ஏயிற்றியொடு புலம்பல்

7. செவிலி குரவொடு புலம்பல்

8. புறவொடு புலம்பல்

9. சுவடுகண்டிரங்கல்

10.கலந்துடன்வருவோர்க்

கண்டுகேட்டல்

11. கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்

12. செவிலி புதல்வியைக் காணாது கவலை

கூர்தல்

என்பனவாகும்.

நம்பியகப் பொருளைப் போல் இந்நூலும் செவிலி புலம்பலுக்கு ஆறு கூற்றுகளையும், நற்றாய் புலம்பலுக்கு ஏழு கூற்றுகளையும் மனைமருட்சிக்கு ஆறு கூற்றுகளையும் கண்டோர் இரக்கத்திற்கு ஒரு கூற்றினையும், அமைத்துள்ளது செவிலி பின்தேடிச் சேறலுக்கு பனிரெண்டு கூற்றுகளையும் வரையறுக்கிறது.

2 :27 கவ்வையின் விரிகளும் மேற்கோள் பாடல்களும் [141]

வ.எ	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	செவிலி பாங்கியை வினவல்	மயிலெனப்	திரு.கோ;224
2.	பாங்கி செவிலிக்கு உணர்த்தல்	ஆளரிக்	திரு.கோ;225
3.	பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்குஎதிரழிந்துமொழிதல்	வடுத்தான்	திரு.கோ;226
4.	செவிலி தன்னறிவின்மைதன்னை நொந்துரைத்தல்	முறுவலக்	திரு.கோ;227
5.	செவிலி தெய்வம் வாழ்த்தல்	வேமாறு	அம்.கோ;390
6.	செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்	தொடுப்பார்	அம்.கோ;391
7.	நற்றாய் தன்னுள்ளே இரங்கல்	புவையுண்	அம்.கோ;392
8.	நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்	முன்னே	த.கோ;329
9.	தோழியமுங்க நற்றாய் புலம்பல் நற்றாய் புலம்பல்	தாயென்செய்	அம்.கோ;393

10. நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்	புறந்தாழ்	அம்.கோ;394
11. அயலார் தம்மொடும் புலம்பல்	யாழியன்	திரு.கோ;230
12. தந்தையொடு புலம்பல்	கொன்னுனை	திரு.கோ;231
13. நற்றாய் தலைமகள் பயிலிடந் தம்மொடு புலம்பல்	நன்றே	அம்.கோ;396
14. நிமித்தம் போற்றல்	பணங்களஞ்	திரு.கோ;235
15. தலைவன் மிக அன்புசெய்கவென்று தெய்வத்திற்குப் பராவுதல்	ஈன்றுபுறந்	அகம்;35
16. நற்றாய் சுரந்தணிவித்தல்	பெற்றே	திரு.கோ;232
17. நற்றாய் தன்மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கல்	தாமே	திரு.கோ;228
18. நற்றாய் தலைமகள் இளமைத் தன்மைக்கு உளமெலிந்திரங்கல்	வைம்மலர்	திரு.கோ;233
19. நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல்	நாண்மா	த.கோ;338

20. தலைமகள் ஆயமுந் தாயும் அழுங்கண்டு நொந்துங் காதலின் இரங்கும் கண்டோர் இரக்கம்		த.கோ;339
21. செவிலி ஆற்றாத் தாயைத் தேற்றல்	வேயின	திரு.கோ;234
22. முக்கோற்ப கவரை வினாதல்	வெதிரேய்	திரு.கோ;243
23. மாவிரதியரை வினாதல்	சுத்திய	திரு.கோ;242
24. உய்த்துணர்வோரை உரையின் என்றல்	முன்னுங்	திரு.கோ;236
25. மிக்கோர் ஏதுக்காட்டல்	சுரும்பிவர்	திரு.கோ;248
26. செவிலி எயிற்றியொடு புலம்பல்	பேதை	திரு.கோ;239
27. செவிலி குரவொடு புலம்பல்	பாயும்	திரு.கோ;241
28. புறவொடு புலம்பல்	புயலன் றலர்	திரு.கோ;240
29. சுவடுகண்டிரங்கல்	தெள்வன்	திரு.கோ;237
30. கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல்	பைந்தார்	அம்.கோ;406

31.	கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல்	மீள்வது	திரு.கோ;247
32.	செவிலி புதல்வியைக் காணாது கவலை கூர்தல்	கல்லார்	அம்.கோ;408

மேற்குறித்த அட்டவணையின்வழி இந்நூல் நம்பியகப்பொருளைவிட கூடுதலாகச் சுட்டிய கூற்றுகள் ஆறு ஆகும். அவையாவன, நற்றாய் புலம்பலில் இடம்பெறும் நற்றாய் தன்னுள்ளே இரங்கல், நற்றாய் தந்தையொடு புலம்பல் என்பனவும் மனைமருட்சியில் தலைவன் மிக அன்பு செய்கவென்று தெய்வத்திற்கு பராவுதல் என்பதும் செவிலி பின்தேடிச் சேறலில் மாவிரதியரை வினாதல், உய்த்துணர் வோரை உரைமின் என்றல், புறவொடு புலம்பல் ஆகியனவும் புதியனவாகச் சுட்டியதில் அடங்கும்.

கற்பொடு புணர்ந்த கவ்வையின் கூற்றுகளுக்கு அம்பிகாபதிக் கோவை, திருக்கோவை, தஞ்சைவாணன் கோவை, அகநானூறு ஆகியவற்றிலிருந்து மேற்கோள் பாடல்கள் கொடுக்கப்பெற்றுள்ளன.

மீட்சி

நம்பியகப் பொருளை அடியொற்றி இலக்கண விளக்கம் மீட்சியின் வகைகளை நான்காக"[142] மொழிகின்றது. இம்மீட்சியின் விரிகள்எட்டு அடிகளில் குறிக்கப் பெற்றுள்ளன"[143]என்பது கருதத்தக்கது. மீட்சியின் வகைகளையும் விரிகளையும் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 28 மீட்சியின் வகைகளும் விரிகளும்[144]

வ.எ.	வகைகள்	விரிகள்
1.	தெளித்தல்	1. தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்
		2. உடன்போய்வரைந்த நெடுந்தகை மீட்சி உரைத்தல்
		3. தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்
2.	மகிழ்ச்சி	4. தலைவி முன்செல்வோர் தம்மொடு தம்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்
		5. முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல்
3.	செப்பல்	6. பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்
4.	வினாதல்	7. நற்றாய் தலைமகள் உளங்கொள வேலனை வினாதல்

மேற்குறித்த அட்டவணையின்வழி தெளித்தலுக்கு மூன்று கூற்றுகளும், மகிழ்ச்சிக்கு இரண்டு கூற்றுகளும், செப்பற்கு ஒரு கூற்றும், வினாதலுக்கு ஒரு கூற்றும் குறிக்கப் பெற்றிருப்பது புலனாகும். நம்பியகப் பொருளைவிட இந்நூல் உடன்போய் வரைந்த நெடுந்தொகை மீட்சி உரைதல் என்பது கூடுதலாகச் சுட்டிய கிளவியாகும். மீட்சியின் விரிகளையும் அதற்குரிய சான்றுகளையும் பின்வரும் அட்டவணை உணர்த்துகிறது.

2 : 29 மீட்சியின் விரிகளும் மேற்கோள் பாடல்களும்[145]

வ.எ.	கிளவிகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல்	சேடார்	அம்.கோ;409

2.	உடன்போய்வரைந்த நெடுந்தகை மீட்சி உரைத்தல்	அனைத்தாய்	அம்.கோ;410
3.	தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்	துப்போது	அம்.கோ;411
4.	தலைவி முன்செல்வோர் தம்மொடு தம்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல்	ஒன்றே	அம்.கோ;412
5.	முன்செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தல்	நண்போ	அம்.கோ;413
6.	பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்	மேவியோன்	அம்.கோ;414
7.	நற்றாய் தலைமகள் உளங்கொள வேலனை வினாதல்	தென்மாறை	தஞ்.கோ;354

மீட்சியின் விரிகளுக்கு அம்பிகாபதிக் கோவை, தஞ்சைவாணன் கோவை ஆகியவற்றிலிருந்து மேற்கோள் பாடல்கள் தரப்பெற்றுள்ளன.

முத்து வீரியம் சுட்டும் உடன்போக்கு

இந்நூலின் களவொழுக்கவியலில் உடன்போக்கு பற்றிக் குறிப்பிடப்பெற்றுள்ளது. "இந்நூலின் ஆசிரியர் உடன்போக்கு பற்றி ஒரே நூற்பாவில் விரித்துக் கூறியுள்ளார். அவ்விரியாவது, நாற்பத்தொன்பது அடிகள் கொண்டது"[146]

இந்நூல் நம்பியகப் பொருள் உள்ளிட்ட இலக்கண நூல்களைப் போல உடன்போக்கின் வகை, விரி என்று பாகுபாடு செய்யவில்லை. மாறாக விரியினை மட்டும் ஒரே நூற்பாவில் சுட்டியிருப்பது கருதத்தக்கது.

உடன்போக்கிற்குரிய கூற்றுகள்

இப்பகுதிக்கு உரை எழுதும் போது முத்துவீரியம் கீழ்க்கண்ட கூற்றுகளை உடன்போக்கிற்குரிய கூற்றுகளாக வகைப்படுத்துகிறது. அவையாவன: 1.பருவங்கூறல் 2. மகட்பேச்சுரைத்தல் 3. பொன்னணி வுரைத்தல் 4.அருவிலையுரைத்தல் 5. அருமை கேட்டழிதல் 6. தளர்வறிந்துரைத்தல் 7.குறிப்புரைத்தல் 8. அருமையுரைத்தல் 9. ஆதரங்கூறல் 10. இறந்துபாடுரைத்தல் 11. கற்புநலனுரைத்தல் 12. துணிந்தமை கூறல் 13. துணிவொடு வினாவல் 14.போக்கறிவித்தல் 15. நாணிழந்து வருந்தல் 16. துணிவெடுத்துரைத்தல் 17. குறியிடங் கூறல் 18. அடியொடு வழிநினைந் தவனுளம் வாடல் 19. கொண்டு சென்றுய்த்தல் 20. ஓம்படுத்துரைத்தல் 21. வழிப்படுத்துரைத்தல் 22. மெல்லக் கொண்டேகல் 23. அடலெடுத்துரைத்தல் 24. அயர்வகற்றல் 25. நெறிவிலக்கிக் கூறல் 26. கண்டவர் மகிழ்தல் 27. வழி விளையாடல் 28. நகரணிமை கூறல் 29.நகர்காட்டல் 30. பதிபரி சுரைத்தல் 31. செவிலி தேடல் 32. அறத்தொடு நிற்றல் 33. கற்புநிலைக்கிரங்கல் 34. கவன்றுரைத்தல் 35. அடிநினைந்திரங்கல் 36.நற்றாய்க்குரைத்தல்

37.நற்றாய் வருந்தல் 38. கிளிமொழிக்கிரங்கல் 39.சுடரோடிரத்தல் 40. பருவநினைந்து கவறல் 41. நாடத்துணிதல் 42. கொடிக்குறி பார்த்தல் 43. சோதிடங்கேட்டல் 44. சுவடு கண்டறிதல் 45. சுவடு கண்டிரங்கல் 46.வேட்ட மாதரைக் கேட்டல் 47. புறவொடு புலத்தல் 48. குரவொடு வருந்தல் 49. விரதியரை வினாவல் 50. வேதியரை வினாவல் 51. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல் 52. வியந்துரைத்தல் 53. இயைபெடுத்துரைத்தல் 54.மீளவுரைத்தல் 55. உலகியல்பு உரைத்தல் 56. அழுங்குதாய்க்குரைத்தல் என்பவையாகும்.

தொல்காப்பியத்தைவிட இந்நூல் நற்றாய் கூற்றினை மட்டும் குறைத்துக் கூறியுள்ளது. தலைவிக்குரிய கூற்றினை இறையனார் களவியலும், முத்துவீரியமும் ஒன்றுபோல கையாண்டுள்ளன. தொல்காப்பியம் தலைவனுக்குரிய கூற்றினை ஆறாகவும், தோழிக்குரிய கூற்றினை ஆறாகவும், கண்டோர்க்குரிய கூற்றினை ஒன்பதாகவும், செவிலிக்குரிய கூற்றினை பதின்மூன்றாகவும் குறிக்க, இந்நூல் தலைவனுக்கு ஒன்பது கூற்றினையும், கண்டோருக்கு ஏழாகவும், செவிலிக்குப் பதினாறாகவும், தோழிக்குப் பதினேழாகவும் கூற்றினை வரையறை செய்துள்ளது.

முத்துவீரியமும் மேற்கோள் பாடல்களும்

முத்துவீரியம் உடன்போக்கிற்கு உரிய துறைகளாக ஐம்பத்தாறு துறைகளைக் குறித்துச் செல்கிறது. இத்துறைகள் அனைத்திற்கும் முத்துவீர உபாத்தியாயர் மேற்கோள் பாடல்களைக் கொடுத்து

அகவொழுக்கத்தைச் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார். இதனைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

2 : 30 முத்துவீரியமும் மேற்கோள் பாடல்களும்[147]

வ.எ	கூற்றுகள்	பாட்டுமுதற்குறிப்பு	நூல்
1.	பருவங்கூறல்	ஒராகம் மிரண்டெழி	திருக்.194
2.	மகட்பேச்சுரைத்தல்	மணியக் கணியும்	திருக்.195
3.	பொன்னணிவுரைத்தல்	பாப்பணியோன்றில்லைப்	திருக்.196
4.	அருவிலையுரைத்தல்	எலும்பால் அணியிறை	திருக்.197
5.	அருமை கேட்டழிதல்	விசும்புற்ற திங்கட்	திருக்.198
6.	தளர்வறிந்துரைத்தல்	மைதயங் குந்திரை	திருக்.199
7.	குறிப்புரைத்தல்	மாவைவந் தாண்டமென்	திருக்.200
8.	அருமையுரைத்தல்	மெல்லியல் கொங்கை	திருக்.201
9.	ஆதரங்கூறல்	பிணையும் கலையும்	திருக்.202
10.	இறந்துபாடுரைத்தல்	இங்கய லென்னீ	திருக்.203
11.	கற்புநலனுரைத்தல்	தாயிற் சிறந்தன்று	திருக்.204
12.	துணிந்தமை கூறல்	குயப்பாவை நின்குழல்	திருக்.205
13.	துணிவொடு வினாவல்	நிழற்றலை தீநெறி	திருக்.206
14.	போக்கறிவித்தல்	காயமும் ஆவியும்	திருக்.207
15.	நாணிழந்து வருந்தல்	மற்பாய் விடையோன்	திருக்.208
16.	துணிவெடுத்துரைத்தல்	கம்பஞ் சிவந்த	திருக்.209
17.	குறியிடங்கூறல்	முன்னோன் மணிகண்டம்	திருக்.210
18.	அடியொடு வழிநினைந் தவனுளம்வாடல்	பனிச்சந் திரனொடு	திருக்.211
19.	கொண்டு சென்றுய்த்தல்	வைவந்த வேலவர்	திருக்.212

20.	ஓம்படுத்துரைத்தல்	பறந்திருந் தும்பர்	திருக்.213
21.	வழிப்படுத்துரைத்தல்	ஈண்டொல்லை	திருக்.214
22.	மெல்லக் கொண்டேகல்	பேணத் திருத்திய	திருக்.215
23.	அடலெடுத்துரைத்தல்	கொடித்தேர் மறவர்	திருக்.216
24.	அயர்வகற்றல்	முன்னோன்அருண்	திருக்.217
25.	நெறிவிலக்கிக் கூறல்	விடலையுற்	திருக்.218
26.	கண்டவர் மகிழ்தல்	அன்பனைத்	திருக்.219
27.	வழி விளையாடல்	கண்கடம் மாற்பயன்	திருக்.220
28.	நகரணிமை கூறல்	மின்றங் கிடையொடு	திருக்.221
29.	நகர் காட்டல்	மின்போல் கொடிநெடு	திருக்.222
30.	பதிபரி சுரைத்தல்	செய்குன் றுவையிவை	திருக்.223
31.	செவிலி தேடல்	மயிலெனப் பேர்ந்திள	திருக்.224
32.	அறத்தொடு நிற்றல்	ஆளரிக் கும்மரி	திருக்.225
33.	கற்புநிலைக்கிரங்கல்	வடுத்தான் வகிர்மலர்	திருக்.226
34.	கவன்றுரைத்தல்	முறுவலக் காறந்து	திருக்.227
35.	அடிநினைந்திரங்கல்	தாமே தமக்கொப்பு	திருக்.228
36.	நற்றாய்க்குரைத்தல்	தழுவின கையிறை	திருக்.229
37.	நற்றாய் வருந்தல்	யாழியன் மென்மொழி	திருக்.230
38.	கிளிமொழிக்கிரங்கல்	கொன்னுனை வேலம்	திருக்.231
39.	சுடரோடிரத்தல்	பெற்றே னெடுங்கிள்ளை	திருக்.232
40.	பருவநினைந்து கவறல்	வைம்மலர் வாட்படை	திருக்.233
41.	நாடத்துணிதல்	வேயின தோழி	திருக்.234
42.	கொடிக்குறி பார்த்தல்	பணங்களஞ் சாலும்	திருக்.235

43.	சோதிடங்கேட்டல்	முன்னுங் கடுவிடம்	திருக்.236
44.	சுவடுகண்டறிதல்	தெள்வன் புனற்சென்னி	திருக்.237
45.	சுவடுகண்டிரங்கல்	பாலொத்த நீற்றம்	திருக்.238
46.	வேட்ட மாதரைக் கேட்டல்	பேதைப் பருவம்பின்	திருக்.239
47.	புறவொடு புலத்தல்	புயலன் றலர்சடை	திருக்.240
48.	குரவொடு வருந்தல்	பாயும் விடையோன்	திருக்.241
49.	விரதியரை வினாவல்	சுத்திய பொக்கணத்	திருக்.242
50.	வேதியரை வினாவல்	வெதிரேய் கரத்துமென்	திருக்.243
51.	புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல்	மீண்டோ ரெனவுவந்	திருக்.244
52.	வியந்துரைத்தல்	பூங்கயி லாய்ப்	திருக்.245
53.	இயைபெடுத் துரைத்தல்	மின்நொத் திடுகழல்	திருக்.246
54.	மீளவுரைத்தல்	மீள்வது செல்வதன்	திருக்.247
55.	உலகியல் புரைத்தல்	சுரும்பிவர் சாந்தும்	திருக்.248
56.	அழுங்குதாய்க்குரைத்தல்	ஆண்டில் எடுத்தது	திருக்.249

இந்நூல் எல்லாக் கூற்றிற்கும் திருக்கோவையாரில் இருந்து சான்றுகளைக் கொடுத்துள்ளது.. தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை ஆகியவற்றைப் பின்பற்றி முத்துவீரியமும் உடன்போக்கின் விரியில் நற்றாய், செவிலி ஆகியோர்க்கு கூற்றுகளை அமைத்துள்ளது. நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் உள்ளிட்ட இலக்கண நூல்கள் உடன்போக்கிற்குரிய கூற்றுகளில் நற்றாய்க்கும், செவிலிக்கும் கூற்றுகளை அமைக்கவில்லை என்பது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

சுவாமிநாதம் குறிப்பிடும் உடன்போக்கு

இந்நூலில் இரண்டாவது இயலாக கைக்கோண்மரபு இடம்பெற்றுள்ளது. இவற்றில் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகளைக் கூறுகையில் உடன்போக்கினைப் பற்றியும் வரையறுப்பர். சுவாமியாத ஆசிரியர் "உடன்போக்கினைப் பற்றி ஆறு சூத்திரங்கள் இயற்றியுள்ளார்"[148]. இதில் களவு வெளிப்பட்டபின் வரைதல் நிகழும் இடங்களும் உடன்போய்வரைதலின் பாகுபாடுகளும் ஒரே நூற்பாவில்"[149] சுட்டப்பெற்றுள்ளன.

இந்நூற்பாவில் சுவாமிக் கவிராசர் தலைவருடன் சென்று மணஞ்செய்து கொள்ளுதல், சென்றுவந்த பின் மணஞ்செய்து கொள்ளுதல், தலைவனுடன் செல்ல இடையூறு ஏற்பட்டபின் வரைதல் என மூன்றும் களவு வெளிப்பட்டபின் ஏற்படும் வரைவாகும் என்றும் ,தலைவனுடன் தலைவி செல்லும் உடன்போக்கை ஒத்திப்போடுதல், தலைவி தலைவனுடைய உடைமையாய்க் கற்பொடு கூடி இருத்தலைப் பலரும் அறிதல், புதல்வியைத் தேடிச் சென்று செவிலி மீண்டு வருதலுமான மீட்சி ஆகிய மூன்றும் உடன்போய் வரைதலின் பாகுபாடாகும்"[150]

என்றும் விளக்குவர். களவு வெளிப்பட்டு நிகழும் வரைதலுக்கு இவ்வுடன்போக்கு துணைசெய்வது பெறப்பெறுகிறது.

உடன்போக்கின் வகையும், விரியும்

இந்நூலில் உடன்போக்கின் வகைகள் தொகுத்தும் விரித்தும் இரு நூற்பாக்களில் குறிக்கப் பெற்றுள்ளன. உடன்போக்கின் வகைகள் இரண்டு அடிகளிலும்"[151] விரிகள் ஒன்பது அடிகளிலும்"[152] விளக்கப் பெற்றுள்ளன.

இதில் முதல் நூற்பாவில் முதல் இரண்டு அடிகளில் உடன்போக்கின் வகைகள் தொகுத்துக் கூறப்பெற்றுள்ளன. அவையாவன: 1. தலைவியை உடன் அழைத்துச் செல்லும்படி தலைவனுக்குக் கூறல் 2. தலைவனும் தலைவியும் மறுத்தல் 3. இருவரையும் உடன்போக்கிற்கு ஒத்துக்கொள்ளும்படிச் செய்தல் 4. இருவரும் ஒத்துக் கொள்ளுதல் 5. இருவரும் செல்ல விடுதல் 6. தலைவியின் தளர்ச்சி கண்டு இருவரும் மேலும் போகாமல் கண்டோர் தடுத்தல் 7. தலைவன் தலைவியைப் புகழ்ந்து கூறுதல் 8. தலைவியைத் தேற்றுதல் என உடன்போக்கு எட்டு வகையினை உடையது. இந்நூற்பாவில் (சூ.எ;111) அடுத்து வரும் ஆறு அடிகளில் இவ்வுடன்போக்கு வகைகள் விரிக்கப்பெற்றுள்ளன. மேலும் இதற்கு அடுத்த நூற்பாவிலும் (சூ.எ;112) உடன்போக்கின் விரியும், கற்பொடு புணர்ந்த கௌவையும் இணைத்துக் குறிக்கப்பெற்றுள்ளன. ஆகவே உடன்போக்கிற்குரிய கூற்றுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

2:31 சுவாமிநாதமும் உடன்போக்கிற்குரிய கூற்றுகளும்[153]

வ.எ.	உடன்போக்கின் வகை	உடன்போக்கின் விரி
1.	போக்கு உணர்த்தல்	1. தோழி தலைமகனுக்கு உடன்போக்குக் கூறுதல்
2.	நேராமை	2. அதற்குத்(உடன்போக்கிற்குத்) தலைவன் ஒத்துக் கொள்ளாது மறுத்தல்
		3. தலைவி நாணம் அழிந்து போவதற்கு இரங்குதல்
		4. தலைமகள் மறுத்தல்
3.	நேர்வித்தல்	5. தோழி தலைவனை ஒத்துக்கொள்ளச் செய்தல்
		6. கற்பின் மேம்பாட்டைத் தோழி கூறுதல்
4.	நேர்தல்	7. தலைவன் ஒத்துக் கொள்ளுநல்
		8. தலைவன் ஒத்துக் கொண்டதைத் தலைவிக்குத் தோழி கூறுதல்
		9. தலைவி ஒத்துக்கொண்டு புறப்படுதல்
		10. தோழி பாலைவனத்தின் இயல்பைக் கூறுதல்
5.	போக்கல்	11. தோழி தலைவியைத் தலைவன் கையில் ஒப்படைத்தல்
		12. விடியற்காலத்தில் தலைவனும் தலைவியும் செல்லுதல்
		13. தலைமகளைத் தலைமகன் பாலை–வனத்திற்கு அழைத்துச் செல்லுதல்
6.	விலக்கல்	14. தலைமகள் இயலாமை அறிந்து தங்குதல்
		15. பார்த்தவர்கள் அவர்களை விலக்குதல்
7.	புகழ்தல்	16. உடன்கலந்து பூச்சூட்டி மகிழ்ந்து

அளவளாவுதல்

17. அதைப் பார்த்தவர் ஐயம் அடைதல்

8. தேற்றல்

18. தலைவனுடைய ஊர் அருகில் இருப்பதைக் கூறல்

19. தலைவன் ஊர் வந்துவிட்டதைத் தலைவிக்குக் கூறுதல்

தொல்காப்பியம் தலைவனுக்குரிய கூற்றாக ஆறினையும், தலைவிக்குரிய கூற்றாக பத்தினையும், தோழிக்குரிய கூற்றாக ஆறினையும், கண்டோர்க்குரிய கூற்றாக ஒன்பதினையும் குறிக்க, சுவாமிநாதம் தலைவனுக்குரிய கூற்றினை ஆறாகவும், தலைவிக்குரிய கூற்றினை மூன்றாகவும், தோழிக்குரிய கூற்றினை ஏழாகவும், கண்டோர்க்குரிய கூற்றினை மூன்றாகவும் வரையறுத்துள்ளது. இதில் தலைவனுக்குரிய கூற்றினை மட்டும் தொல்காப்பியமும், சுவாமிநாதமும் ஒன்றுபோல ஆறாகக் கூறியிருப்பது சிறப்புடையதாகும்.

கற்பொடு புணர்ந்த கவ்வை

சுவாமிநாதம் கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளையும்"[154] விரிகளையும்"[155] மூன்று நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளது. இந்நூல் கற்பொடு புணர்ந்த கவ்வைக்குரிய கூற்றுகளை நம்பியகப் பொருளைப் பின்பற்றி விளக்கிச் செல்கின்றது. எனினும் நம்பியகப் பொருளைவிட செவிலி தேடிப் பின்செல்லல் என்ற வகைக்குரிய கூற்றுகளை கூடுதலாக அமைத்திருப்பது கருதத்தக்கது.

2:32 – கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளும் விரிகளும்[156]

வ.எ.	வகைகள்	விரிகள்
1.	செவிலி புலம்புதல்	1. செவிலி தோழியைக் கேட்டல்
		2. தோழி,தலைவி தலைவனுடன் உடன்போக்கு போனமையைக் கூறுதல்
		3. தன்னைத் தேற்றுவார்க்குப் பதில் கூறிக்கொண்டு வருந்துதல்
		4. எதிர்வருகின்ற செவிலியினுடைய அறியாமை எடுத்துச் சொல்லுதல்
		5. செவிலி தெய்வத்தை வணங்குதல்
2.	நற்றாய் புலம்புதல்	1. செவிலி தலைவியின் உடன்போக்கை நற்றாய்க்குச் சொல்ல அவள் வருந்துதல்
		2. தோழி புலம்புதல்
		3. அயலார் தோழியொடு வருத்தப்படுதல்
		4. நற்றாய் தோழியிடம் வருத்தப்படுதல்
3.	மனைமருட்சி	1. (தலைவி வரும்) அறிகுறி (நிமித்தம்) கண்டு பாராட்டுதல்
		2. பாலைவனத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதல்
		3. தன் மகளுடைய மென்மைத்தன்மைக்கு இரங்குதல்
		4. இளமைத் தன்மைக்கு வருந்துதல்
		5. தலைமகளின் அஞ்சும் குணத்திற்கு இரங்குதல்
4.	கண்டோர் மொழிதல்	1. கண்டோர் இரங்குதல்
5.	செவிலி பின்தேடிச் செல்லல்	1. தலைவியின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள முடியாத அன்பினையைச் செவிலி தேற்றுதல்
		2. பின்செவிலி தேடிச்செல்லுதல்
		3. போகும்வழியில் முக்கோற்பகவரை வினாவுதல்
		4. அதற்கு அவர்கள் (செவிலி கவலைப் படாமல் இருப்பதற்குரிய காரணத்தை எடுத்துச்

சொல்லுதல்)

5. செவிலி எயிற்றியை வினாவுதல்
6. குராமரத்தொடு புலம்புதல்
7. சென்றவர்களின் அடிச்சுவட்டினைக் கண்டு வருந்துதல்
8. தன்னுடன் வருவோரை வினாவுதல்
9. அவர்கள் செவிலியைத் தேற்றுதல்
10. அன்னை (செவிலி) மகளைக் காணாது வருத்தம் அடைதல்.

மீட்சி

சுவாமிநாதத்தில் கற்பொடு புணர்ந்த கவ்வையின் எஞ்சிய பகுதியும், மீட்சியும் ஒரு நூற்பாவில் சுட்டப்பெற்றுள்ளன. இந்நூற்பா எட்டு அடிகள் கொண்டது. இதில் இறுதியாக இடம்பெறும் நான்கு அடிகள் மீட்சியின் வகைகளையும், விரியின் சில பகுதிகளையும்"[157] விளக்கிச் செல்கின்றது. இதற்கு அடுத்த நூற்பாவில் மீட்சியின் விரிகளின் எஞ்சிய கூற்றுகள்"[158] விளக்கம் பெற்றுள்ளன. மீட்சி விரியின் கூற்றுகளை வரையறுப்பதில் நம்பியகப் பொருளும், இலக்கண விளக்கமும் ஒன்றுபோல அமைகின்றன.

2:33 – மீட்சியின் வகைகளும் விரிகளும்[159]

வ.எ.	வகைகள்	விரிகள்
1.	உண்மையைத் தெளிதல்	1. தலைவி நீண்டதூரம் சென்றுவிட்டமை-யைச் செவிலி தோழிக்கு உணர்த்தல் 2. நம் ஊருக்கு அருகே வந்துவிட்டோம் என்று தலைவிக்குத் தலைவன் கூறுதல்
2.	மகிழ்ச்சி அடைதல்	1. தங்களுடைய வருகையை முன்னோர் செல்வோர் வாயிலாகத் தோழிக்குச் சொல்லி அனுப்புதல் 2. அதுகேட்ட தோழியர் நற்றாய்க்கு உணர்த்துதல்
3.	வினவுதல்	1. தலைவனுடைய உள்ள(மன) நிலையை அறிந்துகொள்ள வேலனைக் கேட்டல்
4.	சொல்லுதல்	1. முன்னே செல்வோர் போய்த் தோழிக்குச் சொல்லுதல்

2:34 – இற்செறித்தலும் மேற்கோள் பாடல்களும்

வ.எ	நூல்	சங்க இலக்கியம்	பிற இலக்கியம்
1.	தொல்காப்பியம்	நற்;61, குறு;161,244,69,	அகம்;2 திணை.ஐம்;10
2.	இறையனார் களவியல்	அகம்;286	பா.கோ;150,151,152, 153,154,155,156,157, 158,159
3.	நம்பியகப் பொருள்	நற்;376	த.கோ;151,152,153, 154, திணை.நூ;5, ஐ.ஐ;12,18.
4.	களவியற் காரிகை	அகம்;286	திருக்.கோ;133,145, 139, பா.கோ;170,177,172, 181,174 பழம்பாட்டு,

			பொருளியல்;61,62,64 கண்டனலங்காரம்
5.	இலக்கண விளக்கம்		த.கோ;152, க.கோ;134, அம்.கோ;176, ஐ.ஐ.;12

2:35 – உடன்போக்கும் மேற்கோள் பாடல்களும்

வ.எ	இலக்கணநூல்	சங்க இலக்கியம்	பிற இலக்கியம்
1.	தொல்காப்பியம்:	குறுந்;56	
	தலைவன் கூற்று:	நற்;9,362	
	இளம்பூரணர் உரை	கலி.பாலை;12	
	நச்சர் உரை	அகம்;99 ஐங்;391 நற்;9,342	
	தலைவி கூற்று:	நற்;149	
	இளம்பூரணர்	ஐங்;384,385,312,397	
	நச்சர் உரை	அகம்;95 குறுந்;145 நற்;149 ஐங்;384,385,397,392,203,312	
	செவிலி கூற்று :	குறுந்;84,44	
	இளம்பூரணர்	ஐங்;372,375,389 அகம்;35, கலி.பாலை;8	
	நச்சர் உரை	குறுந்;130,44 அகம்;49,7 ஐங்;380	திணை.நூ;65
	தொல்காப்பியம்	ஐங்;391	ஐ.ஐம்;37
	நற்றாய் கூற்று:		

	இளம்பூரணர் உரை		
	நச்சர் உரை	ஐங்;371,376,391, அகம்;63,15,195,35,275	தகடூர்யாத்திர்
	தோழி கூற்று:	கலி.பாலை;2,5	சிற்றெட்டகம்
	இளம்பூரணர்	அகம்;65,259 நற்;12	
	நச்சர்	ஐங்;306,200 அகம்;65,250 நற்;10,355,12 குறுந்;262	
	கண்டோர் கூற்று:	நற்;2 ஐங்;387,388	சிற்றெட்டகம்
	இளம்பூரணர்	குறுந்;7	
	நச்சர்	குறுந்;390 ஐங்;388,387,393 நற்;2,170 குறுந்;7, கலி;9	சிற்றெட்டகம் திணை.நூ;7
2.	இறையனார் களவியல்	நற்;227,149,10 நற்;9 குறுந்;149,115,397,84,7 ஐங்;5,397,23,399 கலி.பாலை;8 அகம்;195	பா.கோ;165 -207 முடிய உள்ள பாடல்கள் (மொத்தம் 43 பாடல்கள்)
3.	நம்பியகப் பொருள்	அகம்;90,259 குறுந்;388,149,397,7 ஐங்;254 நற்;149,9,384	த.கோ;305, 306.307,308, 309,310,311, 312,313,315, 315,317,318, 319,320,321, 322.

1. தொல்பொருள்.அகம்
41ஆம் சூ.உ.மே.

			2. " 3. தொல்பொருள்.அகம் 40ஆம் சூ.உ.மே. நாலடி;398 தி.கோ;213, தி.வா.கோ;226 பழம்பாட்டு (4), பல்சந்தமாலை, கிளவிமாலை (2) கிளவித்தெளிவு தி.கோ;180,195,196, 197
4.	களவியற் காரிகை	நற்;9,12,149,184,227 குறுந்;149,84,15,7,130 ஐங்;380,379,374, 372,397,393 அகம்;63	202,208,213,214, 218,221,224, 226,228,229, 230,232,233, 234,241,240, 237,238,242, 247,248,249 பா.கோ;189,191,192, 197,198,200,201,202, 340,206,208,209,210, 211,212,216,215,220, 223,224,225,226,227, 228,229,230 பொருள்;86,87,89,90, 92,114,117,120,119, 121,122,123,125,131, 132,133 தி.நூ;65,90, நரையூரந்தாதி (நல்லாந்) சிற்றெட்டகம்
5.	இலக்கண விளக்கம்	ஐங்;தனி;5	த.கோ;305,310,313, 317,318, திருக்.கோ;201,202, 205,204,208,213,215, 217,221,222,223 அம்.கோ;366,369,372, 378,379,381,385

6. முத்துவீரியம் திருக்.கோ;194-249 (மொத்தம் 56 பாடல்கள்)

2:36 – இற்செறித்தலும் இலக்கணிகளும்

வ.எ	கூற்றுகள்	தொல்காப்பியம்	இறையனார் அகப்பொருள்	வீரசோழியம்	நம்பியகப் பொருள்	காரிகை	இலக்கண விளக்கம்	சுவாமிநாதம்
1.	இற்செறித்தலுக்குரிய கூற்றுகள்	4	5		5	7	5	5
2.	தலைவி கூற்று	2	–		–	–	–	–
3.	தோழி கூற்று	1	5		4	7	4	4
4.	தலைவன் கூற்று (உரை)	1	–		1	–	1	1

2:37 – உடன்போக்கும் இலக்கணிகளும்

வ.எ	கூற்றுகள்	தொல்காப்பியம்	இறையனார் அகப்பொருள்	நம்பியகப் பொருள்	களவியற் காரிகை	இலக்கண விளக்கம்	முத்து வீரியம்	சுவாமிநாதம்
1.	உடன்போக்கிற்குரிய கூற்றுகள்	61	23	50	32	62	56	50
2.	தலைவன்	6	1	7	2	10	9	7
3.	தலைவி (உரை)	10	2	4	2	4	2	4
4.	தோழி	6	6	8	7	9	17	10
5.	நற்றாய்	15	2	12	6	14	5	8
6.	செவிலி (உரை)	17	7	14	9	16	16	13
7.	கண்டோர்	7	5	5	6	9	7	8

தொகுப்புரை

தொல்காப்பியம் குறித்த அகப்பாகுபாடு களவு, கற்பென இருவகை. களவின் நான்கு வகைகளில் ஒன்று தோழியிற் கூட்டம். இத்தோழியிற் கூட்டத்தில் இற்செறித்தலும் உடன்போக்கும் இடம்பெறும்.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி , பிங்கல நிகண்டு போன்றவை 'இல்' என்பதற்குத் தரும் பல பொருள்களில் 'வீடு' என்ற சொல் பொருத்தமுடையதாகும். 'செறித்தல்' என்ற சொல்லிற்குத் தரும் அளித்தல், பெய்தல், நெருங்குதல் என்ற பொருள்களும் கருதத்தக்கதாகும்.

இற்செறித்தலுக்கு 'மனைப்பட்டுக் கலங்குதல்' என்று பொருள்கொண்டு நோக்க வேண்டும். தலைவி வீட்டின் புறத்தில் போகாதவாறு, பெற்றோரால் வீட்டின் உள்ளேயே அடக்கி வைக்கப்பெற்ற நிலையில் மனம் கலங்கிச் சிதைதல் மனைப்பட்டுக் கலங்குதலாகும்.

தொல்காப்பியம் இற்செறித்தல் என்ற சொல்லைக் கையாளவில்லை. இவற்றிற்கு ஈடாக 'மனைப்பட்டுக் கலங்குதல்', ‘தமர் தற்காத்தல்’,'காப்பின் கடுமை' என்ற வெவ்வேறு சொற்களைக் கையாண்டுள்ளது.

தொல்காப்பியத்தைப் போல் இறையனார் களவியல் உரையும் இற்செறித்தல் என்ற சொல்லாட்சியை நூற்பாவில் நேரடியாகச் சுட்டவில்லை. ஆனால் உரையில் (நூ.எ.18) கையாளப்பெற்றுள்ளது. இற்செறித்தலின் வளர்ச்சி நிலையாக

இற்செறித்தலுக்குரிய கூற்றுகளைத் தோழி கூற்றில் ஐந்தாக இந்நூல் வகைப்படுத்தியுள்ளது.

நம்பியகப்பொருள் ஒருசார் பகற்குறியின் வகைகளில் ஒன்றாக இற்செறித்தலை அடக்கியுள்ளது. இறையனார் களவியல் உரையை அடியொற்றி இந்நூலும் இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை ஐந்தாகவும், அவற்றைத் தோழி கூற்றிலும்(4), தலைவன் கூற்றிலும்(1), அமைத்துள்ளது. இதனைத் தஞ்சைவாணன் கோவையும் எடுத்துரைக்கிறது.

களவியற் காரிகை இற்செறித்தலுக்குரிய கூற்றுகளை ஏழாகவும், தோழி கூற்றிலும் அமைத்துள்ளமை குறிக்கத்தக்கது

இலக்கண விளக்கம் நம்பியகப் பொருளை அடியொற்றியது . கோவை உரை குறித்த புதுக்கிளவிகளையும் உரையில் குறிப்பது கருதத்தக்கன.

சுவாமிநாதம் நூற்பா வடிவத்தில் வேறுபட்டிருப்பினும், இற்செறித்தலுக்குரிய செய்திகளைத் தருவதில் நம்பியகப் பொருளைச் சார்ந்துள்ளமை ஆய்வின்வழி தெரியவருகிறது.

தோழியர் கூட்டத்தில் உடன்போக்கு என்ற ஒன்றைத் தொல்காப்பியரும்,உரையாசிரியர்களும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 'உடன்போக்கு' என்ற சொல்லை நேரடியாகச் சுட்டவில்லை என்றாலும், அச்சொல்லிற்கு ஈடாக ஏழு சொற்களை அமைத்துள்ளார். இளம்பூரணர், நச்சர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் 'உடன்போக்கு' என்ற சொல்லாட்சியை நேரடியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

உடன்போக்கு தொடர் உடன்+போக்கு என்ற இரு கிளவிகளின் இயைபு. உடன் என்ற சொல்லிற்கு, பலபொருள்களில் ஒருங்கு என்ற சொல் பொருத்தமுடையதாகும். 'போக்கு' என்பதற்குத் தரும் பல பொருள்களில் போகுதல், போகச் செய்கை என்பன குறிக்கத்தக்கன. இக்குறிப்புகளான் தலைவனும் தலைவியும் ஒருங்கு சேர்ந்து போகுதல் போக்குடன் அல்லது உடன்போக்கு என்பது தெளிவாகிறது.

'கடை' என்பது 'பின்' என்ற பொருளிலும், 'கொண்டு' என்பது தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு என்ற பொருளிலும், 'பெயர்தல்' என்பது 'போகுதல்' என்ற பொருளிலும் ஆளப்பெறுவதால், தலைவன் தலைவியைத் தன்பின் அழைத்துக் கொண்டு போகுதல் 'கடைக்கொண்டு பெயர்தல்' என்பது பெறப்பெறுகிறது.

உடன்போக்கு என்பது களவினை வெளிப்படுத்தும் கிளவியாக அமைகிறது. தலைவன் தலைவியின் களவினைப் பெற்றோர் அறியாத, நிலையில் தோழியின் உதவியால் தலைவனும் தலைவியும் ஒன்று சேர்ந்து தலைவியின் ஊரைவிட்டு நீங்கித் தலைவனது ஊருக்குச் செல்வது உடன்போக்காகும்.

தொல்காப்பியர் பிரிவின் வகைகளில் ஒன்றாக உடன்போக்கினை அமைத்து, அத்தகைய உடன்போக்கில் கூற்று நிகழ்த்துவதற்குரிய மாந்தர்களையும் வரையறைசெய்துள்ளார்.

தொல்காப்பியர் உடன்போக்கில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்களாகத் தலைவன், தோழி, நற்றாய், செவிலி, கண்டோர் ஆகியோரைக் கூறுவர். ஆனால் தலைவிக்கு மட்டும் உடன்போக்கிற்குரிய கூற்றுகளைத் தனித்த நூற்பாவில்

அமைக்கவில்லை. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் உரையில் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளைக் குறித்துச் செல்கின்றனர்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் தலைவனுக்குரிய கூற்றுகளைத் தொகுத்து அமைத்துள்ளார். இந்நூற்பா இருபது அடிகள் கொண்டது. இதில் முதல் ஆறு அடிகள் உடன்போக்கிற்கு உரியவை ஆகும். தொல்காப்பியர் உடன்போக்கில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளை ஆறாகக் குறிப்பர். தொல்காப்பியத்தைவிட இளம்பூரணர் மூன்று கூற்றுகளையும், நச்சர் எட்டுக் கூற்றுகளையும், சோமசுந்தர பாரதியார் இரண்டு கூற்றுகளையும், அருணாச்சலம் பிள்ளை இரண்டு கூற்றுகளையும் கூடுதலாகச் சுட்டியுள்ளனர். மற்ற உரையாசிரியர்களின் கருத்துக்களில் இருந்து சோமசுந்தர பாரதியார் ஒரு கூற்றினையும் (1) அருணாச்சலம் பிள்ளை ஒரு கூற்றினையும் (5) பொருள் மாற்றிக் கூற்றினை மொழிந்துள்ளனர்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கின்கண் தலைவி நிகழ்த்தும் கூற்றாக எதனையும் சுட்டவில்லை. இளம்பூரணர் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளை அகத்திணையியலில் அமைத்திருக்க வேண்டும் என்பர். இவரது கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில் பொருளியல் சூத்திரம் அமைந்திருப்பது இங்கு கருதத்தக்கது. தொல்காப்பியர் சூத்திரத்தில் சுட்டவில்லை என்றாலும் உரையாசிரியர்கள் உரையில் அமைத்துக் கொள்கின்றனர். இளம்பூரணர் ஒரு நூற்பாவின்கண் (எஞ்சி;45) நான்கு கூற்றுகளையும் நச்சர் இரண்டு நூற்பாவின்கண் (எஞ்சி;45,107) பத்துக் கூற்றுகளையும் அருணாச்சலம் பிள்ளை ஒரு நூற்பாவின்கண் உரையில் (எஞ்சி;45) மூன்று கூற்றுகளையும் குறித்துள்ளனர்.

சோமசுந்தர பாரதியார் தலைவி நிகழ்த்தும் கூற்றுகளைப் பொதுவாகச் சுட்டியுள்ளார். ஆனால் உடன்போக்கில் தலைவிக்குரிய கூற்றாக எதனையும் குறிக்கவில்லை.

தொல்காப்பியர் உடன்போக்கில் தோழி நிகழ்த்தும் கூற்றுகளை ஆறாகக் குறிப்பர். தொல்காப்பியத்தைவிட இளம்பூரணர் ஒன்பது கூற்றுகளையும், நச்சர் பத்துக் கூற்றுகளையும், சோமசுந்தர பாரதியார் ஏழு கூற்றுகளையும், கூடுதலாகச் சுட்டியுள்ளனர்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கில் நற்றாய் கூற்றுகளைக் கூறியுள்ளார். மேலும் களவியல் குறிப்பிடும் செவிலிக்குரிய கூற்றுகள், நற்றாய்க்கும் பொருந்துவதால் அந்நூற்பாவிலும் உடன்போக்குக் கூற்றுகள் சுட்டப்பெற்றுள்ளன. ஏமப்பேரூர் என்ற நூற்பாவின்கண்ணும் இவ்வுடன்போக்குக் கூற்றுகளை நச்சர் அமைத்துள்ளார். இவ்வாறாக இளம்பூரணர் ஆறு கூற்றுகளையும், நச்சர் பதினாறு கூற்றுகளையும், பாரதியார் ஒன்பது கூற்றுகளையும், அருணாச்சலம் பிள்ளை மூன்று கூற்றுகளையும் தொல்காப்பியத்தினும் கூடுதலாகச் சுட்டியுள்ளனர்.

உடன்போக்கில் செவிலி நிகழ்த்தும் கூற்றுகளைத் தொல்காப்பியம் அகத்திணையியலில் தனித்துத் தொகுத்துச் சுட்டவில்லை. உரையாசிரியர்கள் தங்கள் உரையில் செவிலிக்குரிய கூற்றினைக் குறித்துச் செல்கின்றனர். அவ்வகையில் இளம்பூரணர் இரண்டு நூற்பாவின்கண் ஒன்பது கூற்றுகளையும்,

நச்சர் இரண்டு நூற்பாவில் பதினைந்து கூற்றுகளையும், பாரதியார் ஒரு நூற்பாவின்கண் இரண்டு கூற்றுகளையும், அருணாச்சலம் பிள்ளை மூன்று நூற்பாவில் மொத்தம் மூன்று கூற்றுகளையும் அமைத்துள்ளனர்.

தொல்காப்பியர் அகத்திணையியலில் உடன்போக்கில் கண்டோருக்குரிய கூற்றாக ஏழினைக் குறிப்பர். இளம்பூரணர் கூடுதலாக (4) ஒரு கூற்றினையும், பாரதியார் புதியதாக (2) ஒரு கூற்றினையும் அமைத்துள்ளனர். நச்சரும், பாரதியாரும் தொல்காப்பியர் சுட்டிய கூற்றுகளுக்கு உடன்படுகின்றனர்.

இறையனார் களவியல் உடன்போக்கினை நேரடியாகச் சூத்திரத்தில் குறிப்பிடவில்லை. ஆனால் உரையில் (சூ.எ.23) குறித்துச் செல்கின்றனர். இந்நூல் உடன்போக்கிற்குரிய கூற்றுகளை இருபத்தொன்றாக வரையறை செய்கிறது. தலைவனுக்கு ஒரு கூற்றும், தலைவி, நற்றாய், உள்ளிட்ட ஒவ்வொருவருக்கும் இரண்டு கூற்றுகள்வீதமும் குறிக்கப்பெற்றுள்ளன. செவிலிக்கு ஏழு கூற்றினையும், கண்டோருக்கு ஐந்து கூற்றினையும் வரையறுக்கிறது. தோழி கூற்றில் மட்டும் இந்நூல் தொல்காப்பியத்தை அடியொற்றி ஆறாக வகைப்படுத்திச் செல்கிறது.

நம்பியகப் பொருள் போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி ஆகிய மூன்று துறைகளிலும் உடன்போக்குச் செய்திகளை விளக்கிச் செல்கின்றது. உடன்போக்கும், அறத்தொடு நிற்றலும் இணைத்துப் பேசப்பெறும் நம்பியகப் பொருளின் போக்கு ஆய்விற்குரியது. உடன்போக்கின் வளர்ச்சி நிலையாக இந்நூல் உடன்போக்கின் வகையினை எட்டாகவும், விரியினைப் பதினெட்டாகவும் வரையறுக்கிறது. கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகையினை ஐந்தாகவும் அதன் விரியினை இருபத்து நான்காகவும் குறிக்கிறது. மீட்சியினை நான்காகவும், அதன் விரியினை ஆறாகவும் விரித்துள்ளது. தலைவனுக்கு ஏழு கூற்றுகளையும், தலைவிக்கு நான்கு கூற்றுகளையும், தோழிக்கு எட்டுக் கூற்றுகளையும், நற்றாய்க்குப் பனிரெண்டு கூற்றுகளையும், செவிலிக்கு பதினான்கு கூற்றுகளையும் கண்டோருக்கு ஐந்து கூற்றுகளையும் குறிக்கும்.

களவியற் காரிகை உடன்போக்கிற்குரிய கூற்றுகளாக முப்பத்து இரண்டினைக் கூறுவர். இதில் தலைவனுக்கு இரண்டு, தலைவிக்கு இரண்டு, தோழிக்கு ஏழு, நற்றாய்க்கு ஆறு, செவிலிக்கு ஒன்பது, கண்டோர்க்கு ஆறு என்ற முறையில் கூற்றுகள் வகுக்கப்பெற்றுள்ளன. இந்நூலினை நம்பியகப் பொருளோடு ஒப்பிடுகையில் உடன்போக்கில் அனைத்து மாந்தர்களுக்குரிய கூற்றினையும் குறைத்துக் கூறியுள்ளது அறியப்பெறுகிறது.

இலக்கண விளக்கம், நம்பியகப் பொருளை அடியொற்றி போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி ஆகிய மூன்று துறைகளிலும் உடன்போக்குச் செய்திகளைக் குறிக்கின்றது. உடன்போக்கின் வகை, விரி, கவ்வையின் வகை, விரி, மீட்சியின் வகை, விரி ஆகியவற்றில் நம்பியகப் பொருளின் கருத்திற்கு உடன்படுகிறது, எனினும் கூடுதலாகச் சில கூற்றுகளையும் குறித்துச் செல்கின்றது.

முத்துவீரியம் உடன்போக்கிற்குரிய கூற்றுகளாக ஐம்பத்தாறு கூற்றுகளைக் குறித்துள்ளது. இதில் தலைவனுக்கு ஒன்பது கூற்றுகளையும், தலைவிக்கு இரண்டு கூற்றுகளையும், தோழிக்கு பதினேழு கூற்றுகளையும், நற்றாய்க்கு ஐந்து கூற்றுகளையும், செவிலிக்கு பதினாறு கூற்றுகளையும், கண்டோருக்கு ஏழு கூற்றுகளையும் வரையறுக்கிறது. இலக்கண விளக்கத்தோடு ஒப்பிடுகையில் இந்நூல் தோழிக்குரிய கூற்றினை மட்டும் மிகுதிப்படுத்தியுள்ளது. மற்றவருக்குரிய கூற்றுகளைக் குறைத்துச் செல்கின்றது.

சுவாமிநாதம் உடன்போக்கிற்குரிய கூற்றுகளை நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் ஆகியவற்றை அடியொற்றி விளக்கிச் செல்கிறது. எனினும் இலக்கண விளக்கத்தைவிட உடன்போக்கின் கூற்றுகளைக் குறைத்துச் சுட்டியுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. தொல், பொருள், இளம், ப,3.
2. தொல், பொருள், அகம், புறம், நச்சர், ப,3.
3. தொல், பொருள், இளம், நூ, 219.
4. தொல், பொருள், இளம், நூ,487.
5. மேலது, ப,528.
6. மேலது, ப,156.
7. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள், நூ,153.
8. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப,292.
9. மேலது, ப,1016.
10. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, ப,399.
11. மேலது, ப,298.
12. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப,302.
13. செந்தமிழ்ப் பேரகரமுதலி, ப,384.
14. த.ஏ. ஞானமூர்த்தி, அடிசிற்கினியாள், பக்.,65-66.
15. தொல்,பொருள்,களவு,இளம், ப,192.
16. தொல்,பொருள்,களவு,இளம், நூ;21, 12-13.
17. மேலது, நூ;21, 26.
18. மேலது, ப,195.
19. மேலது, ப,195.
20. தொல், பொருள், களவு, கற்பு, பொருள், நச்சர், ப,70

21. தொல், பொருள், இளம், ப, 202.

22. மேலது, ப,202.

23. தொல், பொருள், களவு, கற்பு, பொருள், நச்சர், ப,78

24. மேலது, ப,78

25. க. வெள்ளைவாரணர், தொல், களவு, உரை, ப,156.

26. மேலது, ப,157.

27. தொல், பொருள், களவு, கற்பு, பொருள், நச்சர், ப,80

28. தொல், பொருள், இளம், நூ, 122;30.

29. மேலது, ப,226.

30. தொல், பொருள், களவு, கற்பு, பொருள், நச்சர், ப,121.

31. க. வெள்ளைவாரணர், தொல், களவு, உரை, ப,212.

32. தொல், பொருள், களவு, நச்சர், நூ, 103;1.

33. நக்கீரர், இறையனார் களவியல் உரை, ப,143.

34. மேலது, ப,143.

35. மேலது, பக்., 107-109.

36. மேலது, பக்., 107-110.

37. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள், ப,131.

38. மேலது, ப,131.

39. காண்க: பின்னிணைப்பு -1(அ).

40. மேலது, பக்.,137-139.

41. இரா. இளங்குமரன், களவியற் காரிகை, ப,52.

42. இரா. இளங்குமரன், களவியற் காரிகை, பக்.,90-93, 95, 102-104.

43. சேயொளி, இலக்கண விளக்கம், ப,144.

44. காண்க: பின்னிணைப்பு -1(அ).

45. சேயொளி, இலக்கண விளக்கம், பக்.,147-148.

46. காண்க பின்னிணைப்பு -1(அ).

47. எஸ்,விசுவநாதன் (ப.ஆ), பாட்டும் தொகையும், ப,45

48. தமிழ்ப்பெயரகராதி, ப,326

49. வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி-4), ப,784.

50. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப,71.

51. புலவர் குழந்தை, தொல்காப்பியம், பொருளதிகாரம், ப,244.

52. தொல், பொருள், இளம், நூ,17.

53. மேலது, ப,16.

54. தொல், பொருள், அகம், புறம், நச்சர், ப,41.

55. மேலது, பக்.,41-42.

56. தொல், பொருள், இளம், நூ,45.

57. மேலது, நூ,42.

58. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

59. தொல், பொருள், இளம், பக்.,48-49.

60. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்., 423-427, 438-439, 445-447, 452, 468-469.

61. தொல், பொருள், இளம், ப,49.

62. மேலது, ப,49.

63. மேலது, ப,50.

64. நற்;362.

65. நற்;9, 3-4, 9, 12.

66. தொல், பொருள், இளம், ப,49.

67. மேலது, ப,56.

68. மேலது, நூ,221.

69. மேலது, நூ,105.

70. தொல், பொருள், களவு, கற்பு, பொருள், நச்சர், நூ,107;10.

71. தொல், அகம், புறம், நச்சர், ப,98.

72. தொல், பொருள், இளம், ப,58.

73. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், ப,492.

74. மேலது, பக்., 476–478, 483–485, 492.

75. மேலது, பக்., 476–478, 483–485, 492.

76. தொல், பொருள், இளம், நூ,42.

77. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்., 384–388, 392–398,402–405.

78. தொல், பொருள், இளம், பக்.,41–42.

79. நற்;10,4,7–9.

80. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,19

81. தொல், பொருள், அகம்; இளம், ப,36.

82. மேலது, நூ,39.

83. தொல், பொருள், இளம், நூ,113.

84. தொல், பொருள், அகம், புறம், நச்சர், நூ,116.

85. மேலது, நூ,37.

86. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்., 353–379.

87. ஐங்; 391, 4–6.

88. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும்உரையும், ப,895

89. திணை, நூ;90, 1-2.

90. தொல், பொருள், அகம், இளம், ப,37.

91. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்., 359-361, 362-364.

92. தொல், பொருள், அகம், இளம், நூ, 40.

93. மேலது, ப,37.

94. தொல், பொருள், அகம், புறம், நச்சர், நூ,42.

95. தொல், பொருள், இளம், நூ,113.

96. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்., 355-356, 480-482, 492.

97. மேலது, பக்.,355-356,481-482,492

98. தொல், பொருள், அகம், இளம், நூ,43.

99. மேலது, ப,45.

100. தொல், பொருள், அகம், இளம், ப,46.

101. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், பக்.410-412,

102. மேலது, ப,46.

103. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல், பொருள், அகம், ப, 416.

104. மேலது, ப, 421.

105. நக்கீரர், இறையனார் களவியல் உரை, பக்.,117-118.

106. மேலது, பக்.,118-131.

107. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள், நூ, 44, 180-191.

108. மேலது, நூ,44.

109. மேலது, ப,31.

110. மேலது, நூ,45.

111. மேலது, 54.

112. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

113. காண்க: பின்னிணைப்பு – 1(ஆ).

114. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள், பக்.,211–220.

115. மேலது, பக்., 211–219.

116. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

117. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

118. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

119. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

120. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

121. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

122. மேலது, பக்., 221–233.

123. காண்க: பின்னிணைப்பு–1(ஆ)

124. காண்க: பின்னிணைப்பு–1(ஆ)

125. மேலது, ப,237.

126. மேலது, பக்., 234–237.

127. இரா. இளங்குமரன், களவியற் காரிகை, பக்.,118–125, 144–162.

128. மேலது, பக்.,118–125.

129. மேலது, பக்.,118–125.

130. மேலது, நூ.எ்,51,52,53.

131. மேலது, பக்.,144–163.

132. சேயொளி, இலக்கண விளக்கம், ப,199.

133. மேலது, ப,200.

134. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

135. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

136. சேயொளி, இலக்கண விளக்கம், பக்.,205-206.

137. மேலது, பக்.,201-205.

138. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

139. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

140. சேயொளி, இலக்கண விளக்கம், ப,206.

141. மேலது, பக்.,208-214.

142. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

143. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

144. சேயொளி, இலக்கண விளக்கம், பக்.,216-217.

145. மேலது, பக்.,215-216.

146. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

147. கு. சுந்தரமூர்த்தி, முத்துவீரியம், பக்,319-340,

148. செ.வை. சண்முகம், சுவாமிநாதம், நூ.எ்,110,111,112,113,114,115.

149. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

150. செ. வை. சண்முகம், சுவாமிநாதம், ப,201.

151. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

152. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

153. செ. வை. சண்முகம், சுவாமிநாதம், நூ.எ், 111,112.

154. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

155. காண்க: பின்னிணைப்பு - 1(ஆ).

156. செ. வை. சண்முகம், சுவாமிநாதம், நூ.ள்,112,113,114.

157. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

158. காண்க: பின்னிணைப்பு -1(ஆ).

159. செ. வை. சண்முகம், சுவாமிநாதம், நூ.ள்,114,115.

இயல் –3

சங்க இலக்கியத்தில்

இற்செறித்தல்

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற் கூட்டம் என்று கொள்வது அகப்பொருள் மரபு. தோழியிற் கூட்டம் பல்வேறு பகுப்புகளைத் தன்னகத்தில் கொண்டுள்ளது. அப்பகுப்புகளில் இற்செறித்தல் குறிக்கத்தக்கது. சங்க இலக்கியங்கள் களவுக்குரிய கிளவிகளைக் கோவைபடக் கூறில. இச்சங்க இலக்கியங்களாகிய நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றைக் கொண்டு இற்செறித்தலுக்குரிய பாடல்கள் இவ்வியலில் தொகுத்து ஆராயப்பெற்றுள்ளன. இப்பாடல்களைப் பாடிய புலவர்களை அறிதல், இலக்கணமெய்ம்மைகளைப் பொருத்தி ஆராய்தல், இப்பாடல்களின் தனித்தன்மைகளை மதிப்பிடுதல் ஆகியன இவ்வியலின் நோக்கமாகும்.

இற்செறித்தல் விளக்கம்

தொல்காப்பியர் இற்செறித்தலைக் குறிக்க "மனைப்பட்டுக் கலங்குதல்"[1] "காப்பின் கடுமை"[2] "தமர் தற்காத்தல்"[3] என்ற சொற்களைக் கையாண்டுள்ளார். இறையனார் களவியல் "காப்புச் சிறைமிக்க கையறு கிளவி"[4] என்பதைக் குறித்துச் செல்வதுடன், உரையில் "இற்செறித்தல்"[5] என்ற சொல்லை நேரடியாகப் பயன்படுத்தியுள்ளது. "நம்பியகப் பொருள்"[6] உள்ளிட்ட பிற்கால இலக்கண நூல்கள் நூற்பாவிலே செறிப்பு என்பதைக் கையாண்டுள்ளன. சங்க இலக்கியத்தில் இச்சொல்லாட்சி "செறிப்பறிவுறீஇ"[7] "இற்செறிப்பு"[8] "காப்பு மிகுதி"[9] என்று துறைக்குறிப்பில் குறிக்கப் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் இற்செறித்தல்

சங்க இலக்கியத்தில் இற்செறித்தல் தொடர்பாக நூற்றியொன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்களின் விபரம் பின்வருமாறு:

3:1 சங்க இலக்கியத்தில் இற்செறித்தல்

வரிசை எண்.	நூல்களின் பெயர்	எண்ணிக்கை
1.	நற்றிணை	46
2.	குறுந்தொகை	20
3.	ஐங்குறுநூறு	15
4.	கலித்தொகை	2
5.	அகநானூறு	18
	மொத்தம்	101

இற்செறித்தல் துறையில், நற்றிணையில் மிகுதியான (46) பாடல்களும், கலித்தொகையில் குறைவான (2) பாடல்களும் இடம்பெற்றுள்ளமையை மேற்கண்ட அட்டவணையின்வழி அறியமுடிகின்றது.

மிகுதியும் குறைவும்

நற்றிணையில் குறிஞ்சித்திணைப் பாடல்கள்[10] மிகுந்துள்ளன. இற்செறித்தலும் குறிஞ்சித் திணைக்கு முதலிடம் அளித்திருப்பதன் காரணமாக,

இவ்வொப்புமை கருதி நற்றிணையில் இற்செறித்தல் பாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன எனலாம்.

களவு நிகழ்ச்சிகள் அனைத்தும் படித்து இன்புறத்தக்கன. சுவைபடக் காணப்பெறும் அந்நிகழ்ச்சிகளைக் குறுகிய அடிகளில் கூறுவதைவிட, சற்று அதிக அடிகளில் பாட விழைந்ததன் நோக்கமே நற்றிணையில் இற்செறிப்புப் பாடல்கள் மிகுதியும் இடம்பெற்றுள்ளன எனக் கருதவும் இடமுண்டு.

கலித்தொகையில் ஏறுதழுவல்[11] என்கிற வீரவிளையாட்டு சிறப்பித்துப் பேசப்பெற்றுள்ளது. இவ்விளையாட்டு, காதலன் ஒருவன் தான் விரும்பிய காதலியைப் பெறுவதற்காக, பெற்றோர் இசைவுடன் நடத்தப் பெற்றதாகும். இங்கு தலைவியை இற்செறிக்கவோ, அலைக்கவோ வாய்ப்பில்லை. தலைவியின் களவு வெளிப்பட்ட நிலையில், வீரத்தின்வழித் தலைவனைத் தேர்ந்தெடுத்தனரே தவிர, தலைவியைக் கட்டுப்படுத்தவில்லை. அவ்வகையில் இந்நூலில் இற்செறிப்புப் பாடல்கள் குறைவு எனலாம்.

புலவர் வகைப்பாடு

இற்செறித்தல் துறையில் பாடிய புலவர்களை ஆண்பாற் புலவர்கள், பெண்பாற் புலவர்கள் என்று வகைப்படுத்தலாம். இத்துறையில் பாடிய புலவர்களின் எண்ணிக்கை ஐம்பத்து இரண்டு ஆகும்[12]. இவர்களில் ஆண்பாற் புலவர்கள் நாற்பத்தெட்டு பேர்[13], பெண்பாற் புலவர்கள் நான்கு பேர்[14] ஆவர்.

ஆண்பாற் புலவர்கள்

இற்செறித்தல் துறையில் ஆண்பாற் புலவர்கள்[15] மிகுதியான பாடல்களைப் புனைந்துள்ளனர். அவ்வகையில் கபிலர் முதன்மை இடத்தைப் பெற்றுள்ளார். "புலவர்கள் தங்கள் கருத்துகளைத் தோழி வாயிலாகவே புலப்படுத்துகின்றனர். அம்முறையில் கபிலர் காட்டும் தோழி கபிலரின் மறுபதிப்பாகக் காணப்படுகிறாள்"[16] என்பர்.

ஆண்பாற் புலவர்கள் இத்துறையில் மிகுதியாகப் பாடியமைக்குக் காரணம் அக்காலச் சமுதாயச் சூழலைப் படம்பிடித்துக் காட்டவேண்டும் என்ற அவர்களது எண்ணமும், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எடுத்துக் காட்ட முனைவதும் காரணங்களாகலாம். மேலும், பெண்களின் மனவியல்புகளைக் கூறுவதற்கு ஆண்பாற் புலவர்களுக்குக் கற்பனைக் களம் மற்றும் வாய்ப்பு அளிப்பதும் காரணங்களாக அமையலாம். பெண்களின் குற்றங்குறைகளை உணர்ந்து எழுதிய ஆண்பாற் புலவர்களின் புலமை வியத்தற்குரியதாகும்.

பெண்பாற் புலவர்கள்

பெண்பாற் புலவர்கள் இற்செறித்தலில் குறைவான[17] எண்ணிக்கையில் பாடல்களை இயற்றியுள்ளனர். ஆண்பாற் புலவர்களைப் போல அத்துணை எண்ணிக்கையில் பெண்பாற் புலவர்கள் பாடவில்லை[18] என்பர். இக்கருத்திற்கேற்ப இற்செறித்தல் துறையில் நான்கு புலவர்கள் மட்டும் பாடியிருப்பது அறியப்பெறுகிறது.

பெண்பாற்புலவர்கள் "தலைவி கூற்றிலேயே அதிகமாகப் பாடியுள்ளனர். காதல் உணர்வுகளையும், ஆற்றாமை உணர்வுகளையுமே தலைவியின் உணர்வுகளாக அவர்கள் படைத்திருப்பது இயற்கையானதே"[19] என்பர்.

இவ்வகையில் குப்பைக் கோழியர், நக்கண்ணையார், கழார்க் கீரனெயிற்றியாரின் கூற்றுகள் தலைவி கூற்றாகவே அமைத்திருப்பது கருதத்தக்கது.

"நாற்பத்தொரு பெண்பாற் புலவர்களில் பதினாறு புலவர்களே தோழியைப் பாடியுள்ளனர். அதிகமாகப் பாடல் பாடியோர் என்னும் வரிசையில் நல்வெள்ளியார், ஔவையார், வெள்ளிவீதியார் என்னும் மூவரின் தோழியர் ஆயப்படுகின்றனர்"[20] என்பர். இக்கருத்தின் அடிப்படையில் ஔவையாரின் இற்செறித்தல் பாடலும் தோழி கூற்றில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பெண்பாற் புலவர்கள் மிகுதியாகப் பாடாமைக்குக் காரணம் அறிவுக் குறைபாடு என்பதன்று புலமையைப் போற்றுவதுடன், குடும்பக்கடமையை ஆற்றும் பெரும்பொறுப்பை அவர்கள் மேற்கொண்டதும், தாயினைக் குறைத்துப் பேசுவதை விரும்பாததாலும், தலைவி மீதுள்ள கட்டுப்பாட்டினைத் தாங்களே வெளிப்படுத்தும் முகத்தான் தங்களின் உரிமையிழப்பைக் கூறி, பிறரின் அனுதாப உணர்வைப் பெற விரும்பாமையும் இதற்குக் காரணமாகலாம்.

திணையும் இற்செறித்தலும்

இற்செறித்தல் துறைப்பாடல்கள் குறிஞ்சி, மருதம், நெய்தல் திணைகளில் பயின்று வந்துள்ளன. இத்துறைப் பாடல்கள் குறிஞ்சியில் மிகுந்தும்[21] நெய்தல், மருதத்தில் குறைந்தும்[22] காணப்பெறுகின்றன.

குறிஞ்சியில் மிகுதி..........?

இற்செறித்தல் பாடல்கள் குறிஞ்சித்திணையில் மிகுதியாக இடம்பெற்றதற்குக் காரணம் குறிஞ்சித்திணையின் கருப்பொருளாகிய[23] தொழில்களில் ஒன்று தினைப்புனங்காத்தல் (கிளிகடிதல்) ஆகும். இற்செறித்தலுக்குரிய காரணங்களுள்

ஒன்றாகத் திணைமுதிர்ச்சி அமைகிறது. இவ்வொற்றுமையின் காரணமாக குறிஞ்சிப் பாடல்கள் மிகுதியாக இற்செறித்தல் துறையில் இடம்பெற்றுள்ளன என மதிப்பிடலாம்.

நெய்தலில் குறைவு............?

நெய்தலுக்குரிய உரிப்பொருள் இரங்கல்[24] ஆகும். இரங்கலாவது ஆற்றாமை[25] என்று இளம்பூரணர் கருதுவர். இற்செறித்தல் பாடல்களில் காப்புமிகுதியின் விளைவாகிய தலைவியின் ஆற்றாமையும் இணைத்துக் கூறப்பெற்றுள்ள நிலையில் ஆற்றாமை என்ற சிறு ஒப்புமை காரணமாக நெய்தல் திணையில் குறைவான இற்செறித்தல் பாடல்கள் பயின்று வந்துள்ளன எனலாம்.

கூற்றும் இற்செறித்தலும்

இற்செறித்தல் துறைப்பாடல்களில் தோழி கூற்று மிகுதியாகவும் தலைவன் கூற்றுக் குறைவாகவும்[26] காணப்பெறுகின்றன.

மிகுதியும் குறைவும்

தலைவியும் தோழியும் ஓருயிர் ஈருடல் பான்மையினர். "தலைவிக்குத் தோழியாகவும், நற்றுணையாகவும், அவளை முழுமையாக உணர்ந்து அறிந்தவளாகவும், அவளுக்காகவே வாழ்ந்து சொல்லாடிச் செயற்படுபவளாகவும் காட்டப்படும் தோழி சொல்வன்மை மிக்கவளாக அமைந்ததைத் தோழி கூற்றுப் பாடலில் அமையும் உள்ளுறை மிகுதி உணர்த்துகிறது"[27] என்பர். இவ்வகையில், இற்செறித்தல் துறையில், தலைவியின் காவல்மிகுதியின் பொருட்டுத் தலைவிக்காகத் தலைவனிடம் சொல்லாடும் முகத்தான் தோழி கூற்று மிகுதியாக இடம்பெற்றதை உணரமுடிகின்றது.

"உயர்த்திக் கூற வேண்டிய நேரத்தில் உயர்த்திக் கூறி, இடித்துக் காட்ட வேண்டிய நேரத்தில் இடித்துக் காட்டி, அறிவுரை நல்க வேண்டிய நேரத்தில் அறிவுரை நல்கி, அகவுலக ஆட்சியின் மதிநலம் சான்ற அமைச்சராகத் தோழி விளங்குகிறாள்"[28] என்பர். தலைவியின் இற்செறிப்பிற்குக் காரணம் தலைவனின் பன்முறை வருகையென்றுத் தலைவனின் பண்பினை இடித்துரைத்து, வரைவிற்கு விரைவுபடுத்தி அறிவுரை நல்கியதைத், தோழியின் கூற்றுமிகுதி உணர்த்தி நிற்பதை அறியமுடிகிறது.

தலைவிகூற்றுக் குறைவாக இடம்பெற்றமைக்குக் காரணம் "தலைவியும் தோழியும் ஒட்டிப்பிறந்த கவைமகவு போன்ற ஒற்றுமையுள்ளவர் என்பதை உளங்கொளல் வேண்டும்[29] என்பர். இவ்வொற்றுமையின் காரணமாகத் தலைவியின் மனப்புலம்பல்கள், வெளிப்பாடுகள் ஆகியன தலைவி கூற்றின்றி, தோழி கூற்றின் வாயிலாகவே விளக்கம் பெறுகின்றன. அவ்வகையில் தலைவி கூற்றுக் குறைவாகும்.

களவொழுக்கத்தினையே விரும்பும் தலைவனின் பன்முறை வருகையானது, தலைவிக்கு இற்செறிப்பு என்னும் கட்டுப்பாட்டை உருவாக்கியது. இந்நிலையில் வேறு வழிவகை செய்யக்கூடியவன் தலைவனே. ஆகையால், தோழியும் தலைவியும் (தலைவன் சிறைப்புறத்தானாகக்) அவனிடம் பேசுவர். இங்குத் தலைவன் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்றபோதிலும், தலைவியின் நிலையறிந்து, ஆற்றானாய்த் தன்நெஞ்சிடம் மட்டும் கூற்று நிகழ்த்துவதால் தலைவன் கூற்றுக் குறைவாக இடம்பெற்றுள்ளன.

பாடிய புலவர்கள்

இற்செறித்தல் துறையில் பாடிய புலவர்களின் பாடல்களைக் கபிலர் பாடல்கள், உலோச்சனார் பாடல்கள், அம்மூவனார் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல்கள் பாடிய புலவர், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், ஒரு பாடல் பாடிய புலவர்கள் என்று பகுக்கலாம்.

கபிலர்

கபிலர் சங்கப் புலவர்களுள் தலைமை சான்றவர். இவர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரிற் பிறந்த அந்தணர். இவர் பாடல்கள் பெரும்பாலும் குறிஞ்சித் திணைக்குரியன. பத்துப் பாட்டிற் குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூற்றில் குறிஞ்சித்திணையைக் குறித்து நூறு பாடல்கள், கலித்தொகையுள் குறிஞ்சித் திணை, இன்னா நாற்பது என்பனவற்றை இவர் பாடியுள்ளார்[30].

கபிலர் இற்செறித்தல் துறையில் பத்தொன்பது பாடல்கள்[31] இயற்றியுள்ளார். அப்பாடல்கள் நற்றிணை[32], குறுந்தொகை[33], ஐங்குறுநூறு[34], கலித்தொகை[35], அகநானூறு[36] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் தோழி கூற்றில் பதினேழும், தலைவி கூற்றில் இரண்டுமாக[37] அமைந்துள்ளன. அப்பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், குறிஞ்சித் திணையிலும், தோழி கூற்றிலும் மிகுந்துள்ளன. இப்பாடல்களில் துறைப் பொருத்தத்திற்காக நூலொன்றிற்கு ஒரு பாடல் விளக்கப்பெற்றுள்ளது.

காப்பின் கடுமை

கபிலரின் நற்றிணைப் பாட்டு தோழி தலைமகன் வரவுணர்ந்து சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது. இப்பாடல் தோழி கூற்றாகும்.

தலைவி இற்செறிப்புண்டிருப்பதைத் தோழி தலைவனுக்கு மிகவும் குறிப்பாக உணர்த்தும் திறத்தை இப்பாடல் காட்டுகிறது. மலையில் துயிலுகின்ற பிடியானையை மேகம் சூழ்ந்தது. அப்பிடியைக் காணாமல் களிறு பிளிறியது. இத்தகைய சோலை சூழ்ந்த தலைவனது நெடுங்குன்றத்தைப் பார்த்தேனும் நினது கவலை தணியுமா? அவ்வாறு தணியும் என்றால் வேங்கையின் கிளையில் கட்டிய ஊசலில் நின்னை ஊக்கி விடவோ? கூறுவாயாக என்று தோழி, தலைவியிடம் களவு நீட்டிக்கும் தலைவன் சிறைப்புறத்திலிருக்க, அவன் கேட்குமாறு கூறுகிறாள். இதனை கபிலர்,

"செலவுடன் விடுகோ தோழி

..........

றுஞ்சுபிடி மருங்கின் மஞ்சுபடக் காணாது

பெருங்களிறு பிளிறுஞ் சோலையவர்

சேணெடுங் குன்றங் காணிய நீயே"[38]

என்பர். இப்பாடலில் தோழி இல்லின் புறம் போந்து ஓர் உயரிய இடம் நின்று தலைவனது நெடுங்குன்றம்கூடக் காணமுடியாதபடி தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையை அழகாக உணர்த்துகிறாள். பிடியை மஞ்சு மறைத்தலான் அதனைக் காணாது களிறு பிளிறும் என்றதில் தலைவியைத் தமர் இற்செறித்தலான் குறியிடம் போந்து அவளைக் காணாது தலைவன் புலம்புவதைத் தவிர வேறொன்றும் செய்ய

இயலாது என்று அமைந்த உள்ளுறை வாயிலாகத் தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையை இன்னும் செறிவோடு உணர்த்துகின்றாள்.

இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள 'காணிய நீயே' என்ற குறிப்பைக் கொண்டு தலைவி தலைவனது குன்றத்தைக்கூட காணமுடியாத நிலையில் இற்செறிக்கப்பெற்றுள்ளமை புலனாகிறது.

தலைவியின் ஆற்றாமை

கபிலரின் ஐங்குறுநூற்றுப் பாட்டு இற்செறிப்புணர்ந்த தலைமகள் ஆற்றாளாய்த் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது என்பதாகும். இக்கூற்று தலைவி கூற்றாக அமைகிறது.

தலைவியை வீட்டினுள் இற்செறித்துவிடுகின்ற நிலையில், அவள் ஆற்றாமை மிக்கவளாகத் தோழியிடம் கூறுகின்றாள். அருவியாடல் முதலிய செயல்களால் தம் ஒழுக்கம் தமரால் உணரப்பட்டமையும், அதனால் அவர் இற்செறித்தமையும் குறிப்பால் உணர்த்துவாள், இனி அரியவாகுதல் மருண்டனேன் யானே என்று கூறினாள். தலைமகன் சிறைப்புறத்தானாகலின் ஆடல் எளியமன்னால் அவர்க்கு[39] என்று தலைவி கூறினாள்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள அவர்க்கு என்ற குறிப்பைக் கொண்டு தலைவன் சிறைப்புறத்தானாக நின்றதும், அரிய வாகுதல் என்ற குறிப்பைக் கொண்டு தலைவி இற்செறிக்கப்பெற்றது குறிப்பாலும் புலனாம். 'மருண்டனேன் யானே' என்ற தொடரைக் கொண்டு தலைவி ஆற்றாமை மிக்கவளாக வருந்தியது பெறப்பெறும்.

தினைமுதிர்ச்சி

கபிலரின் அகநானூற்றுப் பாடல் இருகுறிகளும் மறுக்கப்பெற்ற செய்தியைத் தருகிறது. எமது சிறுகுடியின்கண் நீ பகலில் வந்தால், ஊரார் அலர் கூறுவர் என்று அஞ்சுகிறோம். யானையைத் தாக்கக் கருதிய புலி திரியக்கூடிய அரிய வழியில் இரவில் நீ வந்தால் அதனினும் அஞ்சுகிறோம். தினைப்புனத்தில் சந்திக்கலாம் எனில் தினைக்கதிர்களும் முற்றின என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

இதற்கு "ஏனல்கிளிகூடி பாடலும் ஒழிந்தனள் என்றதனால் செறிப்பறிவுறுத்தி"[40] என்று உரை கூறுவர். இக்கருத்தின் அடிப்படையில் இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள 'ஒழிந்தனள்' என்ற குறிப்பைக் கொண்டு தினைமுதிர்ச்சியும், அதன் காரணமாகத் தலைவி இயல்பாக இற்செறிக்கப் பெறுவதும் அறியப்பெறுகிறது.

அன்னை ஐயுறுதல்

கபிலரின் குறுந்தொகைப் பாட்டுத் தலைவி கூற்றாகும். தலைவன் வரைந்துகோடற் கருத்தின்றி, களவின்பம் விரும்பி ஒழுகினான். அத்தகையோன் சிறைப்புறத்தனாகத், தலைவி தோழியிடம்,

".......... பானாள் தனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்"[41]

என்பாள். இக்கருத்தின் அடிப்படையில் தேர்வந்து பெயர்ந்தது என்பது தலைவனின் வருகையையும், அவனது செயலால் தலைவி இற்செறிக்கப்பெற்றுத் துன்புறுத்தப் பெற்றதை 'அன்னை அலைக்கும்' என்பதும் உணர்த்தி நின்றன.

களவொழுக்கம் அலராதல்

கபிலரின் கலித்தொகைப் பாடல் வரையாது வந்து ஒழுகும் தலைவற்குத் தோழி தலைவியாற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையுங் கூறி வரைவுகடாயது ஆகும். தலைவன் தலைவியின் களவு வெளிப்பட்ட நிலையில் அலர் தோன்றுகிறது. அவ்வலர் உள்ளுறை உவமம் வாயிலாக விளக்கப் பெற்றுள்ளது. அலரினை அறிந்த அன்னைத் தலைவியைக் காவலில் வைத்தனள். இதனை,

"தாழ்செறி கடுங்காப்பின் தாய்முன்னர் நின்சாரல்
ஊழுறு கோடல்போல் எல்வளை யுகுபவால்"[42]

என்பாள். இதில் 'கடுங்காப்பின்' என்ற குறிப்பைக் கொண்டு அன்னைத் தலைவியை இற்செறித்ததும், தாயின்முன் நின்ற தலைவியின் கைவளைகள் கழன்று விழலாயின என்றதன்வழித் தலைவியின் ஆற்றாமையும் அறியப் பெறுகிறது.

உலோச்சனார்

இவர் நெய்தல் நிலத்தை மிகச் சிறப்பாக அமைத்துப் பாடவல்லவர். "சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப் பாடியிருத்தலானே அவன் காலத்தவரென்று தெரிகிறது. நற்,38–இல் கடற்கரையின் கணுளதாகிய காண்டவாயில் என்னும் ஊர் இவராற் கூறப்பட்டுள்ளது. அதனைக் காண்டவாயில் எம் அழுங்கலூர் என்று பாராட்டிக் கூறியிருத்தலானே இவர் அவ்வூரிலிருந்தவர்

போலுமென்று கருதவுமாம். கடலிலுள்ள பலவகை மீன்களையும் உவமை முதலாய்வற்றொடு தெளிவாகக் கூறுதலால் இவர் பரதவர் மரபினர் போலும்"[43] என்பர். இவர் இற்செறித்தல் துறையில் ஒன்பது[44] பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்கள் நற்றிணை[45], அகநானூறு[46] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் நற்றிணை, தோழி கூற்று ஆகியவற்றில் மிகுந்துள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் நெய்தலாகும்.

தலைவனின் வருகையும் அலரும்

தோழி தலைவனிடம் பகற்குறி வந்து மீள்வானை இரவுக்குறி வரச்சொல்வது போன்று கூறி, பிறகு அதனையும் மறுத்து வரைவுகடாவுவதாக அமைந்துள்ளது.

தலைவன் தலைவியைச் சந்திப்பதற்குக் காலைப்பொழுதில் சென்றான். தலைவனே! பகற்பொழுது கூடற்காகதது என்பதை உணராமல் நீ வந்துள்ளாய். இவ்வாறு வருவது இனிதாயினும், நினது வருகையினை ஊரினர் அறிந்தால் அலர் உண்டாகும். அவ்வலரினால் தலைவி இற்செறிக்கப் பெறுவாள் என்பதை,

"பகலும் வருதி பல்பூங் கானல்
இந்நீ ராகலோ இனிதால் எனின்இவள்
அலரின் அருங்கடிப் படுகுவள்"[47]

என்று தோழி சுட்டுவள். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'பகலும் வருதி' என்பது தலைவனின் வருகையையும், அதன் காரணமாக அலர் தோன்றியதை 'அலர்' என்ற சொல்லாட்சியும் உணர்த்தி நிற்கின்றன. 'அருங்கடிப் படுகுவள்' என்பது தலைவியை இற்செறிக்க இருக்கும் நிலையைச் சுட்டுமுகத்தான் அமைந்துள்ளது.

இவரின் அகநானூற்றுப் பாடலில் தலைவன் தலைவியுடன் காதல் மேற்கொள்வான். இதனை அறிந்த ஊர்மக்கள் அலர் தூற்றுவர். அதனைக் கேட்ட அன்னையும் பகலும் இரவும் குதிரை பூட்டப்பட்ட தேர் வருதல் உண்மை என்று எண்ணித் தலைவியை இல்லின்கண் காவற்படுத்தினள் என்பதைத் தோழி,

"கொடிது அறிபெண்டிர் சொற்கொண்டு அன்னை
கடிதுகொண் டனளே தோழி பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணற் கேட்குமோர் தேருண்டு எனவே"[48]

எனச் சுட்டுவாள். இதில் குறிக்கப்பெற்றுள்ள "வலவன், தேருண்டு என்ற குறிப்புக்களைக் கொண்டு களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன் பன்முறைத் தேரில் வந்ததும், தலைவனின் இத்தகைய வருகை ஊரில் அலர் எழுவதற்குக் காரணமாக அமைந்ததும் அறியப்பெறுகின்றது. 'அன்னை கடிது கொண்டனள்' என்ற தொடர் அன்னைத் தலைவியை இற்செறித்ததைக் குறிப்பால் உணர்த்தி நிற்கின்றது.

அம்மூவனார்

அம்மூவனார் நூற்று இருபத்து ஏழு அகச்செய்யுட்களின் ஆசிரியர் ஆவார். "அகத்திணைப் பாட்டு எண்ணிக்கையில் இரண்டாமவராக இலங்குபவர். புறந்தொழா மாந்தர் என்பதுபோல இவர் புறப்பாட்டு யாதும் பாடியதில்லை. வரலாற்றுக் குறிப்பு இவர் பாடல்களில் சாலச் சிறிது. களவில் (82), கற்பில்(45), பலதுறை பற்றியும், பலமாந்தர்கள் பற்றியும் பாடலாக்கிய விரிவுச் சிறப்பு உடையவர்

அம்மூவனார். நற்றிணை(10), குறுந்தொகை(11), ஐங்குறுநூறு(100) அகநானூறு(16)"[49] ஆகியவற்றில் இவரது பாடல்கள் காணப்பெறுகின்றன.

இற்செறித்தலில் அம்மூவனார் எட்டுப் பாடல்களைப்[50] புனைந்துள்ளார். அவைகள் குறுந்தொகை[51], ஐங்குறுநூறு[52] முதலானவற்றில் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், தலைவி கூற்றிலும் மிகுந்துள்ளன. அனைத்துப் பாடல்களும் நெய்தல் திணையாகும்.

தலைவியின் வேறுபாடு

இவரின் குறுந்தொகைப் பாட்டாவது காப்புமிகுதிக்கண் சொல்லி வரைவு கடாயஅது ஆகும்.

புன்னையின் நிழலில் தலைவியும் தோழியும் நண்டினை அலைத்து விளையாடினர். அப்பொழுது தலைவன் தலைவியைக் கூடிப் பிரிந்தான். அதனால் தலைவியின் மேனி பசலை பாய்ந்ததை,

"தொன்னிலை நெகிழ்ந்த வளைய ளீங்குப்
பசந்தனள் மன்னென் தோழி யென்னொடும்
இன்னிணர்ப் புன்னையம் புகர்நிழற்
பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே"[53]

என்று குறிப்பர். இதற்கு "அஞ்ஞான்றே பசந்தவள் மேலும் மேலும் மெலிந்து புறத்தார்க்குப் புலப்படும்படி வேறுபட்டாள். இனி அன்னையால் இற்செறிக்கப்படுவாள் என்பது குறிப்பு"[54] என்பர்.

இக்கருத்தின் அடிப்படையில் வளையல் ஈங்குப் பசந்தனள் என்ற தொடரைக் கொண்டு தலைவியின் வேறுபாட்டினை அன்னை அறிந்ததன் காரணமாகத், தலைவி இற்செறிக்கப்படுவது குறிப்பால் விளங்கும். இப்பாடலில் வரைவு கடாயதற்கான குறிப்பு எதுவும் வெளிப்படையாகச் சுட்டப்பெறவில்லை.

தலைவனின் வருகை

அம்மூவனாரின் இப்பாடல் தலைவி கூற்றாக அமைகிறது. இஃது இற்செறிப்புண்ட பின்னும் வரைந்துகொள்ள நினையாது தலைமகன் வந்தானாக அதனை அறிந்து தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது என்பதாம்.

கடற்கரையானது மணல் செறிந்ததாகக் காணப்படுகிறது. இத்தகைய கடற்கரைக்கண் தலைவன் நம்மோடு கூடி ஆடினான். அத்தலைவன் நமது இல்லத்தின் புறத்தே வந்து நின்றனன். அவ்வில்லமானது அன்னையின் காவலுடன் கூடியது என்று தலைவி அறிவிப்பதை,

"நுண்மண லடைகரை நம்மோ டாடிய
தன்னந் துறைவன் மறைஇ
அன்னை யருங்கடி வந்துநின் றோனே"[55]

என்ற அடிகளின்வழி அறியலாம். இதனை "வரைந்து கோடலை நினையாது பண்டுபெற்று களவுக் கூட்டத்தையே இன்னும் விரும்புகின்றான் என்பது தோன்ற, அடைகரை நம்மோடாடிய துறைவன் என்றும் தான் கடந்து வருதற்கரிய காவலையுடைய இற்செறிப்புற்றமையின் வரைந்து எய்தினால் அன்றிக் கூட்டம் எய்தாது என வரைவுடன் படுத்துவாள் அன்னை அருங்கடி என்றும் கூறினாள்"[56]

என்பர். இப்பாடலில் இடம்பெற்றுள்ள அன்னை அருங்கடி என்பதைக் கொண்டு அன்னை தலைவியை இற்செறித்ததும் இதன்வழித் தலைவனை வரைவுடன் படுத்தியது குறிப்பாலும் அறியப்பெறும்.

ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்

இற்செறித்தல் துறையில் ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் மொத்தம் ஐந்து ஆகும். இப்பாடல்கள் அனைத்தும் நற்றிணையின்கண் அமைந்துள்ளன. ஆசிரியர் பெயர் குறிக்கப்பெறாத பாடல்கள் அனைத்தும் தோழி கூற்றாக[57] அமைந்துள்ளன. இப்பாடல்களில் நெய்தல் திணை மிகுதியாகும்.

காப்பின் கடுமை

நற்றிணைத் தோழி தலைவியின் காவல்மிகுதியைக் கூறுங்கால் பேரூர் துஞ்சுகின்றது. விழித்திருப்பவர்கள் யாருமில்லை. காற்றுக் கடுகியடிக்க மழை பெய்வதால் காவல் நாய்களும் ஒடுங்கின. இதனையெல்லாம் எண்ணித் தலைவன் வரவுகுறித்து மகிழ்வாமெனில் அஃது இயலாதபடி படுக்கையறையைச் சுற்றிக் காவல் மிகுந்தது. அதன் மேலும் ஊர் காப்போர் காப்புடை வாயிலை நன்கு காத்துக் கொள்மின் என்று கூறுவது போன்று தம்முடைய மணியை ஒலிக்கின்றனர். அதனால் யான் இறந்துபடும் நாள் இன்றுதான் போலும்[58] என்கிறாள்.

இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள 'பல்பூஞ்சேக்கை அயலும் மாண்சிறை யதுவே' என்பது தலைவி இற்செறிக்கப் பெற்றுள்ளதையும், இன்றுகொள் அளியேன் பொன்றும் நாளே என்றது தலைவியின் ஆற்றாமையையும் குறித்து நின்றன. தோழி தலைவனைக் கடியும் இயல்புடையளாகலின் தலைவன் விரைந்து வரையுமாற்றான் தலைவியின் ஆற்றாமை தோழி கூற்றில் விளக்கப் பெற்றுள்ளது.

நான்கு பாடல்கள் பாடிய புலவர்

நான்கு பாடல்கள் பாடிய புலவர் வரிசையில் மருதனிளநாகனார் குறிக்கத்தக்கவர்.

மதுரை மருதனிளநாகனார்

"எழுதுவோர் மிகையால் இவர் பெயர் மதுரைப் பூதனிளநாகனெனவும், மருதனிளநாகனெனவுங் காணப்படும். இவர் சிவபெருமான் திரிபுரமெரித்ததை விதந்து கூறியுள்ளார். திருச்செந்தூர் முருகக்கடவுளைப் பாராட்டிக் கூறியுளர். இவர் ஒவ்வொரு நிலங்களினுங் கூறுங் கற்பனைகளும், உள்ளுறைகளும், வெளிப்படை யுவமங்களும் படிப்போர் மனத்தைக் கவர்வனவாகும். இவர் ஐந்நிலங்களிலும் பலகாலுஞ் சென்று பழகி அவற்றினியல்பை நன்கறிந்து சிறிதும் மாறுபாடின்றித் திணைக்கேற்ற பொருள்களைப் புலப்படுத்திப் பாடுந்தன்மையராக விளங்கினவர்"[59] என்பர்.

இற்செறித்தல் துறையில் இவர் பாடிய நான்கு பாடல்களும்[60] நற்றிணையிலும்[61] அகநானூற்றிலும்[62] இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் தோழி கூற்றாகும்[63]. இவரது மூன்று பாடல்கள் குறிஞ்சித் திணையாகவும்[64] ஒருபாடல் மட்டும் நெய்தலாகவும்[65] அமைந்துள்ளன. இவரது பாடல்கள் அகநானூற்றிலும், குறிஞ்சித் திணையிலும் மிகுந்துள்ளன.

களவொழுக்கம் அலராதல்

களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன், தலைவியைச் சந்திப்பதற்குப் பகற்குறியில் வந்தனன். ஆனால் தலைவியைச் சந்திக்க இயலாமல், பலநாளும் வருந்தி மீண்டு சென்ற தலைவனிடம்,

"சில்செவித் தாகிய புணர்ச்சி அலரெழ
இல்வயின் செறித்தமை அறியாய்
வருமுலை வருத்தா அம்பகட்டு மார்பில்
தெருமரல் உள்ளமொடு வருந்தும் நின்வயின்"[66]

என்பாள் தோழி. இப்பாடலில் குறிக்கப் பெற்றுள்ள 'இல்வயின் செறித்தமை' என்ற தொடர், களவொழுக்கம் அலராகி வெளிப்பட்ட நிலையில், தலைவியைக் காவலில் வைத்துப் பாதுகாத்ததை உணர்த்தி நிற்கின்றது. இதன்மூலம் தலைவியின் மீதுள்ள கட்டுப்பாடும் புலனாகிறது. பகற்குறி வந்து கண்ணுற்று நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப் பறிவுறீஇயது என்ற துறைக்குறிப்பு இப்பாடலுக்கு வெளிப்படையாகப் பொருந்தும்.

மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள்

இற்செறித்தல் துறையில் மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள் வரிசையில் ஓரம்போகியார், குடவாயிற் கீரத்தனார், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் ஆகியோர் குறிக்கத்தக்கவர்கள்.

ஓரம்போகியார்

"ஏடெழுவோர் பிழையால் இவர் பெயர் ஓரம்போதியாரெனவும் கரம் போகியாரெனவும், தரம்போகியாரெனவுங் காணப்படுகிறது. மருதத்திணையை

விரித்து அந்நிலத்துள்ள கருப்பொருள்களைத் திணைக்கேற்ற பொருள்களாகக் கொண்டு உள்ளுறையுவமம். இறைச்சி முதலானவற்றை யமைத்துப் பலவகைச் சத்துவமும் புலப்படக்காட்டிப் பரத்தையிற் பிரிவு முதல் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறும் ஆற்றலுடையவர். இவர் பாடியவற்றுட் புறமொன்றொழித்து ஏனைப் பாடலனைத்தும் மருதத்திணையே"[67] என்பர்.

ஓரம்போகியாரின் மூன்று பாடல்களும் ஐங்குறுநூற்றில்[68] இடம்பெற்றுள்ளன. இம்மூன்றும் தோழி கூற்றாகவும், மருதத்திணையாகவும்[69] அமைந்துள்ளன.

தலைவியின் வேறுபாடு

இவரின் ஐங்குறுநூற்றுப் பாடலாவது இற்செறித்த விடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு இது தெய்வத்தினால் ஆயிற்று என்று தமர் வெறியெடுப்புழி அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது என்பதாகும்.

தலைவியின் வேறுபாடு அறிந்த நிலையில் அவளை இற்செறிப்புச் செய்வது வழக்கம். ஆனால் ஓரம்போகியார் இற்செறித்த பின் ஏற்படும் உடல் வேறுபாட்டினைக் குறிப்பிடுகிறார். தலைவியின் மெல்லிய தோள்கள் பசந்தன. அதனால் அவளது தொடி நெகிழ்ந்தது. இந்நோய்க்குத் தெய்வம்தான் காரணம் என்று எண்ணிய நிலையில், தோழி அறத்தொடு நின்று செவிலிக்கு உண்மை செப்பும்பொழுது,

"கொண்டொடி நெகிழச் சாஅய்
மென்றோள் பசப்ப தெவன்கொ லன்னாய்"[70]

என்பாள். இதற்கு இவள் வேறுபாடு தலைமகன்பால் உளதாகிய நட்புக் காரணமாக நேர்ந்தது எனப் பட்டாங்கு மொழிந்து அறத்தொடு நின்றாளாம்"[71] என்பர். தலைவனால் இந்நோய் ஏற்பட்டது என்று கூறியவழி அத்தலைவனுடன் தலைவியை இணைத்து வைக்க வேண்டும் என்று தோழி செவிலியிடம் அறத்தொடு நின்றது குறிப்பல் உணரப்படுகிறது. இப்பாடலில் இடம்பெற்றுள்ள தொடி நெகிழ, மென்தோள் பசப்ப, என்ற குறிப்புக்களைக் கொண்டு தலைவி இற்செறிக்கப்பட்ட நிலையில் தலைவனைக் காணமுடியாமல் வருந்தியது அறியப்பெறுகிறது.

குடவாயிற் கீரத்தனார்

கீரத்தனார் எனப்படுபவரும் இவரே. குடவாயில் சோழநாட்டின் கண்ணதாகிய தஞ்சாவூர்ச்சில்லா நன்னிலந் தாலுகாவைச் சார்ந்ததொரு பெரிய ஊர். இவர் தம்மூரைத் தண்குடவாயிலன்னோள், (அகம்;44) கொற்றச் சோழர் குடந்தை வைத்து (அகம்;60) தேர்வண் சோழர் குடந்தை வாயில் (நற்;379)எனச் சிறப்பித்துக் கூறாநிற்பர். இவர் பெரும்பாலும் பாலைத்திணையையும், சிறுபான்மை மற்றைத் திணைகளையும்[72] புனைந்து பாடியுள்ளார்.

இற்செறித்தல் துறையில் இவர் பாடிய பாடல்கள் நற்றிணை[73], அகநானூறு[74] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களில் இரண்டு பாடல்கள் தோழி கூற்று, நெய்தல் திணையாகவும்[75] ஒரு பாடல் மட்டும் தலைவி கூற்று குறிஞ்சித் திணையாகவும்[76] அமைந்துள்ளன. இவரது பாடல்கள் நெய்தல் திணையிலும் தோழி கூற்றிலும், நற்றிணையிலும் மிகுந்துள்ளன.

காப்பின் கடுமை

கீரத்தனாரின் அகநானூற்றுப் பாட்டு தலைமகற்குத் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது ஆகும். இப்பாடல் நெய்தல் திணையில் அமைந்துள்ளது.

மீன் பிடிக்கும் தொழிலைத் தலைவியின் தந்தை மேற்கொண்டுள்ளான். அவனுக்குத் தலைவி வெண்சோற்றினையும், புளிக்கறியினையும் இட்டுக் கொண்டு செல்கிறாள். அத்தலைவி சேரனது தொண்டி போன்ற அழகுடையவள். தலைவன் அவளது வளையலைத் தழும்புறும்படி அழுத்தினான். இதனால் தலைவி சுற்றத்தாரோடு வண்டல் விளையாட்டினை மேற்கொண்டாலும், உன்னை (தலைவனை) நினைத்து மேனி வாடினாள். இதனை அன்னை அறிந்து கொண்டால் காவலில் வைத்துவிடுவாள் என்கிறாள். இதனை,

"........... உயங்குநின் ஒளியெனக்
கொன்னுஞ் சிவப்போள் காணில் வென்வேல்
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
அருங்கடிப் படுக்குவள் அறனில் யாயே"[77]

என்பர். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'அருங்கடிப் படுக்குவள் என்பதைக் கொண்டு தலைவியை அன்னை இற்செறித்ததும் 'அறனில் யாயே' என்றவழித் தலைவியை இற்செறித்த தாயைக் கடிந்து கூறியதும், 'உயங்குநின் ஒளியென' என்ற குறிப்பைக் கொண்டு தலைவியின் மேனி வாடாவண்ணம் ஏற்றதொரு வழியாகிய வரைவினை மேற்கொள்வாயாக எனக் குறிப்பால் கடாவியதும் பெறப்பெறுகிறது.

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

அறுவை வாணிகன் -புடவை வியாபாரி. இவர் வைசியர். பெரும்பாலும் குறிஞ்சி, முல்லைகளையும் சிறுபான்மை பாலையையுஞ் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் 344 ஆம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றும், அகத்தில் ஆறும், புறத்திலொன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாகப் பத்துப்பாடல்கள் கிடைத்திருக்கின்றன[78] என்பர்.

இற்செறித்தல் துறையில் இவரது பாடல்கள் நற்றிணை[79] அகநானூறு[80] ஆகியவற்றில் காணப்பெறுகின்றன. இவரது பாடல்கள் மூன்றும் குறிஞ்சித்திணையிலும், தோழி கூற்றிலும்[81] அமைந்துள்ளன.

அன்னை ஐயுறுதல்

தலைவன் களவொழுக்கம் மேற்கொள்ள அரிய வழியினைக் கடந்து வந்தான். காட்டு மல்லிகை மலரும், கூதள மலரும் சேரத்தொடுத்த கண்ணியை அணிந்தவன். தலைவன் உடல்பூரிக்கும் மகிழ்ச்சியுடன் தலைவியின் மனையின்கண் புகுந்தான். தலைவியின் அன்னையோ தலைவனை முருகன் என்றெண்ணிப் புகழுரை கூறிப் பராவினாள்.

"இதற்கு முருகென உணர்ந்து அன்னை பரவும் என்றமையால் முருகனால் நமக்குத் தீங்கு உண்டாகும் என்று அஞ்சி இனி இற்செறிப்பாள்"[82] என்பர். இப்பாடலில் தலைவன் தலைவியின் இல்லத்தில் புகுந்ததால், தலைவி இற்செறிக்கப் பெறுவாள் என்பது குறிப்பால் புலப்படும்.

இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள்

இற்செறித்தல் துறையில் இரண்டு பாடல்கள் பாடிய புலவர்களில் நக்கீரர், பரணர் ஆகியோர் இடம்பெறுவர்.

நக்கீரர்

“இவர் மதுரை நக்கீரரெனவும், கணக்காயனார் மகனார் நக்கீரரெனவும் கூறப்படுவர். இயற்பெயர் கீரனார்; ந–சிறப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல் ஒரு காலத்துச் சங்கப் புலவரில் இவர் தலைமை பெற்றிருந்ததுமுண்டு. இறையனார் அகப்பொருளுக்கு உரை செய்தவர் இவரே. திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை இவ்விரண்டையும் இவரே இயற்றியருளினார். எல்லா நிலங்களினுஞ்சென்று அவற்றின் இயற்கையமைப்பை ஆராய்ந்து அவ்வந் நிலங்களிலே பிறந்து வளர்ந்தவரினும் வல்லவராய்ச் செய்யுளியற்றும் ஆற்றல் வாய்ந்தவர்”[83] என்பர்.

இவர் இற்செறித்தல் துறையில் நற்றிணை[84], குறுந்தொகை[85] ஆகியவற்றில் பாடல்கள் புனைந்துள்ளார். இவற்றில் தோழி கூற்று, நெய்தல் திணையிலும்[86] தலைவி கூற்று, குறிஞ்சித் திணையிலும்[87] அமைந்துள்ளன. இவர் யார் கூற்றையும் மிகுதியாகச் சுட்டாமல், சமமாகத் தலைவிக்கும் தோழிக்கும் பங்கிட்டுள்ளார்.

தலைவியின் வேறுபாடு

நக்கீரரின் தோழி பகற்குறி வந்தொழுகும் தலைவனிடம் பேசும்முகமாக அமைந்துள்ளது. களவொழுக்கம் தடைபட்டதால், தலைவியின் வளையல்கள் கழன்றன. இதனைக் கண்ணுற்ற அன்னைத் தலைவியைக் காவலில் வைத்தனள் என்பதை,

"...... கொண்க செறித்தனள் யாயே

......

மருங்கூர் பட்டினத்து அன்னவிவள்

நெருங்கோ் எல்வளை ஓடுவ கண்டே"[88]

என்ற அடிகள் சுட்டுகின்றன. இதில் யாய் செறித்தனள் என்பதற்கு அன்னை இவ்வேறுபாடு முருகு அணங்கால் ஆகியது போலுமென உட்கொண்டு இல்லின்கண்ணே செறித்துப் புறத்தேகவிடாது காவல் செய்வாளாயினள்[89] என்று உரை கூறுவர். இக்கருத்தின் அடிப்படையில் இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'செறித்தனள்' என்ற சொல்லாட்சி தலைவியை இற்வயிற் செறித்ததையும், கொண்க என்பது தலைவனையும் குறிக்கும்முகத்தான், தோழி தலைவனிடம் செறிப்பறிவுறீஇயது என்று கொள்வது பொருத்தமாகும்.

பரணர்

"இவர் கடைச்சங்கப் புலவருளொருவர். கபிலரொடு நட்புடையராயிருந்தவர். 'பரணன் பாடினன் மற்கொல்' என ஔவையாராற் புகழ்ந்து பாடப்பெற்றார். இவர் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றினும் யாரையேனும் புகழாமலும் அக்காலத்து நிகழ்ந்த கதைகளினொன்றைப் புகுத்தாமலும் பாடுவதில்லை"[90] என்பர்.

இவர் இற்செறித்தல் துறையில் பாடிய இரண்டு பாடல்களும் குறுந்தொகையில்[91] காணப்பெறுகின்றன. இவ்விரண்டினையும் குறிஞ்சித் திணையாகவும், தலைவனுக்கு ஒரு கூற்றினையும், தோழிக்கு ஒரு கூற்றினையும்[92] அமைத்துள்ளார்.

தலைவியின் வேறுபாடு

இவரது குறுந்தொகைப் பாட்டு தோழி செறிப்பறிவுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. தலைவியானவள் மாமை நிறமுடையவள். கருமையான கூந்தலைப் பெற்றவள். ஓரியின் காட்டில் பல்வேறு மலர்கள் மலர்ந்து மணம் பரப்புவது போல இத்தலைவியின் கூந்தலும் மணம் மிக்கதாக விளங்குவதை,

"கைவள் ளோரி கானந் தீண்டி
எறிவளி கமழு நெறிபடு கூந்தல்
மையீ ரோதி மாஅ யோள்வயின்"[93]

என்பர். இதற்கு ஓரியின் கொல்லியைச் சார்ந்த கானம் மழைவளம் பெற்றுப் பல்வேறு மலர்களும் மலர்ந்திருக்கப்பெறுதலாலே அக்கானத்தை அளாவி வருங்காற்று மணக்குமாறு போல மணக்கும் கூந்தல்[94] என்பர். இப்பொருளினைக் கொண்டு தலைவியியன் கூந்தலில் தோன்றிய மணத்தின் காரணமாகத் தலைவியைத் தாய் இற்செறிக்கலாம். இந்நிலையினைத் தோழி தலைவனுக்குக் குறிப்பால் உணர்த்தியதன்வழி செறிப்பறி வுறுப்ப என்பது பெறப்பெறுகிறது.

இப்பாடலில் இரண்டாவது அடியில் இடம்பெற்றுள்ள 'வாழிய நெஞ்சே' என்ற குறிப்பைக் கொண்டு தலைவன் தன் நெஞ்சிடம் கூறியது என்ற துறைக் குறிப்பினைக் கொள்வது பொருத்தமாகும். இப்பாடலில் இற்செறிப்புப் பற்றி நேரடியாகச் சுட்டப்பெறவில்லை.

ஒரு பாடல் பாடிய புலவர்கள்

நற்றிணையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், கலித்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள் எனப் பகுக்கப் பெற்றுள்ளனர்.

நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

நற்றிணையில் ஒரு பாடல் பாடிய புலவர்களின் வரிசையில் இருபத்து இரண்டு புலவர்கள் இடம்பெறுவர். அவர்கள் முறையே இளம்போதியார்[95], இளவெயினனார்[96], உரோடோகத்துக் கந்தரத்தனார்[97], ஐயூர் முடவனார்[98], ஔவையார்[99], காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்[100], கொள்ளம்பக்கனார்[101], கொற்றங் கொற்றனார்[102], சிறுமோலிகனார்[103], சீத்தலைச் சாத்தனார்[104], செங்கண்ணனார்[105], தங்கால் பொன்கொல்லன் வெண்ணாகனார்[106], தூங்கலோரியார்[107], நல்லூர் சிறுமேதாவியார்[108], நல்வேட்டனார்[109], பிரான்சாத்தனார்[110], பெருங்குன்றூர்கிழார்[111], பெருங்கௌசிகனார்[112], பொதும்பில்கிழார்[113], மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார்[114], மதுரைப் பெருமருதனிளநாகனார்[115], வினைத்தொழிற் சோகீரனார்[116] ஆகியோர் ஆவர். இவர்களது பாடல்களில் தோழிக்கு இருபது[117] கூற்றும் தலைவனுக்கு இரு கூற்றும்[118] வரையறுக்கப்பெற்றுள்ளன. இப்பாடல்களில் நெய்தல் திணை நான்கு பாடல்களிலும், மருதத்திணை ஒரு பாடலிலும், குறிஞ்சித் திணை பதினேழு பாடல்களிலும்[119] இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களில் தோழி கூற்றும் குறிஞ்சித்திணையும் மிகுதியாகும். துறைப்பொருத்தத்திற்காக ஆண்பாற் புலவராகிய

உரோடோகத்துக் கந்தரத்தனார் பாடலும், பெண்பாற் புலவராகிய ஔவையாரின் பாடலும் எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளன.

உரோடோகத்துக் கந்தரத்தனார்

இவர் கந்தரத்தன் என்னும் இயற்பெயருடையவர். உரோடோகம் ஊர். இவ்வூர்ப்பெயர் ஒரோடோகமெனவும், ஒரோடகமெனவும், உரோடகமெனவும் ஏடுகளிற் பலபடியாகப் பிறழ்ந்து காணப்படுகிறது. இப்பொழுது இவ்வூர் ஒரகடமென்று திரிந்து வழங்குகிறது. காஞ்சிபுரம் தாலுகாவில் உள்ளது. இவர் குறிஞ்சித் திணையையும் பாலைத்திணையையும் புனைந்து பாடியுள்ளார்[120] என்பர். இற்செறித்தலில் இவர் பாடிய பாடல் குறிஞ்சித் திணையாகவும் தோழி கூற்றாகவும் அமைந்துள்ளது.

தினை முதிர்ச்சி

இவரது பாட்டிற்கு இரண்டு துறைகள் வகுக்கப் பெற்றுள்ளன. முதல்துறையாவது புனமடிவுரைத்துச் செறிப்பறவுறீவயது ஆகும்.

இப்பாடலில் தந்தை பற்றிய செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. எமது தந்தை விதைத்த தினையைக் கொய்யவரும் கிளிகளை வெருட்டுதல் இனி இயலாது. ஏனென்றால் கொடிச்சியே! மனையகம் புகுவாயாக என்று கூறி நம்மவர் தினைக்கதிரைக் கொய்யத் தொடங்கினர். இதனால் தினைப்புனம் அழிந்த தன்மையையும், சிறிய புனத்துப் பெரிய மேற்கூரையுடைய கட்டுப்பரணில் தலைவி நின்ற நிலையையும் பார்ப்பதற்காகத் தலைவன் வருதல் இயலாது என்பதைத் தோழி,

"தந்தை வித்திய மென்றினை பைபயச்

சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ

குளிர்படு தையள் கொடிச்சி செல்கென"[121]

என்று சுட்டுகிறாள். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'கொடிச்சி செல்க' என்ற குறிப்பைக் கொண்டு தலைவியை வீட்டிற்குச் செல்வாயாக என்றதன்வழி அவளை இற்செறித்தது புலனாகும். எட்டாவது அடியில் இடம்பெற்றுள்ள 'காண வைகல்' என்பதைக் கொண்டு தலைவன் பகற்குறியில் தலைவியைச் சந்திக்க இயலாத நிலை ஏற்பட்டதை அறியலாம்.

ஔவையார்

நாடறிந்த தமிழ்ப் புலமையாட்டி ஔவையார். இவர் புறம்பாடுவதில் வல்லவர். இவர்தம் புறப்பாடல்கள் முப்பத்து மூன்று. அகப்பாடல்கள் இருபத்து ஆறு ஆகும். இதில் களவிற்கு உரியதாக எட்டுப் பாடல்களும், கற்பிற்கு உரியதாகப் பதினெட்டுப் பாடல்களும் குறிக்கப் பெற்றுள்ளன. ஔவையார் அகம்பாடுவதில் வல்லுநராகத் திகழ்ந்தார்[122] என்பர். ஔவையாரின் பாடல் நெய்தல் திணை, தோழி கூற்றாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

அன்னை ஐயுறுதல்

பகற்குறி, இரவுக் குறிகளில் தலைவன் தலைவியைக் காண வருகின்றான். இவர்களின் சந்திப்பினை ஊரார் அலர் தூற்றுகின்றனர். நீர்த்துறை போன்ற இடங்களுக்குச் சென்று வருவதால் அலர் அவளின் செவிகளில் எட்டுகிறது. மகள் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்துவிடுவாளோவென ஐயப்பட்ட செவிலி தலைவியை அருங்காவலில் வைக்கின்றாள். அதனால் தலைவியைக் காணமுடியாத சூழல் உண்டாகிறது.

தோழி மறைமுகமாகவும், நேரடியாகவும் வரைவு பற்றித் தலைவனிடம் கூறிவிட்டாள். ஆனால் தலைவன் திருமணம் பற்றிய சிந்தை இல்லாமல் இருந்தான். தலைவியைச் சந்திப்பதே குறிக்கோளென இருந்தான். இப்போது தலைவனை வரைவிற்கு ஆற்றுப்படுத்த எண்ணினாள் தோழி. தலைவியின் துன்பத்தினை ஒவ்வொன்றாக எடுத்துரைக்கிறாள் தோழி.

''ஆயமும் அழுங்கின்று யாயும் அஃது அறிந்தனள்

அருங்கடி அயர்ந்தனள் காப்பே"[123]

களவொழுக்கினை அறிந்த தாய் காவலில் வைத்துவிட்டாள். அதனால் தன் வயது ஒத்த தோழிகளோடு சென்று விளையாட இயலவில்லை. அதனால் தோழியர் கூட்டமே வருத்தத்தோடு உள்ளது. தோழியரோடு விளையாடுவதில்லையோ அதுபோல உன்னையும் சந்திக்க மாட்டாள் என்பதைத் தலைவனிடம் உணர்த்துகிறாள் தோழி.

குறுந்தொகையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள்

குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள் பதின்மூவர் அவர். இப்புலவர்களில் அஞ்சியாந்தையார்[124], இருந்தையூர்க் கொற்றன் புலவனார்[125], உறையூர் முதுகூற்றனார்[126], கண்ணனார்[127], கழார்க் கீரனெயிற்றியார்[128] கவை மகனார்[129], காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்[130], குப்பைக் கோழியார்[131], கூடலூர் கிழார்[132], சிறைக்குடி ஆந்தையார்[133], தும்பிசேர் கீரனார்[134], மதுரைப் பெருங் கொல்லனார்[135], வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்[136] முதலானவர்கள் இடம்பெறுவர்.

இவர்களது பாடல்களில் தலைவிக்கு நான்கு கூற்றுகளும், தோழிக்கு ஒன்பது கூற்றுகளும் பகுக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் நான்கு நெய்தலாகவும், ஒன்று மருதமாகவும், எஞ்சிய எட்டும் குறிஞ்சியாகவும்[138] அமைகின்றன. இதில் தோழி கூற்றும் குறிஞ்சித் திணையும் மிகுதியாகும். துறை விளக்கத்திற்காக அஞ்சியாந்தையார் என்கிற ஆண்பாற் புலவர் பாடலும், குப்பைக் கோழியார் என்ற பெண்பாற் புலவரின் பாடலும் பின்வரும் பகுதியில் விளக்கப் பெறுகின்றன.

அஞ்சியாந்தையார்

“இவர் அஞ்சில் என்னும் ஊரிலுள்ள ஆதன் தந்தையார். தொல்.எழுத்து 348–ஆம் சூத்திர விதிப்படி ஆதன் தந்தை ஆந்தையெனப்படுவதறிக. இவர் குறிஞ்சி, நெய்தல் வளங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியவனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன”[139] என்பர்.

தலைவனின் வருகையும் அலரும்

இவரது குறுந்தொகைப் பாட்டு பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப்பறிவுறீஇயது என்பதாகும். இப்பாடல் தோழி கூற்றில் அமைந்துள்ளது.

தோழியும் தலைவியும் கடலில் நீராடினர். கடற்கரைச் சோலையில் தங்கினர். மகளிர் கூட்டத்தோடு சேர்ந்து குரவைக்கூத்தாடி மகிழ்ந்தனர். இவர்களின் இத்தகைய செயல்களின்போது தலைவன் அயலார் போல வந்து

தழுவிச் சென்றான். தலைவன் இவர்களைவிட்டு நீங்காதிருந்தான். இதன்காரணமாக ஊரில் அலர் ஏற்பட்டது. இதனை,

"கடலுட னாடியும் கான லல்கியும்
தொடலை யாயமொடு தழுவணி யணிந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன்று"[139]

என்பர். தலைவன் தலைவியைச் சந்திக்க கடல், கானல் ஆகியவற்றிற்குச் சென்றதன்வழி பகற்குறிக்கண் தலைவன் வந்தது உணரப்பெறுகிறது.

அலர் எழுந்ததன் காரணமாகத் தாயானவள் நம்மை இற்செறிப்பாள் என்று தோழி கூறுகிறாள். இச்செயலுக்குத் தலைவன் காரணமானதை,

"....... உழையிற் போகான்
தான்தந் தனன்யாய் காத்தோம் பல்லே"[140]

என்பதன்வழி அறியலாம். யாய் காத்தோம்பல்லே என்ற குறிப்பைக் கொண்டு தலைவி இற்செறிக்கப்பட்டதும், எனவே தோழி செறிப்பறிவுறீஇயது என்று கொள்வதும் பொருத்தமாகும்.

குப்பைக்கோழியார்

"இவர்தாம் பாடிய குறுந்தொகையில் குப்பைக் கோழியின் தனிப்போரினைத் தலைவியுற்ற நோய்க்கு உவமித்த பெருஞ் சிறப்புப் பற்றிப் பாடினார்க்கும் அதுவே பெயராக வழங்கினர் போலும். இவர் பெண்பாலாராக இருக்கலாம்"[141] என்பர்.

தலைவியின் ஆற்றாமை

இவரது பாட்டு காப்பு மிகுதிக்கண் தோழி அறத்தொடு நிற்பவளாகத் தனது ஆற்றாமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே கூறியது.

இப்பாடலில் ஆசிரியர் தலைவியின் காமத்தினை நெருப்பாகச் சுட்டுகிறார். அக்காமம் என்னை வருத்துகிறது. அப்படி வருத்தும்பொழுது தலைவன்பால் செல்லலாம் என்று நினைத்தால் அவன் காண்பதற்கு அரியவனாக இருக்கிறான். அவனும் இனிமேல் என்னை எளிமையாகச் சந்தித்து, எனது துன்பத்தை அகற்றுதல் இயலாது. இதனை,

"சென்றுநாம் முயங்கற் கருங்காட் சியமே
வந்தளுர் களைதலை அவராற் றலரே"[142]

என்பாள். இதில் இடம்பெற்றுள்ள அருங்காட்சியமே என்ற சொல்லாட்சியைக் கொண்டு தான் (தலைவி) தலைவனைக் காண்பது அரிது என்றதன்வழி தலைவி இற்செறிக்கப்பட்டதை உணரலாம். இப்பாடலில் இடம்பெற்றுள்ள நாம் (3), யாம் உற்ற நோயே (8) என்ற சொற்களைக் கொண்டு தலைவி தன்னுள்ளே சொல்லியது பெறப்பெறுகிறது.

"உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார் என்ற பாடல்அடி இதில் இடம்பெற்றுள்ளது. இதற்கு இடை–இடம் அஃதாவது இற்செறிப்புண்ட இடம்"[143] என்பர். இக்கருத்தின் அடிப்படையில் இதில் இடம்பெற்றுள்ள பிரித்திடை களையார் என்ற குறிப்பைக் கொண்டு என்னை இற்செறிக்கப்பட்ட இடத்தினின்றும் நீக்கித் தலைவனுடன் சேர்த்து வைக்கக் கூடியவர் யாருமில்லை என்றவழி

ஆற்றாமை உணரப்படுகிறது. ஆகவே தோழியாவது அதைச் செய்ய வேண்டும் என்பது குறிப்பால் விளங்கும்.

கலித்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்

இற்செறித்தல் துறையில் கலித்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர் வரிசையில் நல்லந்துவனார் இடம்பெறுகிறார்.

நல்லந்துவனார்

"இவர் அந்துவனாரெனவும் ஆசிரியர் நல்லந்துவனாரெனவும் கூறப்படுவர். இவர் இயற்பெயர் அந்துவன். அந்துவன் பாடிய சந்துகெழி நெடுவரை என (அகம்:59) மதுரை மருதனிளநாகனார் கூறுமாற்றானுமறியலாம். அந்துவனெனப் பிறருமுளராகலின் இவர் நல்லந்துவனாரெனவும் அந்தணராதலின் ஆசிரியர் நல்லந்துவனாரெனவும் கூறப்பட்டார். ஆசிரியர் என அடைமொழி கொடுத்துக் கூறுவது அந்தணர்க்கேயன்றிப் பிறர்க்குக் கூறும் வழக்குப் பண்டில்லை. கலித்தொகை இவர் செய்ததாக அதன் பதிப்பாசிரியர் கூறாநிற்பர். இவர் அகப்பொருட் சுவையைக் கலிப்பாக்களாற் பலபடப்புனைந்து யாவரும் வியக்கப்பாடும் ஆற்றலுடையவர்"[144] என்பர்.

காப்பின் கடுமை

நல்லந்துவனாரின் பாட்டுக் காப்பு மிகுதிக்கண் ஆற்றாத தலைவி தலைவன்பாற் சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியதாகும் தலைவன் தனக்குக் காமநோயைக் கொடுத்தவன். கைவளையல்கள் கழலும்படி செய்தவன். இரவும் பகலும் உறக்கமின்றித் தடுமாறும் நிலையினைக் கொடுத்தவன் என்று

தலைவி பலவாறாகக் கூறிப் புலம்புகிறாள். இத்தகைய தலைவனைத் தலைவியின் நெஞ்சம் காணச் சென்றதை,

"......... நறுங்கானல்
காணாமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணாநோய் செய்தான்கண் சென்றாய்மற் றவனைநீ
காணவும் பெற்றாரோ காணாயோ மடநெஞ்சே"[145]

என்பாள். தலைவி செல்ல இயலாதநிலையில், அவளது நெஞ்சம் சென்றதன்வழித் தலைவியின் காப்பு மிகுதியும், கைவளையல்கள் கழலுதல் என்பது தலைவியின் ஆற்றாமையை உணர்த்தும் முகமாகவும் அமைந்துள்ளன.

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள் அண்டர்மகன் குறுவழுதியார்[146], நக்கண்ணையார்[147], நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்[148], பாண்டியன் அறிவுடை நம்பி[149], பேரிசாத்தனார்[150], பொதும்பில்கிழான் வெண்கண்ணனார்[151], விற்றூற்று மூதெயினனார்[152] ஆகிய எழுவர் ஆவர்.

இப்புலவர்களின் இற்செறித்தல் பாடல்களில் ஆறு தோழி கூற்றாகவும்[153] ஒருபாடல் மட்டும் தலைவி கூற்றாகவும்[154] அமைந்துள்ளது. இவற்றில் குறிஞ்சித்திணை ஆறு பாடல்களிலும்[155] நெய்தல் திணை ஒரு பாடலிலும்[156] பயின்று வந்துள்ளன. இப்பாடல்களில் தோழி கூற்றும், குறிஞ்சித்திணையும் மிகுதியாகும். துறைப்பொருத்தத்திற்காக ஆண்பாற் புலவராகிய அண்டர்மகன் குறுவழுதியார்

பாடலும், பெண்பாற் புலவராகிய நக்கண்ணையாரின் பாடலும் விரிவாக விளக்கப் பெறுகின்றன.

அண்டர்மகன் குறுவழுதியார்

“இவர் கடைச்சங்க மருவிய புலவர். இப்புலவன் பொதுவனாகப் பெயரினால் தோன்றுகிறது. ஆயினும் வழுதியென்பதால் பாண்டியர் வம்சத்தவனாக இருத்தல் கூடும்”[157] என்பர். இவரின் பாடல் நெய்தல் திணை, தோழி கூற்றாகும்.

தலைவியின் வேறுபாடு

இவரது பாட்டுப் பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து, செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது ஆகும்.

களவு பற்றிய ஊராரின் பழிச்சொல்லே அலர் எனப்பட்டது. ஆனால் அவ்வலர் தலைவன் தலைவி இருவரின் சந்திப்பையும் பார்ப்பதால் மட்டும் ஏற்பட்டதல்ல. களவின் இடையீடு தலைவியின் உடலைப் பசலை நோய்க்கு உட்படுத்த, அதுவும் அலரின் மற்றொரு காரணமாய் அமைகிறது.

"பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
ஆகத் தரும்பிய சுணங்கும் அம்புவிடக்
கண்ணுருத் தெழுதரும் முலையும் நோக்கி
எல்லினைப் பெரிதெனப் பன்மாண் கூறி"[158]

என ஊரலருக்குக் காரணம் கூறப்பெறுகின்றது.

தலைவியின் உடல் வேறுபாடு கண்ட அன்னை நீ பெரிதும் அழகுடையை என்று பன்முறை கூறி அவளைத்தழுவி, நெடிது நினைந்து அரிய காவலில் வைத்தனள் என்ற செய்தி காணப்பெறுகிறது. இப்பாடலின் ஆறாவது அடியில் இடம்பெற்றுள்ள 'அருங்கடிப் படுத்தனள் யாயே' என்ற தொடரைக் கொண்டு தாய் தலைவியை இற்செறித்ததும், பதின்மூன்றாவது அடியில் குறிக்கப்பெறும். 'வாரார்கொல் எனப் பருவரும்' என்ற தொடரைக் கொண்டு, தலைவன் வாராரோ எனத் தலைவி வருந்ததும் அறியப்பெறும். ஆகவே அவளது வருத்தம் நீங்கும் பொருட்டு ஏற்றதொரு வழியினைச் செய்வாயாக என்று தோழி வரைவு கடாயது குறிப்பினால் பெறப்பெறும்.

நக்கண்ணையார்

"இவர் பெண்பாலார். பெருங்கோழிநாய்க்கன் மகள். நக்கண்ணை எனவும் கூறப்படுவர். நக்கண்ணை சுலோசனை என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. அரசற்கு மகட்கொடை நேரும் வணிக மரபினர் இவர் நெய்தலையும், குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். சோழர் மரபின் அழிசியினது ஆர்க்காட்டைச் சிறப்பிக்கிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், அகத்திலொன்றும், புறத்தில் மூன்றுமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன"[159] என்பர்.

காப்பின் கடுமை

நக்கண்ணையாரின் பாட்டுத் தலைமகன் சிறைப்புறத்தனாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியதாகும். தலைவியைச் சந்திப்பதற்குத் தனியனாக வருவதற்குத் தலைவன் அஞ்சவில்லை. நானும் தனித்து இருத்தலை ஆற்றுவேன் அல்லன். அன்னையும் நடுநாள் இரவிலும் தூங்குதலை மறந்தனள் என்று தலைவி கூறுவாள். இதனை,

"பெருங்குளங் காவலன் போல

அருங்கடி அன்னையுந் துயின்மறந் தனளே"[160]

என்பாள். இதில் இடம்பெற்றுள்ள 'அருங்கடி' என்ற குறிப்பு, கடிய காவலில் தலைவியை வைத்துப் பாதுகாத்ததை உணர்த்துகின்றது. இப்பாடலில் இடம்பெறும் ‘அவனும்’ என்பது தலைவனையும் ‘யானும் ஆற்றேன்’ என்பது தலைவியையும் குறிப்பதால் துறைக்குறிப்பு வெளிப்படையாகப் பொருந்துகிறது.

இலக்கண மெய்ம்மைகள் பொருத்தம்

சங்கப் பாக்களின் துறைகளும், பாடற்கருத்துகளும் கருத்தில் கொள்ளப்பெற்று, இலக்கண மெய்ம்மைகளுடன் பொருத்தப் பெற்றுள்ளன.

3:2 - இலக்கண மெய்ம்மைகள் பொருத்தம்

சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப் பாடல்கள்
1. தொல்.களவு நூ;23	காப்பின் கடுமை கையறவரின் தோழி கூற்று நிகழ்த்தல்	நற்;11,27,53,57,60,61,63, 68,72,119,122,132,134, 147,175,178,182,191,194, 206,222,223,251,253,258 259,263,267,282,295,306, 313,317,339,344,354,363, 368,372,373,376,379,389. குறுந்;159,166,244,292,294, 303,353,392. ஐங்;28,60,93,186,194,210, 241,260,264,277,289,290. கலி;52. அகம்;2,12,20,28,60,90,112, 118,150,192,242,248,288, 272,302,358,368.
2. தொல்.களவு, நூ;21.	மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்குத் தலைவி கூறல்	குறுந்;57,141,161,246,261. ஐங்;111,113,115,224. அகம்;252.
	மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தலைவி நெஞ்சிடம் கூறல்	குறுந்;305,306,401. கலி;123.
3. தொல்.களவு நூ;21.	தமர் தற்காத்த காரணப் பக்கத்தினும் தலைவி கூறல்	நற்;287, குறுந்;246,161,305 ஐங்;113,115,224. அகம்;252.
4. தொல்.களவு நூ;12 பரிவுற்று மெலியினும்	தோழி இற்செறிப்பு அறிவுறுப்பத், தலைவன் ஆற்றானாய்க் கூறுதல்	நற்;44,319. குறுந்;199.

தோழி, தலைவியின் இணைபிரியாக் கேண்மையினள் ஆகலின், தலைவியைக் காப்பின் கடுமையிலிருந்து மீட்கும்பொருட்டுத் தலைவனிடம் உரையாடுகின்றாள். தலைவியைத் துன்பத்தில் இருந்து காப்பது தோழியின் பொறுப்பாதலின், தனது பொறுப்பை உணர்ந்து செயல்படும் தோழியின் மனநிலையைக் காப்பின் கடுமை கையற வரினும் என்கிற தோழி கூற்று மிகுதியாவது உணர்த்துகின்றது.

தலைவி கூற்றாக அமைபவற்றுள் பெரும்பாலான அவள் தோழிக்கு உரைப்பனவாக அமைந்துள்ளமையை நோக்க, தலைவி தோழியை இன்றியமையாத துணையாகவும், உணர்வு வெளியீட்டுக் களமாகவும், கொண்டமை புலனாகிறது. அச்சமும், நாணமும், மடனும் அமைந்த காரணத்தினால் தன் உயிர்த் தோழியைத் தவிர ஏனையோரை எதிரிட்டுப் பேசும் நெஞ்சுரம் அவளிடம் இல்லை. எனினும் தோழியை நோக்கியேனும் மனஉறுதி தோன்ற உள்ளத்தெழும் உணர்வுகளைத் தெள்ளத் தெளிவாக விண்டுரைக்கும் மனத்திட்பம் தலைவியிடம் உள்ளது. இந்நிலையில் மனைப்பட்டுக் கலங்கிய தலைவியின் மன உணர்வு தோழியிடம் வெளிப்படுகின்றது.

தலைவிக்கு இற்செறிப்பு நிகழ்வதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்பவன் தலைவன். தலைவியின் இத்துன்பத்திற்குத் தலைவனே முழுமையான காரணமாகையால், அவனைப் பற்றிய செய்திகள் இத்துறையில் கருத்தாழமிக்கதாக, அமையத் தலைவனிடமே மறைமுகமாகக் கூற்று நிகழ்த்துவதாலும் அவனது கூற்று மிகுதியாக அமைய வாய்ப்பில்லை என்று கூறலாம்.

இற்செறித்தலின் தனித்தன்மைகள்

இற்செறித்தல் – சொல்லாட்சி, இற்செறித்தலின் காரணங்கள், இற்செறித்தலின் களம், இற்செறிக்கும் முறை, இற்செறிக்கும் பொழுது ஆகியன இற்செறித்தல் துறைப் பாடல்களின் தனித்தன்மைகளாக அமைகின்றன.

இற்செறித்தல் –சொல்லாட்சி

இற்செறித்தல் என்பதை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் சொற்கள் உணர்த்தி நிற்கின்றன. தோழி கூற்றில் வெளிப்படையாக உணர்த்தும் சொற்கள் அருங்கடி, இல்லிடத்திற் செறிந்திருத்தல், சிறை, அருங்காப்பினள், செறித்தனள், நப்புறங் காக்கும், செறிப்பல், இல்வயின் செறித்தமை, கடுங்காப்பு, காப்பே காத்தோம்பல் என்பனவாகும்.

செலவொழிந்தனை, சென்றெனக் கூறாதோளே, அரியபோலக் காண்பேன், ஊர்வயின் மீள்குவம், காவல் விடாமை, கடுந்தனள், வெறுத்தல் (செறிதல்), கடிகொண்டனள், ஒழிந்தனள், எவன் இயங்குதி, நம்மவண், விடுநள் போலாள், தமரின் தீராள் என்பன தோழி கூற்றில் குறிப்பாக உணர்த்தும் சொற்களாகும்.

தலைவி கூற்றில் குறிக்கப்பெறும் அருங்கடி என்பது வெளிப்படையாகவும், அருங்காட்சி, அரியவாகுதல் என்பன குறிப்பாகவும் இற்செறித்தலை உணர்த்துகின்றன.

தலைவன் கூற்றில் மனைவையிற் பெயர்ந்தகாலை, காத்தோம்பல் என்பன வெளிப்படையாகவும், ஈண்டு வருந்த என்பது குறிப்பாகவும் இற்செறித்தலை புலப்படுத்துகின்றன. இச்சொற்களை பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

அட்டவணை 3:3 இற்செறித்தல் சொல்லாட்சி

வ.எ.	நூ.பெ.	பா. எ.	தோழி கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	147	செலவொழிந்தனை	12
2.	"	27	சென்றெனக் கூறாதோளே	12
3.	"	63	அருங்கடிப் படுப்ப	6
4.	"	68	இல்லிடத் திற்செறிந் திருத்தல்	2
5.	"	132	மாண்சிறை யதுவே	7
6.	"	194	ஒரு சிறை	7
7.	"	253	அருங்காப் பினளே	9
8.	"	258	செறித்தனள் யாயே	2
9.	"	259	அரியபோலக் காண்பேன்	8
10.	"	295	அருங்கடி காப்பே	4
12.	"	223	அருங்கடிப் படுகுவள்	5
13.	"	313	ஊர்வயின் மீள்குவம்	8-9
14.	"	376	காவல் விடாமை	"
15.	"	182	நப்புறங் காக்கும்	3
16.	"	206	செறிப்பல்	9
17.	ஐங்	186	செல்லாதீமோ வென்றனள் யாயே	5
18.	"	194	கடுத்தனள் அன்னை	4

19.	"	260	பெறற்கரிது	2
20.	அகம்	2	வெறுத்தல் (செறிதல், மிகுதல்)	11
21.	"	2	அருங்கடி	14

வ.எ.	நூ.பெ.	பா. எ.	தோழி கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
22.	"	20	கடிகொண்டனள்	13
23.	"	60	செறிய அருங்கடிப் படுக்குவள்	14,15
24.	"	90	இல்வயின் செறித்தமை	5
25.	"	118	ஒழிந்தனள்	13
26.	"	150	அருங்கடிப் படுத்தனள்	6
27.	"	28	அரிதாகும்	-
28.	"	12	எவன் இயங்குதி	3
29.	"	288	காப்பே	3
30.	"	302	நம்மவண் விடுநள் போலாள்	
31.	குறுந்	294	காத்தோம் பல்லே	8
32.	"	392	தமரின் தீராள்	6
33.	"	48	கருங்காப்பின்	10

வ.எ.	நூ.பெ.	பா.எ.	தலைவி கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	குறுந்	305	அருங்காட் சியமே	3
2.	ஐங்	111	பிரிந்தும் வாழ்துமோ	4
3.	"	115	அன்னை அருங்கடி	4

4.	"	224	அரியவாகுதன்	5
5.	அகம்	252	அருங்கடி	14

வ.எ.	நூ.பெ.	பா.எ.	தலைவன் கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	44	மனைவயிற் பெயர்ந்த காலை	4
2.	குறுந்	294	யாய் காத்தோம்பல்லே	8
3.	"	342	இவள்ஈண்டு வருந்த	5

தொல்காப்பியர் தோழி கூற்றில் சுட்டிய காப்பின் கடுமை என்ற சொல்லாட்சியை 'கடுங்காப்பின்' என்ற பெயரால் மாற்றமின்றிச் சங்க இலக்கியம் சுட்டுகின்றது. தொல்காப்பியத்தில் சுட்டப்பெறாத இற்செறித்தல் என்ற பெயராட்சி சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெற்றுள்ளதை இல்லிடத்திற் செறிந்திருத்தல், இல்வயின் செறித்தமை என்பன உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் தலைவி கூற்றில் குறித்த 'தமர் தற்காத்த' என்பது சங்க இலக்கியத்தில் தோழி கூற்றில் 'தமரின் தீராள்' என்ற பெயரால் அழைக்கப்பெறுகின்றது. 'மனைப்பட்டுக் கலங்கி' எனத் தொல்காப்பியம் தலைவி கூற்றில் சுட்டியதை மனைவயிற் பெயர்ந்த காலை எனத் தலைவன் கூற்றில் சங்க இலக்கியம் அமைந்துள்ளது.

இற்செறித்தலின் காரணங்கள்

“இற்செறிப்பு இயற்கையின் நிகழ்ச்சியாலும், ஐயத்தின் விளைவாலும் நிகழும்”[161] என்பர்.

இயற்கை நிகழ்ச்சி

தினைமுதிர்ச்சியின் காரணமாகத் தலைவி இயல்பாக (இயற்கையாக) இற்செறிக்கப் பெறுவாள்.

ஐயத்தின் விளைவு

தலைவனின் வருகை, ஊரவரின் அலர், அவன் (தலைவன்) உறவால் தலைவியின் உள்ளத்திலும் உடலிலும் ஆற்றாமையால் ஏற்பட்ட மாற்றங்களைத் தாய் உணர்ந்த நிலை என்பன தலைவிமேல் ஏற்பட்ட ஐயத்தின் விளைவாகும். இக்காரணங்களைப் பின்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது.

3:4 சங்கப் பாக்களால் அறியலாகும் இற்செறித்தலுக்குரிய காரணங்கள்

வ.எ.	நூ.பெ.	பா.எ.	தினைமுதிர்ச்சி	பாடல் அடி
1.	நற்	44	 புனத்த நீடிலை விளைதினைக் கொடுங்குரல் நிமிரக் கொழுங்குரல் கோடல்	5-7
2.	"	57	செங்கோற் கொடுங்குரங் சிறுதினை வியன்புனம் கொய்பதங் குறுகுங் காலை	8-9
3.	"	122	கருங்காற் செந்தினை கடியும் உண்டன	2
4.	"	206	நன்னாள் வேங்கையும் மலர்கமா	7
5.	"	259	புலர்பதங் கொண்டன ஏனற்குரலே	10
6.	"	306	 கொடிச்சி செல்கென கொயல் தொடங்கினரே	3-4
7.	"	313	கொய்பதங் கொள்ளுநாங் கூஉந் தினையே	11
8.	"	389	வேங்கை யும்புலி ஈன்றன	1
9.	ஐங்	260	விளைந்தன தினையே	4
10.	"	289	பைங்குர லேனற் காவலுங் கடியுநர்	
11.	அகம்	2	வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன	16

12.	"	118	கிளிகடி பாடலும் ஒழிந்தனள்	13
13.	"	192	ஏனலும் இறங்குபொறை உயிர்த்தன	8
			<u>தினைக்காவல் தவறியமை:</u>	
14.	"	28	சிறுகிளி கடிதல் தேற்றாள் இவளெனப் பிறர்த் தந்து நிறுக்குவ ளாயின்	12-13

வ.எ.	நூ.பெ.	பா.எ.	தலைவனின் வருகை (நீங்காமை)	பாடல் அடி
1.	நற்	72	 கொண்கன் யான்யாய் அஞ்சுவல் எனினே தானே பிரிதல் சூழான்	5-7
2.	"	122	வரையகநாடன் வரூஉம்	6
3.	"	147	 பெருவரை நாடனை அறியலும் அறியேன் காண்டலும் இலனே	6-7
4.	"	191	 காமர் சிறுகுடி எல்லிவந் தன்றோ தேரெனச் சொல்லி	5-6
5.	"	223	பகலும் வருதி பல்பூங் கானல்	3
6.	"	363	 நின்னொடு சிலவிலங்கு எல்வளை ஞெகிழ அலவன் ஆட்டுவோள்	8-10
7.	"	368	 உம்மொடு ஆடினம்	3-4
8.	குறுந்	246	தேர்வந்து பெயர்ந்த தென்ப வதற்கொன் டொரு மலைக்கு மன்னை	4-5
9.	"	292	ஒருநாள் நகைமுக விருந்தினன் வந்தென	7
10.	"	294	தழையினும் உழையிற் போகான்	7
11.	ஐங்	60	கழனி ஊர துஞ்சுனை நெடுநகர் வருதி	
12.	ஐங்	186	பல்கால் வரூஉந் தேரென	4
13.	அகம்	20	வலவன் ஆய்ந்த வண்பரி நிலவுமணல் கொட்குமோர் தேருண் டெனவே	15-16
14.	"	242	செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்	6
15.	"	248	இல்வந்து நின்றோற் கண்டனள் அன்னை	14
16.	"	272	 நம் மனைவயிற் புகுதரும் மெய்ம்மலி யுவகையன் அந்நிலை கண்டு.....	11-12

			நெடுவேட் பரவும் அன்னை......	15
17.	ஐங்	115	 நம்மோ டாடிய தன்னந் துறைவன்	2-3
18.	நற்	194	குன்ற வெற்பனொடு நாம்விளையாட	8
19.	ஐங்	224	 நம்மோ டாடல் எளிய மன்னா லவர்க்கினி	3-4

வ.எ.	நூ.பெ.	பா.எ.	அலர் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	நற்	11	நொதுமல லேர்புரை தெள்ளிதின்	3
2.	"	63	கல்லென் சேரி......... அழுங்க லூரோ அறனின் றதனால்	3,5
3.	"	354	கௌவையாகின்றது ஐயநின் நட்பே	11
4.	"	175	சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச் சுடுவான் போல நோக்கும்	7-8
5.	"	191	அலரெழுந் தன்றிவ் வூரே	7
6.	"	263	ஊரலர் தூற்றும் கௌவையும்	3
7.	"	339	தோலாக் காதலர் துறந்துநம் அருளார் அலர்வது அன்றுகொல்	1-2
8.	குறுந்	294	முயங்கினன் செலினே அலர்ந்தன்று	4
9.	ஐங்	113	ஊரார் பெண்டென மொழிய வென்னை அதுகேட் டன்னா யென்றன ளன்னை	3-4
10.	அகம்	20	கவ்வை நல்லணங் குற்ற இவ்வூர்	11
11.	"	90	சில்செவித் தாகிய புணர்ச்சி அலரெழ	4
12.	"	118	பகல்வரிற் கவ்வை அஞ்சுதும்	6
13.	"	368	அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே	19

<u>அம்பல் காரணமாதல்</u>

1.	நற்	223	பெண்டிரும் உடைத்திவ் வம்பல் ஊரே	9

<u>தலைவியின் வேறுபாடு</u>

1.	"	11	மெய்சா யினையவர்	2
2.	"	27	கண்போற் பூத்தமை கண்டு	10
3.	"	57	மையீர் ஓதி மாணலந் தொலைவே	10
4.	"	175	அடுபால் அன்ன என் பசலை மெய்யே	9
5.	"	251	தளிரேர் மேனித் தொல்கவின் அழிய	7

6.	"	253	பெருங்கவின் எய்திய ...	9
7.	"	258	நெருங்கேர் எல்வளை ஓடுவ கண்டே	11
8.	"	263	பிறைவனப்பு இழந்த நுதலும் யாழநின் இறைவரை நில்லா வளையும்	1-2
9.	"	282	வளை நெகிழ நன்னுதல் பாய	1,3
10.	"	295	புறனழிந்து	2
11.	"	339	இருவேம் நீந்தும் பருவரல் வெள்ளம் அறிந்தனள் போலும் அன்னை	4-5
12.	"	368	பசலை பாய்தரு நுதலும் நோக்கி	7
13.	"	363	 எல்வளை ஞெகிழ சிலம்புஞெமிர்ந் தெனவே	9-10
14.	குறுந்	159	கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின	4
15.	"	303	தொல்நிலை நெகிழ்ந்த வளையள் ஈங்குப் பசந்தனள்	4-5
16.	"	305	கண்தர வந்த காம ஒள்ளரி என்புஉற நலியினும்	1-2
17.	ஐங்	28	கொண்டொடி நெகிழச் சாஅய் மென்றோள் பசப்பது	3-4
18.	"	93	தாதுண வெறுக்கைய வாகியிவள் போதவிழ் முச்சி யூதும் வண்டே	4-5
19.	"	194	நன்னுதல் இன்று மாஅல் செய்தென	3
20.	"	264	பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே	4
21.	"	277	பயப்ப நீத்தல் னமர்த்த கண்ணே	4-5
22.	அகம்	150	 பொன்னென ஆகத் தரும்பிய சுணங்கும் வம்புவிடக் கண்ணுருத் தெழுதரும் முலையும் நோக்கி படுத்தனள் யாயே	1-3,6
23.	"	192	 சுடர்நுதல் பொன்னேர் வண்ணம் கொண்டன்று	1-2
24.	"	302	சில்சுணங் கணிந்த செறிந்துவீங் கிளமுலை... பல்கால் நோக்கும் அறனில் யாயே	13-15
			 எல்வளை	
25.	"	242	நெகிழ்ந்த முன்கை நேரிறைப் பணைத்தோள் நல்லெழில் அழிவில்	13-15

26.	"	358	இன்னை யாகிய நின்னிறம் நோக்கி அன்னை வினவின ளாயின்	9-10
27.	கலி	123	செறிவளை நெகிழ்த்தான்	13

தலைவியின் உள்ள வேறுபாடு

1.	ஐங்	241	நாமுறு துயர நோக்கி அன்னை	1

திணைக்காவல் தவறிய நிலையிலும் தலைவி இயல்பாக இற்செறிக்கப் பெறுகிறாள். தலைவன் தலைவியை நீங்காது இருப்பதும் இற்செறித்தலுக்குக் காரணமாகிறது. தலைவியின் கவின் பெருகிய நிலையில் ஐயுற்ற அன்னை தலைவியை இற்செறித்ததும் மேற்கண்ட அட்டவணையின்வழிப் புலனாகிறது.

இற்செறித்தலின் களம்

இற்செறித்தலில் 'யாமம்' சிறப்பித்துக் கூறப்பெறுவதாலும், தினைமுதிர்ச்சி இற்செறித்தலுக்குரிய காரணமாக அமைவதாலும் இவைகளை முதற்பொருளாகவும்[162] கருப்பொருளாகவும்[163] கொண்டு இலங்கும் குறிஞ்சித்திணை இத்துறையின் களமாகிறது. தினை அறுவடைக்குப்பின் தலைவி ஊர்வயின் மீள்வதாலும்[164], மனைவயிற் பெயர்வதாலும்[165] இந்நிலையில் தலைவியைச் சந்திக்கத் தலைவன் சிறைப்புறம் வருவதாலும் தலைவியின் ஊர், மனை, சிறைப்புறம் (மனைப்புறம்) ஆகியன இத்துறையின் களங்களாக அமைகின்றன.

இற்செறிக்கும் முறை

தலைவியின் களவு வெளிப்பட்ட நிலையில் அன்னைத் தனது மகளைக் காவல் காக்கின்றாள். அந்நிலையில் அன்னை எப்பொழுதும் விழித்தவண்ணம்[166] (துயிலாமல்) செயல்படுவாள். அதுமட்டுமல்லாமல் ஒளிமிக்க பெரிய விளக்கினை ஏற்றி வைத்துப் பாதுகாத்ததையும்[167] சங்கப் பாக்கள் காட்டுகின்றன.

தலைவியானவள் இற்செறிக்கப்பெறும் இல்லத்தினை உரையாசிரியர் "வீடும், வலிய கதவுகளும், தாழக்கோலும், சுற்றுச் சுவர்களும் உடையதென்பாள் நல்லில் என்றாள்"[168] என்பர். இத்தகைய காவலையும் மீறித் தலைவி புறம்சென்றுவிடுவாளோ என்று ஐயுற்ற அன்னையானவள், தலைவியின் முதுகினைத் தழுவிக் கொள்வதையும்[169] சங்கப் பாக்கள் காட்டுகின்றன.

இற்செறிக்கும் பொழுது

தலைவன், தலைவியின் களவினை அன்னை அறிந்தநிலையில் இற்செறிப்பு நிகழ்கிறது. அன்னை தலைவியைக் காவலில் வைத்து இரவு முழுவதும் பாதுகாக்கின்றாள் என்றபோதிலும் இற்செறிக்கப்பெற்ற தலைவியைத் தலைவன் காணவரும் பொழுது, தலைவி துயிலாது இருக்கும் பொழுது, அன்னை உறங்காமல் விழித்திருக்கும் பொழுது என்று ஒவ்வொரு நிலையிலும் நடுஇரவாகிய 'யாமம்' என்பது சிறப்பாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணைப் புலப்படுத்தி நிற்கின்றது.

3:5 இற்செறிக்கும் பொழுது

வ.எ	நூ.பெ.	பா.எ.	இற்செறிக்கும் பொழுது	பாடல் அடிகள்
1.	நற்	61	அல்கல் - இரவு	1
2.	"	68	அரையிருள் நடுநாள்	8
3.	"	122	நாம நாள்ளிருள் (நடுயாமத்து இருள்)	5
4.	"	132	யாமங்	9
5.	"	141	நடுநாள் - இடை இரவு	7
6.	"	178	நள்ளென் யாமத்து	8
7.	"	191	எல் - இரவு	
8.	"	287	நள்ளென் கங்குற்	9

9.	குறுந்	141	நடுநாள் - இடை இரவு	7
10.	"	244	யாமம்	1
11.	"	246	பானாள் - இடை இரவு	3
12.	"	261	நள்ளென் யாமத்து	4
13.	அகம்	2	கங்குல் - இரவு	15
14.	"	20	இரவும்	14
15.	"	112	அரைநாள் கங்குல் - நடுநாள் இரவு	9
16.	"	118	நடுநாள்	9
17.	"	192	பால்நாள் - பாதி இரவு	8
18.	"	248	அல்கல் - இரவு	1
19.	"	252	பானாட் கங்குல்-நடுநாள் இரவு	11
20.	"	272	கங்குல்	2

எல், அல்கல், கங்குல் என்னும் சொற்கள் இரவுப் பொழுதினையும் நடுநாள், பானாள், அரைநாள் கங்குல் என்பன 'யாமம்' என்னும் பொழுதினையும் குறிக்கின்றன என்பதை மேற்கண்ட அட்டவணையின்வழி உணரலாம்.

தொகுப்புரை

தொல்காப்பியர் இற்செறித்தலைக் குறிக்க மனைப்பட்டுக் கலங்குதல், காப்பின்கடுமை, தமர் தற்காத்தல் என்ற சொற்களைக் கையாண்டுள்ளார். சங்க இலக்கியத்தில் துறைக்குறிப்பில் இச்சொல்லாட்சி செறிப்பறவுநீஇ, இற்செறிப்பு, காப்புமிகுதி என்று குறிக்கப் பெற்றுள்ளன.

இற்செறித்தல் பாடல்கள் நற்றிணையில் மிகுந்தும் கலித்தொகையில் குறைந்தும் காணப்பெறுகின்றன. இத்துறைப் பாடல்களை ஆண்பாற் புலவர்கள் மிகுதியாகவும், பெண்பாற் புலவர்கள் குறைவாகவும் இயற்றியுள்ளனர்.

குறிஞ்சித்திணையில் மிகுந்தும், நெய்தல், மருதத்திணையில் குறைந்தும் இற்செறித்தல் பாடல்கள் காணப்பெறுகின்றன. இத்துறைப் பாடல்கள் தோழி கூற்றில் மிகுதியாகவும், தலைவன் கூற்றில் குறைவாகவும் அமைந்துள்ளன.

இற்செறித்தல் துறையில் மிகுதியான பாடல்களைப் பாடியவர் கபிலர் ஆவர். இவரது பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், குறிஞ்சித் திணையிலும் தோழி கூற்றிலும் மிகுந்துள்ளன.

உலோச்சனாரின் இற்செறித்தல் பாடல்கள் நற்றிணையிலும், தோழி கூற்றிலும் மிகுதியாகும். இப்பாடல்கள் நெய்தல் திணையில் மட்டும் காணப்பெறுகின்றன.

அம்மூவனாரின் பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், தலைவி கூற்றிலும் மிகுதியாகக் காணப்பெறுகின்றன. இவரது பாடல்கள் நெய்தல் திணையாகும்.

இற்செறித்தல் துறையில் ஆசிரியர் பெயர் குறிக்கப்பெறாத ஐந்து பாடல்களும் நற்றிணையின்கண் அமைந்துள்ளன. இவையனைத்தும் தோழி கூற்றாகும். இப்பாடல்களில் நெய்தல் மிகுதியாகும்.

நான்கு பாடல்கள் பாடிய புலவர் வரிசையில் மதுரை மருதனிளநாகனார் மட்டும் இடம்பெறுகிறார். இந்நான்கு பாடல்களும் தோழி கூற்றாகும். இவரின் பாடல்கள் அகநானூற்றிலும், குறிஞ்சித் திணையிலும் மிகுந்துள்ளன.

இற்செறித்தல் துறையில் மூன்று பாடல்கள் பாடிய புலவர்களில் ஓரம்போகியார், குடவாயிற் கீரத்தனார், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் ஆகியோர் குறிக்கத்தக்கவர்கள். ஓரம்போகியாரின் மூன்று பாடல்களும் ஐங்குறுநூற்றில், தோழி கூற்றாகவும், மருதத்திணையாகவும் அமைந்துள்ளன.

குடவாயில் கீரத்தனாரின் பாடல்கள் நற்றிணையிலும், தோழி கூற்றிலும் நெய்தல் திணையிலும் மிகுதியாகும். மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரின் மூன்று பாடல்களும் குறிஞ்சித் திணையிலும், தோழி கூற்றிலும் அமைந்துள்ளன.

இத்துறையில் இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள் நக்கீரர், பரணர் ஆகியோர் ஆவர். இவரது பாடல்கள் நற்றிணையிலும், குறுந்தொகையிலும் இடம்பெற்றுள்ளன. யார் கூற்றையும் மிகுதியாகச் சுட்டாமல், தலைவிக்கும் தோழிக்கும் சமமாகப் பங்கிட்டுள்ளார். பரணரின் இருபாடல்களும் குறுந்தொகையிலும், குறிஞ்சித் திணையாகவும் அமைந்துள்ளன. இவரும் தலைவனுக்கும், தோழிக்கும் கூற்றுகளைச் சமமாகப் பங்கிட்டுள்ளார்.

நற்றிணையில் ஒரு பாடல்வீதம் பாடிய புலவர்களில் இருபத்து இரண்டு புலவர்கள் இடம்பெறுவர். இப்புலவர்களின் பாடல்களில் குறிஞ்சித்திணையும், தோழி கூற்றும் மிகுந்துள்ளன.

குறுந்தொகையில் ஒருபாடல்வீதம் பாடியோர் பதின்மூன்று புலவர்கள் ஆவர். இப்புலவர்கள் குறிஞ்சி, மருதம், நெய்தல் என்கிற மூன்று திணைகளிலும் பாடல்களைப் புனைந்துள்ளனர். இவர்களது பாடல்களில் குறிஞ்சித் திணையும், தோழி கூற்றும் கூடுதலாகச் சுட்டப்பெற்றுள்ளன.

கலித்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர் நல்லந்துவனார் ஆவர். இவரது பாடல் நெய்தலாகவும், தலைவி கூற்றாகவும் அமைந்துள்ளது.

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர் வரிசையில் எழுவர் குறிக்கத்தக்கவர். இவர்களது பாடல்களில் தோழி கூற்றும், குறிஞ்சித் திணையும் மிகுதியாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

தோழி தலைவியின் இணைபிரியாக் கேண்மையினள் ஆகலின் தலைவியைக் காப்பின் கடுமையிலிருந்து மீட்கும்பொருட்டுத் தலைவனிடம் உரையாடுகின்றாள். தலைவியைத் துன்பத்தில் இருந்து காப்பது தோழியின் பொறுப்பாதலின் தோழி தனது பொறுப்புணர்ந்து கூற்று நிகழ்த்துகிறாள். இதன்வழிக் காப்பின் கடுமை கையற வரினும் தோழி கூற்று மிகுதியாகிறது.

தலைவி கூற்றாக அமைபவற்றுள் பெரும்பாலானவை அவள் தோழிக்கு உரைப்பனவாக அமைந்துள்ளமையை நோக்க, தலைவி தோழியை இன்றியமையாத துணையாகவும், உணர்வு வெளியீட்டுக் களமாகவும் கொண்டமை புலனாகின்றது.

இந்நிலையில் மனைப்பட்டுக் கலங்கிய தலைவியின் மன உணர்வு தோழியிடம் வெளிப்படுகின்றது.

தலைவிக்கு இற்செறிப்பு நிகழ்வதற்கு முக்கியக் காரணமாகத் திகழ்பவன் தலைவன். தலைவியின் இத்துன்பத்திற்குத் தலைவனே முழுவதும் காரணமாகையால் அவனைப் பற்றிய செய்திகள் இத்துறையில் கருத்தாழமிக்கதாக அமைவதாலும், தலைவனிடமே மறைமுகமாகக் கூற்று நிகழ்த்துவதாலும் அவனது கூற்று மிகுதியாக அமைய வாய்ப்பில்லை என்று கூறலாம்.

இற்செறித்தல் என்ற சொல்லாட்சியை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் சொற்கள் உணர்த்தி நிற்கின்றன. தொல்காப்பியர் தோழி கூற்றில் சுட்டிய 'காப்பின்கடுமை' என்ற சொல்லாட்சியை 'கடுங்காப்பின்' என்ற பெயரால் மாற்றமின்றிச் சங்க இலக்கியம் குறிக்கின்றது. தொல்காப்பியத்தில் சுட்டப்பெறாத இற்செறித்தல் என்ற பெயராட்சி, சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெற்றுள்ளதை ‘இல்லிடத்திற் செறிந்திருத்தல்’, ‘இல்வயின் செறித்தமை’ என்பன உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் தலைவி கூற்றில் குறித்த ‘தமர் தற்காத்தல்’ என்பது, சங்க இலக்கியத்தில் தோழி கூற்றில் 'தமரின் தீராள்' என் பெயரால் அழைக்கப் பெறுகின்றது. 'மனைப்பட்டுக் கலங்கி' எனத் தொல்காப்பியம் தலைவி கூற்றில் சுட்டியதை, மனைவயிற் பெயர்ந்த காலை' எனத் தலைவன் கூற்றில் சங்க இலக்கியம் அமைத்துள்ளது.

தினைமுதிர்ச்சி, தினைக்காவல் தவறியமை ஆகிய இயற்கை நிகழ்ச்சிகளும், தலைவனின் வருகை, தலைவன் நீங்காமை, ஊரவரின் அலர், தலைவன் உறவால் தலைவியின் உள்ளத்திலும் உடலிலும் ஆற்றாமையால் ஏற்பட்ட மாற்றங்கள்

(தலைவியின் கவின்பெருகுதல்) தலைவியின் உடலில் புணர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்களைத் தாய் உணர்ந்த நிலை என்பன இற்செறித்தலின் காரணங்களாக அமைகின்றன.

இற்செறித்தலின் களங்களாகக் குறிஞ்சித்திணை, தலைவியின் ஊர், மனை, சிறைப்புறம் ஆகியன அமைகின்றன.

தலைவியின் களவு வெளிப்பட்ட நிலையில், அன்னையானவள் இரவு முழுவதும் விளக்கினை ஏற்றி வைத்து, துயிலாமல் இருக்கின்றாள். தனது காவலையும் மீறிச் சென்றுவிடுவாளோ என ஐயுற்ற அன்னை தலைவியின் முதுகினைத் தழுவிக் கொண்டதையும் சங்கப் பாக்கள் காட்டுகின்றன.

அன்னை தலைவியைக் காவலில் வைத்து இரவு முழுவதும் பாதுகாக்கின்றாள் என்ற போதிலும் தலைவியைச் சந்திக்கத் தலைவன் வரும் பொழுது, தலைவி துயிலாது இருக்கும் பொழுது, அன்னை துயிலாது தலைவியைப் பாதுகாக்கும் பொழுது என்று 'யாமம்' ஒவ்வொரு நிலையிலும் இற்செறித்தலில் சிறப்பிடம் பெறுகிறது. இரவுப் பொழுதினைக் குறிக்க எல், அல்கல், கங்குல் என்னும் சொற்களையும், யாமத்தினைக் குறிக்க நடுநாள், பானாள், அரைநாள் கங்குல் என்னும் சொற்களையும் சங்கப் பாக்கள் கையாண்டுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. தொல், பொருள், இளம், நூ;109,12.

2. மேலது நூ;112,30.

3. மேலது நூ;109,26.

4. இறை. அகம்; நூ;30.

5. நக்கீரர், இறையனார் அகப்பொருள், ப,107.

6. நம்பி, அகம், நூ;154.

7. குறுந்; 334, 324, 342, 294, 303, 159.
ஐங்; 60, 194, 186.
அகம்; 112, 118, 192, 2, 20, 60, 90, 288.
நற்; 60, 376, 259, 313, 306, 253, 258, 295, 354, 251.

8. குறுந்; 244, நற்; 317, 368, 372, ஐங்; 289.

9. நற்; 11, 63, 267, குறுந்; 166.

10. நற்; 130.

11. கலி; 101-106.

12. காண்க: பின்னிணைப்பு- 2 , அட்டவணை -1.

13. காண்க: பின்னிணைப்பு -2 , அட்டவணை -1.

14. காண்க: பின்னிணைப்பு -2 , அட்டவணை -1.

15. நற்; 11,27,44,53,57,60,61,63,68,72,119,122,132,134,147,175,178,
182,191,194,206,222,223,251,253,258,263,267,282,287,306,313,317,
319,339,344,354,363,368,372,373,376,379,389.
குறுந்; 57,141,159,161,166,199,244,246,261,292,294,303,306,324,
335,342,353,392,401.
ஐங்; 28,60,93,111,113,115,186,194,210,224,241,260,264,277,289.
கலி;48,123.அகம்;2,12,20,28,60,90,112,118,150,192,242,248,272,288,
302,358,368.

16. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியம் (அகம்) ப,44.

17. நற்; 295, குறுந்; 261, 305, அகம்;252.

18. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப,336.

19. மேலது, ப,336.

20. மேலது, ப,336.

21. காண்க: பின்னிணைப்பு -2 , அட்டவணை -2.

22. காண்க: பின்னிணைப்பு -2 , அட்டவணை -2.

23. மு. அருணாசலம் பிள்ளை, தொல்.பொருள்.அகம், ப,213.

24. தொல், பொருள், இளம், நூ;960.

25. தா.வே.வீராசாமி (ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், அகத்திணையியல் உரைவளம், ப,176.

26. காண்க: பின்னிணைப்பு -2 , அட்டவணை -3.

27. ச.வே.சுப்பிரமணியன், குறுந்தொகையில் உள்ளுறை ஒன்று நன்று, ப,95.

28. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம், ப,106.

29. செ. வேங்கடராமச் செட்டியார், செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 5, பரல்-9, ப,438.

30. ந.சி.தந்தையா பிள்ளை, தமிழ்ப் புலவர் அகராதி, ப,94.

31. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

32. நற்; 222, 253, 267, 368, 373, 376.

33. குறுந்; 246.

34. ஐங்; 210, 224, 260, 264, 277, 289.

35. கலி; 48.

36. அகம்; 2,12,118,248.

37. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

38. நற்; 222,6,8-10.

39. ஐங்; 224.

40. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு, ப,274.

41. குறுந்; 246, 3-5.

42. கலி; 48, 10-11.

43. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,23.

44. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

45. நற்; 11,63,191,223,287,354,363,372.

46. அகம்;20.

47. நற்;223,3-5.

48. அகம்;20, 12-16.

49. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப,278

50. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

51. குறுந்; 303,306,401.

52. ஐங்; 111,113,115,186,194.

53. குறுந்; 303, 4-7.

54. உ.வே.சாமிநாதய்யர் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், ப,453.

55. ஐங்; 115, 2-4.

56. ஔவை.சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப,332.

57. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

58. நற்; 132.

59. அ. நாராணசாமி ஐயன், நற்றிணை நானூறு, பக்.,64-65.

60. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

61. நற்; 194.

62. அகம்; 90,338,368.

63. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

64. நற்; 194, அகம்;358, 368.

65. அகம்; 90.

66. அகம்; 90, 4-7.

67. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,25.

68. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

69. ஐங்; 28, 60,93.

70. ஐங்; 28, 3-4.

71. ஔவை.சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப,98.

72. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,37.

73. நற்; 27, 379.

74. அகம்; 60, 11-15.

75. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

76. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

77. அகம்; 60.

78. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,62.

79. நற்; 344.

80. அகம்; 272, 302.

81. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

82. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு, ப,319.

83. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,47.

84. நற்; 258.

85. குறுந்; 161.

86. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

87. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

88. நற்; 258, 1, 10-11.

89. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,442.

90. ஆ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,1032.

91. குறுந்; 199, 292.

92. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

93. குறுந்; 199, 3-5.

94. உ.வே.சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும், ப,289.

95. நற்; 72.

96. மேலது;263.

97. மேலது;306.

98. மேலது;206.

99. மேலது;296.

100. மேலது;389.

101. மேலது;147.

102. மேலது;259.

103. மேலது;61.

104. மேலது;339.

105. மேலது;122.

106. மேலது;313.

107. மேலது;60.

108. மேலது;282.

109. மேலது;53.

110. மேலது;68.

111. மேலது;119.

112. மேலது;44.

113. மேலது;57.

114. மேலது;317.

115. மேலது;251.

116. மேலது;319.

117. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

118. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

119. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

120. அ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,255.

121. நற்;306, 1-3.

122. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப,301

123. நற்;295.

124. குறுந்;294.

125. மேலது;335.

126. மேலது;353.

127. மேலது;244.

128. மேலது;261.

129. மேலது;324.

130. மேலது;342.

131. மேலது;305.

132. மேலது;166.

133. மேலது;57.

134. மேலது;392.

135. மேலது;141.

136. மேலது;159.

137. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

138. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

139. அ. நாராயணசாமி (உ.ஆ.), நற்றிணை நானூறு மூலமும் உரையும், ப,17.

140. குறுந்;294, 1-4, 7-8.

141. ஆ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,473

142. குறுந்; 305, 3-4.

143. குறுந்தொகை மூலமும் உரையும், ப,457.

144. ஆ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,939.

145. கலி;123.

146. அகம்;150.

147. மேலது;252.

148. மேலது;112.

149. மேலது; 28.

150. மேலது;242.

151. மேலது;192.

152. மேலது;288.

153. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

154. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

155. காண்க: பின்னிணைப்பு-2 , அட்டவணை -4.

156. காண்க: பின்னிணைப்பு -2, அட்டவணை -4.

157. ஆ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,42.

158. அகம்; 150, 1-4.

159. ஆ. சிங்காரவேலு, அபிதான சிந்தாமணி, ப,915.

160. அகம்;252, 13-14.

161. சரளா ராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப,193.

162. தொல், பொருள், இளம், நூ;17.

163. மு. அருணாசலம் பிள்ளை, தொல்.பொருள்,அகம், ப,213.

164. நற்; 313.

165. நற்; 68,90,44.

166. குறுந்; 161, 292, நற்;122, அகம்;252.

167. குறுந்; 353-5.

168. உ.வே. சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும், ப,529.

169. குறுந்; 244, 353.

இயல் –4

சங்க இலக்கியத்தில் உடன்போக்கு

தமிழ் மக்களின் இயற்கை நெறியோடியைந்த வாழ்க்கையையும் நற்கருத்துக்களையும் பற்றி அறிந்து கொள்வதற்கு மிகவும் உறுதுணையாக இருப்பன சங்க இலக்கியங்களாகும். சங்க இலக்கியப் பாத்திரங்கள் ஒருபாற் கூற்று நாடகப் பாத்திரத் தன்மை கொண்டவை என்பர் தொல்காப்பியர். இன்னார், இன்ன இடத்தில், இன்னாரிடம் கூறுவர் என்பதால் இவ்வகப் பொருள் வழக்கம் மிகவும் இன்றியமையாததொன்றாகக் கருதப்பெறுகிறது. இவ்வகை அகப்பொருளில் உடன்போக்கு ஒரு துறையாகும். அவ்வுடன்போக்குப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோர் கூற்று நிகழ்த்துவர். இவ்வுடன்போக்குப் பாடல்களைப் பாடிய புலவர்களை அறிதல், உடன்போக்குப் பாடல்களில் இலக்கண மெய்ம்மைகள் இடம்பெற்ற நிலையை மதிப்பிடல், உடன்போக்குப் பாடல்களின் தனித்தன்மைகளை ஆராய்தல் ஆகியன இவ்வியலின் நோக்கமாகும்.

உடன்போக்கு விளக்கம்

தொல்காப்பியர் ‘உடன்போக்கு’ என்ற சொல்லாட்சியைக் குறிக்க கொண்டுதலைக் கழிதல்[1], கடைக்கொண்டு பெயர்தல்[2], போகிய திறத்து[3] உள்ளிட்ட வெவ்வேறு சொற்களைக் கையாண்டுள்ளார். நம்பியகப் பொருள்[4] உள்ளிட்ட பிற்கால இலக்கண நூல்கள் உடன்போக்கு என்ற சொல்லாட்சியை நேரிடையாகக் கையாண்டுள்ளன. சங்க இலக்கியத்தில் உடன்போக்கு என்ற சொல்லாட்சி துறைக்குறிப்பில் உடன்போகா[5], கொண்டுதலைக் கழிதல்[6], புணர்ந்துடன் போகா[7] என்று குறிக்கப்பெறுகிறது. உடன்போக்கோடு தொடர்புடைய செய்திகளை மகட்போக்கிய[8], மனைமருட்சி[9] என்னும் துறைகள் உணர்த்தி நிற்பது குறிக்கத்தக்கது.

சங்க இலக்கியமும் உடன்போக்கும்

சங்க இலக்கியத்தில் உடன்போக்குத் தொடர்பான பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இவ்வுடன்போக்குப் பாடல்களின் விபரம் பின்வருமாறு.

4:1 உடன்போக்கும் சங்கப் பாடல்களும்

வ.எ.	நூற்பெயர்	எண்ணிக்கை
1.	நற்றிணை	23
2.	குறுந்தொகை	19
3.	ஐங்குறுநூறு	44
4.	கலித்தொகை	2
5.	அகநானூறு	37

மிகுதியும் குறைவும்

ஐங்குறுநூற்றில் உடன்போக்குப் பாடல்கள் மிகுதியாக(44) இடம்பெற்றுள்ளன. இதனை, ஐங்குறுநூறும் கலித்தொகையும் பரிபாடலுக்கு முந்தியன என்றும் ஏனைய தொகை நூல்கட்குப் பிந்தியன[10] என்றும் கே.என்.சிவராஜ பிள்ளை கருதுவர்.

எனவே இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் காலத்தால் பிற்பட்ட நூலாய் இருத்தல் வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில் காலத்தால் பிற்பட்டதாக இருத்தலின் கருத்துக்களைத் தெளிவாகவும், விரிவாகவும் சொல்ல வாய்ப்புண்டு. அவ்வகையில் இந்நூலில் உடன்போக்குத்துறைப் பாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன என உணரலாம்.

அகப்பொருள் நுவலும் அன்பின் ஐந்திணைகளிலும் திணைக்கு நூறாக ஐந்நூறு பாடல்களைப் பெற்று ஐங்குறுநூறு திகழ்கின்றது. ஒவ்வொரு திணையின் நூறு பாடல்களும் பத்துப் பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பகுதியும் பத்துப் பாடல்களைப் பெற்று இலங்குகின்றன. ஒருபொருள் நுவலும் பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளதால் ஒவ்வொரு பகுதியும் 'பத்து' எனும் பெயரால் வழங்கப்பெறுகின்றது. ஐங்குறுநூற்றில் ஒவ்வொரு பத்துக்கும் பெயர் வைத்திருக்கும் முறை போற்றத்தக்கதாகும். சில பத்துக்களில் அந்தந்த திணைக்குரிய விலங்குகள், பறவைகள் போன்ற கருப்பொருள்களாலும் சில பத்துக்கள் இன்னார்க்கு இன்னார் சொல்லியது என்பது போன்ற கூற்றுகள் பெயர்களாலும், சில பத்துக்கள் பாடல்களிலுள்ள சிறப்புச் சொற்களாலும். சிறப்புத் தொடர்களாலும், பொதுக் கருத்தாலும் பெயர் வைக்கப்பட்டுள்ளன[11] என இதன் சிறப்பை விளக்குவர்.

இக்கருத்திற்கேற்ப ஐங்குறுநூறு ஏனைய தொகைநூல்களைவிட மிகுதியான பாடல்களைப் பெற்றுள்ளது. இதனுள் பாடல்கள் திணைவாரியாகப் பிரிக்கப்பெற்று, தொகுத்துக் கொடுக்கப்பெற்றுள்ளதைக் கொண்டு இதனை அறியமுடிகிறது. அவ்வகையில் இந்நூலில் பாலைத்திணைப் பாடல்கள் ஏனைய தொகைநூல்களைவிட மிகுதியாக இடம்பெற்றுள்ளதும், அப்பாலைப் பாடல்களிலும் மூன்றில் ஒரு பங்கிற்கு மேல் உடன்போக்குப் பாடல்கள் அமைந்துள்ளதும் குறிக்கத்தக்கது. எனவே, ஐங்குறுநூற்றில் மிகுதியாக உடன்போக்குப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன எனலாம்.

கலித்தொகையில் பாலைப் பாடல்கள் முதலாவதாக வைக்கப் பெற்றுள்ளன. "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே என்புழிச் சொல்லாத முறையாற் சொல்லவும் படுமென்றலின் என இத்தொகையை பாலை, குறிஞ்சி, மருதம்,

முல்லை, நெய்தல் என இம்முறையே கோத்தார் நல்லந்துவனார் எனப் பாலையை முதலில் வைக்கும் புதுமை கருதியே, கலித்தொகையில் திணைவைப்புமுறை அமைந்திருப்பதாகக்"[12] குறிப்பர்.

நச்சினார்க்கினியர் "ஒன்றிலேனும் முதலிடம் பெறாத பாலைத் திணையை இவர் முதலில் நிறுவியதற்குக் காரணம் யாவரும் இத்திணையை முதலில் வைக்காமையால் இதுமுதலில் வருமோ, வாராதோ என்று ஐயுற்று மயங்கி வாராதென்று திரியவுணர்வார்க்கு அத்திரிபுணர்ச்சியை நீக்கல் கருதிப்போலும், அன்றி பாலை நானிலப் பொதுவாதலின் பொதுமை முற்கூறிச் சிறப்பைப் பிற்கூறுவதும் மரபென்பது பற்றி எனினுமாம்"[13] எனக் காரணங் கூறுவர்.

இவ்வாறாகக் கலித்தொகையில் பாலைத்திணை நானிலப் பொதுவாக வைக்கப் பெற்றுள்ளதாலும் இதற்குச் சிறப்பு அளிக்கப் பெறாததாலும் இந்நூலில் பாலையின் உரிப்பொருளாகிய உடன்போக்குப் பாடல்கள் குறைவாக இடம்பெற்றுள்ளன. கலித்தொகையில் பாலைத்திணை வாழ்வியல் உண்மைகளையும், அறங்களையும் மிகுதியாக வலியுறுத்தியதால் இதன் உரிப்பொருளாகிய உடன்போக்கு இந்நூலில் குறைவாக இடம்பெற்றுள்ளது. கலித்தொகையில் பாலைப்பாடல்கள் முதலில் வைக்கப்பெற்றிருந்தாலும் இந்நூலில் ஏனைய தொகை நூல்களைவிட பாடல் எண்ணிக்கைக் குறைந்து காணப்பெறுவதால் உடன்போக்குப் பாடல்களும் குறைவானதாகவும் அமைந்திருக்கலாம். கலித்தொகையில் ஏனைய திணைப் பாடல்களைவிட மிகுதியாக உலக அறங்களையும், வாழ்வியல் உண்மைகளையும் வலியுறுத்துவதால் பாலைக்கலி முதலில் வைத்து எண்ணப்பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே புறமாகிய அறங்களைக் கூறுமுகத்தான் அகமாகிய உடன்போக்கினை இந்நூல் விரித்துக் கூறில எனலாம்.

புலவர் வகைப்பாடு

'சங்க' இலக்கியத்தில் உடன்போக்குப் பாடல்கள் மொத்தம் நூற்று இருபத்தைந்து பாடல்கள் ஆகும். இவற்றைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை முப்பத்து ஐந்தாகக் கணக்கிடப் பெற்றுள்ளது[14]. உடன்போக்கினைப் பாடிய புலவர்களுள் ஆண்பாற் புலவர்களும் இடம்பெற்றுள்ளனர். பெண்பாற் புலவர்களும் குறிக்கப்பெற்றுள்ளனர். இதில் இரண்டு பெண்பாற்புலவர்களைத் தவிர எஞ்சிய முப்பத்து மூன்றுபேர் ஆண்பாற் புலவர்கள்[15] ஆவர். ஆண்பாற் புலவர்களுள் உடன்போக்குத் துறையினைக் கையாளுவதில் ஓதலாந்தையார், கயமனார் உள்ளிட்டோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆண்பாற் புலவர்கள்

"அகத்திணை மாந்தர்களில் ஆணாட்களும் உண்டு. பெண்ணாட்களும் உண்டு. புலவர் எம் மாந்தரையும் பாடலாம். தலைவன், தோழன் முதலான ஆண்மாந்தர்களை ஆண்பாற்புலவர் பாடும்போது ஆணுள்ளம் நன்கு வெளிப்படும் எனவும், தலைவி தோழி, செவிலி முதலான பெண் கூற்றுக்களைப் பெண்புலவர்கள் பாடுங்கால் பெண்மனம் இயல்பாக விழும் எனவும் பொதுவாகக் கொள்வதில் தவறில்லை"[16] என்பர். ஆனால் உடன்போக்குத் துறையில் நற்றாயின் புலம்பலைப் பெண்பாற் புலவர்களைவிட ஆண்பாற் புலவர்கள் சிறப்புடன் படைத்துள்ளனர். தாயின் இதயத்தை முழுமையாக உணர்ந்து எழுதியுள்ள ஆண்பாற் புலவர்களின் உணர்வை வியக்காமல் இருக்க முடியாது. காதல் கொண்ட தலைவன் தலைவியின் உடன்போக்கும், போயபின் நற்றாய் இரங்கலும் புலவோர்தம் கற்பனைப் பாய்ச்சலுக்கு வளமான துறைகளாம். இத்துறை ஒன்றில் புலங்கண்டவர் கயமனார் ஆவார். இவர் பாடிய இருபத்திரெண்டு சங்கச் செய்யுட்களில் இருபது உடன்போகலும், தாயிரங்கலும் பற்றியவை.

கயமனாருக்கு அடுத்து இத்துறையில் புலமை சான்றோர் ஐங்குறுநூற்றில் பாலைக்குறுநூறு பாடிய ஓதலாந்தையார். காதலர் வழிச்செலவையும், வரவையும், தாயின் அவலத்தையும், ஆசையையும், வகுத்து வளர்த்து நுனித்துப்பாடும் இவர் கூர்திறம் புதுமையுடையது.

பெண்பாற் புலவர்கள்

சங்கப் பாடல்கள் பாடிய புலவருள் பெண்பாற் புலவர் பலராவர். "வடமொழி, கிரேக்கம், சீனம் முதலிய உலக மொழி இலக்கியங்களில் காணப்பெறும் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையைவிடச் சங்க இலக்கியத்திற் காணப்பெறும் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை மிகுதியாகும்[17] என்ற சிந்தனை கருத்தக்கதாகும்.

சங்கப் பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை முப்பது ஆகும். இப்பெண்பாற் புலவர்கள் புறம் மட்டும் பாடியோர்(18), அகம் மட்டும் பாடியோர்(15), அகமும் புறமும் பாடியோர்(7) என்ற முப்பெரும் வகைகளாக[18] பகுக்கப்பெற்றுள்ளனர். இவ்வகையில் உடன்போக்கினைப் பாடிய வெள்ளிவீதியார் அகம் மட்டும் பாடியோரில் இடம்பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஔவையார் அகமும், புறமும் பாடிய புலவர் வரிசையில் அமைகிறார்.

எட்டுத்தொகை நூல்களான ஐங்குறுநூற்றிலும், கலித்தொகையிலும், பரிபாடலிலும் பெண்பாற் புலவர் பாடல்கள் இடம்பெற்றில. பத்துப்பாட்டுள்ளும் பெண்பாற் புலவர்கள் இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது. "எட்டுத்தொகை நூல்களுள் அகத்தில் மூன்றிலும், புறத்தில் இரண்டிலும்ஆகஐந்து நூல்களுள் மட்டுமேபெண்பாற்

புலவர்கள் பாடியுள்ளனர்"[19] என்பர். இவ்வகையில் ஔவையார், வெள்ளிவீதியாரின் உடன்போக்குப் பாடல்கள் அகமாகிய குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன.

"பெண்பாற் புலவர்கள் புறப்பொருளைவிட(67) அகப்பொருளையே(87) மிகுதியும் பாடியுள்ளனர். பெண்பாற் புலவர்கள் பாடிய அகப்பாடல்கள் குறுந்தொகை(50), நற்றிணை(19), அகநானூறு(18) ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன"[20]. குறுந்தொகை பெண்பாற் புலவர்களின் பாடல்களை மிகுதியாக பெற்றுள்ளதன்வழி ஔவையார், வெள்ளிவீதியாரின் உடன்போக்குப் பாடல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது குறிக்கத்தக்கது.

பெற்றோர் திருமணத்திற்கு உடன்படா நிலையில் தலைவனும், தலைவியும் உடன்போக்கிற் சென்று திருமணம் செய்து கொள்ளுவது நடைபெறும். உடன்போக்கினை அறியாத தாயார், உடன்போக்கில் தலைவனும் தலைவியும் சென்ற பின்னர் மகளை நினைந்து வருந்தும் இயல்பினராவர். இதனை மகட்போக்கிய தாய் கூற்று என்று சுட்டுவர். அகம் பாடிய பெண்பாற் புலவோருள் யாருமே மகட் போக்கிய தாய் கூற்றில் பாடவில்லை. மகட்போக்கிய செவிலித்தாய் கூற்றிலும் பாடவில்லை என்பது நோக்கத்தக்கது. பாடுவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லையா? பாட விரும்பவில்லையா? என்பது சிந்திக்கத்தக்கது.

அக்காலச் சமுதாயம் உடன்போக்கைச் சரியென்று ஏற்றுக் கொண்டாலும், மகளுடைய செயல் வரம்பு கடந்த நிலையில் தாய்க்குத் துன்பத்தை ஏற்படுத்தி, வருத்தி இருக்கும் அன்னைக்கு, சமுதாய நாணத்தை ஏற்படுத்தியதுடன் குடும்பத்திற்கும் இழிவை உண்டாக்கி இருக்கும். மறுநாள் நின் மகள் எங்கே சென்றனள்? என்று ஆயமும், பிறரும் கேட்குங்கால் தாயது நிலைமை எத்தன்மைத்து? என்ற அவளது உள்ளத்தின் துன்பநிலையும் கருதற்பாலது.

அதனால்தான் பெண்பாற் புலவர்கள் மகட்போக்கிய தாய் கூற்றில் யாதொரு பாடலும் பாடாது விடுத்தனர் எனலாம்.

பெண்மையின் மென்மை அறிந்தமையின் பெண்பாற் புலவோர் மகட்போக்கிய தாய் கூற்றில் பாடாது விடுத்தனர் எனக் கூறலாம். இதனால் தலைவி உடன்போக்கில் மணந்து செல்வதை, பெண்பாற் புலவர்கள் விரும்பவில்லை என்பதும் புலனாகிறது.

திணையும் உடன்போக்கும்

உடன்போக்குப் பாடல்கள் குறிஞ்சி, நெய்தல், பாலை[21] ஆகிய திணைகளில் பயின்றுவந்துள்ளன. இவற்றில் பாலைத்திணையில் மிகுதியான[22] பாடல்கள் குறிக்கப்பெற்றுள்ளன. உடன்போக்கு முதலில் ஐந்திணையில் அடங்குமா? என்ற சிக்கல் பின்வருமாறு விளக்கம் பெறுகிறது.

ஐந்திணையில் அடங்குமா?

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற உரிப்பொருள்களைப் பேசுகின்ற அன்பின் ஐந்திணை பெரும்பாலும் தலைவன் தலைவியரது காதல் தொடர்பாடனதாகவும், திருமணம் தொடர்பானதாகவும் உள்ள செய்திகளைப் பாடுபொருளாகக் கொண்டது. அங்ஙனம் இருக்க உடன்போதலை ஐந்திணையில் அடக்குதல் பொருந்துமா? என்ற ஐயம் எழலாம். ஐந்திணையின்

உரிப்பொருளிலிருந்து இது சற்று வேறுபட்டிருப்பது உண்மையே, என்றாலும், "களவைக், கற்பாக்கும் முயற்சி என்பதாலேயே இதனை ஐந்திணையில் அடக்கினர் எனலாம். இக்கருத்தை வலியுறுத்தி மு. இராகவையங்காரும் உடன்போக்கோடு களவு முடிவுறுகிறது"[23] என்பர்.

இவ்வாறு அடக்கினாலும் உடன்போகும் தலைவன் தலைவியரது துன்பம், மனஉறுதி, தலைவனது வீரம் என்று தலைவன் தலைவியரை மையப்படுத்தியே செய்திகள் சொல்லப்பெற்றிருத்தல் வேண்டும். அவை தவிரப் பிற செய்திகள் ஐந்திணையில் இடம்பெறல் பொருத்தமில்லை. ஆனால் உடன்போக்குச் சென்ற தலைவியைப் பிரிந்த தாயின் புலம்பலை ஐந்திணையில் அடக்குவது சற்று வேறுபட்டுள்ளது. காதலை மையப்படுத்தி, தலைவன் தலைவியைச் சுற்றியே பின்னப்பெறும் ஐந்திணைப் பாடல்களில் தாயின் புலம்பல் சற்றுவிலகி இருப்பதைக் காணமுடிகிறது.

பாலையின் உரிப்பொருள்

மக்களின் உணர்கவுளான ஒழுக்கங்கள் பலவாகும். இதனை உரிப்பொருள் என்பர்[24] தொல்காப்பியர். அகப்பாடல்களின் உயிர்ப்பொருளாக இவ்வுரிப் பொருள் திகழ்கின்றது. "உரிப்பொருளாவது திணைக்கு உரிய பொருள்"[25] என்று இறையனார் அகப்பொருள் உரைக்கின்றது. இவற்றால் ஒழுக்கம் உரிப்பொருளாகக் குறிக்கப் பெற்றமை அறியவருகின்றது. பாலையின் உரிப்பொருளை,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலை திணைக்குரிய பொருளே"[26]

எனும் நூற்பா மூலம் விளக்குகிறார் தொல்காப்பியர். இதில் பாலைக்குரிய உரிப்பொருளாகப் பிரிதலும், பிரிதல் நிமித்தமும் சுட்டப் பெறுகின்றது.

உடன்போக்குப் பிரிவு

"இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரியதாகும் என்மனார் புலவர்"[27]

எனும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரையாசிரியர்கள் கூறும் உரையினிடையே கருத்து வேறுபாடு காணப்பெறுகிறது. இளம்பூரணர் இருவகைப் பிரிவு என்பதற்கு "தலைமகன் தலைமகளைப் பிரிதலும், தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும் பாலைக்குரிய பொருளென"[28] உரைப்பர். நச்சினார்க்கினியரும், சோமசுந்தர பாரதியாரும் மேற்குறிப்பிட்ட சூத்திரத்தில் 'தோன்றலும்' என்பதைத் 'தோன்றினும்' எனப்பாடம் கொண்டு உரை கூறுவர்.

நச்சினார்க்கிசியர் "இருவகைப் பிரிவு என்பதற்கு நான்கு வருணத்தார்க்குரிய காலிற் பிரிவும், வேளார்க்குக் கலத்திற் பிரிவும் தத்தம் நிலைமைக்கேற்பத் தோன்றினும்"[29] என்று பொருள் கூறுவர். இக்கருத்தினைச் சோமசுந்தர பாரதியாரும் ஏற்கிறார்.

இச்சிக்கலுக்கு மு.அருணாச்சலம் பிள்ளையின் அகத்திணையியல் ஆய்வுரை விடை பகர்கிறது. "தலைமகன் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும், அவன் தானே பிரிதலும் பிரிவு எனப்படும் என்பதும், செய்யுட்களில் பாலைத்திணை பற்றிக் கூறப்படுவன எல்லாம் இவ்விரு பிரிவினுள் அடங்கும் என்பதும் தோன்ற இருவகைப் பிரிவும்"[30] என முற்றம்மை கொடுத்துக் கூறினார். தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதல், இருவரும் உடன்சேறலால்

புணர்வின்பாற்படுமோ, தமர்வரைப் பிரிதலால் பிரிவின்பாற்படுமோ என ஐயம் நிகழுமாதலின் அவ்வையம் நீக்குதற்கு அது பிரிவின்பாற்படும் என்பதும் செய்யுட்களில் உடன்போக்குப் பற்றிக் கூறுவனவெல்லாம் பாலைத்திணையாகவே கொள்ளப்பட்டுள்ளன என்பதும் அறிவித்தற்கு நிலைபெறத் தோன்றலும் உரியதாகும் என்றார்.

இதற்கு அடுத்து வரும் கொண்டுதலைக் கழிதல், கலந்தபொழுது என்னும் இருநூற்பாக்களிலும், தன்னும் அவனும் அவளும் சுட்டி என்பது முதலிய ஐந்து நூற்பாக்களிலும், தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதல் பற்றிய செய்தி கூறலும், ஓதல் பகையே என்பது முதல் முந்நீர் வழக்கம் என்பது வரையுள்ள நூற்பாக்களில், தலைவன் தானே பிரிதல் பற்றிய விதிமுறைகள் கூறுப்படுதலும், இவ்விருவகைப் பிரிவும் பற்றிய செய்திகள் எல்லாம் தொகுத்து ஒன்றாத் தமரினும் என்னும் நூற்பாவில் கூறப்படுதலும் உண்மையால்"[31] இந்நூற்பாவிற்கு, தலைமகன் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதல், அவன்தானே பிரிதல் என்று பொருள் கொள்ளுதலே ஆசிரியர் கருத்தென்பது நன்கு தெளிவாகும்.

"கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவன் இரங்கலும்
உண்டென மொழிய ஓரிடத்தான" [32]

எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர் புணர்தல் பிரிதல் உள்ளிட்ட "ஐவகை உரிப்பொருளும் போல் எல்லாத் திணைக்கும் பொதுவாக வருதலன்றிக் கொண்டுதலைக் கழிதல் பாலைக் கண்ணும், பிரிந்தவன் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் வரும் எனக் கொள்க. கொண்டுதலைக் கழிதலாவது உடன்கொண்டு பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது"[33] எனக் குறிக்கின்றார். வினைமேவித் தலைவன் தலைவியை விட்டுப பிரியக் கருதுதல், தலைவனது செலவைத் தோழி தடுத்து அழுங்குவித்தல், பிரிந்த வழித்

தலைமக்கள் வருந்துதல், தலைவன் தலைவியை விட்டுப் பிரியேன் எனல், தம்மையும் உடன்கொண்டு செல்ல தலைவனிடம் தலைவி வேண்டுதல் போன்றவை பிரிவு நிமித்தத்தின் பாற்பாடும்.

பாலையில் உடன்போக்கு

பாலையில் உடன்போக்குப் பாடல்கள் இடம்பெறும் திறத்தினை ஆராய்வதற்குமுன் பாலைநிலம் பற்றிய சிறு விளக்கம் கொடுக்கப் பெற்றுள்ளது.

தொல்காப்பியர் பாலைக்குரிய நிலத்தைச் சுட்டவில்லையாயினும், சிலப்பதிகாரம் பாலைநிலம் பற்றிக் குறிப்பிடுகிறது.

"வேனலங் கிழவனோடு வெங்கதிர் வேந்தன்
கானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ரறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்"[34]

என்னும் அடிகள் வேனிற்காலத்தில் வெய்யக் கதிரோன் காய்தலால் முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும், முறைமையிற் திரிந்து நல்லியல்பு இழந்து துயர் உறுத்துகின்ற பாலை நிலமாக மாறிய தன்மையை விளக்கும். இதனால் குறிஞ்சியும், முல்லையும் மழையின்மை காரணமாக வளம் குன்றுகின்ற நிலையில் அந்நிலம் பாலையாகக் காட்சியளிக்கும் என்பது தெளிவாகும். இவ்வாறு ஏற்பட்ட கருத்து வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நம்பியகப் பொருள்,

"வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தருமிடனே

எனவீ ரைபனத் தனையியல் நிலமே"[35]

என்று நிலத்தை ஐந்தாகச் சுட்டும். இவற்றுள் பாலை நிலத்தைச் 'சுரம்' என்று கூறுவது எண்ணத்தக்கதாகும்.

"களவில் உடன்போக்கு பாலையாவது எங்ஙன்? தலைவனும் தலைவியும் உடன்செல்லும் நிலையைக் குறிஞ்சி என்றன்றோ கூறவேண்டும். அன்னோர் செல்லும் வழி நிழலுடையது நீருடையது பூவுடையது. இளவேனில் நலமுடையது என்று கூறுதற்கும் இல்லை. பெற்றோரைப் பிரிந்து செல்லுதலின் பாலையாயிற்று எனலாமோ எனின் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் என்ற உரிப்பொருள்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழ்வனவன்றிப் பிறரோடு தொடர்புடையன வல்லவே. பாலையாவது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். உடன்போக்குப் பிரிதல் நிமித்தத்தின் பாற்படும். உடன்போக்கில் இருவரும் கூடியிருப்பினும் இன்னும் மணமாகாமையின் பிரிவோமோ, பெற்றோரால் பிரிக்கப்படுவோமோ என்று பிரிவுணர்ச்சி இருவர்தம் உள்ளத்தும் ஓடிக்கொண்டிருக்கும்"[36] என உடன்போக்குப் பாடல்கள் பாலைப் பிரிவினுள் அடக்கப் பெற்றமைக்குக் காரணங் கூறுவர்.

பாலையின் உரிப்பொருளாகத் தலைவியைவிட்டுத் தலைவன் பிரிவது கூறப்படும் பொருள்தேடப் புறப்பட எண்ணுதல், அதனால் தலைவி வருந்துதல் – தேற்றிப் புறப்படுதல், தலைவன் சிறிது தூரம் சென்று மனம் தடுமாறுதல் – பிரிவில் வருந்துதல், தோழி ஆறுதல் சொல்லுதல் ஆகிய செய்திகளே பாலைத்திணையில் பெரும்பாலும் பாடுபொருளாய் இருக்கக் காணலாம். அவ்வகைப் பாலைத்திணையில் உடன்போக்காகச் செல்லும் தலைவன் தலைவியர் நிலையையும், மகளைப் பிரிந்து தாய் புலம்புகின்ற நிலையையும் காட்டுவதற்குச் சரியான காரணம் ஏதும் இல்லை என்றாலும், இச்சூழலுக்குச் காட்டப்படும் இயற்கைப் பின்னணி பாலை வழியாக இருந்த காரணத்தால் இச்செய்திகளைப் பாலைத்திணையில் சேர்த்துள்ளனர்

எனலாம். இச்சிக்கலை எடுத்துக்காட்டி நா.செயராமன் பாலைக்கெனத் தனிநிலம் தொல்காப்பியர் கூறாததற்குக் காரணங் கூறிக் கருப்பொருளும் உரிப்பொருளும் கூறியிருப்பதை எடுத்துக்காட்டி உடன்போக்குத் தொல்காப்பியத்தில் இடம்பெற்ற காரணத்தை வரையறுப்பர்"[37].

தலைவன் தலைவியர் தங்களது திருமணம் நடைபெறத் தடையுள்ளதை அறிந்து உடன்போக்காக ஊரைவிட்டுச் சென்றுவிடுவர். அப்போது மகளைப் பிரிந்த தாய் புலம்புவதைப் பாலைக்குரிய உரிப்பொருளாகத் தொல்காப்பியர் கூறுகிறார். கருத்தொருமித்த காதலர் ஒன்றுபடச் சமுதாயம் இணங்காத சூழலில் இருவரும் அயலூர் ஏகுதலும், தலைவியைப் பிரிந்த தாய் புலம்புதலும் தொடக்க காலத்தில் இலக்கியப்பெற்றி அடையாமல் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்தில்தான் உடன்போக்கு இலக்கியப் பெற்றி அடைந்தது. எனவேதான், பாலை எனும் திணையுள் உடன்போக்குச் செய்திகளையும் உள்ளடக்கிக் கூறுகிறார். உடன்போக்குச் செல்லும் வழி சுரமாக இருப்பதாலும், பாலைத்திணையில் அப்பொருளை ஏற்றிச் சொல்வது பொருத்தமாகப்படுகிறது என்று அவர் கூறும் கருத்துச் சிந்திக்கத்தக்கது.

பாலையில் மிகுதி.........?

பாலையில் உடன்போக்குப் பாடல்கள் மிகுதியாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இதற்குரிய காரணத்தை ஆராயும்பொழுது பாலைப் பருவங்களை உரிப்பொருளுடன் சார்த்தி விளக்கும் நச்சினார்க்கினியர் "காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பி கூவன் மாறி நீரும் நிழலுமின்றி நிலம் பாய்ந்துறந்து துன்பம் பெருவதோரு காலமாதலின் இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடையதாயிற்று"[38] என்பர். இவ்வாறாகப் பாலைப் பருவங்களில் வேனிற்காலத்திற்குச் சிறப்பு அளிக்கப்பெற்றுள்ளதாலும்,

உடன்போக்கிற்குரிய காலமாக வேனிற்காலம் திகழ்வதாலும் இவ்வொப்புமை கருதி உடன்போக்குப் பாடல்கள் பாலையில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன எனலாம்.

உடன்போக்குப் பாலைநிலத்திலும், பிற நிலங்களிலும், கோடைக் காலத்திலும் இளவேனில் முதலான பிற காலங்களிலும் நிகழலாம் என்றாலும், இதில் பிரிக்கப்படுவோமோ என்ற பிரிவுணர்ச்சியே மேலோங்கி இருக்கின்றது. இப்பிரிவுணர்ச்சியை முன்னிறுத்தி புலவர்கள் பாடல்கள் இயற்றியுள்ளதாலும், பாலையின் உரிப்பொருள் பிரிவாவதாலும் உடன்போக்குப் பாடல்கள் மிகுதியாகப் பாலையில் குறிக்கப்பெற்றன.

குறிஞ்சியில் உடன்போக்கு

தொல்காப்பியர் பாலைத் திணைக்குரிய பொழுதுகளை,

"நடுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"[39]

"பின்பனி தானும் உரித்தென மொழிப"[40]

என்று வரையறுப்பர். இதன்வழி வேனிற்காலம் பாலைக்குரிய பொழுதாகத் திகழ்வதாலும், இத்தகைய வேனிற்காலத்தில் குறிஞ்சித் திணை தன்னியல்பு திரிந்து பாலையாகும் என்பதாலும், பாலையின் உரிப்பொருளாகிய உடன்போக்கைப் புலவர்கள் குறிஞ்சித்திணையில் ஏற்றுப் பாடியுள்ளனர் என்று தெளியலாம்.

தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்ளுதல், இதை அறிந்த அவர்களது சுற்றத்தார் வருந்துதல் என்று உடன்போக்கினை இருகூறாகப் பிரித்துப் பார்க்கும்பொழுது தலைவனும் தலைவியும் கொண்டுதலைக் கழியுமிடத்து, அவ்வொழுக்கம் புணர்தலின்பாற்படுதலாலும், குறிஞ்சியின் உரிப்பொருள் புணர்தலாகத் திகழ்வதாலும் இவ்விரு ஒப்புமை கருதி உடன்போக்கினைக் குறிஞ்சித் திணையில் அமைத்துள்ளதாகக் கருத இடமுண்டு.

நெய்தலில் குறைவு..........?

நெய்தலாவது இரங்கலும் இரங்கல் நிமித்தமும்[41] ஆகும். தலைவன் பொருள் தேடும் பொருட்டுச் சேறலின் அவட்கு இரக்கம் தோன்றுகிறது. அவளது இரக்கம் பிரிவு பற்றியே நிகழ்கின்றது. பாலையின் உரிப்பொருளும் பிரிதலாக அமைகிறது. ஆகவே நெய்தல் பாலையடியாகத்தான் பிறக்கிறது எனலாம். பிரிவு என்ற இச்சிறு ஒப்புமை காரணமாகப் பாலையின் உரிப்பொருளாகிய உடன்போக்கு இத்திணையில் குறைந்த அளவே பயின்றுவந்துள்ளன எனக் கொள்ளலாம்.

கூற்றும் உடன்போக்கும்

உடன்போக்குத் துறையில் தலைவன், தலைவி, செவிலி, தோழி, நற்றாய், கண்டோர் ஆகியோர் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் ஆவர். இவற்றுள் கண்டோரில் அந்தணர்[42], அயலோர்[43] அடக்கப்படுவர் என்பர் உடன்போக்கில் நற்றாய்[44] மிகுதியாக கூற்று நிகழ்த்துகிறாள். தலைவியின் கூற்று[45] குறைவாக இடம்பெற்றுள்ளது.

மிகுதியும் குறைவும்

தலைவி குடும்பத்தை விட்டுப் பிரிந்து உடன்போக்கு மேற்கொண்ட நிலையில் தாயர் புலம்பும் பாடல்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தில் தாய் புலம்பும் நிலையில் மட்டுமே நற்றாய் கூற்றுப் பாடல்கள் அமைந்துள்ளன என்பது கவனத்திற்குரியது.

தலைவனும் தலைவியும் முதுவேனிற் பருவத்திலேயே அருஞ்சுர வழி செல்வதாகக் கூறுதல் சங்க இலக்கிய மரபாகவே காணப்பெறுகிறது. இக்கொடும் பாலைக்காட்சி படம் பிடிக்கப்பட்டு இவ்வரிய வழியில் மகள் சென்றாளே என்ற தாயின் நெஞ்சம் பேதலிப்பதும் காட்டப்படுகிறது. "தலைவியைப் பிரிந்த தாயுள்ளம் பல நிலைகளில் ஏங்குகிறது. வேதனையுறுகிறது. மணப்பருவம் உற்றவுடனே மகளுக்குச் சிறப்பாகத் திருமணம் செய்ய வேண்டும் என்று தாய் திட்டமிடுகிறாள். மகளோ தாயைத் துறந்து தன் தலைவனுடன் சென்றவுடன், தாயின் இதயக்கோட்டைத் தகர்ந்து விடுகிறது. ஆசைத் தூண்கள் இற்று விழுகின்றன[46]. மகளுக்காகவே வாழ்ந்த தாயுள்ளம் பிரிவைத் தாங்காமல் இறக்கவும் முடியவில்லையே என்று ஏங்குகிறது. இதில் தாயின் மனப்புலம்பல்களைப் பல்வேறு நிலைகளில் புலவர்கள் சிறப்புறப் படைத்துள்ளனர். இவ்வாறாக அக்காலச் சமுதாயச்சூழலைப் படம்பிடித்துக் காட்டவிரும்பிய புலவர்கள் ஏனைய கூற்றுகளைவிட, நற்றாய் கூற்றுகளை உடன்போக்குத் துறையில் மிகுதியாகப் படைத்துள்ளனர் என்று துணியலாம்.

பெண் மக்களின் ஒழுக்கத்துக்குக் காப்பாளி பெற்ற தாயே. யாதும் தவறு நேரின் 'இவள் வளர்த்த அழகு இது' என்று ஊரார் தாய்மேல் பழிசுமத்தக் காணலாம். அதுகேட்டு அன்னை நாணுவாளேயன்றிப் பொறுப்புத் தனக்கில்லையென்று தட்டிக் கழியாள். களவுக் குமரி பெற்றோரை அஞ்சுவாள் எனத் தந்தையையும் உள்ப்படுத்திப் பொதுவாகச் சொல்லினும், ஈன்றவளையே சிறப்பாகக் குறிக்கும். ஊர்மாதர்கள் இன்னவள் மகள் என்று தாயைச் சுட்டி மகளைச் சுட்டுவதுதான் நம் சமுதாய மரபு. தாய் பெயரை இழுத்தும் அவட்குமுன் வந்தும் ஊரினர் அலர் கூறுவராதலின், மகள் களவொழுகத்தால் மனங்கசப்பவளும், கொதிப்பளும் ஈன்றாளே. "உடன்போக்குத் துறைபற்றிய பாடல்களைத் தொகுத்துவைத்து நோக்கின் அப்போக்குக்குக் காரணள், தாய் என்பது தெளிவாம்"[47]

என்பர். எனவே உடன்போக்கு என்ற ஒரு துறை உருவாவதற்கு நற்றாய் அடிப்படைக் காரணமாக விளங்கியவள் ஆதலின், அத்துறையில் அவளது கூற்று மிகுதியாக இடம்பெறுவதில் வியப்பில்லை.

தலைவி கூற்றுக் குறைவாக இடம்பெற்றதற்குரிய காரணத்தை ஆராய்ந்தபோது "மிகுந்த செய்ந்நன்றிக்கு உரிய தாயை, தலைவி மிக அஞ்சி வெறுத்து உடன்போகத் துணிகின்றாள். இது வேண்டாத அச்சமாகும். தாய்க்கு உண்மையை உணர்த்தாது, அவளைக் கொடியவள் என்று கடிவது பொருந்துமா? உண்மையை அறிந்தபின் தாய் துறக்கத்தக்கவளாக நடந்தாளா? இல்லை என்பதே இலக்கிய விடை"[48] என்பர். தலைவி தனது களவினை அன்னையிடம் காட்டத் தயங்குகிறாள். பெற்ற அன்னையிடமே பேசத் தயங்கியவள் மற்ற மாந்தர்களிடம் எவ்வாறு பேசுவாள்? அவ்வகையில் உடன்போக்குத் துறையில் தலைவியின் கூற்றுக்குறைவாகவே இடம்பெற்றுள்ளது எனலாம்.

பாடிய புலவர்கள்

உடன்போக்குப் பாடல்களைப் பாடிய புலவர்களை ஓதலாந்தையார் பாடல்கள், கயமனார் பாடல்கள், பெருங்கடுங்கோ பாடல்கள், கபிலர் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல்கள் பாடிய புலவர், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், ஒரு பாடல் பாடிய புலவர்கள் என்ற பகுப்புக்களில் அடக்கலாம்.

மிகுதியும் பொருத்தமும்

ஓதலாந்தையார் உடன்போக்குத் துறையில் மிகுதியான பாடல்களைப்(37) பாடியுள்ளார். மிகுதிக்குரிய காரணத்தை ஆராய்வதற்குமுன், அவரைப் பற்றிய அறிமுகச் செய்தி விளக்கப்பெறுகிறது. ஐங்குறநூற்றில் நான்காவதாக

வைக்கப்பட்டுள்ள பாலைத் திணை பாடல்களை ஓதலாந்தையார் இயற்றியுள்ளார். "ஆதன், தந்தை என்னும் சொற்கள் ஆதனுக்குத் தந்தை என்னும் பொருள்பட்டு 'ஆந்தை' என மருவி வழங்கிவந்துள்ளது. அவ்வாறு மருவிய ஆந்தை எனும் பெயர், ஆர் எனும் சிறப்பு விகுதியோடு இணைந்து ஆந்தையார் என வழங்கப்பெற்றது. ஆந்தையார் என்பது தொடக்கத்தில் ஆதனுக்குத் தந்தையார் எனும் காரணப் பெயராக அமைந்து, பின்னர் அதுவே பலருக்கும் இயற்பெயராக வழங்கி வந்துள்ளது"[49]. அஞ்சில் ஆந்தையார், ஓதலாந்தையார், சிறைக்குடி ஆந்தையார், பிசிராந்தையார் எனச் சங்க இலக்கியத்தில் 'ஆந்தையார்' எனும் பெயரில் நான்கு புலவர்கள் இருந்தமை அறிய வருகின்றது.

ஓதல் ஆந்தையார், பிசிராந்தையார் போல ஓதல் என்னும் ஊரினர். "இவ்வூர் ஓதலூர் என்ற பெயருடன் மேலைக் கடற்கரைப் பகுதியில் குட்டநாட்டில் உள்ளது. குட்டநாட்டை அடுத்துள்ள பகுதி பாலையே; அன்றியும் அதற்குக் கிழக்கில் உள்ள பாலைக்காடும், பிறவும் பாலைநிலப் பகுதிகளாக இருத்தலின், பாலைப் பாட்டுக்களை வரைந்துகொண்டு இவர் விதந்து பாடுவது பொருத்தமேயாகும்."[50] எனவே ஓதலாந்தையார் பாலைநிலம் சூழ்ந்த பகுதியில் வாழ்ந்ததாலும், பாலைத்திணையில் மிகுதியாகப் பாடல்களை இயற்றியுள்ளதாலும், பாலையின் உரிப்பொருளாகிய உடன்போக்கினை மிகுதியாகப் பாடியிருப்பது பொருத்தமாகும்.

ஓதலாந்தையார் பாலைப் பாடல்களை மிகுதியாகப் பாடிய சிறப்புக்குரியவர். "எத்தனையோ வகையான பாடல்களில் நம்மை இவர் திளைக்கச் செய்கின்றார். அவை பலவற்றுள்ளும் எக்காலும், நம் இதயத்தைவிட்டு நீங்காத வகையில் சில குறிப்பிடத் தக்கனவாய் உள்ளன. கொடிய பாலையையே இவர்தம் சொல்லோவியங்களில் தீட்டினர். நிறம் வறண்டு போயினும், அஃறிணை

உயிர்களிடத்தில் நெஞ்சம் வறளவில்லை என்று இவர் காட்டும் ஈர நாகரீகம் எந்தக் கனகல்லையும் கரைக்கும் இயல்புடையதாகும். ஓதலாந்தையாரின் அருள் நெஞ்சினைப் பாலைத்திணைப் பாடல்களிலே காணமுடிகிறது. வெம்மைக்கும் தன்மையூட்டிய இச்சான்றோரின் நெஞ்சம் போற்றத்தக்கது"[51] என ஓதலாந்தையாரின் சிறப்பினை மதிப்பிடுவர். எந்த ஒரு துறையிலும் ஆழ்ந்த புலமை பெற்றவராலேயே அத்துறையினைச் சிறப்பாகப் படைக்க இயலும். ஆழ்ந்த புலமை பெறுவதற்கு அத்துறையிலேயே தோய்ந்து எண்ணிக்கையில் மிகுதியான பாடல்களைப் பாடியிருக்க வேண்டும். அவ்வகையில் ஓதலாந்தையார் உடன்போக்குத் துறையில் மிகுதியான பாடல்களை இயற்றியுள்ளதாகக் கருதலாம்.

இவர் இத்துறையில் முப்பத்தேழு[52] பாடல்களைப் பாடியுள்ளார். அப்பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், பாலைத்திணையிலும்[53] மட்டும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் நற்றாய் கூற்று பதின்மூன்று, கண்டோர் கூற்று எட்டு, தலைவி கூற்று ஐந்து, தலைவனுக்கும், தோழிக்கும் நாந்நான்கு கூற்றுகள், செவிலி கூற்று மூன்று[54] என்று வரையறுக்கப் பெற்றுள்ளது. ஓதலாந்தையார் நற்றாய் கூற்றினை மிகுதியும் பாடியிருப்பது குறிக்கத்தக்கது.

துறைப் பொருத்தம்

நெல்லி, கனிகள் பலவற்றை உண்டு, செங்கடம்பு மரத்தின் நிழலின்கண் தலைவனும், தலைவியும் தங்கியிருந்தனர். இவர்கள் காண்பதற்குப் பிரிவரிதாகிய மகன்றிற் பறவை போலக் காட்சி அளித்தனர். இத்தன்மை வாய்ந்த தலைமக்கள் செல்லக்கூடிய வழியானது இரங்கத்தக்கதாய் உள்ளது என்று கண்டோர் வருத்தம் கொள்வதாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது. இதனை,

"பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து

.........

யார்கொல் அளியர் தாமே வார்சிறைக்

குறுங்கான் மகன்றி லன்ன

உடன்புணர் கொள்கைக் காத லோரே"[55]

என்பர். இதற்கு "சுரத்திடைச் செல்வோர் நெல்லிக்கனியை உண்டல் மரபு என்றும் ஒருவரை ஒருவர் இன்றியமையாச் சிறப்பினராய்ப் புணர்ந்துடன் போகிய கொள்கையினையும் உடையராய்த் தோன்றுதலின் மகன்றில் அன்ன, உடன்புணர் கொள்கைக் காதலோரே என்றும் இவர் செல்லும் நெறி வெவ்விய சுரமும், கொடிய விலங்கு வாழ்வதுமாகலின், அந்நலனின்மை கருதி யார்கொல் அளியர்"[56] என்றும் உரை கூறுவர். இக்கருத்தின் அடிப்படையில் இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'உடன்புணர் கொள்கை' என்ற குறிப்பைக் கொண்டு தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டதும் 'பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து' என்ற தொடரைக் கொண்டு சுரத்திடைச் செல்வோரின் உணவு குறிக்கப் பெற்றுள்ளதும் அறியப்பெறுகிறது. இப்பாடல் யார் கூற்று என்பதற்கான சான்று எதுவும் வெளிப்படையாகச் சுட்டப்பெறவில்லை. ஆனால் 'யார்கொல் அளியர்' என்ற குறிப்பைக் கொண்டு உடன்போக்கின்போது சுரத்திடையில் தலைமக்களை நேரடியாகக் கண்டு அவர்களது நிலைகுறித்து வருத்தம் அடைபவர் கண்டோர் ஆகலின் கண்டோர் கூற்றாகக் கொள்வது குறிப்பாய்ப் பொருந்தும் எனலாம்.

உடன்போகியாளின் தாய்படும் அவலப்பாங்கினையும், அவள் காட்டும் அன்பின் திறத்தினையும், இவளது தெளிந்த அறிவினையும் முப்பது பாடல்களில் (ஐங் 371-400) ஏற்றம்பட வடிக்கின்றார். இம்முப்பது செய்யுட்களையும் ஒரே முறையில் இருந்து படிப்பின், உள்ளோட்டங்கள் ஊடுறு கதிர்ப்படம்போன்று

தோன்றும். மகளின் உடன்போக்கைத் தாய் ஒப்புகின்றாள். அறநெறி இதுவெனத் தெளிந்த என் மகள் என்று தலைவியைப் போற்றுகின்றாள். மகளின் செலவுக்குத் தாய் வருந்தவில்லை. உண்மையைச் சொல்லும் துணிவு மகளுக்கு இல்லையே என்கிறாள். உண்மையைச் சொல்லியிருப்பின் உடன்போக வேண்டிய அவசியமில்லை என்று இரங்குகின்றாள்.

ஓதலாந்தையார், தலைவனது தாய்மேல், தலைவியின் தாய்க்குச் சினம் உண்டு என்பதை வெளிப்படுத்தியுள்ளார். தலைவனின் தாய் தலைவனை அன்று பெற்றதனால் அன்றோ என் மகள் இன்று கடுஞ்சுரவழியில் செல்ல நேர்ந்தது என்று வளைத்துத் தொடுத்து வாயாடுவாள். மகளின் உடன்போக்குத் துறையில் வைத்துத் தாயர்தம் எண்ணவோட்டங்களைப் பல திறங்களாகப்புலவர் வடித்துக் காட்டுவர். அதனால் அகவிலக்கியம் பாடுவார் பாடும் வன்மைக்கு இயைந்து விரியும் எனலாம். இருபால் தாயாரின் இகலுணர்ச்சி பாடப்பெறுவதால், அகவிலக்கியம் தமிழ்ச் சமுதாய மனப்பான்மையோடு இயங்குவது என்பதை அறிய முடிகிறது. தலைவனது தாய் கூற்றாகவன்றி வைப்புத்தலம் போலப் பாட்டின் அகத்து வருதலின், அகமரபு புதிய மரபிற்கும் வழிவிடுவது என்பதை உணரமுடிகிறது.

கயமனார் பாடல்கள்

கயமனார் பாலைத்திணையில் உடன்போக்கையும் அதனையடுத்த செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், மனைமருட்சி, கண்டோர் இரக்கம், முதலாய புலம்பல்களையும் பலவாறாகச் சிறப்பித்தும் பாடவல்லவர். அங்ஙனம் பாடிய பாடல்கள் அனைத்தும் கேட்போரின் கல்மனத்தையும் கரைக்கும் தன்மையன.

கயமனார் உடன்போக்கில் இருபத்தோரு பாடல்களை[57] இயற்றியுள்ளார். அப்பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு[58] ஆகியவற்றில்

காணப்பெறுகின்றன. இவர் செவிலிக்குப் பத்துக் கூற்றினையும், நற்றாய்க்கு ஏழு கூற்றினையும், தோழிக்கு இரண்டு கூற்றினையும், தலைவனுக்கும், கண்டோருக்கும் ஒவ்வொரு கூற்றினையும்[59] இயற்றியுள்ளார். இவரது பாடல்கள் அகநானூற்றிலும், பாலைத்திணையிலும், செவிலி கூற்றிலும் மிகுந்திருப்பது கருதத்தக்கது.

தலைவியின் மென்மைக்கு இரங்கல்

கயமனாரின் குறுந்தொகைப் பாட்டு மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது என்பதாகும். தலைவியானவள் இளமைக் காலத்தில் பொற்காலத்தில் பொரிகலந்த பாலை மிக்குள்ளதென்று குடிக்க மறுத்தாள். ஆனால் பருவம் வாய்ந்த பிறகு நிழலும், நீரும் இல்லாத சுரவழியில் தலைவனின் பாதுகாப்பில் விரைந்து உடன்போக்கினை மேற்கொண்டாள். அவ்வாறு செல்லும் வழியில் உலர்ந்து வற்றிய சேற்றுக்கலங்கலை எப்படிக் குடிப்பாள் எனச் செவிலித்தாய் முன்னை நிலையொடு ஒப்பிட்டுப் பெருந்துயர் அடைகிறாள். இதனை,

"நிழலான் றவிந்த நீரில் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
.........
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்கு வல்லுநள்கொல்"[60]

என்பாள்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள தளிரன் னோளே(356;8) என்றது தலைவியையும், கழலோன் காப்பக் கடுகுபு போகி என்றது தலைவனுடன் தலைவி உடன்போக்கினை மேற்கொண்டதையும் குறிப்பதாகும். நிழல் ஆன்று அவிந்த நீர்இல் ஆரிடை என்ற தொடரைக் கொண்டு தலைமக்கள் சென்ற கடத்தற்கரிய

பாலைநிறம் சுட்டப்பெறுவது அறியப்பெறுகிறது. "தளிரன்னோள் என்றது பாலை வழிச் செல்ல வொண்ணாத அவள் மென்மையையும், மேனியையும் குறித்து நின்றது"[61] என்பர். இக்கருத்தின் அடிப்படையில் மகட்போக்கிய செவிலித்தாய் மகளது மென்மைத் தன்மைக்கு இரங்கி உரைத்தது அறியப்பெறுகிறது.

பெருங்கடுங்கோப் பாடல்கள்

பெருங்கடுங்கோ சேரவேந்தராவார். மலையாளத்துக் குறும்பர் நாடு தாலுகாவின் ஒரு பகுதிக்கு பாயனாடென்று பெயர் வழங்குகின்றது. இப்பாயனாட்டின் வேறொரு பகுதிக்கு 'கடுங்கோ' நாடென்பது பெயர். வள்ளுவநாடு மாவட்டத்தில் இன்னும் கடுங்கோவூர், கடுங்கோபுரம் எனப் பெயர் தாங்கிய ஊர்கள் இருக்கின்றன. அந்நாட்டிலிருந்து அரசு புரிந்தவர் கடுங்கோ எனப்படுபவர். அந்நாடு செல்வக் கடுங்கோ வாழியாதன் காலத்திலோ, அதற்கு முன்னரோ இப்பெயரை எய்தியிருக்கலாம்"[62] என்பர். கடுங்கோ எனும் பெயர் இடப்பெயராக வழங்கப்பெற்று, பின் பலருக்கும் இயற்பெயராக வழங்கியிருத்தல் வேண்டும் என்பது தெளிவுறும்.

உடன்போக்குத் துறையில் பெருங்கடுங்கோ ஒன்பது பாடல்கள்"[63] பாடியுள்ளார். இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு"[64] ஆகியவற்றில் இடம்பெறுகின்றன. இவற்றில் தலைவன் கூற்று ஐந்து, தோழி கூற்று இரண்டு, தலைவி கூற்று ஒன்று, கண்டோர் கூற்று ஒன்று என்று வரையறுக்கப் பெற்றுள்ளது"[65]. இவரது பாடல்கள் நற்றிணையிலும், தலைவன் கூற்றிலும் மிகுந்துள்ளன.

தலைவன் மெல்லக் கொண்டேகல்

பெருங்கடுங்கோவின் தலைவன் கூற்றுப்பாடல் உடன்போகாநின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது என்பதாகும். தலைவன், தலைவியை

இருளில் கொண்டுதலைக் கழிந்தான். அவ்வாறு சென்றபோது சுரநெறியில் தலைவன் தலைவியிடம் கூறும் முகமாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது.

களிறானது வேங்கைமரத்தின் பருத்த அடியை முறித்தது. அம்மரத்தின் தேனை உறிஞ்சுகின்ற ஈக்கள் ஓடுமாறு, பொன் போன்ற பூங்கொத்தாகிய உணவினைப் பறித்துத் தனது கன்றுக்கும் பிணைக்கும் ஊட்டாநின்றது. இத்தகைய காட்சி நிரம்பிய மலைப்பகுதியில் கார்த்திகை விளக்கு வரிசைபோல கோங்கம் பூக்கள் மலர்ந்திருந்தன. இத்தகைய காட்டுப்பகுதி உன் தந்தைக்கு உரிமையானது. இதன்வழியாகத்தான் நாம் இப்போது சென்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தலைவன்

"கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே"[66]

என்பான்.

இப்பாடல் யார் கூற்று என்பதற்கு வெளிப்படையான சான்று எதுவும் இல்லை. குறுமகள் என்னும் விளியால் கூற்றைக் கேட்பவள் தலைவி என்பது வெளிப்படையாய் உள்ளது. உடன்போக்குப் பற்றிக் கூறியதற்குப் பாடலில் வெளிப்படையான சான்றுகள் இல்லை. கன்றோடு மடப்பிடி வேழம் வேங்கைப் பொன்புறை கவழம் புறந்தருபு ஊட்டும் என்றது "காதலியோடு இல்லறம் நிகழ்த்தி அவளிடத்துப் பிறந்த மக்களுடனே அவளையும் பாதுகாத்துக் கொள்வேனெக் காதலன் குறிப்பித்ததாம்"[67] என்னும் இறைச்சிப்பொருள் கொண்டது என்பர் பின்னத்தூரார். இவ்விறைச்சிப் பொருளோடு பொருந்தி 'கண்டிசின் வாழியோ

குறுமகள் நுந்தை காடே' என்றது உடன்போகியவழித் தலைவன் தலைவியிடம் அவளது தந்தையின் காட்டினை அறிமுகப்படுத்திச் சென்றான். இதனால் உடன்போக்கு உணர்த்தப்படுவதும் இப்பாடலைத் தலைவன் கூற்றாகக் கொள்வதும் குறிப்பாய்ப் பொருந்துவதால் இப்பாடலின் துறைக்குறிப்புக் குறிப்பாய்ப் பொருந்துகிறது எனலாம்.

கபிலர் பாடல்கள்

கபிலர் உடன்போக்கில் எட்டுப் பாடல்களைப்[68] பாடியுள்ளார். இவரது பாடல்கள் குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு"[69] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இவர் குறுந்தொகையிலும், ஐங்குறுநூற்றிலும், அகநானூற்றிலும் பாடல்களைப் புனைந்துள்ளார்.அப்பாடல்கள் குறிஞ்சித் திணையிலும், பாலைத்திணையிலும்"[70] இடம்பெற்றுள்ளன.உடன்போக்குக் கூற்றுகளைத் தோழிக்கு ஐந்து, தலைவிக்கு இரண்டு, நற்றாய்க்கு ஒன்று"[71] என வரையறை செய்துள்ளார். இக்கூற்றுகள் ஐங்குறுநூற்றிலும், தோழி கூற்றிலும், குறிஞ்சித் திணையிலும் மிகுந்திருப்பது கருதத்தக்கது.

தோழி ஓம்படுத்துரைத்தல்

கபிலரின் குறுந்தொகைப் பாட்டு உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தலைமகற்குக் கூறியதாகும். காவல் மிகுதியால் தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காணமுடியாத நிலையை எய்தினர். இதனால் தோழி தலைவியைத் தலைவனொடு போகும்படி கடைக்கூட்டினாள். இத்தகைய சூழலில் தோழி தலைவனிடம் கூற்று நிகழ்த்துகிறாள்.

மூங்கில்கள் நீண்டு வளர்ந்திருக்கக் கூடியதும், குளர்ச்சி பொருந்தியதுமாக மலைச்சாரல் விளங்கியது. அம்மலையின்கண் மரையா என்ற விலங்கு

இலைகளை உண்டு, துயிலுகின்றது. இத்தகைய மலைநாட்டின் தலைவனே! இப்பெருமகள்பால் நீ எப்பொழுதும் அன்புடையவனாய்ப் பாதுகாத்தல் வேண்டும். ஏனெனில் இவள் நின்னையன்றி வேறு எத்தகைய பற்றுக்கோடும் இல்லாதவள் என்பதைத் தோழி,

"ஒருநன் றுடையள் ஆயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி
நன்மலை நாட நின்னல திலளே"[72]

என்பாள். இதற்குச் சிறந்த நன்மை செய்வோரை உலகத்தார் போற்றுவர். அங்ஙனம் போற்றுதல் சிறப்பன்று. சிறு நன்மை செய்தவரையும் போற்றுதலே சிறப்பாம். இவள் நினக்குச் சிறிய நன்மையே செய்பவளாயினும் போற்றுக என்று ஓம்படுத்தவாறு"[73] என்று உரை கூறுவர். இக்கருத்தின் அடிப்படையில் இப்பாடலில் இடம்பெற்றுள்ள நன்மலை நாட என்றது தலைவனையும், புலவி தீர அளிமதி என்றது தலைமகற்கு ஓம்படுத்திக் கூறியதும் தெளியப்பெறும். பெற்றோரையும், உற்றாரையும் விடுத்து உன்னையே தனக்குப் பற்றுக் கோடாகக் கொண்டவள் என்பதை நின்னல திலளே என்ற குறிப்பு உணர்த்தி நிற்கின்றது. இதன்வழி, உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தோழி கூறியது என்பது பொருந்தும்.

ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்

ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் மொத்தம் ஏழு"[74] ஆகும். இப்பாடல்கள் நற்றிணையிலும், அகநானூற்றிலும்"[75] இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களில் நற்றாய்க்கு மூன்று கூற்றும், தோழி, தலைவன், செவிலி ,கண்டோர் ஆகியோருக்கு ஒவ்வொரு கூற்றும்"[76] குறிக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்

நற்றிணையிலும், பாலைத் திணையிலும், நற்றாய் கூற்றிலும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

தோழி ஓம்படுத்துரைத்தல்

நற்றிணையின் தோழி கூற்றுப் பாடல் உடன்போக்குந் தோழி கையடுத்தது என்பதாகும். தலைவனையும், தலைவியையும் உடன்போக்கிற்குத் தோழி ஒருப்படச் செய்தாள். தலைவியைத் தலைவன்பால் வைகிருளில் கொண்டு சென்றாள். அந்நிலையில் தலைவனிடம் தோழி கூற்று நிகழ்த்துகிறாள்.

மலர்கள் விளங்கிய பொழில்சூழ்ந்த ஊரையுடையோனே! நினது பிழைபடாத நல்ல மொழியைத் தலைவி உண்மை எனத் தெளிந்தாள். அதனால் நின்னொடு உடன்போக்கிற்கு ஒருப்பட்டாள். ஆகவே தலைவி முதுமை எய்தினாலும் அவளைக் கைவிடாது பாதுகாப்பாயாக என்பதைத் தோழி,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழூர!"[77]

என்பாள்.

இப்பாடல் யார் கூற்று என்பதற்கான சான்று வெளிப்படையாய் இல்லை. 'நீத்தல் ஓம்புமதி' எனக் கையடை கொடுப்பது பாடலில் கூறப்படுகிறது. இதில் 'ஓம்புமதி' என்ற குறிப்பு, தலைவியப் பாதுகாப்பாயாக எனத் தோழி கூறியதை உணர்த்தி நிற்கின்றது. அகமரபுப்படி தோழி ஓம்படைக் கிளவி கூறுதற்குரியவள்"[78] எனவே, இதனைத் தோழி கூற்று என்றது அகமரபுப்படி குறிப்பாய்ப் பொருந்துகிறது.

'ஊர' என்னும் விளியால் கூற்றினைக் கேட்பவன் தலைவன் என்பதும், ஓம்படைக் கிளவி உடன்போக்கின் பொழுது கூறப்படுவதாதலின், உடன்போக்குந் தோழி கையடுத்தது என்னும் துறைக்குறிப்பு குறிப்பாய்ப் பொருந்தியதும் அறியப் பெறுகிறது.

மாமூலனார் பாடல்கள்

இவர் அந்தணர் மரபினர். முக்காலமும் அறிந்த யோகியார். இதனைத் தொல், பொருள், எரு ஆம் சூத்திரவுரையில் 'பார்ப்பணப் பக்கத்து வகையாவன' என்பதன்கீழ் நச்சினார்க்கினியர் யோகிகளாய் உபாயங்களால் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் றேயத்து அனைநிலை வகையோராவார்' என்று கூறுவதனாலறிக. இவ்வளவு மேம்பாடுற்ற இவர் அகப்பொருட் சுவையை அளவுகடந்து அனுபோக முடையாருஞ் சொல்லமாட்டாதவாறு இன்பம் பெருகத் தெளியக் கூறுவது வியப்புடையதாகும்"[79] என்பர்.

நான்கு பாடல்கள் பாடிய புலவர்

மாமூலனார் உடன்போக்கில் நான்கு பாடல்கள்"[80] இயற்றியுள்ளார். அப்பாடல்கள் முழுவதும் அகநானூற்றிலும்"[81] பாலைத்திணையிலும்"[82] இடம்பெற்றுள்ளன. இவர் பாடல்களில் நற்றாய் கூற்று இரண்டும், தலைவி கூற்று ஒன்றும், தோழி கூற்று ஒன்றும்"[83] அமைந்துள்ளன. இக்கூற்றுகளில் நற்றாய் கூற்று மிகுதியாகும். இவர் நான்கு பாடல்கள் பாடிய புலவர் வரிசையில் இடம்பெறுபவர் ஆவார்.

அன்னையின் சொல்லும் அலரும்

மாமூலனாரின் அகநானூற்றுப் பாட்டு, வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமை தோழி சொல்லியது என்பதாகும். இப்பாடலில் மூங்கில் போன்ற தோளினையும், மையுண்ட கண்களையும், உடைய மகளிர்க்குச் சுரநெறிகள்

செல்வதற்கு அரியவாகும் என்றான் தலைவன். அத்தகையவன் இப்பொழுது நம்மொடு உடன்போக்கினை மேற்கொள்ளும் விருப்பம் உடையவனாக இருக்கின்றான். அதனால் தலைவியே! நீ உதியஞ்சேரலாதனைப் பாடிச் செல்லும் பரிசிலரைப்போல, மகிழ்ச்சியுடன் இருப்பாயாக என்று தோழி கூறுகின்றாள்.

உடன்போகிய பிறகு அன்னையின் கடுஞ்சொல்லில் இருந்தும், ஊர்ப் பெண்டிரின் அலரில் இருந்தும் விடுபடுவோம் என்பதை,

"அன்னை சொல்லும் உய்கம்......
சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்
பொம்மல் ஓதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரால்........"[84]

என்று தோழி சுட்டுவாள். இதில் செலவு அயர்ந்தனர் என்பது தலைவன் உடன்போகும் எண்ணம் கொண்டவனாகத் திகழ்ந்ததைக் குறிக்கும். இப்பாடலில் இடம்பெற்றுள்ள அவரே (65;7) என்றது தலைவனையும், வாழி தோழி (65;7) என்றது தோழி துணையாகிய தலைவியை அழைத்ததையும், நம்மொடு என்றது தோழி தலைவியொடு தன்னையும் உளப்படுத்திக் கூறியதையும் விளக்கி நிற்கின்றது. பாடிச் சென்ற பரிசிலர் போல உவவினி (6-7) என்ற தொடர் தோழி தலைவியிடம் கூறியதை உணர்த்துகிறது. இதன்வழித் துறைக்குறிப்பு வெளிப்படையாகப் பொருந்தும் எனலாம்.

மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள்

உடன்போக்குத் துறையில் மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள் வரிசையில் அம்மூவனார், குடவாயிற் கீரத்தனார் மருதனிளநாகனார் ஆகியோர் குறிக்கத்தக்கவர்கள்.

அம்மூவனார்

இவர் உடன்போக்குத் துறையில் பாடிய பாடல்கள் நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு"[85] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. அப்பாடல்கள் தலைவன், தோழி, நற்றாய் ஆகிய மூவருக்கும் ஒவ்வொரு கூற்றுக்கள் வீதம்"[86] அமைந்துள்ளன. இவரது பாடல்களில் ஒருபாடல் மட்டும்"[87] நெய்தலாகும். எஞ்சியவை பாலைத்திணைப் பாடல்களாக"[88] அமைந்துள்ளன. அம்மூவனார் யார் கூற்றையும் மிகுத்துக் கூறவில்லை என்றபோதிலும், பாலைத்திணையை மிகுதியாகச் சுட்டியுள்ளார்.

தலைவன் மெல்லக் கொண்டேகல்

இடைச்சுரத்தின் வழியாகத் தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்ளும்போது தலைவன் தலைவியிடம் கூறும் முகமாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. தலைவியின் ஊரானது புன்னைமலர் மிகுதியாக உதிர்ந்து மணம் வீசக்கூடிய சோலையாகவும், அச்சோலை மிக்க மணப்பரப்பை உடையதாகவும் திகழ்ந்தது. அத்தகைய இடத்தில் நடந்து திரிந்த தலைவியானவள், தற்பொழுது கற்கள் பதிந்த இடைச்சுரத்தின் வழியாகச் சென்றதன் காரணமாக அவளது மெல்லிய அடிகள் வருந்தின. அவ்வருத்தம் நீங்கும்பொருட்டு ஆலமரத்தின் நிழலில் தங்கி இளைப்பாறி, மேலும் வேண்டிய இடங்களில் தங்கிச் செல்வோம். அதனால் வருத்தமுறாமல் வருவாயாக என்று தலைவியிடம் ஆறுதல் கூறும் தலைவன்,

"அஞ்சுவழி அஞ்சாது அசைவழி அசைஇ
வருந்தா தேகுமதி வாலிழைக் குறுமகள்
....... நும்மூர்ப் புன்னை
வீமலர் உதிர்ந்த தேனாறு புலவின்

கானல் ஆர்மணல் மரீஇக்

கல்லுறச் சிவந்தநின் மெல்லடி உயற்கே"[89]

என்பான். இதில் ஏகுமதி என்னும் ஏவல் குறிப்பால் தலைவன் கூற்று என்பதும் 'குறுமகள்' என்னும் குறிப்பால் கேட்பவள் தலைவி என்பதும் புலப்படும். 'ஆர்மணல் மரீஇக் கல்லுற' என்றதன் வழி உடன்போக்கு உணர்த்தப்பெறுகிறது. 'கல்லறச் சிவந்தநின் மெல்லடி' என்ற தொடரைக் கொண்டு இடைச் சுரத்துக் கூறியது குறிப்பாய்ப் பொருந்தும் எனலாம். எனவே இப்பாடலுக்குத் துறைக்குறிப்புப் பொருத்தமாக அமைகிறது.

குடவாயிற் கீரத்தனார்

இப்புலவர் களவில் ஐந்தும் கற்பில் பன்னிரண்டும் ஆக பதினேழு அகச்செய்யுட்களின் ஆசிரியர். பாலை இவர் மிகுதியும் பாடிய உரிப்பொருள் என்பர். இவரது பாடல்கள் உடன்போக்கில் அகநானூறு, குறுந்தொகை"[90] முதலியவற்றில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்களில் செவிலிக்கு இரண்டு கூற்றும், தோழிக்கு ஒரு கூற்றும்"[91] குறிக்கப்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் பாலைத்திணையாகும். கீரத்தனார் அகநானூற்றிலும், செவிலி கூற்றிலும், மிகுதியாகப் பாடல்களைப் புனைந்துள்ளார்.

தோழி உடன்போக்கு நயப்பித்தல்

கீர்த்தனாரின் குறுந்தொகைப் பாடல் தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது என்பதாகும். தலைவன் நமக்கு அருள்செய்தான். அவ்வருளாவது தலைவன் தலைவியை உடன்கொண்டு தன்னூர் சென்று மணம்புரிவதாகத்

தெரிவித்தான். ஆகவே அவனுடன் நாமும் செல்லுதல் வேண்டும் என்கிறாள் தோழி. உடன்போகும் அவ்வழியானது காற்று கடிதுவீசுவதன் காரணமாக வாகைமரத்தின் நெற்றுக்கள், சிலம்பினைப் போல ஆரவாரிக்கக் கூடியதாகக் காணப்பெற்றது. அத்தகைய சுரத்தின் வழியாகச் செல்வோம் என்பதை,

"கோடை தூக்கும் கானம்

செல்வாம் தோழி நல்கினர் நமரே"[92]

என்பாள்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'நாம்' என்னும் தன்மைப் பன்மைப் பெயர் தலைவியையும், தோழியையும் குறிக்கும். 'நல்கினர்' (369;4) என்ற குறிப்பு தலைவன் உடன்போக்கிற்கு அருள்செய்ததும், 'கானம் செல்வாம் தோழி' (369;3-4) குறிப்பால் அறியப்பெறும். இதில் தோழி என்பது தோழிக்குத் தோழியாகிய தலைவியைக் குறிக்கும் சொல்லாகும். ஆகவே இப்பாடலுக்குத் துறைக் குறிப்புப் பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

மருதனிளநாகனார்

இவரது பாடல்கள் நற்றிணை, அகநானூற்றில்"[93] காணப்பெறுகின்றன. அப்பாடல்களில் தலைவனுக்கு இரண்டு கூற்றும், தோழிக்கு ஒரு கூற்றும்"[94] உரியவை. மருதனிளநாகனார் தலைவன் கூற்றினையும், அகநானூற்றினையும் மிகுதிப்படுத்திக் கூறியுள்ளார்.

தலைவன் இடைச்சுரத்தின்கண் உரைத்தல்

தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்கின்றனர். அத்தகைய சூழ்நிலையில் இடைச்சுரத்தின்கண்ணே தலைவியின் தளர்வறிந்து நீ சிறுபொழுது விளையாடுவாயாக என்கிறான் தலைவன். நான் சென்று வேங்கைமரத்தின் பின்னால் மறைந்திருப்பேன். அவ்விடம் ஆறலைக் கள்வர்

முதலாயினோர் சூழ்ந்து போர்செய்யவரின் அவர்களுடன் போர்செய்து ஓடுமாறு செய்வேன். நின் சுற்றத்தார் நின்னைத் தேடிவரின் அவ்விடம் நான் மறைகுவேன் என்று தலைவன் மொழிவதை,

"............ வேங்கை
மணலிடு மருங்கின் இருபுறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே"[95]

என்பதன்வழித் தெளியலாம். இப்பாடலில் 'நுமர்வரின்' என்ற குறிப்பைக் கொண்டு தலைவியின் தமர் வருதல் பற்றிய தெளிவான குறிப்புக் குறிக்கப்பெற்றுள்ளதை அறியலாம். 'நுந்தை மனைவரை இறந்து வந்தனை' (நற்-362;1-2) என்ற தொடரைக் கொண்டு தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டதையும், இதில் நுமர்வரின் என்ற குறிப்பைக் கொண்டு உடன்போக்கின் வருவர் என ஐயுற்றுக் கூறல் இடம்பெற்றிருப்பர். 'நீவிளை ஆடுக சிறிதே யானே' (362;6) என்ற அடியில் நீ என்றது தலைவியையும், யானே என்பது தலைவனையும் குறிப்பால் உணர்த்துவதையும் உணரமுடிகிறது. ஆகவே இப்பாடலுக்குத் துறைக்குறிப்புப் பொருத்தமாக அமைந்துள்ளது எனலாம்.

இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள்

இரண்டு பாடல்கள் புலவர்களில் ஔவையார், பெரும்பதுமனார், வெள்ளிவீதியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ஔவையார்

இவரது பாடல்கள் இரண்டும் குறுந்தொகையில்"[96] காணப்பெறுகின்றன. இப்பாடல்கள் பாலைத்திணையிலும், செவிலி கூற்று ஒன்றும், தோழி கூற்று ஒன்றுமாக"[97] அமைந்துள்ளன.

தோழி உடன்போக்கு நயப்பித்தல்

ஔவையாரின் தோழி கூற்றுப்படால் தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன் சுரத்து வெம்மையும், தலைமகள் மென்மையும் குறித்துச் செலவழுங்கலுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியதாகும்.

தலைமகள் தலைவனுடன் போக உடன்பட்டாள் இதை அறிந்த தலைவன் மெல்லிய தன்மையுள்ள தலைவி பாலை நிலத்தில் எப்படி நடப்பாள் என்று வருந்தினாள். இதற்குத் தோழி நீரின்கண் நின்ற குவளைமலர் வெப்பமிக்க மேல்காற்று மோதியவிடத்தும் வாடாமல் காணப்பெறும். அதுபோல உன்னுடன் சேர்ந்து வந்தால் தலைவிக்குப் பாலை நிலமும் இன்பந்தரும் என்று கூறித் தலைவியை அழைத்துச் செல்வதற்குத் தலைவனை உடம்படச் செய்கிறாள். இதனை,

"நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்
.......
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே"[98]

என்பாள்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'நும்' என்பது தலைவனைக் குறிப்பதாகும். தோழி தலைவனை நோக்கு மெல்லிய ளேனும் நின்னொடு வரின் பாலைநில

வெப்பத்தை ஆற்றுவரை ஆகலான், அழைத்துப் போகக் கடவை"[99] என்பாள். இதன்வழிக் 'கானமும் இனியவாம் நும்மொடு வரினே' (388;7) என்ற தொடரைக் கொண்டு உடன்போக்கு உணர்த்தப் பெற்றதும், அவ்வுடன்போக்கிற்குத் தலைவனை ஒருப்படச் செய்தது குறிப்பாலும் விளங்கும்.

பெரும்பதுமனார்:

மீளப்பெரும்பதுமனார் என்றொருவர் உளர். இவ்விருவரும் பாடியவெல்லாம் பாலைத்திணையேயாதலின் இருவரும் ஒருவரேயென்று கருதற்கு இடனாயிற்று. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் மல்லி என்றோர் ஊர் உளது. மீளி என்பதே மல்லியென்று திரிந்து வழங்குகிறதோ தெரியவில்லை"[100] என்பர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும் குறுந்தொகையில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்துள்ளன.

பெரும்பதுமனாரின் உடன்போக்குப் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை"[101] ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் இரண்டும் பாலைத்திணையாகவும், கண்டோர் கூற்றாகவும்"[102] அமைந்துள்ளன.

கண்டோரின் இரக்கம்

பெரும்பதுமனாரின் குறுந்தொகைப் பாட்டு செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியதாகும். தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டனர். தலைமக்கள் செல்லும் வழியில் கண்டோர் இவர்களைக் கண்ணுற்று இரங்குவதாக இப்பாடல் புனையப்பெற்றுள்ளது.

உடன்போக்கினை மேற்கொண்ட தலைவனின்காலில் கழல் அணியப்பெற்றிருந்தன. தலைவியின் மெல்லிய அடிகளில் சிலம்புகள் பூட்டப்பெற்றிருந்தன. இவர்களைப் பார்ப்பதற்கு உயர்குடியில் பிறந்தவர்களாகக்

காணப்படுகின்றனர். இத்தலைமக்கள் எவ்வூரினரோ இவர்கள் செல்லும் பாலைவழியானது மிகவும் கொடுமையானது என்று கண்டோர் இரங்குவதை,

"வில்லோன் காலன கழலே தொடியோள்
யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே"[103]

என்பர்.

வில்லோன் (7;1) என்பது தலைவனையும், தொடியோள்(7;1) என்பது தலைவியையும் குறிப்பதாகும். முன்னியோரே (7;6) என்ற குறிப்பைக் கொண்டு தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேன்கொண்டதும், 'கால்பொரக் கலங்கி வாகை வெண்ணெற் றொலிக்கும் வேய்ப்பயில் அழுவம்' என்பதைக் கொண்டு தலைவனும், தலைவியும் செல்லும் இடைச்சுரத்தின் தன்மை சுட்டப்பெறுவதும் அறியப்பெறும் யார்கொல் அளியர் (7;3) என்ற குறிப்பைக் கொண்டு இடைச்சுரத்துத் தலைவன் தலைவியரைக் கண்டு இரங்குபவர் ஆகலின், கண்டோர் கூற்று எனக் கொள்வது பொருந்தும் எனலாம்.

வெள்ளிவீதியார்

இப்புலமகளார் பாடிய அகப்பாடல்கள் பதின்மூன்று அதில் களவிற்கு உரியன ஐந்து; கற்பிற்கு உரியன எட்டு ஆகும். இவர் புறம் யாதும் பாடவில்லை. களவில் சில பாடல்களே பாடியுள்ளாரேனும் அவை பலதுறைமேல் அமைந்திருக்கின்றன. கழற்றெதிர்மறை, இரவுக்குறி, உடன்போக்கு, இடைச்சுரத்துச் செவிலித்தாய், வரைவுக் கவந்தி என்பன இவர் யாத்த பாடல்களின் களவுத் துறைகளாம்"[104] என்பர்.

வெள்ளிவீதியாரின் உடன்போக்குப் பாடல்கள் இரண்டும் குறுந்தொகையிலும், பாலைத்திணையிலும்"[105] இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் செவிலிக்கு ஒரு கூற்றும், தலைவிக்கு ஒரு கூற்றுமாக"[106] அமைந்துள்ளன. வெள்ளிவீதியார் கூற்றுக்களைச் சமமாகப் பங்கிட்டுள்ளார். யார் கூற்றையும் மிகுத்துச் சுட்டவில்லை.

தலைவி நாணழிபிற்கு இரங்கல்

வெள்ளிவீதியாரின் தலைவி கூற்றுப்பாடல் உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது ஆகும். நாணம் நம்முடன் மிகவும் நீண்டகாலம் கிடந்து வருத்தம் அடைந்தது. ஆனால் இனிமேல் காமம் மென்மேலும் நாணத்தை நெருக்குவதால், அந்நாணம் என்னிடத்தில் தங்கிநில்லாது போய்விடும் என்று தலைவி வருத்தம் அடைகிறாள். இச்செயலுக்குக் கரும்பினையுடைய மணல் உயர்ந்த சிறுகரையானது நீர்பெருகி மோதுதலால் அழிந்ததுபோல, நாணம் அழிந்ததாகப் புலவர் உவமை கூறியுள்ளார். தலைவியின் நாணமானது தாங்கும் வரைத்தாங்கி காமத்தினால் அழிந்ததன் காரணமாக அந்நாணம் இரங்கத்தக்கதாய் உள்ளது என்பதை,

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாவே"[107]

என்ற அடிகளில் குறிப்பர்.

இப்பாடலில் நாம் என்று தன்மைப் பன்மையில் இருப்பதைக் கொண்டு தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும் கொள்வதற்கு வாய்ப்பு உண்டு. நாண் நீங்கியமை என்ற தன்னுணர்ச்சியைத் தானே உணர்த்தியதன்வழி இப்பாடலைத்

தலைவி கூற்றாகக் கொள்ளலாம். இப்பாடலில் இடம்பெற்றுள்ள அளிதோ தானே நாணே நம்மொடு (149;1) 'காமம் நெரிதரக் கைந்நில்லாவே' (149;6) என்ற தொடர்களைக் கொண்டு தலைவி நாண் நீங்கியமை கூறியதும் அந்நாணத்திற்கு இரங்கியதும் அறியம்பெறும்.

இதற்கு "கற்பைக் காக்கும் பொருட்டு நாணம் விடப்படவேண்டும். நாண் காவல் கொண்டு கற்பும் காக்கப்படின் நன்று. காமநோய் முடுக்கலால் இப்பொழுது கற்புக்கடம் பூணற்கு நாண் துறந்து உடன்போக்கிசைகின்றேன் என்பாள் காமம் நெரிதரக் கைந்நில்லாவே என்றாள்"[108] என்று உரை கூறுவர். இப்பொருளின் அடிப்படையில் தலைவி நாண் நீங்கியதைக் கூறியதன்வழி தலைவி உடன்போக்கிற்கு உடன்பட்டமையும், உடன்போகவேண்டும் என்ற தோழிக்கு உடன்பட்டமையை உணர்த்தியமையும் குறிப்பால் தெளியப்பெறுகிறது.

ஒரு பாடல் பாடிய புலவர்கள்

நற்றிணையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள், அகநானூற்றில் ஒரு பாடல் பாடிய புலவர்கள் என்று உடன்போக்குத் துறையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள் பகுக்கப்பெற்றுள்ளனர்.

நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

நற்றிணையில் ஒருபாடல் வீதம் பாடிய புலவர்கள் அறுவர். அப்புலவர்கள் ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்"[109], இனிச்சந்தநாகனார்"[110], உலோச்சனார்"[111], கண்ணகாரன் கொற்றனார்"[112], பூதன்தேவனார்"[113], போதனார்"[114] ஆகியோர் ஆவர். உலோச்சனாரின் பாடல் மட்டும் நெய்தல் திணையாகும். எஞ்சியவை பாலைத்திணைப் பாடல்கள்"[115] என்பன கருதத்தக்கன. இவ்வறுவரின் பாடல்களில் நற்றாய்க்கு மூன்று கூற்றும், தலைவன், தோழி, செவிலி ஆகிய மூவருக்கும்

ஒவ்வொரு கூற்றும்"[116] வரையறுக்கப் பெற்றுள்ளன. இவர்களது பாடல்களில் நற்றாய் கூற்றும், பாலைத்திணையும் மிகுதியாகக் காணப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் பாடல் எடுத்துக்கொள்ளப்பெற்றுள்ளது.

ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்

சாதேவன் என்பது ஸஹதேவன் என்னும் வடசொல்லின் திரிபு. "காவிதி என்பது பாண்டிநாட்டு வேளாளரில் உழுவித்துண்போர் அரசராற் பெறுவதோரு பட்டம். அகத்தில் இவர் பெயர் ஆவூர்க் கவுதமண் சாதேவன் என்று காணப்படுகிறது. புலவர் பெரும்பாலோர் தத்தம் ஊரைச் சிறப்பித்துக் கூறும் வழக்கின்படியே, இவர் சேரநாட்டு ஆமூர் என்பதனைச் சிறப்பித்துக் கூறியிருத்தலின், ஆமூர்க்கௌதமன் சாதேவனார் என்றிருக்க வேண்டிய இவர் பெயர், ஏடெழுதுவோரின் மிகையால் ஆவூர்க்காவிதிகள் சாதேவனார் என்றெழுதப்பட்டது போலும். அங்ஙனமாயின் இவர் சேரநாட்டு ஆமூரிலுள்ள கௌதம கோத்திரத்துப் பிறந்த ஸஹதேவ என்னும் அந்தணராவர். ஆமூர் குறும்பொறை என்னும் மலையின் கீழ்பாலுள்ள பாலைநிலத்தின் கண்ணது. அதற்கேற்ப இவர் பாடல்கள் பாலைத்திணையை வர்ணிப்பனவாகும்"[117] என்பர்.

தலைவன் தனது ஊர் காட்டல்

இவரின் பாடலில், தலைவன் தலைவியைக் கொண்டுதலைக் கழிந்தான். அவ்வாறு சென்றபொழுது தனது ஊரினைத் தலைவியிடம் சுட்டிக்கூறினான். அவ்வூரினை அடைவதற்கு நின்னுடைய கூந்தல் காற்றினால் உலருவதற்கு முன் விரைந்து செல்வாயாக என்றான். இதனை,

"......... கோவலர் யாத்த

ஆபூண் தெண்மணி இயம்பும்

உதுக்காண் தோன்றுமென் சிறுநல் ஊரே"[118]

என்பர்.

இப்பாடல் இரு துறைக்குறிப்புகளுடன் உள்ளது. இப்பாடலில் குறிக்கப்பெற்றுள்ள 'ஏகுதி மடந்தை' என்னும் ஏவல் குறிப்பால் கூற்றை நிகழ்த்துபவன் தலைவன் எனலாம். மஞ்ஞை போலநின் வீபெய் கூந்தல் என வருணித்த பின் "மடந்தை" என விளிப்பதால் கூற்றினைக் கேட்பவள் தலைவி எனலாம். இப்பாடலில் இடம்பெறும் தோன்றுமென் சிறுநல்லூரே என்றத் தொடரைக் கொண்டு ஊர்க்காட்டியது எனவும் ஏகுதி என்பது உடன்போக்கு வற்புறுத்தியது எனவும் இரண்டாம் துறைக்குறிப்பால் கூறியமை இப்பாடலுக்கு வெளிப்படையாய்ப் பொருந்தும் எனலாம்.

குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

குறுந்தொகையில் ஒருபாடல் வீதம் பாடியோர் வரிசையில் ஏழு புலவர்கள் குறிக்கப்பெறுவர். அப்புலவர்கள் ஈழத்துப் பூதன்தேவனார்"[119], உறையூர் முதுகொற்றன்"[120], படுமரத்து மோசிகீரனார்"[121], மதுரை ஆசிரியர் கோடங்கொற்றன்"[122], மோசிகீரனார்"[123], மோதாசானார்"[124], தங்கால் முடக்கொல்லனார்"[125] முதலியோர் ஆவர். தங்கால் முடக்கொல்லனாரின் பாடல் மட்டும் குறிஞ்சியாகும். மற்றவை பாலைத்திணைப்பாடல்களாக"[126] அமைகின்றன. இவ்வெழுவரின் பாடல்கள் தோழிக்கு மூன்று கூற்றினையும் கண்டோருக்கும் செவிலிக்கும் முறையே இரண்டு கூற்றுகளையும்"[127] கொண்டுள்ளன. இவர்களது

பாடல்களில் பாலைத்திணையும், தோழி கூற்றும் மிகுந்துள்ளன. சான்றிற்காக மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனாரின் பாடல் விளக்கப்பெறுகின்றது.

மதுரை ஆசிரியர் கோடன் கொற்றனார்

இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். "இவர் ஊர் மதுரை போலும்"[128] என்பர். உடன்போக்குத் துறையில் குறுந்தொகையில் (144) இவரது பாடல் குறிக்கப்பெற்றுள்ளது. இப்பாடல் செவிலி கூற்றில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தலைவியின் அடிநினைந்து இரங்கல்

தலைவனுடன் சேர்ந்துவாழ விரும்பிய தலைவி, தமர் அறியாமல், தாயை விட்டுப் பிரிந்ததைச் செவிலி, தன் சொல்வன்மையால் வெளிப்படுத்துகிறாள். தலைவி தோழிப்பெண்களுடன் கூடி மலர்க்கொய்தல், கடலாடுதல் போன்ற தனக்கு விருப்பமான விளையாட்டுக்களில் கூட விருப்பம் இல்லாமல் இருக்கின்றாள். அதற்குக் காரணம் தன் காதலனுடன் கூடி வாழ்வதே மகிழ்ச்சியானது எனக் கருதினாள். அம்மகிழ்ச்சியைப் பெரும்பொருட்டு தலைவியானவள் மலைநாட்டின் வழியாகப் பருக்கைக் கற்கள் நிரம்பிய வழியில் செல்கிறாள். இதனால் தலைவியின் அடியானது சிதைந்து போனதை,

"பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ
சென்மழை தவழும் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே"[129]

என்பர். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'பரல்பாழ் படுப்பச் சென்றனள் மாதோ' (144;5) என்ற தொடரைக் கொண்டு உடன்போக்கு உணர்த்தப்படுகிறது. இப்பாடலில் யார் கூற்று என்பதற்குச் சான்று எதுவும் வெளிப்படையாகச் சுட்டப்பெறவில்லை. ஆனால் 'மாதோ' (144;5) என்ற சொல் மகட்போக்கிய செவிலித்தாய் இரங்கியதை

உணர்த்தி நிற்கின்றது. இதனால் செவிலி கூற்றாகக் கொள்வது குறிப்பாய்ப் பொருந்தும் எனலாம்.

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்களில் பதினொன்று புலவர்கள் இடம்பெறுவர். அப்புலவர்கள் உறையூர் மருத்துவன் தாமோதரனார்"[130], ஒரோடோகத்துக் கந்தரத்தனார்"[131], கண்ணம்புல்லனார்"[132], கருவூர் கண்ணம்பாளனார்"[133], காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்"[134], சேந்தம்பூதனார்"[135], சேரமான் இளங்குட்டுவன்"[136], தாமோதரனார்"[137], நக்கீரர்"[138], மாங்குடி மருதனார்"[139], வண்ணப்புறக் கந்தரத்தனார்"[140] ஆகியோர். இவர்களது பாடல்கள் அனைத்தும் பாலைத்திணைப் பாடல்கள்"[141] ஆகும். இப்பாடல்களில் தலைவனுக்கு ஒரு கூற்றும், தலைவிக்கு ஒரு கூற்றும், தோழிக்கு இரண்டு கூற்றும், செவிலிக்கு நான்கு கூற்றும், நற்றாய்க்கு மூன்று கூற்றும்"[142] வரையறுக்கப்பெற்றுள்ளன. இவற்றில் செவிலி கூற்று மிகுதியாகும்.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்:

இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். வணிகர் மரபினர். 'கழைமாய் காவிரி கடன் மண்டு பெருந்துறை' எனத் தம்மூரைச் சிறப்பித்தலின் இவர் அக்காவிரிப்பூம் பட்டினத்தார் என்றே கூறலாம். இவர் பாடியனவாக நற்றிணையில் (க) குறுந்தொகையில் (க) அகத்தில் (உ) புறத்தில்(ரு) வள்ளுவர் மாலையில் (க) ஆக பாடல்கள் உள"[143]. இவர் உடன்போக்குத் துறையில் ஒரு பாடலைப் புனைந்துள்ளார்.

தலைவன் போக்குடன்படுதல்

இவரின் அகநானூற்றுப் பாடல் உடன்போக்குடன்படுவித்த தோழி தலைமகட்குச் சொல்லியதாகும். தலைவன் பிரிவானோ என்று எண்ணித் தலைவி வருத்தம் அடைகிறாள். அந்நிலையில் தலைவன் போக்குடன்பட்ட செய்தி தலைவிக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. தோழியின் வாயிலாகவே தலைவனின் உடன்போக்குக் கருத்தைத் தலைவி உணர்ந்து கொள்கிறாள். இதனை,

"....... பணைத்தோள்
குவளை யுண்கண் இவளும் நம்மொடு
வரூஉம் என்றனரே காதலர்
வாராய் தோழி முயங்குகம் பலவே"[144]

என்ற பாடல் அடிகள் உணர்த்தி நிற்கின்றன.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'இவளும்' என்ற குறிப்புத் தலைவியைக் குறிக்கும். 'நம்மொடு வரூஉம் என்றனரே காதலர்' என்ற தொடரைக் கொண்டு தலைவனை உடன்போக்கிற்கு உடன்படுவித்ததும், தலைவனின் எண்ணத்தை தோழி கொண்டு கூறியதும் அறியப்பெறும். 'வாராய் தோழி' என்ற குறிப்பைக் கொண்டு, தோழி தனது துணையாகிய தலைவியை அழைக்கும் முகத்தான் துறைக்குறிப்பு வெளிப்படையாய்ப் பொருந்தும் எனலாம்.

உடன்போக்குப் பாடல்களில் இலக்கண மெய்ம்மைகளை ஒப்பிட்டு மதிப்பிடல்

சங்க இலக்கியத்தில் உடன்போக்குத் தொடர்பான பாடல்கள் நூற்று இருபத்தைந்து ஆகும். இவற்றில் தலைவனுக்குப் பதினைந்து பாடல்கள்,

தலைவிக்குப் பதினொன்று பாடல்கள், தோழிக்கு இருபத்தைந்து பாடல்கள், செவிலிக்கு இருபத்துநான்கு பாடல்கள், நற்றாய்க்கு முப்பத்தைந்து பாடல்கள், கண்டோருக்குப் பதினைந்து பாடல்கள் என்று வரையறுக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்திலும் இலக்கண மெய்ம்மைகள ஒப்பிட்டு மதிப்பிடப் பெற்றுள்ளன. இம்மதிப்பீட்டில் உரையாசிரியர்களின் துறைக்குறிப்பும், பாடற்குறிப்பும் கருத்தில் கொள்ளப்பெற்று, இலக்கண மெய்ம்மைகள் பொருத்திப் பார்க்கப் பெற்றுள்ள பகுதி பின்வருமாறு அமைகிறது. பின்வரும் அட்டவணையில் வரிசை எண் தொடச்சியாகக் கணக்கிடப் பெறாமல், கூற்று வாரியாகக் கணக்கிடப் பெற்றுள்ளது

4:2 உடன்போக்குப்பாடல்களில் இலக்கண மெய்ம்மைகள்பொருத்தம்

சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
ஒன்றாத் தமரினும் (தொ.பொ.அ.44)	தலைவியின் மென்மைத்தன்மைக்கு இரங்கல்	அகம்;121
1. பருவத்தும்	ஏலாத வேனிற்பருவத்தின்கண் கூறல்	கலி;20
2. சுரத்தும்	தலைவன் இடைச்சுரத்தில் கூறல்	நற்;9
3. விடுப்பினும்	தலைவன், தலைவிக்குக் காட்டது கடுமை கூறி விடுத்தல்	நற்;162 கலி;20
4. இடைச்சுர மருங்கில் அவள்தமர்.. எய்திக் கடைக்கொண்டு பெயர் -தலிற் கலங்கஞர் எய்தி	தலைவியின் தமர்வருவர் என ஐயுற்றுக் கூறல்	நற்;362
5. அப்பாற்பட்ட ஒருதிறத் -தானும்	தலைவியிடம் வழிவந்த நன்மைகூறி வருந்தாதே எனத் தலைவன் கூறல்	நற்;9,76,202 ஐங்;395,396 அகம்;121
	தலைவன் தலைவியை மருட்டிக் கூறல்	அகம்;99
	தலைவன் உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்	நற்;384
	உடன்போகியவழித் தலைவன் மகிழ்ச்சிக்கு நாணித் தலைவி கண்புதைத்துழித் தலைவன் கூறல்	ஐங்;361
	உடன்போகின்றான் நலம்பாராட்டல்	ஐங்;363
	தலைவன் தலைவியின் நடையை வியத்தல்	அகம்;257
	தலைவன் தன் ஊர் சார்ந்தமை கூறல்	நற்;264
	தலைவன் மீளவுரைத்தல்	அகம்;261

சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
1. இருவகைக்......... (தொ.பொ.க;105)		
நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும்	தலைவி நாண்நீங்கியமை கூறி இரங்கல்	குறுந்;149
2. எஞ்சி யோர்க்கும் (தொ.பொ.அ;145)	தலைவி போக்கிற்கு உடன்பட்ட-மையைத் தோழியிடம் கூறல்	அகம்;95,325 நற்;149
	தலைவன் போக்கு ஒருப்பட் -டெழுதலைத் தலைவி தோழியிடம் கூறல்	ஐங்;286
	தலைவி போக்கு ஒருப்பட்டதைத் தோழி கூறல்	கலி;20
	யான் போகின்றது ஆயத்திற்கு உரைமின் என்றல்	ஐங்;384,385
	நின் ஐயன்மார் வந்தவழி நிகழ்ந்தது என் என்ற தோழிக்குத் தலைவி கூறல்	ஐங்;312
	மீள்கின்றாள் என்வரவு ஆயத்தார்க்குக் கூறுமின் என்றல்	ஐங்;397
	உடன்போய் மீண்ட தலைவி தோழிக்குக் கூறல்	ஐங்;203
	மீண்ட தலைவி வழிவரல் வருத்தம் கண்டு வருந்திய தோழிக்குக் கூறல்	ஐங்;392

சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
தலைவரும்........		அகம்;65
(தொ.பொ.அ.42)	தோழி தலைவனுக்குத் தலைவியின் விழுமம் கூறல்	குறுந்;124 ஐங்;305
1. தலைவரும் விழுமநிலை -யெடுத் துரைப்பினும்	தோழி தலைவிக்குத் தலைவனின் விழுமம் கூறல்	குறுந்;217
2. போக்கற் கண்ணும்	தோழி தலைவனை உடன்போக்கிற்கு உடன்படுத்தல்	குறுந்;388 ஐங்;303 அகம்;283
	தலைவி போக்கு நேர்ந்தமையைத் தோழி கூறல்	குறுந்;262
	போக்கற்கண் தோழி தலைவிக்குக் கூறல்	குறுந்;262
3. விடுத்தற் கண்ணும்	தோழி தலைவியை உடன்போக்கிற்கு ஒருப்படக் கூறல்	நற்;149 குறுந்;383,343, 369 ஐங்;200,235, 236,254,364 அகம்;65,221, 285,259
	தோழி ஓம்படைகூறிவிடுத்தல்	நற்;10, குறுந்;115
4. நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்	தோழி நீக்கலின் வந்த தம்முறு விழுமம் கூறல்	நற்;12
5. இயல்புற	தலைவன் வரைந்ததைத் தோழி தாய்க்குக் கூறல்	ஐங்;280
	தலைவி மீண்டுழித் தோழி ஊரது நிலைமை கூறல்	ஐங்;398

	சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
1.	சேரியும் சுரத்தும் (தொ.பொ.அ;40)	செவிலி இடைச்சுரத்தில் வினாதல்	நற்;198 ஐங்;389 குறுந்;44
2.	எஞ்சி யோர்க்கும் (தொ.பொ.அ.42)	செவிலி இடைச்சுரத்தில் பெண்மானைக் கண்டு கூறல்	அகம்;7
3.		செவிலி தன்னை யாரென்று வினனி-யோர்க்குக் கூறல்	ஐங்;380
4.	களவு அலராயினும் (தொ.பொ.க; போக்குடன் அறிந்தபின்... நிற்றற் கண்ணும்	செவிலி மனையின்கண் மயங்கிக் கூறல்	அகம்;49, 189
		செவிலி கற்பின் ஆக்கத்து நிற்றற் கண் கூறல்	குறுந்;15
5.	தன்னும் அவனும் தொ.பொ.அ; மொழிப்பொருள் தெய்வம்	செவிலி தெய்வத்தை வாழ்த்தல்	குறுந்;378
6.	தீமை	செவிலி சுரம்நினைந்திரங்கல்	குறுந்;144
		செவிலி அடிநினைந்திரங்கல்	குறுந்;144, 356 அகம்;89, 356,397
7.	அச்சம்	தலைவி விலங்கினைக் கண்டு அஞ்சும் அச்சத்தின்கண் நற்றாய் கூறுதல்	அகம்;15
8.	முன்னிய காலம் மூன்றொடு விளக்கி	செவிலி முன்னிய காலம் மூன்றில் தலைவியின் இறந்தகாலம் பற்றிக் கூறல்	அகம்;17
9.	போகிய திறத்து புலம்பலும்	செவிலி கவன்று உரைத்தல்	குறுந்;44, 84 ஐங்;389 அகம்;15, 117,385, 369.

	சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
	தன்னும்...... (தொ.பொ.அ;39)	நற்றாய் தன்னையும் தலைவியையும்	நற்;271
1.	தன்னும் அவனும் அவளும் சுட்டி	தலைவனையும் சுட்டிப் புலம்பல்	ஐங்;372 அகம்;203
2.	மன்னுநிமித்தம்	நற்றாய் புள்நிமித்தம் பார்க்குமிடத்துக் கூறல்	ஐங்;391
3.	மொழிப்பொருள் தெய்வம்	நற்றாய் தெய்வத்தைப் பராவுதல் வேலனை வினாதல்	அகம்;35, 195
4.	நன்மை	நற்றாய் மகளின் நன்மை கருதிய நல்வினையை மகிழ்ந்து கூறல்	ஐங்;371
5.	தீமை	நற்றாய் சுரம்நினைந்திரங்கல்	நற்;66,179 குறுந்;396
		நற்றாய் அடிநினைந்திரங்கல்	நற்;277 அகம்;145 153,219 ஐங்;373
6.	அச்சம்	நற்றாய் உடன்போகிய மகளின் அச்சத்தின்கண் இரங்கிக் கூறல்	நற்;29,305 ஐங்;374 அகம்;63, 105,207, 263,321
7.	முன்னிய காலம் மூன்றொடு விளக்கி	நற்றாய் முன்னிய காலம் மூன்றொடு விளக்கிப் புலம்பல் (இறந்த காலம்)	நற்;110, 179 ஐங்;377, அகம்;383
8.	தோழி தேஎத்து	தலைவி போகியதிறத்துத்தோழியின் ஆற்றாமை கண்ட நற்றாய் புலம்பல்	ஐங்;378
9.	கண்டோர் பாங்கினும்	தலைவி உடன்போகிய திறத்து நற்றாய் அயல்மனைமாதரிடம் புலம்பல்	நற்;184

	சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
10.	போகிய திறத்து நற்றாய் புலம்பலும்	நற்றாய் கவன்று உரைத்தல்	ஐங்;372 அகம்;165 315
11.	அன்ன பிறவும்	நற்றாய் தலைவனின் தாயை வெகுண்டு கூறல்	நற்;293 ஐங்;373, 399
		நற்றாய் தீவினையை வெகுண்டு புலம்பல்	ஐங்;376
		நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதல்	ஐங்;399
		உடன்போய தலைவி வந்துழி நற்றாய் சுற்றத்தார்க்குக் கூறல்	ஐங்;394
		வருந்திய செவிலியைக் கண்ட நற்றாய் கூறல்	ஐங்;313
	ஏமப் பேரூர் (தொ.பொ.அ;40)		
12.	சுரத்தும்	நற்றாய் சேரியோரை வினாதல்	ஐங்;375 அகம்;275
13.	களவு....... (தொ.பொ.க;113) போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழுமி கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்.	நற்றாய் மனையின்கண் வருந்திக்கூறல்	நற்;143

	சூத்திரம்	இலக்கண மெய்ம்மைகள்	சங்கப்பாடல்கள்
1.	பொழுதும் ஆறும் (தொ.பொ.அ;43) பொழுதும் ஆறும் வழுவின் ஆகிய	கண்டோர் தலைமக்களுக்குப் பொழுதும் ஆறும் வழுவின் ஆகிய குற்றம் காட்டல்	குறுந்;390 ஐங்;382
2.	புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்தெதிர் கூறி விடுப்பினும்	கண்டோர் தலைமக்களைக் கண்டு வியந்து கூறல்	நற்;2 குறுந்;229 ஐங்;383,381
3.	தாய்நிலை கண்டு தடுப்பினும்	கண்டோர் தாய்நிலை கண்டு தடுத்தற்கண் கூறல்	ஐங்;386,390, 387 கலி;8
4.	விடுப்பினும்	கண்டோர் தாய்நிலை கண்டு விடுப்பினும் கூறல்	ஐங்;388
5.	சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும்	கண்டோர் சேய்நிலை அகன்றோர் (தலைமக்கள்) செலவின்கண் கூறல்	நற்;324 குறுந்;7, ஐங்;387 அகம்;165
6.	வரவினும்	சேய்நிலைக்கு அகன்றோர் வரவின்கண் கண்டோர் கூறல்	ஐங்;393

தலைவன் கூற்று, சங்கப்பாக்களில் 'தலைவன் மெல்லக் கொண்டேகல்' என்ற இலக்கண மெய்ம்மை மிகுதியாக (6) இடம்பெற்றுள்ளது. 'ஒன்றாத் தமரினும்' என்னும் நூற்பாவின்கண் குறிக்கப்பெறும் 'அப்பாற்பட்ட ஒருதிறத்தானும்' என்னும் கூற்றுவகைக்குள் இம்மெய்ம்மை அடங்கும். தலைவன் உடன்போக்கில் தனது பொறுப்புணர்ந்து, தலைவியைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றமையை இம்மெய்ம்மை உணர்த்தி நிற்கின்றது.

தலைவியின் சங்கப்பாடலில் 'தலைவி போக்கிற்கு உடன்பட்டமையைத் தோழியிடம் கூறல்' என்கிற மெய்ம்மை மிகுதியாகச் (3) சுட்டப்பெற்றது. இதற்குரிய

காரணத்தை ஆராயும்போது அறத்தொடு நிற்கும் அச்சத்தை நீக்கவும், தலைவனுடன் உறவை நீட்டிக்கவும் விரும்பிய தலைவி போக்கிற்கு உடன்பட்டமையை அறியமுடிகிறது.

தோழி கூற்றுச் சங்கப்பாக்களில், 'தோழி தலைவியை உடன்போக்கிற்கு உடன்படச் செய்தல்' என்னும் இலக்கண மெய்ம்மை மிகுதியும் (14) காணப்பெறுகின்றது. தோழி தலைவியின் இணைபிரியாக் கேண்மையள். ஆகலின், தலைவி இன்னாச் சூழல்களைக் கடப்பதற்குத் தோழி வழிவகை செய்வதுடன், களவைக் கற்பாக்கும் முயற்சியில் ஈடுபட்டதையும், உடன்போக்கிற்கு உடன்படச் செய்தலின் மிகுதி குறித்து நிற்கின்றது.

செவிலியின் உடன்போக்குப் பாடல்களில் 'செவிலி கவன்று உரைத்தல்' என்கிற மெய்ம்மை அதிகமாக இடம்பெற்றுள்ளது. செவிலி தலைவியைக் குழந்தைப் பருவம் முதல் பேணிவளர்த்தவள், ஆதலின் தலைவியின் பிரிவு செவிலிக்குத் 'தாங்கொண்ணாத் துயரத்தை அளிக்கின்றது. அவ்வகையில் 'மிகுதியாகச் செவிலி கவன்று' உரைப்பது குறிக்கப்பெறுவது கருதத்தக்கது.

நற்றாய் கூற்றுப்பாடல்களில் 'நற்றாய் மகளின் அச்சத்தின்கண் இரங்கல்' என்ற மெய்ம்மை மிகுதியாகச் சுட்டப்பெற்றுள்ளது . தலைவி பெதும்பைப் பருவத்தினள். ஆனால் நற்றாயோ அன்பின் மிகுதியால் அவளைக் குழந்தைப் பருவத்தினளாகவேக் கருதினாள். தலைவியின் இளமை, மென்மை ஆகியவற்றை எண்ணிப் பார்க்கும் நற்றாயின் உள்ளமானது, அதே வேளையில் தலைவியின் அச்சத்தின்கண்ணும் இரக்கம் கொள்கிறது எனலாம்.

கண்டோர் கூற்றுப்பாடல்களில் 'கண்டோர் சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறல்', 'தாய்நிலை கண்டு தடுத்தற்கண் கூறல்' என்ற இருமெய்ம்மைகளும் மிகுதியும் குறிக்கப்பெற்றுள்ளன. கண்டோர் ஆறுதலும்

அறநெறியும் காட்டும் இயல்பினர். அவ்வகையில் தலைவி, தலைவன் பாராட்ட, இனிது சென்றனள் என்றும் அப்போக்கே (உடன்போக்கே) அறநெறி என்றும் சுட்டி, நற்றாயின் புலம்பலைத் தவிர்க்க முயன்றதை இவ்விரு மெய்ம்மைகளும் விளக்கி நிற்கின்றன.

உடன்போக்கின் தனித்தன்மைகள்

உடன்போக்குத் துறையில் அமைந்த சங்கப்பாக்கள் காட்டும் தனித்தன்மைகளில் உடன்போக்குச் சொல்லாட்சி, உடன்போக்கிற்கான காரணங்கள், உடன்போக்கு நிகழும் சூழல்கள், உடன்போகும் பொழுதும், காலமும், உடன்போகும் முறையும் களமும், உட்னபோக்கின் பின்புலம் ஆகியன குறிக்கத்தக்கன.

உடன்போக்கு – சொல்லாட்சி

தலைவனும், தலைவியும் பெற்றோர் அறியாமல் ஒருங்கு சேர்ந்து செல்கின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் உடன்போதல் என்ற சொல்லைக் குறிக்க, சங்கப்பாக்கள் பல்வேறு சொற்களைக் கையாண்டிருப்பது கருதத்தக்கது.
உடன்போக்கினைக் குறிக்கும் சொற்களைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

4.3 உடன்போக்கு – சொல்லாட்சி

	நூ.பெ.	பா.எண்.	தலைவன் கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்.	9	ஏகுமதி	9
2.	நற்.	76	ஏகுமதி	5
3.	நற்	162	நும்மொடு வருவல்	6
4.	நற்	264	ஏகுதி	6
5.	நற்	362	இறந்து	2
6.	நற்	384	நடக்க	8
7.	அகம்	257	எம்மொடு படீஇயர்	4

	நூ.பெ.	பா.எண்.	தலைவி கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	ஐங்	286	புகர்	4
2.	ஐங்	384	இறந்தனள்	4
3.	அகம்	325	நின்னொடு செல்கம்	13
			போகி	20

	நூ.பெ.	பா.எண்.	தோழி கூற்றில் குறிக்கப்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	12	நும்மொடு வரவு	9
2.	நற்	149	செலவயர்ந்து	9
3.	குறுந்	343	பெயரு மாறே	7
4.	குறுந்	369	செல்வாம்	4
5.	நற்	388	நும்மொடு வரினே	7
6.	ஐங்	200	வந்தனன்	2
7.	ஐங்	235	எழுகமோ	4
8.	ஐங்	236	செல்கம் எழுகமோ	4
9.	ஐங்	254	கொண்டனர் செல்வர்	4
10.	அகம்	65	செலவயர்ந் தனரால்	9
11.	அகம்	283	செலவு தலைக்கொண்ட	3
12.	அகம்	285	அவளும் நம்மொடு வருஉம்	14,15

	நூ.பெ.	பா.எண்.	கண்டோர் கூற்றில் இடம்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	2	முன்னுற்று நீங்கும்	7,8
2.	நற்	324	நடை பயிற்றுமே	9
3.	குறுந்	7	முன்னியோரே	6
4.	குறுந்	390	செல்லாதீமோ	2
5.	ஐங்	381	உடன்புணர் கொள்கை	5
6.	ஐங்	386	புணர்ந்து சென்றனளே	2
7.	ஐங்	388	முன்னிய	5
8.	அகம்	165	இறந்த	5

	நூ.பெ.	பா.எண்.	செவிலி கூற்றில் இடம்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	198	கழிந்த	3
2.	குறுந்	144	சென்றனள்	5
3.	குறுந்	356	கடுகுபு போகி	2
4.	குறுந்	378	போகிய	5
5.	குறுந்	396	அவனொடு செலவே	7
6.	ஐங்	380	போகிய	1
7.	ஐங்	389	சென்றனள்	4
8.	அகம்	7	படர்தந்தோளே	13
9.	அகம்	17	செல்லத் தாமே	10
10.	அகம்	49	உடன்கழிதல்	13
11.	அகம்	63	இறந்தது	3
12.	அகம்	117	போகி	4
13.	அகம்	145	இறந்தனள்	10
14.	அகம்	153	ஒய்யென	7
15.	அகம்	189	அவனொடு சென்று	9,10
16.	அகம்	321	இறந்தோள்	17
17.	அகம்	385	கழிந்த	11
18.	அகம்	397	படர்தர (உடன்கொண்டு செல்ல)	8

	நூ.பெ.	பா.எண்.	நற்றாய் கூற்றில் இடம்பெறும் சொல்லாட்சி	பாடல் அடி
1.	நற்	66	புணர்ந்தனள்	6
2.	நற்	179	இறந்தனள்	9
3.	நற்	184	சென்றனள்	3
4.	நற்	271	கழிந்த	7
5.	நற்	279	கழிந்த	11
6.	நற்	293	கொண்டுடன் போக	8
7.	ஐங்	313	இறந்தனள்	5
8.	ஐங்	371	போகிய	5
9.	ஐங்	372	இறந்த	4
10.	ஐங்	373	உய்த்த	4
11.	ஐங்	374	இறந்தோளே	4
12.	ஐங்	375	நீங்கினளோ	5
13.	ஐங்	376	போக்கிய	5
14.	ஐங்	377	சென்றனன்	3
15.	ஐங்	378	போகிய	3
16.	ஐங்	379	புணர்ந்து செலவே	4
17.	ஐங்	394	இறந்த	3
18.	அகம்	15	போகி	12
19.	அகம்	35	போக்கு	10
20.	அகம்	55	கழிந்த	6
21.	அகம்	105	செலவே	17
22.	அகம்	195	இறந்த	1
23.	அகம்	219	நடக்கும்	18
24.	அகம்	263	கழிந்த	9
25.	அகம்	275	போகிய	15
26.	அகம்	315	போகி	14

தலைவன் கூற்றில் ஏகுதி, ஏகுமதி, இறந்த, நும்மொடு வருவல் என்பதும் தலைவி கூற்றில் புகர் என்பது தோழி கூற்றில் செல்கம், செல்வர், செல்வாம்,

நும்மொடு வரினே, நும்மொடு வரவு, எழுகமோ, எம்மொடுஞ் சென்மோ, செலவயர்ந்து, பெயருமாறே என்பதும் குறிக்கப் பெற்றுள்ளன.

கண்டோர் கூற்றில் முன்னிய, முன்னியோர், முன்னுற்று நீங்கும், உடன்புணர், புணர்ந்துடன் சென்றனர், இறந்தோன் என்பதும் செவிலி கூற்றில் போகிய, சென்றனள், கழிந்த, போகி படர்தர என்பதும் நற்றாய் கூற்றில் போகிய, இறந்த, உய்த்த, இறந்தோள், நீங்கினள், போக்கிய, சென்றனன், புணர்ந்து செலவே, இறந்தனள், கழிந்த, கொண்டுடன் போக, புணர்ந்தனள், சென்றனள் என்பதும் உடன்போதலைக் குறிக்கும் சொற்களாக மேற்கண்ட அட்டவணையின் வழி அறியப்பெறுகின்றது.

உடன்போக்கினைக் குறிக்கும் சொல்லாட்சியில் கொண்டுடன் போக, போகிய, போக்கு ஆகிய சொற்களில் தொல்காப்பியமும்"[145], சங்க இலக்கியமும் ஒத்துச்செல்கின்றன. தொல்காப்பியம் கொண்டுதலைக் கழிதல்"[146] என்று சுட்டுவதைச் சங்க இலக்கியம் செல்வுதலைக் கொண்ட என மாற்றி மொழிந்துள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் கடைக்கொண்டு பெயர்தல்"[147] என்ற சொல்லாட்சி பெயருமாறே என்று சுருக்கமாகவும் வழங்கப்பெற்றுள்ளது.

தலைவன் கூற்றில் இடம்பெறும் சொல்லாட்சியில் தொல்காப்பியம் கடைக்கொண்டு பெயர்தல்"[148] என்று குறிக்க, சங்க இலக்கியம் அதனைத் தோழி கூற்றில் பெயருமாறே எனச் சுட்டுகிறது. நாற்றாய் கூற்றில் குறிக்கப்பெறும் 'போகிய' என்ற சொல்லாட்சியில் தொல்காப்பியமும்"[149], சங்க இலக்கியமும் ஒத்துச் செல்கின்றன.

செவிலி கூற்றில் தொல்காப்பியம் போக்குடன்"[150] என்றும் சங்க இலக்கியம் போகிய என்றும் குறிப்பது கருதத்தக்கது. கண்டோர் கூற்றில் இடம்பெறும்

சொல்லாட்சியில் தொல்காப்பியம் புணர்ந்தோர் என்று சுட்டியதையே"[151] சங்க இலக்கியமும் புணர்ந்துடன் என பின்பற்றிச் செல்கின்றது.

உடன்போக்கிற்கான காரணங்கள்

தொல்காப்பியத்தில் உடன்போக்கிற்கான காரணங்கள் தலைவிக்குரிய கூற்றில் தொகுக்கப்பெற்றுள்ளன. தொல்காப்பியர் உடன்போக்கிற்கான காரணங்களை விரிவாக விளக்கிக் கூறுகிறார். இதனை,

"ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉ
பிரித லச்சம் உண்மை யானும்
அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்குமென்று
அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்"[152]

என்று வரிசைப்படுத்துவர். தொல்காப்பியரைவிடச் சங்க இலக்கியம் கூடுதலான காரணங்களைச் சுட்டிச்செல்வதை பின்வரும் அட்டவணை உணர்த்துகிறது.

4:4 உடன்போக்கின் காரணங்களை உணர்த்தும் சங்கப்பாக்கள்

	நூ.பெ.	பா.எண்.	அம்பல் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	நற்	149	மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற	3

	நூ.பெ.	பா.எண்.	அலர் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	நற்	76	பேரலர் நும்மூர்	6
2.	நற்	149	அலர்சுமந்து ஒழிக இவ்வழுங்கல்	10
3.	குறுந்	262	ஊஉர் அலர்எழச் சேரி கல்	1
4.	ஐங்	372	மூதூர் அலர்எழ	3
5.	அகம்	95	கௌவை மேவல ராகி	11
6.	அகம்	65	சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்	4

	நூ.பெ.	பா.எண்.	அம்பலும் அலரும் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	நற்	143	அம்பன் மூதூர் அலர்வாய்ப் பெண்டிர்	7
2.	அகம்	203	அலர்விணை மேவல் அம்பற் பெண்டிர்	3

	நூ.பெ.	பா.எண்.	இற்செறித்தல் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	ஐங்	385	எற்கெடுத்திருந்த வறனில் யாய்க்கே	6
2.	அகம்	7	காப்பும் பூண்டிசின்	5
			நல்லில் அருங்கடி நீவி	8

	நூ.பெ.	பா.எண்.	ஊழ்வினை காரணமாதல்	பாடல் அடிகள்
1.	குறுந்	229	நல்லைமன் றம்ம பாலே	5
2.	ஐங்	376	போக்கிய புணர்த்த வறனில் பாலே	5

	நூ.பெ.	பா.எண்.	அன்னையின் அச்சுறுத்தல்	பாடல் அடிகள்
1.	நற்	149	சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப	4
2.	குறுந்	262	அலைக்கும் அறன்இல் அன்னை	2
3.	அகம்	65	அன்னை சொல்லும் உய்கம்	2

	நூ.பெ.	பா.எண்.	தலைவியின் தடையும் அச்சமும் காரணமாதல்	பாடல் அடிகள்
1.	நற்	143	அறியேன் போல உயிரேன் நாறிய நாறுநின் கதுப்பென் றேனே	9,10
2.	ஐங்	236	அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயிற்று	1
3.	அகம்	7	தன்சிதை வறிதல் அஞ்சி	9
4.	அகம்	95	அன்னை முன்னர்யாம்	14
			என்னிதற் படலே	15
5.	அகம்	321	யாயறி வுறுதல் அஞ்சி	16
6.	அகம்	325	 அன்னையும்	4
			உட்கொண் டோலாள் காக்கும்	5

எனவே உடன்போக்கினை மேற்கொள்வதற்கு அம்பல், அலர், அம்பலும் அலரும் இணைந்த நிலைகள், அன்னையின் அச்சுறுத்தல், அன்னையின் முன்நிற்க அஞ்சும் தலைவியின் தடையும் அச்சமும், ஊழ்வினை, இற்செறிப்பு ஆகிய காரணிகள் வரையறுக்கப் பெற்றுள்ளன.

இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில "தலைவியின் காதல் உணர்ச்சிக்கும், தாயின் குடிப் பெருமை காக்கும் பாதுகாப்பு உணர்ச்சிக்கும் இடையே நடைபெறும் மௌனப் போராட்டத்தில் தாயின் அலைப்பினின்று விடுபடத் தோழிக்கு உடன்போக்கே சிறந்த வழியாகத் தோன்றுகிறது"[153] என எடுத்துரைப்பர். மேலும் தலைவியின் உடன்போக்குக்கு அவள் தன்தாய் முன்நிற்க அஞ்சும் அச்சமே காரணம்"[154] என்பர்.

தொல்காப்பியம் தலைவி உடன்போக்கு மேற்கொள்வதற்கான காரணங்கள் என்று அக்காரணங்களைத் தலைவிக்கு வரையறுக்க, சங்க இலக்கியமோ உடன்போக்கிற்கான காரணங்களைப் பொதுப்படச் சுட்டிச் செல்கின்றது. அன்னையின் அச்சுறுத்தல், அன்னையின் முன்னிற்க அஞ்சும் தலைவியின் அச்சம், ஊழ்வினை, இற்செறிப்பு ஆகியன தொல்காப்பியத்தைவிட சங்க இலக்கியத்தில் கூடுதலாகச் சுட்டப்பெற்ற காரணிகள் ஆகும்.

இற்செறிப்பும் உடன்போக்கிற்கு ஒரு காரணமாகத் திகழ்வதற்கு அரண்சேர்க்கும் வகையில் இற்செறிப்பின் கடுமையான நிலையில் தலைவி செய்யக்கூடியது பெற்றோர் அறியாமல் தலைவனுடன் சென்றுவிடுதலேயாகும். அதுவே உடன்போக்கு எனப்படும்"[155] என்பர்.

உடன்போக்கு நிகழும் சூழல்கள்

உடன்போக்கு நிகழும் சூழல்கள் குறித்து விளக்கும் தொல்காப்பியர்,

"வேற்றுவரைவு வரின்அது மாற்றுதற் கண்ணும்"[156]

என்பர். இக்கருத்தினை வலியுறுத்தும் முகமாக "வெறியாட்டு, நொதுமலர் வரைவு ஆகிய இன்னாச் சூழல்களைக் கடத்தற்கு அறத்தொடுநிலை அல்லது உடன்போக்கு ஆகிய இரண்டில் ஒன்று வழியாக விளங்குதலை"[157] எடுத்துக் காட்டுவர்.

சங்க இலக்கியம் உடன்போக்கு நிகழும் சூழல்களாக நொதுமலர் வரைவு"[158], பொருளாதார ஏற்றத்தாழ்வு"[159] ஆகியவற்றைக் காட்டுகின்றன.

உடன்போகும் பொழுதும் காலமும்

உடன்போக்கிற்கு முடிவுசெய்வது பெரும்பாலும் தலைவியே எனலாம். அவ்வாறு முடிவுசெய்த பிறகு தோழி தலைவனை உடன்படச்செய்து குறித்த நாளில் உடன்போக ஆயத்தம் செய்வாள். அறத்தொடு நிற்கும் அச்சத்தை நீக்கவும், தலைவனுடன் உறவை நீட்டிக்கவும் தலைவிக்கு உடன்போக்கே உரிய வழியாகத் தோன்றுகிறது"[160] என்பர். தலைமக்கள் உடன்போக்கினை மேற்கொண்ட பொழுதும் காலமும் பற்றிப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

4:5 உடன்போகும் பொழுதையும் காலத்தையும் குறிக்கும் சங்கப்பாக்கள்

	நூ.பெ.	பா.எண்.	உடன்போகும் பொழுது	பாடல் அடிகள்
1.	நற்	2	எல்லிடை நீக்கும்	8
2.	நற்	12	வைகுபுலர் விடியல்	4
3.	நற்	149	நடுநாள் வரூஉம்	8
4.	நற்	162	நாள் – வைகறை	10
5.	நற்	184	நெருநற்	3
6.	நற்	264	எல்லின்று பொழுதே	6
7.	நற்	271	மாலைவிரி நிலவிற் பெயர்பு (பின்னிருட்பொழுது)	10
8.	நற்	279	வைகுபனி உழந்த	10
9.	நற்	384	நன்னாள்	7
10.	குறுந்	390	எல்லும் எல்லின்று	1
11.	ஐங்	200	நெடுங்கண் நெகிழ்மதி	3
12.	ஐங்	235	கையற வீழ்ந்த மையில் வானம்	1
13.	ஐங்	382	கழிவோள் எல்லிடை	2,3
14.	அகம்	17	வைகுறு மீனில்	21
15.	அகம்	63	பெரும்புலர் விடியல்	6

	நூ.பெ.	பா.எண்.	உடன்போகும் காலம்	பாடல் அடிகள்
1.	நற்	29	வேனில் உலந்த	1
2.	குறுந்	89	வேனிற்	5
3.	ஐங்	303	வேனில் அஞ்சுரம்	2
4.	ஐங்	361	வேனிற் பாதிரி விரிமலர்	2
5.	ஐங்	400	பெரும்பத வேனில்	3
6.	அகம்	89	நடுநின்று காய்தல் (முதுவேனிற்காலம்)	2
7.	அகம்	105	திறந்த வேனில்	16
8.	அகம்	121	வேனில்	2
9.	அகம்	257	வேனில் பாதிரிக்	1
10.	அகம்	261	வேனில்	2
11.	அகம்	263	பைதறு காலை (வேனிற் காலம்)	4
12.	அகம்	153	வேனில் வெம்பாட்டு	8
13.	அகம்	189	வேனில் நீடி	2

உடன்போக்குப் பாடல்களில் உடன்போக்கின் பொழுது பதினைந்து பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றில் நற்றிணையில் ஒன்பது பாடல்களிலும், குறுந்தொகையில் ஒரு பாடலிலும், ஐங்குறுநூற்றில் மூன்று பாடல்களிலும், அகநானூற்றில் இரண்டு பாடல்களிலும் உடன்போகும் பொழுது குறிக்கப்பெற்றிருப்பது கருதத்தக்கன.

பெரும்பாலும் விடியற்பொழுதிற்கு முன்பாகப் பின்னிரவு நேரம் உடன்போகும் நேரமாகச் சுட்டப்பெறுவது மரபு. எனினும் சங்கப் பாக்கள் உடன்போகும் நேரத்தை இராப்பொழுது (எல்) என்று பொதுவாகவும் மாலைவிரி நிலவிற் (பின்னிருப் பொழுது) நடுநாள் (நன்னிருள் நடுயாமம்) வைகறை, விடியற்பொழுது என்று வரையறுத்துப் குறித்துச் செல்கின்றன.

தொல்காப்பியர் பாலைக்குரிய பொழுதாக வேனிற்காலத்தைக் குறித்துள்ளார். வேனிற்காலம் பிரிவிற்குச் சிறப்பிடம் அளிப்பதால், உடன்போக்காகிய பிரிவும் வேனிற்காலத்தில் நிகழ்ந்துள்ளது எனலாம். இதற்குச் சங்கப்பாக்கள் சான்று பகர்கின்றன. அவ்வகையில் சங்க இலக்கியத்தில் உடன்போகும் காலம் வேனிற்காலமாகச் சுற்றப்பெற்றிருப்பது கருதத்தக்கது.

உடன்போகும் வேனிற்காலம் பதின்மூன்று பாடல்களில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல்கள் நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், ஐங்குறுநூற்றில் மூன்றும், அகநானூற்றில் எட்டுமாகக் குறிக்கப்பெற்றுள்ளன. இவற்றுள்ளும் வேனிற்காலம் என்று பொதுவாகச் சுட்டியதோடு, முதுவேனிற்காலம் என்ற வரையறை செய்திருப்பது அகநானூற்றின்வழி அறியப்பெறுகிறது.

உடன்போகும் முறை

தோழி தலைவனையும், தலைவியையும் உடன்போக்கிற்கு ஒருப்படச் செய்கிறாள். தலைமக்கள் கொண்டுதலைக் கழிதலை விரும்புவதற்கு தோழியால் பல்வேறு காரணங்கள், சூழல்கள் ஆகியன விளக்கப்பெற்றன. தலைவனும், தலைவியும் உடன்போகும்போது நடந்து செல்வதாகக் குறிப்பது மரபு. ஆனால் தலைமக்கள் உடன்போனபோது தேரில் ஏறிச் சென்றதையும் சங்கப்பாக்கள் காட்டுகின்றன. இக்கருத்திற்குத் தொல்காப்பியர் அரண்சேர்க்கிறார். களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன் தேரிலும், யானையிலும், குதிரையிலும், பிறவற்றிலும் சென்று தலைவியைச் சந்தித்தலும் உண்டு. இதனைத்,

"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப"[161]

என்று தொல்காப்பியர் கூறுவர். பிறவும் என்பதற்கு நச்சினார்க்கினியர் 'கோவேறு கழுதையும், சிவிகையும் முதலியன' எனக் கொள்கின்றார் .

உடன்போகும் நிலையில் தலைவனுடன் தலைவி தேரில் செல்வதை நற்றிணையின் ஒரு பாடலும், ஐங்குறுநூற்றில் இரண்டு பாடல்களும் சித்தரித்துக் காட்டுகின்றன. இதனை,

4:6 உடன்போகும் முறை

	நூ.பெ.	பா.எண்.	உடன்போகும் முறை	பாடல் அடிகள்
1.	நற்	149	கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ இயல்தேர்க் கொண்கனொடு	7,8
2.	ஐங்	200	பொலந்தேர்க் கொண்கன் வந்தனன்	2
		385	கடுங்கட் காளை நெடுந்தேர்ஏறி	1

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

உடன்போக்கில் தலைவன் தேரில் செல்வதாகக் குறிக்கப்பெறும் நற்றிணைப் பாடலும், ஐங்குறுநூற்றில் ஒரு பாடலும் (200) நெய்தல் திணைப் பாடல்களாகவே உள்ளன. உடன்போக்குப் பொருண்மை மிகுதியாகக் கொண்ட பாலைத் திணைப் பாடல்களில் தலைவன் தேரில் வந்ததாகக் குறிப்புக் காணப்பெறுகின்றது. காரணம், பாலை மணற்பரப்பாதலால் தேர் ஏறித் தலைவன் வந்தான் எனப் பாடுவதற்கு அந்நிலவியற்கை இடம் கொடுத்துள்ளது. மேலும் பாலை நிலமானது நீண்ட வழிகளையும், அகன்ற பரப்புகளையும் கொண்டு இலங்குதலின், தேரில்ஏறிச் செல்வது சாத்தியப்படுகிறது எனலாம்.

உடன்போக்கின் களம்

உடன்போக்கில் ஈடுபட்ட தலைமக்கள் சிலம்பு கழித்தல்"[162] என்ற சடங்கை நிகழ்த்துமிடமும், சிறிது காலம் வரை, தங்கி வாழக்கூடிய இடமும் ஆதல் பற்றிப் பாலைத்திணை உடன்போக்கு என்ற நிகழ்ச்சிக்குக் களமாகிறது. உடன்போக்கில் ஈடுபட்டோர் நாடுபல கடந்து சென்றதாக வரும் குறிப்புக்கள் சமூகக் கட்டுக்களுக்கு அஞ்சித் தொலைதூரம் சென்றுவிடும் உள்ளங்களைக் காட்டுகின்றன. உடன்போக்கின் களம் சங்கப்பாக்களில் குறிக்கப்பெற்றுள்ளதைப் பின்வரும் அட்டவணை உணர்த்தி நிற்கின்றது.

4:7 உடன்போக்கின் களம்

	நூ.பெ.	பா.எண்.	உடன்போக்கின் களம்	பாடல் அடி
1.	ஐங்	313	நாடிடை இலங்கிய வைப்பின்	4
2.	ஐங்	379	இனக்களிறு வழங்குஞ் சோலை	3
3.	ஐங்	385	வேறுபல்லருஞ்சுர மிறந்தனள்	3
4.	அகம்	165	நாடுபல இறந்த	6
5.	அகம்	383	நாடுந் தேயமும் நனிபல	4

இவ்வாறாக உடன்போக்கினை மேற்கொண்ட தலைமக்கள் சோலைகளையும், சுரங்களையும், நாடுகளையும் கடந்து சென்றனர் என்று சங்கப் பாக்கள் சான்றுபகர்கின்றன. இவைகள் உடன்போக்கின் களமாக (களங்களாக) அமைந்துள்ளமையை மேற்கண்ட அட்டவணையின்வழி அறியமுடிகிறது.

தொகுப்புரை :

தமிழ் மக்களின் வாழ்க்கையையும் நற்கருத்துக்களையும் அறிந்து கொள்வதற்கு உறுதுணையாகத் திகழும் சங்கஇலக்கிய அகப்பொருளில் உடன்போக்கு ஒரு துறையாகும்.

சங்க இலக்கியத்தில் உடன்போக்கு என்ற சொல்லாட்சித் துறைக்குறிப்பில் உடன்போகா, கொண்டுதலைக் கழிதல், புணர்ந்துடன் என்றும் குறிக்கப்பெறுகின்றது. உடன்போக்கோடு தொடர்புடைய செய்திகளை மகட்போக்கிய, மனைமருட்சி என்னும் துறைகள் உணர்த்தி நிற்பது கருதத்தக்கது ஆகும்.

சங்க இலக்கியத்தில் உடன்போக்குப் பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றிலிருந்து கருத்தில் கொள்ளப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் ஐங்குறுநூற்றில் மிகுதியும், கலித்தொகையில் குறைவுமாகக் காணப்பெறுகின்றன.

உடன்போக்குப் பாடல்களைப் பாடிய புலவர்களின் வகைப்பாட்டில் ஆண்பாற் புலவர்கள் அதிகமாகவும், பெண்பாற் புலவர்கள் குறைவாகவும் இடம்பெற்றுள்ளனர்.

உடன்போக்குத் துறையில் பாலைத்திணை மிகுந்தும், நெய்தல் திணை குறைந்தும் காணப்பெறுகின்றன.

தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோர் உடன்போக்குத் துறையில் கூற்று நிகழ்த்துவர். இதில் நற்றாயின் கூற்று மிகுந்தும் தலைவியின் கூற்று குறைந்தும் இடம்பெற்றுள்ளன.

உடன்போக்குப் பாடல்களைப் பாடிய புலவர்களை ஓதலாந்தையார் பாடல்கள், கயமனார் பாடல்கள், பெருங்கடுங்கோ பாடல்கள், கபிலர் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், நான்கு பாடல்கள் பாடிய புலவர், மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள், இரண்டு பாடல்கள் பாடிய புலவர்கள், ஒரு பாடல் பாடிய புலவர்கள் என்ற பகுப்புக்களில் அடக்கலாம்.

உடன்போக்குத் துறையில் மிகுதியான பாடல்களை(37) பாடியவர் ஓதலாந்தையார். இவர் நற்றாய் கூற்றினை மிகுதியும் பாடியிருப்பது குறிக்கத்தக்கது. இவரது பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், பாலைத்திணையிலும் மட்டும் இடம்பெற்றுள்ளன.

கயமனாரின் உடன்போக்குப் பாடல்கள் (21) அகநானூற்றிலும், பாலைத்திணையிலும், செவிலி கூற்றிலும் மிகுந்துள்ளன.

உடன்போக்குத் துறையில் பெருங்கடுங்கோவின் (9) பாடல்கள் நற்றிணையிலும், பாலைத்திணையிலும், தலைவன் கூற்றிலும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

கபிலரின் உடன்போக்குப் பாடல்கள்(8) ஐங்குறுநூறு, குறிஞ்சித்திணை, தோழி கூற்று ஆகியவற்றில் மிகுதியாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

உடன்போக்குத் துறையில் ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்(7) நற்றிணையிலும், நற்றாய் கூற்றிலும், பாலைத்திணையிலும் மிகுந்துள்ளன.

மாமூலனாரின் உடன்போக்குப் பாடல்கள் முழுவதும் அகநானூற்றிலும் பாலைத்திணையிலும் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்களின் நற்றாய் கூற்று மிகுதியாகும்.

உடன்போக்குத் துறையில் மூன்று பாடல்கள் பாடிய புலவர்கள் வரிசையில் அம்மூவனார், குடவாயிற் கீரத்தனார், மருதனிளநாகனார் ஆகியோர் இடம்பெறுவர். இவர்களது பாடல்களில் பாலைத்திணை மிகுதியாகும். அம்மூவனார் யார் கூற்றையும் மிகுதியாகச் சுட்டவில்லை. குடவாயிற் கீரத்தனார் செவிலி கூற்றினையும், மருதனிளநாகனார் தலைவன் கூற்றினையும் மிகுத்துக் கூறியுள்ளனர்.

இரண்டு பாடல்களைப் பாடிய புலவர்கள் பட்டியலில் ஔவையார், பெரும்பதுமனார், வெள்ளிவீதியார் ஆகியோர் குறிக்கத்தக்கவர்கள். ஔவையாரும், வெள்ளிவீதியாரும் கூற்றுக்களைச் சமமாகப் பங்கிட்டுள்ளனர். பெரும்பதுமனார் கண்டோர் கூற்றினை மிகுதியாகக் குறிப்பிட்டுள்ளார்.

நற்றிணையில் ஒருபாடல் வீதம் பாடிய புலவர்கள் அறுவர். இவர்களது பாடல்களில் நற்றாய் கூற்றும், பாலைத்திணையும் மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

குறுந்தொகையில் ஒரு பாடல் வீதம் பாடியோர் வரிசையில் ஏழு புலவர்கள் குறிக்கப்பெறுவர். இவ்வெழுவரின் பாடல்களில் பாலைத்திணை, தோழி கூற்று மிகுந்துள்ளன.

அகநானூற்றில் பதினொன்று புலவர்கள் ஒரு பாடல்வீதம் பாடல்களைப் புனைந்துள்ளனர். இப்பாடல்கள் அனைத்தும் பாலைத்திணையாகும். இவற்றில் செவிலி கூற்று மிகுதியாகக் கணப்பெறுகின்றன.

தலைவன் கூற்றுச் சங்கப் பாக்களில் தலைவன் மெல்லக் கொண்டேகல் என்கிற இலக்கண மெய்ம்மையும், தலைவி கூற்றுப் பாக்களில் தலைவி போக்கிற்கு உடன்பட்டமையைத் தோழியிடம் கூறல் என்பதும், தோழி தலைவியை உடன்போக்கிற்கு ஒருப்படச் செய்தல் என்கிற இலக்கண மெய்ம்மை தோழி கூற்று சங்கப்பாக்களிலும் மிகுந்துள்ளன.

செவிலி கூற்றுப் பாக்களில் செவிலி கூற்று உரைத்தல் என்ற இலக்கண மெய்ம்மையும், நற்றாய் மகளின் அச்சத்தின்கண் இரங்கல் என்ற மெய்ம்மை நற்றாய் கூற்று பாடல்களின் வழியும், கண்டோர் கூற்றுப் பாக்களில் கண்டோர் சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறல், தாய்நிலை கண்டு தடுத்தற்கண் கூறல் என்னும் மெய்ம்மைகளும் மிகுத்துச் சொல்லப் பெற்றுள்ளமை அறியப்பெறுகின்றன.

உடன்போக்கினைக் குறிக்கும் சொல்லாட்சியில் கொண்டுடன் போக, போகிய, போக்கு ஆகிய சொற்களில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் ஒத்துச் செல்கின்றன. எனினும் சங்க இலக்கியம் உடன்போக்குத் தொடர்பான சொல்லாட்சியில் முப்பத்து ஒன்பது சொற்களைக் கையாண்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் அம்பல், அலர், அம்பலும் அலரும் இணைந்த நிலை, அன்னையின் அச்சுறுத்தல், அன்னையின் முன்நிற்க தலைவி அஞ்சும் அச்சமும் தடையும், ஊழ்வினை, இற்செறிப்பு ஆகியன காரணங்கள் உடன்போக்கிற்குரிய காரணங்களாக வரையறுக்கப் பெறுகின்றன.

வெறியாட்டு, நொதுமலர் வரைவு, பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகியன உடன்போக்கு நிகழும் சூழல்களாகச் சுட்டப்பெற்றுள்ளன.

உடன்போக்குப் பாடல்களில் உடன்போக்கின் நேரம் பதினைந்து பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளன. பெரும்பாலும் விடியற்பொழுதிற்கு முன்பாகப் பின்னிரவு நேரம் உடன்போகும் நேரமாகச் சுட்டப்பெறுவது மரபு. எனினும் சங்கப்பாக்கள் உடன்போகும் நேரத்தைப் பொதுவாகவும் சிறப்பாகவும் வரையறுத்துள்ளனர்.

உடன்போகும் வேனிற்காலம் பதின்மூன்று பாடல்களில் இடம்பெற்றுள்ளது. வேனிற்காலம் என்று பொதுவாகச் சுட்டியதோடு முதுவேனிற்காலம் என வரையறை செய்திருப்பது கருதத்தக்கது.

சங்க இலக்கியம் தலைமக்கள் உடன்போனபோது தேரில் சென்றதைக் குறிக்கின்றது. உடன்போக்கின் களங்களாகப் பாலைத்திணை, சோலைகள், பலகாடுகள், பலநாடுகள் ஆகியன இடம்பெறுவது குறிக்கத்தக்கது.

சான்றெண் விளக்கம்

1. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,17.
2. மேலது, நூ,44.
3. மேலது, நூ,39.
4. நாற்கவிராச நம்பி, நம்பியகப் பொருள், ப,210.
5. நற்;2,9,202,264,362,384, அகம்;257.
6. ஐங்;373, அகம்;385.
7. நற்;76, குறுந்;124, ஐங்;361,363,371,386, அகம்;55,63,261.
8. நற்;29,279, குறுந்;84,144,356,379,396, அகம்;7,15,17,35,89,105,117, 145,153,165,189,195,203,207,219,263,275,315,321,269,383,385,397.
9. நற்;66,110,143,179,184,293,305, அகம்;49.
10. K.N. Sivaraj Pillai, The Chronolfy of the early tamils, P,29-33.
11. சுந்தரசண்முகனார், தமிழ்நூல் தொகுப்புக்கலை, ப,287.
12. நா. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப,526.
13. நச்சினார்க்கினியர், கலித்தொகை, ப,4.
14. காண்க: பின்னிணைப்பு– 3 , அட்டவணை -5
15. காண்க: பின்னிணைப்பு - 3 , அட்டவணை -5
16. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப,282.
17. அ. விசுவநாதன், சங்க இலக்கியச் சிந்தனைகள், ப,1.
18. மேலது, ப,22.
19. ந சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப,54.
20. அ. விசுவநாதன், சங்க இலக்கியச் சிந்தனைகள், ப,2.

21. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -6

22. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -6

23. மு. இராகவையங்கார், தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப,69.

24. தொல்,பொருள்,அகம், இளம்,நூ,16.

25. நக்கீரர், இறை, அகம், பொருள், ப,23.

26. தொல்,பொருள்,அகம், இளம்,நூ,16.

27. மேலது, நூ,13.

28. தொல்,பொருள்,அகம், இளம், ப,13.

29. தொல்,பொருள்,அகம்,புறம், நச்சர், ப,24.

30. மு. அருணாச்சலம் பிள்ளை, தொல்,பொருள்,அகம், ப,195.

31. மேலது, ப,195.

32. தொல்,பொருள்,அகம், இளம்,நூ, 17.

33. தொல்,பொருள்,அகம், இளம்,ப,16.

34. சிலப்பதிகாரம், காடுகாண் காதை, 62-66.

35. நம்பியகப் பொருள், சூ-9.

36. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப,359.

37. நா. செயராமன், களம் கண்ட கருத்துக்கள், ப,77.

38. தொல்,பொருள்,அகம்,நச்சர், ப,22.

39. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,11.

40. மேலது, நூ,12.

41. தொல்,பொருள்,அகம், இளம், ப,16.

42. கலி;9.

43. ஐங்;393.

44. காண்க: பின்னிணைப்பு - 3 , அட்டவணை -7

45. காண்க: பின்னிணைப்பு - 3 , அட்டவணை -7

46. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியம் (அகம்), ப,101.

47. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், பக்.,72-73.

48. மேலது, ப,73.

49. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், ப,719.

50. மேலது, பக்.,718-719.

51. மா.ரா.போ, குருசாமி, சுப. அண்ணாமலை, கதிர்மகாதேவன் (மொ.ப.ஆ), பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பக்.,107-108.

52. ஐங்;303,305,312-400.

53. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

54. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

55. ஐங்; 381, 1,3-4.

56. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், பக்.,875-876.

57. நற்; 12,198,279,293,305,324, குறுந்;356,378,396, அகம்;7,17,145,189, 195,219,221,259,275,321,383,397.

58. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

59. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

60. குறுந்;356: 1-2, 4-5.

61. உ.வே.சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும், ப,533.

62. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, சேரமன்னர் வரலாறு, ப,286.

63. நற்;9,202,384, குறுந்;124,262, கலி;9,20, அகம்;99,261.

64. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

65. காண்க: பின்னிணைப்பு-3 , அட்டவணை -8

66. நற்;384,8-11.

67. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,351.

68. குறுந்;115, ஐங்;203,235,236,254,280,286, அகம்;203.

69. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

70. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

71. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

72. குறுந்; 115, 2-3, 6.

73. உ.வே.சாமிநாதய்யர். குறுந்தொகை மூலமும் உரையும், ப,168.

74. நற்;10,162,179,184,271, அகம்;117,165.

75. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

76. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

77. நற்;10, 1-4.

78. நக்கீரர், இறை, அகம்,பொருள், ப,123.

79. அ. நாராயணசாமி ஐயன், நற்றிணை நானூறு, ப,66.

80. அகம்;15,55,65,325.

81. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

82. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

83. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

84. அகம்;65,2,4,8-9.

85. நற்;76, ஐங்;200, அகம்;35.

86. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

87. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

88. காண்க: பின்னிணைப்பு-3 , அட்டவணை -8

89. நற்;76:4-5,7-9.

90. அகம்;315,385, குறுந்;369.

91. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

92. குறுந்;369:3-4.

93. அகம்;121,283, நற்;362.

94. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

95. நற்;362:7-10.

96. குறுந்;15,388.

97. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

98. குறுந்;388:1-2, 5,7.

99. உ.வே. சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும், ப,578.

100. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப,201.

101. நற்;2, குறுந்;7.

102. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

103. குறுந்;7,1,3-6.

104. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப,364.

105. குறுந்;44,149.

106. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

107. குறுந்;149:1-2, 5-6.

108. உ.வே.சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும், பக்.,216-217.

109. நற்;264.

110. மேலது;66.

111. மேலது;149.

112. மேலது;143.

113. மேலது;29.

114. மேலது;110.

115. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

116. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

117. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பக்.,140-141.

118. நற்;264:7-9.

119. குறுந்;343.

120. மேலது;390.

121. மேலது;383.

122. மேலது;144.

123. மேலது;84.

124. மேலது;229.

125. மேலது;217.

126. காண்க :பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

127. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

128. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதாண சிந்தாமணி, ப,1251.

129. குறுந்;144:5-7.

130. அகம்;257.

131. மேலது;95.

132. மேலது;63.

133. மேலது;263.

134. அகம்;285.

135. மேலது;207.

136. மேலது;153.

137. மேலது;105.

138. மேலது;369.

139. மேலது;89.

140. மேலது;49.

141. காண்க: பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

142. காண்க :பின்னிணைப்பு- 3 , அட்டவணை -8

143. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப,412.

144. அகம்;285:12-15.

145. தொல்,பொருள்,இளம்,நூ,39,221.

146. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,17.

147. மேலது, நூ,44.

148. மேலது, நூ,44.

149. மேலது, நூ,39.

150. தொல்,பொருள்,களவு, இளம், நூ,113.

151. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,43.

152. தொல்,பொருள்,இளம்,நூ,221.

153. ஆ. இராமகிருட்டினன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப,81.

154. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், ப,25.

155. ஈ.கோ.பாஸ்கரதாஸ், அகப்பொருள் பாடல்களில் தோழி, ப,76.

156. தொல்,பொருள்,இளம், நூ,109,15.

157. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல், பக்.,82,83.

158. அகம்;221.

159. நற்;179,271,324, குறுந்;356,296.

160. ஆ. இராமகிருட்டினன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப,119.

161. தொல்,பொருள்,இளம்,நூ,209.

162. நற்;279:9-11, ஐங்;399:1-5, அகம்;369:22-26,379:1-4, 385:16-18.

இயல் –5

அகமாந்தர்கள்

தமிழ் அகமரபில் களவு, கற்பு என்ற இரு கைகோள்கள் வரையறுக்கப்பெறும். அக்களவிலும், கற்பிலும் கூற்றிற்குரியோர் குறித்துத் தொல்காப்பியர் சுட்டிச்செல்கிறார். அவ்வகையில் அகமாந்தர்கள் கூற்று நிகழ்த்துதலும், கூற்றினைக் கேட்டலும் ஆகிய செயல்கள் இடம்பெறும். இச்செயல்களின்வழி அகமாந்தர்களைக் குறித்து அறிந்து கொள்ளலாம். இற்செறித்தல் மற்றும் உடன்போக்குத் துறைகளில் இடம்பெறும் அகமாந்தர்கள் குறித்து விளக்கவியல் அணுகுமுறையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தொல்காப்பியம் சுட்டும் கூற்றிற்குரியோர்

தொல்காப்பியர் செய்யுளியலில் களவில்[1] கூற்று நிகழ்த்துதற்குரியோரை பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி என்றும், கற்பில்[2] கூற்று நிகழ்த்துதற்குரியோரை மேலே சுட்டிய அறுவர் மற்றும் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருமாகப் பன்னிருவர் என்றும் வரையறுத்துக் கூறுகிறார். இம்மாந்தர்களில் தோழியும்[3] தலைவியும்[4] இற்செறித்தலில் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியர் சுட்டுவர். நச்சர் சுட்டியதைப் போன்று[5] சங்க இலக்கியத்திலும் தலைவன்[6] இத்துறையில் கூற்று நிகழ்த்துவதாகக் குறிக்கப்பெற்றுள்ளது. உடன்போக்குத் துறையில் தொல்காப்பியர்[7] சுட்டிய மாந்தர்களே சங்க இலக்கியத்திலும்[8] கூற்று நிகழ்த்தியுள்ளமை குறிக்கத்தக்கது.

இற்செறித்தலில் மாந்தர்கள்

இற்செறித்தல் துறையில் இடம்பெறும் மாந்தர்களைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் காணலாம். 1. கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் 2. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் ஆகியவை ஆகும்.

I. கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள்

கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. தலைவன் 2.தலைவி 3. தோழி ஆகியோர். இவர்களது கூற்றுகளில் தோழியின் கூற்று மிகுதியாகக் காணப்பெறுகிறது. இதற்கு அடுத்த நிலையில் தலைவியும், தலைவிக்கு அடுத்த நிலையில் தலைவனும் குறைவாகக் கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளனர்.

1. தோழி

தோழி கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. தலைவன், 2.தலைவி, 3. செவிலி, 4.உழவர், 5. அஃறிணையாகிய கிளி முதலானவை ஆகும். இவற்றில் தோழி தலைவனிடம் மிகுதியாகக் கூற்றுக்களை நிகழ்த்தியமையை உணர முடிகின்றது.

அ. தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[9]

தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி தலைவியின் கள்ளங்கபடமற்ற உள்ளம், தலைவியின் ஆராக்காதல், தலைவியின் அருமையியல்பு, தோழி கூறும் ஆறுதல், தோழியின் ஆய்ந்தறியும் திறன், தோழி அறிவுறுத்தும் பாங்கு, தோழியின் ஒருயிர் ஈருடலாகும் பண்பு, தோழியின் மனவருத்தம், தோழி அஃறிணைக்கு வழங்கும் அறிவுரை, தோழி அஃறிணையிடம் காட்டும் நன்றியுணர்வு, தலைவனின் ஆழமான அன்பு, தலைவனின் அஞ்சாமைப்பண்பு, தோழியின் தாய்மைப் பண்பு, தோழி தலைவனின் பண்பினைக் கடிதல் ஆகிய பண்புநலன்கள் அறியப்பெறுகின்றன. இங்கு எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தோழி கூற்றில் குறிக்கப்பெறும் தலைவியின் கள்ளங்கபடமற்ற உள்ளம்' எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

தலைவியின் கள்ளங்கபடமற்ற உள்ளம்

தலைவி சூதும், பொய்மையும் அறியாத நிலையில் தலைவனோடு பழகும் களவு அமைய, ஓரளவு அலர் மூலமாகவும், தன் மகளின் வேறுபட்ட மனநிலை மூலமாகவும், களவை உணர்ந்த தாய், அவளிடம் சினத்துடன் காரணத்தை வினவுகிறாள்.

தினைப்புனத்தைக் காவல் செய்யாது, கதிர்களைக் கிளி கவருமாறு நீ எங்குச் சென்றாய்? என்று அன்னை வினவ, மலைநாடனை நான் அறிந்ததுமில்லை; கண்களால் கண்டதுமில்லை; அவனோடு சுனை நீரில் நீராடியதுமில்லை; சோலையில் மலர்களைப் பறித்து விளையாடியதுமில்லை; என நினைவில்லாது பொய்யுரைக்கத் தெரியாமல் நடந்த உண்மையைத் தலைவி உரைத்துவிட்டாள். இவற்றைக் கேட்ட அன்னை வரப்போகும் பழிக்கு அஞ்சி நாணித் தலைகுனிந்தாள் எனத் தோழி காட்டும் நற்றிணைக் காட்சி[10] தலைவியின் பொய்மையற்ற உள்ளத்தை அறிவிக்கின்றது.

இப்பாடல் தலைவியின் வெளிப்படையான மனவியல்பைக் காட்டுகின்றது. அம்மனவியல்பு சங்கச் சமுதாயத் தலைவியரின் நிலையை நன்கு உணர்த்துகிறது. உலகத்தவரோடு கலந்து பழகும் வாய்ப்புக்கள் தலைவியராய் இருக்கும் உயர்குடிப் பெண்களுக்கு மறுக்கப்பட்டமையால், அச்சமுதாயச் செயல் தலைவியரின் மனத்தைக் கள்ளமற்ற மனமாய் ஆக்கியிருந்தமையை உணரலாம். தன் அன்னையின் வினாவிற்கு ஏற்றாற்போல் விடை கூறிச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறம் அறியாளாய்த் தலைவி இருக்கக் காரணம், அவள் சமுதாயத்தில் பிறரோடு பழக வாய்ப்பு அற்ற நிலையே என மதிப்பிடலாம்.

ஆ. தோழி தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[11]

தோழியின் நம்பிக்கை ஊட்டும் திறன், தோழியின் ஆற்றுவிக்கும் பாங்கு, தோழியின் வேதனையுள்ளம், தலைவியின் வேதனையுள்ளம், தோழியின் நயமாகப் பேசும் திறன், செவிலியின் பொறுப்புணர்ச்சி ஆகியன தோழி தலைவியிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. இதில் சான்றிற்காகத் தோழியின் வேதனையுள்ளம் என்கிற பண்பு விளக்கப்பெற்றுள்ளது.

தோழியின் வேதனையுள்ளம்

தலைவன் சிறைப்புறத்தனாகத், தோழித் தலைவியிடம் கூறுகின்றாள். அக்கூற்றில் தோழி நாம் காவல் செய்து வந்த தினைப்புனம், கொய்யும் பருவம் எய்துவிட்டது என்கிறாள். ஆகையால் அத்தொழில் இன்மையால் மனையகம் புகுத்தப்பெற்று, இற்செறிக்கப்படுவோம் என்கிறாள் தோழி. இற்செறிக்கப் பெற்றநிலையில் தலைவனைக் கூடுதல் என்பது இயலாது[12] என்று வருத்தமுற்றுத் தோழி வேதனைப்படுகிறாள்.

இப்பாடல் தினைமுதிர்ச்சி என்கிற இயற்கை நிகழ்வால் தலைவி இற்செறிக்கப் பெறுவதைக் குறித்து நிற்கின்றது. இங்கு தலைவியின் மனவியல்பு (வேதனை), தோழி கூற்றில் வெளிப்பட்ட நிலையை உணரமுடிகிறது. தோழியும் தலைவியும் ஓருயிர் ஈருடலாகத் திகழ்வதால் தலைவியின் மனவருத்தம் தோழியின் வேதனையாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளது.

இ. தோழி செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[13]

இக்கூற்றுக்களில் இருந்து தோழியின் துணிவு, தோழியின் நயமாகப் பேசும் திறன் ஆகிய பண்புகள் புலப்படுகின்றன. சான்றிற்காகத் தோழியின் துணிவு என்கிற பண்பு விரிவாக விளக்கப்பெறுகின்றது.

தோழியின் துணிவு

தலைவியின் உடல்வேறுபாட்டினை அறிந்த செவிலி, வேலனை அழைத்து வெறியெடுக்கின்றாள். இதனை உணர்ந்த தோழி, தலைவியின் நோய்க்குத் தலைவனே காரணம் என்று செவிலியிடம் உரைக்கின்றாள். இவ்வாறாகத் தலைவியின் நோயிற்குரிய தலைவனை அடையாளம் காட்டும் தோழி,

"தண்சேறு கள்வன் வரிக்கு மூரற்
கொண்டொடி நெகிழச் சாஅய்
மென்றோள் பசப்ப தெவன்கொ லன்னாய்"[14]

என்பாள். தலைவி தனது களவினை அன்னை (செவிலி) அறிந்துவிடுவாளோ, என்ற அச்சம் கொண்டவளாகக் காட்டப்பெற்றுள்ளாள். ஆனால் தோழி தலைவியின் களவினை நேரடியாகச் செவிலியிடம் மொழிகின்றாள். தலைவி அஞ்சிய நிலையில், தோழி களவினை வெளிப்படுத்தியதன்வழி இங்கு தோழியின் துணிவு பாராட்டப்பெறுகின்றது.

ஈ. தோழி உழவரிடம் நிகழ்த்தும் கூற்று[15]

தோழியின் அறிவுரை, தலைவி மீதுள்ள கட்டுப்பாட்டின் பொருட்டுத் தோழி புலம்பல் ஆகியன இக்கூற்றிலிருந்து அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தோழியின் அறிவுரை என்ற பண்பு விரிவாகக் குறிக்கப்பெறுகின்றது.

தோழியின் அறிவுரை

தோழி உழவனிடம் நீ உழும்போது வயலில் உள்ள கோரைகளையும், நெய்தல்களையும் அழித்துவிடாதே என்கிறாள். ஏனென்றால் அவைகளைத் தலைவி

வளையல்களாகவும், உடையாகவும் அணிந்து கொள்வாள் என்றுத் தோழி சுட்டினாள்'[16]. கோரைகளையும், நெய்தல்களையும் களைகள் என்று அழித்துவிடாமல், அவைகளைப் பாதுகாத்து வைப்பாயாக என்கிறாள். இதன்வழித் தோழி உழவனுக்குக் கூறிய அறிவுரை வெளிப்படுகின்றது. தலைவிக்கு விருப்பம் மிகுந்த பொருள்களைத் தெரிந்திருப்பதன்வழித் தோழியின் பொறுப்புணர்ச்சியும், அப்பொருள்களைப் பாதுகாக்கும் முயற்சியும் வெளிப்பட்ட நிலையை உணரமுடிகின்றது.

உ. தோழி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[17]

இக்கூற்றுக்களின்வழி தோழி அஃறிணையை மதித்துப் போற்றும் பாங்கு அறியப்பெறுகின்றது. சான்றிற்கு இப்பண்பு பின்வருமாறு விளக்கப்பெறுகின்றது.

அஃறிணையை மதித்துப் போற்றும் பாங்கு

சங்ககால மக்கள் நிலத்தில் வளரும் புல்பூண்டினையும், பறக்கும் உயிர் இனங்களையும், மலை, கடல், ஞாயிறு, நிலவு, விண்மீன் என்னும் இவற்றையும் உணர்வுடைப் பொருட்களாக நினைந்து அவற்றோடு உரையாடியும், அவற்றின் மீது அன்பைச் செலுத்தியும் வாழ்ந்தனர். அவ்வகையில் நற்றிணைத்தோழி தலைவன் சிறைப்புறத்தானாக, கிளியிடம் கூறுகின்றாள். அதாவது அன்னை எம்மை இவ்வயிற் செறித்துப் பாதுகாக்கின்றாள். இனிமேல் வேலனை அழைத்து வெறியெடுக்கவும் செய்வாள் போலும். ஆகவே நாங்கள் இற்செறிக்கப்பெற்று வருந்தும் நிலையைச் சிறிதளவேனும் தலைவனிடம் சென்று கூறுவாயாக –

"கிளையோடு உண்ணும் வளைவாய்ப் பாசினம்
நன்கவற்கு அரிய உரைமின் பிற்றை"[18]

என்பாள். இதில் தோழி தங்களது நிலையைக் கிளியிடம் கூறிப் புலம்புகிறாள். இதன்வழித் தோழி அஃறிணையை மதித்துப் போற்றும் பாங்கு தெளியப்பெறும். சங்ககாலச் சமுதாயத்தில் அஃறிணையை உறவாக மதிப்புப் போற்றிய நிலையை இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது.

2. தலைவி

இற்செறித்தல் துறையில் தலைவி கூற்றைக் கேட்போர் 1.தோழி, 2.நெஞ்சம். இதில் தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களே மிகுதியாக(5) இடம்பெற்றுள்ளன.

அ. தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[19]

தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் தலைவியின் வேதனையுள்ளம், தலைவி தோழிக்குக் கூறும் அறிவுரை, தலைவியின் தவநம்பிக்கை, தலைவனின் துணிவு, தலைவியின் ஒப்புநோக்குந் தன்மை ஆகிய குணநலன்கள் மிளிர்கின்றன. சான்றிற்கு தலைவியின் தவநம்பிக்கை எடுத்துரைக்கப்பெற்றுள்ளது.

தலைவியின் தவநம்பிக்கை

தலைவன் வரையாது களவொழுக்கம் மேற்கொண்டான். தலைவன் சிறைப்புறத்தானாகத், தலைவி தோழியிடம் கூறுகின்றாள். நாம் அரிய தவத்தைச் செய்யவில்லை. தவத்தில் சிறந்து விளங்கியிருந்தால் தலைவனது கேண்மையினைப் பிரியாமல் இருக்கலாம். தவவொழுக்கத்தில் சிறந்து விளங்கவில்லை ஆகலான், தலைவனைப் பிரிந்து உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று வருந்துவதை,

"....... துறைவன் கேண்மை

பிரிந்தும் வாழ்துமோ நாமே

அருந்தவ முயற லாற்றா தேமே"[20]

என்பாள். அக்காலப் பெண்கள் இறைவழிபாட்டிலும், தவத்திலும் நம்பிக்கை உடையவர்களாகத் திகழ்ந்ததைத் தலைவியின் கூற்று வழியாக நன்கு அறியமுடிகின்றது. தவத்தில் சிறந்து விளங்கியிருந்தால் நன்மையே நடக்கும் என்ற தலைவியின் மனப்பாங்கும் வெளிப்படுகின்றது.

ஆ. தலைவி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[21]

தலைவனின் வீரம், தலைவியின் புலம்பல், தலைவியின் ஆழமான அன்பு, தலைவியின் மீதுள்ள கட்டுப்பாடு ஆகிய பண்புகள் தலைவி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் இருந்து அறியப்பெறுகின்றன. சான்றிற்குத் தலைவியின் ஆழமான அன்பு என்கிற பண்பு விளக்கமாக ஆராயப் பெறுகின்றது.

தலைவியின் ஆழமான அன்பு

தலைவி காவல்மிகுதியால் வருத்தத்துடன் திகழ்ந்தாள். இந்நிலைக்குக் காரணமான தலைவனைக் கண்டவுடன் நெஞ்சமே! வெறுப்புடன் காணப்பட வேண்டும் என்று தலைவி கூறினாள். ஆனால் தலைவியின் நெஞ்சமோ தலைவனைக் கண்டவுடன் விருப்பம் மீதூர இனியமொழிகளையே கூறுகின்றது என்பதை,

"மெல்லிய இனிய மேவரு தகுந

இவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ

மறத்தியோ வாழியென் னெஞ்சே"[22]

என்பாள். தலைவன் தலைவிக்கு வருத்தத்தைக் கொடுத்திருந்தாலும், தலைவியின் நெஞ்சமானது தலைவனிடம் இனிய சொற்களைக் கூறுகின்றது. இதன்வழித் தலைவியின் ஆழமான அன்பு புலப்படுகின்றது.

3. தலைவன் நிகழ்த்தும் கூற்றுக்கள்[23]

இற்செறித்தலில் தலைவன் தன் நெஞ்சிடம் மட்டும் கூற்று நிகழ்த்தியுள்ளான். அக்கூற்றுக்களாவது தலைவியின் அருமையியல்பு, தலைவனின் ஆற்றாமை, தலைவனின் மறுபிறப்பு நம்பிக்கை ஆகிய பண்புகளை உணர்த்தி நிற்கின்றது. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தலைவனின் மறுபிறப்பு நம்பிக்கை என்பது விரிவாகக் கூறப்பெறுகிறது.

தலைவனின் மறுபிறப்பு நம்பிக்கை

தோழி, தலைவி இற்செறிக்கப் பெற்ற செய்தியைத் தலைவனிடம் கூறுகின்றாள். இச்செய்தி அறிந்த தலைவன் நெஞ்சிடம் புலம்புகிறான். தலைவியிடத்துக் கொண்டுள்ள நட்பானது இன்றைய நிலையைப் போன்று என்றும் நிலைபெற்று விளங்கும். இந்நட்பினால் விளைந்த இந்தக் காமநோயானது அழிந்துபடும் முறை என்பது ஒன்று இல்லாமல், மறுமை உலகத்து வாழ்விலும் நிலைபெறச் செய்யும். ஆதலின் தலைவியின் இற்செறிப்புக் காரணமாக இம்மையில் அவளை அடைவது கைகூடாவிடினும் மறுமை உலகத்து இவளை அடைவதாகிய பயன் ஒன்று உளதாகும்"[24] என்பான். இதன் மூலம் தலைவன் மறுபிறப்பில் கொண்டிருந்த நம்பிக்கை அறியப்பெறுகின்றது. அக்கால மக்களும் மறுபிறப்பு நம்பிக்கை உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பது துணியப்பெறும்.

II. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள்

இற்செறித்தல் துறையில் கூற்று நிகழ்த்தாத மாந்தர்களாக 1. செவிலியும்[25] 2. நற்றாயும்[26] 3. தந்தையும்[27] அமைகின்றனர். அவர்களின் பண்புகள் இத்துறையில் விளக்கம் பெறுகின்றன. அப்பண்புகளாவது அன்னையின் ஆய்ந்தறியும் திறன். நுண்ணுணர்வுமிக்க தாயின் உள்ளம், அன்னையின் தெய்வ நம்பிக்கை, தந்தையின் ஆழமான அன்பு முதலியவை ஆகும். கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் தோழியின் கூற்றில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சான்றிற்கு நுண்ணுணர்வுமிக்க தாயின் உள்ளம் விளக்கப் பெறுகின்றது.

நுண்ணுணர்வுமிக்க தாயின் உள்ளம்

அகநானூற்றுப் பாடலொன்றில் தலைவியின் உடல் வேறுபாடு கண்ட அன்னை நீ பெரிதும் அழகுடையை என்று பன்முறை கூறி அவளைத்தழுவி நெடிது நினைந்து[28] இற்செறித்தாள் என்ற செய்தி காணப்பெறுகின்றது. தன் மகளின் மிகுதியான அழகிற்கு அவளின் களவே காரணம் என்று தாய்தன் நுண்ணுணர்வால் அறிந்து கொண்டமையை இப்பாடல் தெளிவாக உணர்த்துகின்றது. எவரும் அறிவிக்காமலேயே தன் மகளின் களவினை அறிந்த தாயின் நுண்ணுணர்வுமிக்க விழிப்புணர்வை கண்டு அறியமுடிகின்றது.

உடன்போக்கில் மாந்தர்கள்

உடன்போக்கில் இடம்பெறும் மாந்தர்களைக் 1. கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் 2. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் என வகைப்படுத்திக் காணலாம்.

I. கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள்

கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. தலைவன், 2. தலைவி, 3.தோழி, 4. செவிலி, 5. நற்றாய், 6. கண்டோர் ஆகியோர். இத்துறையில் நற்றாய் மிகுதியான (35) கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளாள். இதற்கு அடுத்த நிலையில் தோழி (25), செவிலி (24) தலைவன்(15) கண்டோர் (15), தலைவி (11) ஆகியோர் முறையே கூற்றுக்களை மொழிந்துள்ளனர்.

1. நற்றாய்

நற்றாய் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. கண்டோர், 2.தோழி, 3. தெய்வம், 4. செவிலி, 5. அயலோர், 6. சுற்றத்தார், 7. நெஞ்சம், 8.அஃறிணை (காக்கை) ஆகியவற்றிடமும் கூற்று நிகழ்த்துவார். நற்றாய் தானே புலம்பல் என்பதை நெஞ்சிடம் கூறுவதாகக் கொள்ளலாம். இவற்றில் நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள் மிகுந்துள்ளன.

அ. நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[29]

நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி நற்றாயின் சுற்றிச்சுழலும் உள்ளம், நற்றாய் காட்டும் அறநெறி, நற்றாயின் பின்னோக்கு உக்தி, நற்றாய் காட்டும் சமுதாயம், நற்றாய்க் கூற்றுவனைக் கடிதல், நற்றாய்த் தலைவனைக் கடிதல், நற்றாய்த் தலைவனின் தாயைக் கடிதல், நற்றாய்த் தன்னைக் கடிதல், நற்றாயின் தீராச்சீற்றம், நற்றாயின் ஊழ்வினை நம்பிக்கை, நற்றாயின் அவா, தலைவன் தலைவியின் வற்றா அன்பு, நற்றாயின் ஆழமான அன்பு, நற்றாயின் வேதனையுள்ளம் ஆகியன வெளிப்படுகின்றன. சான்று விளக்கத்திற்காக நற்றாயின் சுற்றிச் சுழலும் உள்ளம் என்பது விரிவாக எடுத்துரைக்கப் பெறுகின்றது.

நற்றாயின் சுற்றிச் சுழலும் உள்ளம்

தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டனர். தலைமக்கள் சென்ற வழியானது அழல் வீசக்கூடியது. நிழலிடம் இல்லாததது. ஆண் புலியானது, தனது பெண் புலியின் பசியினைப் போக்க, அவ்வழிச் செல்வோரைக் கொல்லும்பொருட்டு நோக்கியிருக்கும் கொடுமைமிக்கது. அத்தகைய வழியில் தலைவி எவ்வாறு நடந்து செல்வாள் என்று நற்றாயின் உள்ளம் கவலை கொள்கிறது. இதனை,

"அழலவிர் ஙளிடை நிழலிடம் பெறாஅது
ஈன்றுகாண் மடிந்த பிணவுப்பசி கூர்ந்தென
மான்ற மாலை வழங்குநர்ச் செகீஇய
புலிபார்த் துறையும் புல்லதர்ச் சிறுநெறி
யாங்குவல் லுநள்கொல்"[30]

என்பாள். நற்றாயின் உள்ளமானது தலைவி செல்லும் பாலைநிலத்தை எண்ணிப் பார்க்கின்றது. எனவே நற்றாயின் உடல் மனையின்கண் அமைய, அவளது உள்ளம் பாலைநிலத்தில் செல்லும் தலைவியையே சுற்றிச்சுழலுவதை அறியமுடிகின்றது. தலைவி தன்னைப் பிரிந்து சென்றாலும், தன்னால் அவளை மறக்கமுடியவில்லையே என்று நற்றாய்ப் புலம்பியதன்வழி அவளது பாசப்பிணைப்பு நன்கு வெளிப்படுகின்றது. பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்னும் பழமொழியினை இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது.

ஆ. நற்றாய்-கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[31]

நற்றாய் புலம்பல், நற்றாயின் கடுஞ்சொல், நற்றாய் தலைவியைக் கடிதல், தலைவனின் வீரம், உயிர்துறக்க விரும்பும் தாயுள்ளம் ஆகியன நற்றாய்

கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் அறியப்பெறும் பண்புகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக 'நற்றாயின் கடுஞ்சொல்' என்ற பண்பு பின்வரும் பகுதியில் விளக்கப்பெறுகிறது.

நற்றாயின் கடுஞ்சொல்

தலைவனும், தலைவியும் உடன்போயினர். இந்நிலையில் நற்றாய், தலைவியின் பிரிவைத் தாங்க முடியாதவளாகிறாள். அதற்குக் காரணம் தலைவன் தான் என்ற சினமும் எழுகின்றது. அன்பின் காரணமாகத் தன் மகளைத் திட்ட முடியாத நற்றாயின் உள்ளம் தலைவனைக் கடிகின்றது. அருஞ்சுர வழியில் தன் மென்மையான மகளை நடக்கச் செய்கின்றானே என்று நற்றாய் வேதனையுறுகிறாள். இதன் விளைவாகத் தலைவனை ஏதிலாளன்"[32] எனத் தனக்கு அயலானாகவும் கொடியவனாகவும் அவனை எண்ணுகின்றாள்.

தன்மகள் உடன்போனாள் என்ற நற்றாயின் கோபமே, தலைவனையும், அவனது செயலையும் குறைத்துப் பேசத் தூண்டுகிறது. நற்றாயின் மனம்திறந்து பேசும் பாங்கு இங்கு வெளிப்படுகின்றது.

இ. நற்றாய்த் தோழியிடம் நிகழத்தும் கூற்றுக்கள்[33]

நற்றாய் தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்களில் இருந்து நற்றாய்த் தலைவியைக் கடிதல், நற்றாய்த் தோழியின் பொருட்டுப் புலம்பல், நற்றாய்த் தலைவன் பொருட்டுப் புலம்பல் ஆகிய பண்புகள் வெளிப்படுகின்றன. இங்கு சான்றிற்கு நற்றாய்த் தோழியின் பொருட்டுப் புலம்பல் என்பது எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது.

நற்றாய்த் தோழியின் பொருட்டுப் புலம்பல்

தோழி தன் துணையாகிய தலைவியின் பிரிவால் வருத்தமடைகிறாள். இதனைக் காணும் நற்றாய்க்கும் வருத்தம் மிகுகின்றது. நற்றாய்ப் பிரிந்துசென்ற தன் மகளைக் காட்டிலும், தன் தோழியின் (செவிலியின்) மகளாகிய தோழியின் துன்பத்திற்கு ஆற்றாளாகிப் புலம்புவதை,

"போகிய வெவட்கோ நோவேன் றேமொழித்
துணையிலள் கலிழு நெஞ்சின்
இணையே ருண்க ணிவட்குநோ வதுவே"[34]

என்ற பாடல் உணர்த்தி நிற்கின்றது. உடன்போன தலைவி தக்க துணையுடன் சென்றதால் அவளுக்காக நோவது வீண். துணையில்லாமல் (தலைவியில்லாமல்) கலிழும் இவளுக்கே வருந்துவேன் என நற்றாய் தன் துயரையும் மறுந்து, தோழியின் துயர்தீர்க்கும் அருட்கலமாக மாறுகின்றாள்.

ஈ. நற்றாய் தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[35]

நற்றாய்த் தலைவியினைப் பழித்தல், நற்றாயின் தெய்வநம்பிக்கை, நற்றாயின் இதயம் துடித்தல் ஆகியன நற்றாய், தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக நற்றாயின் இதயம் துடித்தல் என்ற பண்பு எடுத்துக்கொள்ளப்பெறுகின்றது.

நற்றாயின் இதயம் துடித்தல்

தலைவியைப் பிரிந்த தாயுள்ளம் பல்வேறு நிலைகளில் வருத்தம் அடைகிறது. வேதனையுறுகிறது. தலைவி மணப்பருவம் எய்தியவுடன் அவளுக்குச் சிறப்பாகத் திருமணம் செய்ய வேண்டும் என்று நற்றாய்த் திட்டமிடுகிறாள். ஆனால்

தலைவியோ தன் அன்னையைத் துறந்து, தலைவனுடன் சென்றுவிடுகிறாள். இதன் காரணமாக நற்றாயின் இதயக்கோட்டைத் தகர்ந்துவிடுகின்றது.

தலைவி தன் அன்பை நினைக்காமல் பிரிந்ததாலும், தன் காவலை மீறித் தன்னை ஏமாற்றியதாலும், தலைவியின் பிரிவைத் தாங்க முடியாத வேதனையாலும் துடிக்கும் தாயானவள், தலைவியைப் பிறனாயினள்"[36] என்று வேறுபடுத்திக் கூறவும் செய்கிறாள். இத்தகைய நற்றாயின் ஏக்கத்தை (துன்பத்தை) சங்க இலக்கியப் பாடல்களில் மிகுதியாகக் காணலாம். தாயின் (நற்றாயின்) இதயத்தை முழுமையாக உணர்ந்து எழுதியுள்ள ஆண்பாற்புலவர்களின் உணர்வு போற்றுதற்குரியது.

உ. நற்றாய் செவிலியடம் நிகழ்த்திய கூற்று[37]

நற்றாயின் வேதனையுள்ளம் என்கிற பண்பு நற்றாய் செவிலியிடம் நிகழத்திய கூற்றிலிருந்து அறியப்பெறுகிறது. இப்பண்பு பின்வருமாறு எடுத்துரைக்கப் பெறுகின்றது.

நற்றாயின் வேதனையுள்ளம்

நற்றாயும், செவிலியும் நீங்கா காதலுற்றவர்களாகத் திகழ்ந்தனர். ஆனால் தலைவி தலைவனுடன் போக்குடன்பட்டு போகிய விடத்து, அவர்கள் பாழ்பட்டுக் கலங்கினர். நற்றாய், செவிலியை ஆற்றுப்படுத்தும் முகமாக உடன்போக்கினை மேற்கொண்ட தலைவிபால் சென்ற அன்பும் துன்பமுறுவதாயிற்று என்கிறாள். இதனை,

"தெறுவ தம்ம நும்மகள் விருப்பே
உறுதுய ரவலமொ டுயிர்செலச் சாஅய்ப்
பாழ்படு நெஞ்சம் படரடக் கலங்க"[38]

என்ற பாடல் உணர்த்தி நிற்கின்றது. இவற்றால் நாடுகள் பல கடந்து தலைவனுடன் சென்ற தலைவியின் பிரிவால், துயருறும் தாயின் (நற்றாயின்) நெஞ்சம் உயிர் நீங்குமளவிற்கு மெலிந்தமை அறியப்பெறுகின்றது. நற்றாய், தன் தோழியாகிய செவிலியை ஆற்றுப்படுத்துவதற்காகத் தன் மகளின் மீதுள்ள அன்பினை வெறுத்தது, தொல்லையாக நினைத்தது உணரப்பெறுகிறது. உறவைவிட நட்புக்கு முதன்மை அளித்த பாங்கு இப்பாட்டின்வழி அறியப்பெறுகின்றது.

ஊ. நற்றாய் அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்று[39]

இக்கூற்றின்வழி நற்றாயின் நம்பிக்கை என்கிற பண்பு பெறப்பெறுகின்றது. இப்பண்பு பின்வருமாறு விளக்கப் பெறுகின்றது.

நற்றாயின் நம்பிக்கை

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் எனும் நம்பிக்கை சங்க காலம் முதல் இன்றுவரை இருந்து வருகின்றது. இதனை விளக்குமிடத்து "நிமித்தம் உணர்த்தும் பறவைகள் சிலவற்றிடம் புனிதத்தன்மை அடங்கியிருப்பதாகக் கருதும் எண்ணத்தின் அடிப்படையிலேயே காக்கை நிமித்தப் பறவையாகச் சுட்டப்பெற்றிருப்பதாக"[40] ஜி.எல்.ஹார்ட் குறிப்பிடுகின்றார்.

குற்றமில்லாத சிறகுகளையுடைய, சிறிய கருங்காக்கையை விளித்து நற்றாய்,

"வெஞ்சின விறல்வேல் விடலையொடு
அஞ்சி லோதியை வரக்கரைந் தீமே"[41]

என்பாள். காளை போல்வானொடு சென்ற அழகிய சிலவாகிய கூந்தலையுடைய என்மகள், மீண்டு வருமாறு கரைவாயாக, என வேண்டும் நற்றாய் கூற்றுப் பாடல்,

பண்டைத் தமிழர்கள் கரையும் காகத்தின்மேல் கொண்டுள்ள நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்றது.

2. தோழி

உடன்போக்கில் தோழியின் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் 1. தலைவி, 2.தலைவன் ஆகியோர். அவ்வகையில் தோழி தலைவியிடமே அதிகமான கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளாள்.

அ. தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[42]

தோழியின் ஆய்ந்தறியும் திறன், தோழியின் வழிப்படுத்தும் திறம், தலைவனின் வீரம், தோழி செயலற்றுப் புலம்பல், தோழியின் நயமாகப் பேசும் திறன், தலைவனின் பொறுப்புணர்ச்சி, தோழியின் கடமையும் பொறுப்புணர்ச்சியும், தோழி தலைவிக்கு கூறும் அறிவுரை, அன்பின் மிகுதியில் ஊரார் புலம்பல் முதலிய குணநலன்கள் தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. சான்றிற்குத் தோழியின் கடமையும் பொறுப்பும் என்கிற பண்பு விரிவாக ஆராயப் பெறுகின்றது.

தோழியின் கடமையும், பொறுப்பும்

தோழி உடன்போக்கிற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்த பின்பும் தலைவி உடன்போக விரும்பவில்லை. இந்நிலை கண்டு தோழி கையுங்காலும் ஓய்ந்து தீயுறு தளிரின் வருந்தினள்[43]. உடன்போக்கிற்கு ஏலாத தலைவியின் நிலைகண்டு தோழி துயர் உற்றாலும் துவண்டுபோகவில்லை. தலைவியின் செயலால் கலக்கம் எய்தினாலும், கடமையை மறந்துவிடுவதில்லை. தனது துன்பத்தை மிகைப்படுத்திக் கூறியாவது தலைவியை உடன்போக்கிற்கு

உடன்படச்செய்ய வேண்டும் என்பது தோழியின் விருப்பமாகும். இப்பாடலில் வருந்தும் தோழியின் நிலைகண்டு தலைவி உடன்போக்கினை மேற்கொள்வது அறியப்பெறுகின்றது. அவ்வகையில் தலைமகளை கட்டாயப்படுத்தி உடன்படச் செய்ததன்வழித் தோழியின் கடமையும் பொறுப்பும் வெளிப்படுவதை உணரமுடிகின்றது.

ஆ. தோழி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[44]

தோழி தலைவனிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் தோழியின் சொல்லாற்றல், தலைவியின் உள்ளக்குமுறல், தோழியின் கடமையுணர்வும், அறிவுறுத்தும் திறனும், நற்றாயின் கடமையுணர்வு, தலைவியின் ஆராக்காதல், தோழியின் ஆர்வம், தோழி தலைவனை இடித்துறைத்தல், தோழியின் கடமையுணர்வும், பொறுப்புணர்வும் ஆகிய பண்புநலன்கள் வெளிப்படுத்தப் பெறுகின்றன. இங்கு எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தோழியின் சொல்லாற்றல் என்கிற பண்பு விரிவாக எடுத்துரைக்கப் பெறுகின்றது.

தோழியின் சொல்லாற்றல்

தலைவன் தலைவியின் காதல் வாழ்வு வெற்றி பெறவும், நிலை நிறுத்தவும் தன் அறிவையும் சொல்லாற்றலையும் தோழி கருவியாகக் கொள்கிறாள். அதனால் தொல்காப்பியரும் அவளை அறிவுடையவளாகக் காட்டுகிறார். அவளுடைய சொல்லாற்றலைப் 'புரைதீர் கிளவி'[45] எனப் போற்றுகிறார். தோழி தன் அறிவுத்திறனாகிய சொல்லாற்றலால் தலைவன் தலைவி தாயர் முதலானவர்களைத் தன்வழி ஒழுகச் செய்யும் திறன் பெற்றவளாகிறாள்.

தலைமகள் தலைவனுடன் போக உடன்பட்டாள். இதை அறிந்த தலைவன், மெல்லிய தன்மையுள்ள தலைவி பாலை நிலத்தில் எப்படி நடப்பாள்? என்று வருந்தினான். இதை அறிந்த தோழி உன்னுடன் சேர்ந்து வந்தால் தலைவிக்குப் பாலை நிலமும் இன்பந்தரும் என்று கூறி தலைவியை அழைத்துச் செல்வதற்குத் தலைவனை உடன்படச் செய்கிறாள்[46]. தலைவன், தலைவியை உடனழைத்துச் செல்லவேண்டும் என்பது தோழியின் விருப்பமாகும். அவ்விருப்பத்திற்குத் தலைவனை உடன்படச் செய்தாள். இவ்வாறு தோழி தலைவனைத் தன்வழி ஒழுகச் செய்ததன் காரணமாகத் தோழியின் சொல்லாற்றல் நன்கு வெளிப்படுகின்றது.

3. செவிலி

உடன்போக்கில் செவிலி கூற்றைக் கேட்போர் பின்வருமாறு: 1. கண்டோர், 2.நற்றாய், 3. தோழி 4. தெய்வம், 5. அஃறிணை ஆகியவற்றிடம் கூற்று நிகழ்த்துகிறாள். இதைத்தவிர தனது நெஞ்சிடம் கூறும் முகமாகவும் பாடல்கள் புனையப்பெற்றுள்ளன. செவிலி நெஞ்சிடம் மிகுதியான கூற்றினை நிகழ்த்தியுள்ளமை தெரிய வருகிறது.

அ. செவிலி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[47]

செவிலியின் பொறுப்புணர்ச்சி, செவிலியின் பின்னோக்கு உத்தி, செவிலியின் சுற்றிச்சுழலும் உள்ளம், செவிலி காட்டும் சமுதாயம், செவிலியின் ஒப்புநோக்குந் திறன், செவிலி தலைவனைப் பழித்தல், தலைவனின் வீரம், செவிலி தலைவியைக் கடிதல், செவிலி தன்னைக் கடிதல், செவிலியின் வேதனையுறும் இதயம், தலைவன் தலைவியின் வற்றா அன்பு, செவிலி கடமைகளைச் செய்ய இயலாமைக்கு வருந்துதல் ஆகிய பண்புகள் செவிலி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி

அறியப்பெறுகின்றன. சான்றிற்குச் செவிலி காட்டும் சமுதாயம் என்கிற பண்பு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளது.

செவிலி காட்டும் சமுதாயம்

தன் குடும்பத்தின் மதிப்பினைக் காக்கவும், நற்றாயின் கவலையை நீக்கவும் இடைச்சுரத்தினில் செவிலி தலைவியைத் தேட முனைகின்றாள். இடைச்சுரத்தில் வரும் வழிப்போக்கரை வினவியும், கால்கள் நடை ஓயவும் தேடுகின்றாள். ஆணும் பெண்ணுமாக வரும் அன்பர்களையெல்லாம் தமது மகளும், காதலனும் என்று ஐயுற்று அவர்களைக் கூர்ந்து நோக்கியும், அண்மையில் அவர்கள் வரத் தமது மகளல்லள் என்று அறிந்தும், தேடிச் செல்கின்றாள். இவ்வாறு தேடிச் சென்று கொண்டிருக்கும் செவிலியின் உள்ளம் தெளிகிறது. தன் மகள் ஒருத்தி மட்டுமே, தான் விரும்பிய காதலனுடன் சென்று தனக்குப் பழி உண்டாக்கிவிட்டாள் என்ற தன் நிலையை (கருத்தை) மாற்றிக் கொள்கிறாள். தன் மகளும், பிறன் மகனும் மட்டுமே தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர் அல்லர் இவர்களைப் போன்று,

"அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே"[48]

என்று அறிந்து கொள்கின்றாள். இவ்வுலகத்துக் காதலித்து உடன்போனவர் பலர் என்பதைச் செவிலி உணர்கிறாள். இதுவே செவிலி பெற்ற சமுதாய அறிவு. சமுதாயத்திற்கு அஞ்சிய, நாணிய, செவிலி, உடன்போக்கு உலகியல்பு என்று உணர்ந்து நெஞ்சம் ஆறுதல் அடைகிறாள்.

ஆ. செவிலி கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[49]

செவிலியின் சொல்வன்மை, செவிலியின் ஆழமான அன்பு, செவிலி போற்றும் குடும்ப மதிப்புணர்வும், மனவருத்தமும், செவிலியின் ஆராக்காதல் முதலிய பண்புகள் செவிலி கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி உணரப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக செவிலி போற்றும் குடும்ப மதிப்புணர்வும், மனவருத்தமும் என்பது பின்வருமாறு விரிவாக ஆராயப் பெறுகின்றது.

செவிலி போற்றும் குடும்ப மதிப்புணர்வும் மனவருத்தமும்

தலைவி உடன்போனமைக்காக செவிலி வருந்துகின்றாள். தலைவி உடன்போகும் வரை வாளாவிருந்து, தனது மகளை (தோழியை) நினைந்து மேலும் நொந்து, ஒருவர் பெயர் எடுக்க வேண்டுமாயின் ஆற்றலான் முயன்று எடுப்பர். அவ்வாறே நானும் அரிதின் முயன்று இன்னானோடு ஓடிவிட்ட இன்னவள் தாய் என்னும் கெட்டபெயரினை எடுத்துள்ளேன் என்ற கருத்தினை வெளியிடுகின்றாள். தலைவி உடன்போனமைக்கு ஒன்றும் கூறாத தன்மகளை நினைத்து வெறுக்கின்றாள். தன்னைத் தெருட்டுவோர்க்கு,

"அத்த நீளிடை யவனோடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவர
றாய ரென்னும் பெயரே"[50]

என்று கூறுகின்றாள். தலைவி உடன்போனமை கண்ட செவிலி தன்னைச் சமுதாயம் ஏசும் என்று வருந்துகின்றாள். அவளின் உள்மனம் தலைவியின் ஒழுக்கத்துக்குத் தானே பொறுப்பானவள் என்று சுட்டுகின்றது. இக்கருத்துச் சமுதாயத்தின் தூற்றுதலுக்குச் செவிலி அஞ்சியதைக் காட்டுகின்றது. இந்தப் பழிச்சொல் தனக்கு ஏற்படக்கூடாது என்பது அவள் விழைவு. தலைவியின் அறநெறிப்பட்ட கற்பைவிடத்

தன் குடும்ப மதிப்புணர்வு கெட்டுப்போனதற்குச் செவிலி பெரிதும் கவலைப்படுகின்றாள்.

இ. செவிலி நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[51]

செவிலி நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி செவிலியின் பரந்துபட்ட அறிவு, செவிலி தலைவனைப் போற்றல், செவிலியின் உள்ளக்கிடக்கை ஆகிய பண்புகள் வெளிப்படுகின்றன. இதில் எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக 'செவிலியின் பரந்துபட்ட அறிவு' என்பது ஆராயப் பெறுகின்றது.

செவிலியின் பரந்துபட்ட அறிவு

தலைவி உடன்போய பின்னர் தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும் அறத்தொடு நிற்பர். செவிலி நமது மடந்தையின் நட்பு, பலரறி மணம் செய்து கொண்டமையால் உலகறிய உண்மையாயிற்று என்கிறாள். இதற்கு செவிலி கூறும் உவமையின் வாயிலாக அவளது பரந்துபட்ட அறிவு வெளிப்படுவதை,

"தொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாய்ஆ கின்றே
தொகுவளை முன்கை மடந்தை நட்பே"[52]

என்ற பாடல் உணர்த்தி நிற்கின்றது. பண்டைக்கால வழக்கமாகிய அவையினைப் பற்றி அறிவித்ததால் செவிலியின் பரந்துபட்ட அறிவு புலப்படுவதைக் காணலாம். குடும்ப அறிவு மட்டுமின்றி, சமுதாய அறிவும் நிரம்பியவாரக் குறிக்கப்பெறும் செவிலியின் பரந்துபட்ட அறிவு போற்றுதற்குரியதாகும்.

ஈ. செவிலி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[53]

செவிலி போற்றும் அறநெறி, செவிலி தலைவனைப் பழித்தல், செவிலி தலைவியைக் கடிதல் ஆகிய பண்புகள் செவிலி தோழியிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. சான்றிற்காகச் செவிலி தலைவனைப் பழித்தல் விரிவாக எடுத்துரைக்கப் பெறுகின்றது.

செவிலி தலைவனைப் பழித்தல்

தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்டனர். இதனை அறிந்த செவிலி, தலைவியின் பிரிவைத் தாங்க முடியாதவளாகிறாள். உடன்போக்கிற்குக் காரணம் தலைவன் தானே என்ற சினமும் எழுகிறது. அன்பின் காரணமாக, தன் மகளைத் திட்டமுடியாத செவிலியன் உள்ளம் தலைவனைப் பழிக்கின்றது. தன் மென்மைத் தன்மை வாய்ந்த மகளைத் தலைவன் அருஞ்சுர வழியில் நடக்கச் செய்கிறானே என்று செவிலியின் உள்ளம் வேதனைப்படுகின்றது. அதன் விளைவாகத் தலைவனை சிறியோன்"[54] எனத் தூற்றுவனுடன் கொடியவனாகவும் நினைக்கிறாள்.

2. செவிலி தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்று[55]

செவிலியின் தெய்வநம்பிக்கை, செவிலி தலைவனைப் போற்றல் ஆகிய பண்புகள் செவிலி தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றிலிருந்து அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகச் செவிலியின் தெய்வநம்பிக்கை என்பது ஆராயப்பெறுகின்றது.

செவிலியின் தெய்வநம்பிக்கை

சமுதாயத்தில் தெய்வ நம்பிக்கை அகவாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளதைச் சில பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன. இறைவனை வழிபட்டால் நன்மை நடக்கும் என்ற எண்ணமும், நினைத்தது நிறைவேறும் என்ற நம்பிக்கையும் செவிலியின் கூற்றாய் ஒரு குறுந்தொகைப் பாடலில்"[56] வெளிப்படுகின்றது.

இப்பாடலில் இளைய வீரனொடு, மாமை நிறத்தைக் கொண்ட நமது மகள் சென்றாள். தலைமக்கள் செல்லும் பாலைநிலத்தில் சூரியனே! நீ வெயிலே இல்லாது இருப்பாயாக என்கிறாள். மேலும் மகள் தலைவனொடு நடந்து கடப்பதற்கு, வழிகள் இனிதாய் அமையும்படியாகக் குளிர்ந்த மழையையும் பெய்விப்பாயாக, என்று தெய்வத்தை நோக்கி வணங்குகிறாள் செவிலி. உடன்போக்கினை மேற்கொண்ட தலைமக்களைச் செவிலி முதலில் கடிந்தாலும், பிறகு அவர்கள்மீது கொண்ட ஆழமான அன்பின் காரணமாகத் தெய்வத்தை வணங்குகிறாள்.

ஊ. செவிலி அஃறிணையிடம் நிகழ்த்தும் கூற்று[57]

இக்கூற்றிலிருந்து தலைவியின் துணிவு என்கிற பண்பு பெறப்பெறுகின்றது. இப்பண்பு பின்வருமாறு விளக்கம் பெறுகின்றது.

தலைவியின் துணிவு

தலைவியினுடைய தந்தையின் நன்னகர் செல்வமுடையதாகச் சுட்டப்பெறுகின்றது. அதுமட்டுமல்லாமல் காவல் மிகுந்ததாகவும் காட்டப்பெறுகின்றது. 'ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவி'[58] என்று தந்தையின்

காவல் குறிக்கப் பெற்றுள்ளது. தலைவி இத்தகைய காவலினை மீறித், தனது பெற்றோரை ஏமாற்றிவிட்டுத் தலைவனுடன் போக்கினை மேற்கொண்டாள்.

தலைவி உடன்போனபோது வேட்டுவர் விரிக்கும் வலைக்கு அஞ்சிப் பிணைமான் வெருவி ஓடுவதுபோன்று தன் காவல் நகரைவிட்டு நீங்கினாள் என்று செவிலி கூறுகின்றாள். இச்செய்தியின் மூலம் தந்தையின் கடிநகரைக் கடந்துசென்ற தலைவியின் துணிவும், தனது பெற்றோரை ஏமாற்றித் தனது தலைவனுடன் சென்ற சாதுரியமும் (புத்திசாலித்தனம்) அறியப்பெறுகின்றது. தலைவி உடன்போக்கினை மேற்கொண்டது பெண்கள் பூண்டிருந்த உரிமையை விளக்கி நிற்கின்றது. குடும்பத்தினரை எதிர்த்துத் தலைவன்மேல் கொண்ட பற்றினாலும், நம்பிக்கையினாலும் புணர்ந்துடன் செல்லும் தலைவியின்நிலை அக்காலப் பெண்களைக் குறிக்கோள் நெஞ்சிராக உயர்த்திக் காட்டுகின்றது.

4. கண்டோர்

உடன்போக்கில் குறிக்கப்பெறும் அந்தணர், அயலோர் ஆகியோர் கண்டோரில் அடங்குவர். இக்கண்டோர் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் பின்வருமாறு: 1.நற்றாய், 2. செவிலி, 3. தலைமக்கள், 4. நெஞ்சிடமும் கூற்றுக்களை அமைத்துள்ளார். இறுதிவகைக் கூற்று மிகுதியாக இருப்பதை ஆய்வின்வழி உணரமுடிகிறது.

அ. கண்டோர் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[59]

1. தலைவனின் கொடிய உள்ளம், 2. கண்டோர் சுட்டும் சமுதாயம் (பொருளாதார ஏற்றத் தாழ்வு), 3.கண்டோர் காட்டும் இரக்கம், 4. கண்டோரின் ஊழ்வினை நம்பிக்கை ஆகியன கண்டோர் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி

அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகக் கண்டோரின் 'ஊழ்வினை நம்பிக்கை' என்ற பண்பு விரிவாக ஆராயப்பெறுகின்றது.

கண்டோரின் ஊழ்வினை நம்பிக்கை

உடன்போக்கினை மேற்கொண்ட தலைமக்களைக் கண்ட கண்டோரின் எண்ணத்தை,

"நல்லை மன்ற அம்ம, பாலே மெல்இயல்
துணைமலர்ப் பிணையல் அன்ன இவர்
மணமகிழ் இயற்கை காட்டியோயே"[60]

என்ற பாடல் உணர்த்துகிறது. தலைமக்கள் இருவரும் சிறுவயதில் விளையாடுவதைக் கண்டோர் பார்த்திருக்கின்றனர். அவ்வாறு விளையாடும்போது அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்த இவர்கள், இன்று காதலர்களாய்க் களிப்புடன் செல்கின்றனர். இதற்குக் காரணம் ஊழ்வினைதான் என்று தமக்குள் கூறிக்கொண்டனர். அந்த ஊழ்வினையையும் வாழ்த்தினர். பண்டைத் தமிழ் மக்கள் தலைவிதியிலே நம்பிக்கை வைத்திருந்ததையும், காதல் மணத்திற்குக்கூட விதிதான் காரணம் என்று எண்ணி வந்ததையும் இப்பாடல் உணர்த்தி நிற்கின்றது.

ஆ. கண்டோர் தலைமக்களிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[61]

1. கண்டோரின் நெறிப்படுத்தும் திறம், 2. தலைமக்களின் பிரியாக் கேண்மை, 3. தலைவியின் சிறுபிள்ளைப் பண்பு ஆகிய பண்புகள் கண்டோர் தலைமக்களிடம் நிகழ்த்திய கூற்றின்வழி அறியப்பெறுகின்றன. சான்றிற்காகக் கண்டோரின் நெறிப்படுத்தும் திறம் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது.

கண்டோரின் நெறிப்படுத்தும் திறம்

பொழுது சாய்ந்த மாலைக்காலத்தில், தலைவன் தலைவியை அழைத்துக்கொண்டு இடைச்சுரத்தில் செல்கின்றான். அப்பொழுது வணிகர் கூட்டம் வந்து சேர்ந்ததனால், ஆறலைக் கள்வர்கள் பகைப்புலத்தில் சினந்து செல்வது போலச் சினந்து எழுப்பும் தண்ணுமைக் குரல் ஒலி கேட்கின்றது. இவ்வொலி தமக்குத் தீங்கு தரக்கூடியது என்பதை அறியாதவராய்த் தலைமக்கள் அப்பாலை வழியில் செல்கின்றனர். இதனைக் கண்டோர், அவர்கள்மேல் இரக்கம் கொண்டு, அவர்களை அதற்குமேல் செல்லாதவாறு தடுக்கின்றனர். அவர்கள் தலைவனிடம்,

"எல்லு மெல்லின்று பாடுங் கேளாய்
செல்லா தீமோ சிறுபிடி துணையே"[62]

என்று கூறுகின்றனர். தலைமக்கள் பாலை வழியில் செல்லும் பொழுது அவர்கள் செலவைத் தடுத்துத், தங்கிச் செல்லுமாறு கூறுவது கண்டோர் திறங்களுள் ஒன்று. தலைமக்கள் பாலை வழியைப் பற்றி ஒன்றும் அறியாதவர்கள், அவ்வழியில் ஏற்படும் இடர்ப்பாடுகள், தீமைகள் ஆகியவை பற்றி அவர்களுக்குத் தெரியாது. இந்நிலையில் அவ்வழியில் செல்லும் தலைமக்களுக்கு அவ்வழியின் தன்மையை எடுத்துரைப்பது இன்றியமையாததாகிறது. இவ்வரியபணியைக் கண்டோர் திறம்பட ஆற்றுகின்றனர்.

இ. கண்டோர் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள்[63]

கண்டோர் செவிலியிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின் மூலம் கண்டோர் கூறும் ஆறுதல், கண்டோர் காட்டும் அன்பு, கண்டோர் சுட்டும் அறநெறி முதலிய

பண்புநலன்கள் அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகக் கண்டோர் சுட்டும் அறநெறி என்கிற பண்பு விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

கண்டோர் சுட்டும் அறநெறி

உடன்போக்கில் சென்ற தன் மகளைத் தேடிச் செல்லும் செவிலியை, முக்கோற்பகவர் அவர்கள் அவ்வாறு சென்றது அறநெறி என்று கூறி ஆற்றுவிக்கின்றனர். அவர்கள் இனிய உவமைகள் மூலம் இக்கருத்தை வலியுறுத்துகின்றனர்.

அவர்கள் செவிலியிடம் சந்தன மரங்கள் மலையிடத்தே பிறக்கின்றன. அவை அம்மலைக்கு எவ்விதப் பயனையும் நல்குவதில்லை. அதனை மெய்யின்கண் பூசிக்கொள்பவர்களுக்கே மனத்தையும், குளிர்ச்சியையும் தருகின்றது. உன் மகளும் சந்தனத்தின் தன்மையை உடையவளே ஆவள் என்று கூறுகின்றனர்.

அழகிய வெண்முத்துக்கள் கடலுள்ளே பிறக்கின்றன. அவை கடலுக்கு எப்பயனையும் கொடுப்பதில்லை. அவற்றை மாலையாக்கி அணிந்து கொள்பவர்களுக்கே அழகைச் சேர்க்கின்றது. உன் மகளும் முத்தின் தன்மையை உடையவளே ஆவள் என்றனர்.

இனிய ஓசைகள் யாழுள்ளே பிறக்கின்றன. அவ்வோசை யாழுக்கு எவ்விதத்திலும் பயன்படுவதில்லை. அவ்விசையைப் பாடுபவர்களுக்கு மட்டுமே பயன்நல்குகிறது. உன் மகளும் யாழின் நன்மையை உடையவளே ஆவள் என்று கூறினர்.

இம்மூன்று கருத்துக்களிலும் செவிலிக்கு நும்மகள் நுமக்கு எப்பயனையும் கொடுக்கமாட்டாள், அவளது காதலனுக்கே இன்பம் அளிக்கும் கடப்பாடுடையவள்.

தலைவி தலைவனுடன் சென்றது, 'அறத்தின் பாற்பட்ட செயலே' என்பதை வலியுறுத்தி அவள் மனத்தில் நன்கு பதியும்படி எடுத்துக் கூறுகின்றனர். மேலும்,

"இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்
அறந்தலை பிரியா வாறுமற் றதுவே" [64]

என்று கூறி அறத்தினையும் அறிவுறுத்துகின்றனர்.

இவ்வாறு உலகியல்பையும், உடன்போக்கு அறநெறி என்பதையும் கூறிச் செவிலியைத் திருப்பி அனுப்ப முயற்சிப்பதோடு, கண்டோர் அவளது துன்பத்தையும் போக்க விழைகின்றனர். வ.சுப. மாணிக்கனார் அவர்கள் அதனை, உடன்போய மகளைத் தேடிச்சென்றாள் ஒரு செவிலித்தாய், தன் மகளையும், அவள் காதலனையும் கண்டதுண்டோ என்று எதிர்ப்பட்ட முக்கோற்பகவரைத் துடிதுடித்து வினவினாள். தமிழியல் அறிந்த அந்தணாளர்கள் கண்டோம் கண்டோம் கற்புவழிப் பட்டாளைச் சுரத்திடைக் கண்டோம் அவள் சென்ற நெறியே தலையாய அறநெறி. வாழ்வுக்குச் சிறந்தானை வழிபட்டுச் சென்ற கற்பின் பொருட்டு, தாயே, கவலற்க என்று அறமும் அமைதியும் தோன்ற ஏதுக் காட்டினார்" [65] என்பர்.

ஈ. கண்டோர் நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்கள் [66]

கண்டோர் சுட்டும் அறநெறி, கண்டோர் கூறும் ஆறுதல் ஆகிய பண்புகள் கண்டோர் நற்றாயிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுகின்றன. சான்றிற்குக் கண்டோர் கூறும் ஆறுதல் விளக்கமாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

கண்டோர் கூறும் ஆறுதல்

கண்டோர் நற்றாயிடம் பெருந்துன்பத்தை நுகர்ந்திருக்கின்ற பெருமாட்டியே கேள்! நின் தலைமகள் யானைகளும், புலிகளும், திரிகின்ற கொடிய பாலை நெறியில் சென்றாள். நாங்கள் இதனைக் கண்டோம் என்று கூறுகின்றனர். இதனை,

"நயந்த காதலற் புணர்ந்து சென்றனளே
விடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளோ" [67]

என்பர். இக்கருத்தின் அடிப்படையில் கண்டோர் உடன்போக்குப் பற்றிய சமுதாய எண்ணத்தை விளக்கி நிற்பவர்கள். தாய், தலைவி, தலைவன் ஆகியோருக்கு வாழ்வில் பயனும், முறையும் கூறும் அறநெறியாளர்கள், அருள்காட்டும் சிந்தையர்"[68] என்பர். ஆகையால் கண்டோர் அருள்காட்டும் முகத்தான், நற்றாயக்குக் கண்டோர் கூறும் ஆறுதல் குறிக்கப்பெறுவது கருதத்தக்கது.

தலைமக்கள் உடன்போகியவழி இடைச்சுரத்தில் அவர்களைக் கண்டோர், தலைவியின் தாய்க்கு அவர்களைக் கண்ட செய்தியைத் தெரிவிக்கின்றனர். தலைவி பிரிந்து சென்றமையால் மிகவும் வருந்தியிருக்கும் தாய்க்கு இச்செய்தி மிகவும் ஆறுதல் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

5. தலைவன்

உடன்போக்குத் துறையில் தலைவன் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. தலைவி, 2. தோழி, 3. நெஞ்சிடமும் தலைவன் கூற்று நிகழ்த்தியுள்ளான். அவ்வகையில் தலைவனின் கூற்று மிகுதியாகத் தலைவியிடமே நிகழ்ந்துள்ளது.

அ. தலைவன் தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[69]

தலைவனின் ஆழமான அன்பு, தலைவனின் விடாமுயற்சி, தலைவனின் பொறுப்புணர்ச்சி, தலைவனின் மனவருத்தம், தலைவனின் அஞ்சாமைக்குணம், தலைவனின் பாராட்டும்திறன் (தலைவன் தலைவியின் அழகுநலன் பாராட்டல்), தலைவன் தலைவிக்கு வழங்கும் சமஉரிமை, தலைவனின் கடமையும், பொறுப்பும் ஆகிய பண்புகள் தலைவன் தலைவியிடம் நிகழத்தும் கூற்றுக்களின் மூலம் அறியப் பெறுகின்றன. சான்றிற்காகத் தலைவனின் கடமையும், பொறுப்பும் என்கிற பண்பு எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது.

தலைவனின் கடமையும், பொறுப்பும்

தலைவன் தலைவியைப் பாலைநிலத்தின் வழியாக அழைத்துச் செல்லும்போது ஆறுதல் வார்த்தைகளைக் கூறிச் செல்வான். இதனை,

"இடைச்சுர மருக்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்திற்கு முரியன்"[70]

என்பர். இடைச்சுரத்தின்கண் தலைவன் தலைவியிடம் உன்னைக் கைவிடுதல் எனக்கு அறமன்று என்று தன் கடமை பற்றிக் கூறிச் செல்வான். இதனை,

"வழிபடு தெய்வங்கட் காண்டாஅங்
நலமென் பணைத் தோளெய்தின மாகலின்
நிழல் காண்போறு நெடிய வைகி
வருந்தா தேகுமதி"[71]

என்பான். இதனுள் வழிபடு தெய்வம் கண்டால் விடுபவர் இல்லாதது போல, உன்னைக் கைவிடுதல் இல்லை என்றதன்வழி தலைவனின் கடமையுணர்வு

வெளிப்படுகின்றது. தலைவன் தலைவியை உடனழைத்துச் செல்லும்போது, போகும்வழியில் நிழல் உள்ள இடத்தில் தங்கி, தலைவிக்கு, வருத்தம் ஏற்படா வண்ணம், மெல்ல அழைத்துச் செல்வதால் தலைவனின் பொறுப்பும் புலப்படக் காணலாம்.

ஆ. தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்தும் கூற்று[72]

தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி தலைவனின் உள்ளக்கிடக்கையும் பாதுகாக்கும் திறனும் (மகிழ்ச்சி), தலைவனின் மனவருத்தம் ஆகிய பண்புகள் உணரப்பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தலைவனின் உள்ளக்கிடக்கையும் பாதுகாக்கும் திறனும் என்கிற பண்பு ஆராயப் பெறுகிறது.

தலைவனின் உள்ளக்கிடக்கையும் பாதுகாக்கும் திறனும்

தலைவன் தலைமகளை வைகிருளில் கொண்டுதலைக் கழிந்தான். அந்நிலையில் பெற்றோர், உற்றோர், தோழியர் ஆகியோரை விடுத்துத் தலைவி சென்றனள். உறவினர்களைப் பிரிந்த வருத்தம் தலைவிக்குத் தோன்றா வண்ணம் தலைவன் இளைப்பாற்றியும், இன்சொல் கூறியும் அழைத்துச் செல்வான். இதனை,

> "........... நடக்கயாம் கண்டனம் மாதோ
> காணினி வாழியெம் நெஞ்சே"[73]

என்பான். தலைவி மகிழ்ச்சியாக நடப்பதைக் கண்ட தலைவன் தனது நெஞ்சிடம் தனது உள்ளக்கிடக்கையைக் (மகிழ்ச்சியை) கூறுகிறான். தலைவியைக் கூட்டிச் செல்லும் தலைவன், அவளுக்குத் தன்னையன்றி வேறுதுணை யாரும் இல்லை

என்பதை நன்றாக உணர்ந்து செயல்பட்டதன் காரணமாகப் பாதுகாக்கும் திறன் உணர்த்தப் பெறுகின்றது.

இ. தலைவன் தோழியிடம் நிகழ்த்திய கூற்று[74]

தலைவன் தோழியிடம் நிகழ்த்திய கூற்றின் மூலம் தலைவனின் ஆழமான அன்பும், பொறுப்பும், தலைவனின் பாராட்டும் திறன் ஆகிய பண்புகள் அறியப்பெறுகின்றன. சான்றிற்காகத் தலைவனின் ஆழமான அன்பும் பொறுப்பும் என்ற பண்பு எடுத்துக்கொள்ளப்பெறுகின்றது.

தலைவனின் ஆழமான அன்பும் பொறுப்பும்

தலைமக்கள் உடன்போக்கினை மேற்கொண்ட காட்டில், பெரிய புலியானது களிற்றினைக் கொன்று முழங்கும் ஓசையினையும், கானவரது துடி ஓசையையும் தலைவன் கேட்கிறான். தனக்குப் பின்னால் வரும் தலைவி இவ்வோசைகளைக் கேட்டால் அஞ்சுவள் என்ற கருத்தினை உட்கொண்டனன். அதன் விளைவாக வேறோராற்றால் தலைவியை முன்னே நடக்கும்படிக் கருதினன் என்பதை,

"........ இரும்புலி
களிறட்டுக் குழுமும் ஓசையுங் களிபட்டு
வில்லோர் குறும்பில் ததும்பும்
வல்வாய்க் கடுந்துடிப் பணியுங் கேட்டே"[75]

என்ற பாடல் உணர்த்துகின்றது. துன்பந்தரும் ஓசைகளைத் தலைவிக்குப் புலப்படுத்தாமல், தலைவியின் அச்சத்திற்குத் தலைவன் அஞ்சியதால் தலைவனது ஆழமான அன்பும், தலைவனுக்குப் பின்னால் சென்றாளை முன்னே செல்லவிட்டுப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றது தலைவனின் பொறுப்பையும் உணர்த்தி நிற்கின்றது.

6. தலைவி

உடன்போக்குத் துறையில் தலைவி கூற்று நற்றிணையில் இடம்பெறவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. தலைவியின் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் பின்வருமாறு: 1. தோழி, 2. தலைவன், 3. கண்டோர் (அந்தணர்) ஆகியோர் ஆவர்.

அ. தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[76]

தலைவியின் ஆராத்துன்பம், அன்னையின் தெய்வநம்பிக்கை, நுண்ணுணர்வுமிக்க தாயின் உள்ளம், தலைவியின் வறுமையுட் செம்மை (தன்மான உணர்ச்சி), தலைவியின் ஆய்ந்தறியும் திறன், தலைவியின் நன்றிமறவாத் தன்மை, தோழியின் ஆழமான அன்பு ஆகிய பண்புகள் தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. எடுத்துக்காட்டிற்காகத் தலைவியின் நன்றிமறவாத் தன்மை விளக்கமாக ஆராயப்பெறுகின்றது.

தலைவியின் நன்றிமறவாத் தன்மை

உடன்போய் மீண்ட தலைவி, உடன்போக்கின்போது நிகழ்ந்தவற்றைத் தோழியிடம் கூறுதல் உண்டு. உடன்போக்கினை மேற்கொண்ட தலைவியைத் தேடி, அவளின் தமையன்கள் பின்தொடர்ந்தனர். அவ்வழியிலுள்ள மலையானது தமையன்கள் அறியாவண்ணம் தலைமக்களை மறைத்துக் காத்து உதவுகின்றது. உடன்போய் மீண்ட தலைவி இந்நிகழ்வைத் தோழியிடம் கூறி அம்மலையை வாழ்த்துகிறாள். இதனை,

"வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே"[77]

என்ற பாடல் உணர்த்துகின்றது. தலைவியின் நன்றிமறவாத் தன்மை அக்காலச் சமுதாயத்தில் பெண்களின் குணநலனை (மனவியல்பை) காட்டும் முகமாக அமைந்துள்ளது.

ஆ. தலைவி கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்கள்[78]

தலைவியின் பணியும் மாண்பு, தாயின் (நற்றாய்) மீதுள்ள சினம், தலைவியின் உள்ளக்கிடக்கை ஆகிய பண்புகள் தோழி கண்டோரிடம் நிகழ்த்தும் கூற்றுக்களின்வழி அறியப்பெறுகின்றன. சான்று விளக்கத்திற்குத் தாயின் மீதுள்ள சினம் என்ற பண்பு எடுத்தாளப்பெற்றுள்ளது.

தாயின் (நற்றாய்) மீதுள்ள சினம்

தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்ட வழியானது செல்லுதற்கரிய சுரமாகும். அச்சுரத்தின் இடையில் வழிப்போவாரைத் தலைவி காணுகிறாள். முன்பு தாய்வீட்டில் தான்பட்ட துயரம் நினைவிற்கு வருகின்றது. உடனே தலைவி வழிப்போவோரிடம், தலைவனோடு கூடிவாழ இயலாதவாறு இற்செறித்து வைத்திருந்த அறப்பண்பில்லாத என் தாயைக் காணின், பாலைவழிக் கடந்து சென்றுவிட்டாள் எனக் கூறுமாறு வேண்டுகிறாள். இதனை,

"கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்றோ ளயந்துபா ராட்டி
எற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே"[79]

என்பாள். தலைவி குழந்தைப் பருவந்தொட்டுத் தாயின் அரவணைப்பில் உறங்கியவள். தலைவனுடன் கொண்ட களவிற்கு, தாய் இடையூறாக

விளங்கியதால், அவள் அறனில்லாதவள் ஆகிறாள். இதன்வழித் தலைவிக்குத் தாயின் மீதுள்ள சினம் (வெறுப்பு) வெளிப்பட்ட நிலையை உணர முடிகின்றது.

இ. தலைவி தலைவனிடம் நிகழ்த்தும் கூற்று[80]

தலைவி தலைவனிடம் நிகழ்த்திய கூற்றின் மூலம் தலைவியின் ஆழமான அன்பும் புலம்பலும் வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக இப்பண்பு எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது.

தலைவியின் ஆழமான அன்பும் புலம்பலும்

கலித்தொகைத் தலைவி உடன்போக ஒருப்பட்டாள். மென்மைத் தன்மை வாய்ந்த தலைவியே! நீ பாலை வழியில் வந்தால் இன்னல் நேருமென்று காட்டின் கடுமை கூறித் தலைவன் மறுத்தான். தலைவன் பிரிந்து சென்றால் தலைவியின் செம்மை வாய்ந்த அழகினை மீண்டும் காண இயலாது என்றும் பாலைநிலத்தில் அடையும் இன்னல்களைக் காட்டிலும், தலைவனைப் பிரிந்து மனையின்கண் தனித்துறையும் பெரும் துன்பம் கொடியதாய் இருக்கும் என்றும் தலைவி கூறுகிறாள். இப்பிரிவின் வருத்தத்தைத் தாங்கிக் கொண்டு உயிர்வாழ்வதைவிட இறந்துபடுதல் மேலானது"[81] என்றும் புலம்புகின்றாள்.

பாலைவனக் கொடுமையை நினையாது, அவ்வழியில் செல்லத் துடிக்கும் தலைவியின் செயலானது, அவளது ஆழமான அன்பினை வெளிப்படுத்தும் முகமாக அமைகின்றது. தலைவியின் அன்பின் வெளிப்பாடாக, தலைவனைப் பிரியாதிருக்க வேண்டும் என்ற அவளின் எண்ணமும் புலப்படுத்தப்பெறுகிறது.

II. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள்

உடன்போக்குத் துறையில் கூற்று நிகழ்த்தாத மாந்தர்களாக 1. தந்தையும்[82], 2. தமையனாரும்[83] குறிக்கப்பெறுகின்றனர். அவர்களின் பண்புகள் (மனநிலைகள்) இத்துறையில் விளக்கப் பெறுகின்றன. இவற்றில் தந்தையின் கடமையுணர்ச்சி, குலப்பெருமை காக்கும் தமையனாரின் உளப்பாங்கு ஆகியன குறிக்கத்தக்கன. இப்பண்புகள் செவிலி கூற்றிலும், தலைவி கூற்றிலும் விளக்கம் பெறுகின்றன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகத் தந்தையின் கடமையுணர்ச்சி என்கிற பண்பு ஆராயப்பெறுகின்றது.

தந்தையின் கடமையுணர்ச்சி

தலைவியினது களவு தந்தைக்குத் தாயின் மூலமாக உணர்த்தப்பெறுகின்றது[84]. இதனை அறிந்த தந்தை தன் தகுதிக்கு ஒவ்வாத ஒருவனுடன் தொடர்பு கொண்டதால் மகளை அலைத்து வருத்தியதை,

> "கடமுடைத் தந்தை இடனுடை வரைப்பின்
>
> சிறுபல் கூந்தல் போதுபிடித் தருளாது
> எறிகோல் சிதைய நூறவுஞ்" [85]

என்ற பாடல் உணர்த்தி நிற்கின்றது. உடன்போக்குத் தந்தையால் கடியப்பட்டு வந்துள்ளது. தலைவியின் உடன்போக்குச் செயல்கண்டு தந்தை, உள்ளம் துடிப்படைகிறான். இத்துடிப்பினால் மகளை அலைக்கவும் செய்கிறான். இவ்வலைத்தல் கடமையுணர்ச்சியால் எழுகின்றதேயன்றி, தலைவிமீது உள்ள வெறுப்பினாலோ, களவின் மீதுள்ள வெறுப்பினாலோ எழுவதில்லை.

தொகுப்புரை

தமிழ் மரபில் களவு, கற்பு என்ற இரு கைகோள்கள் வரையறுக்கப்பெறும். இக்களவிலும், கற்பிலும் கூற்று நிகழ்த்தும் மாந்தர்களைத் தொல்காப்பியர் வரையறுத்துக் கூறியுள்ளார். இம்மாந்தர்களில் தோழியும், தலைவியும் இற்செறித்தல் துறையில் கூற்று நிகழ்த்துவதாகத் தொல்காப்பியர் குறிப்பர். நச்சர் சுட்டியதைப் போன்று, சங்க இலக்கியத்தில் தலைவன் கூற்றும் சேர்க்கப்பெற்றுள்ளது.

உடன்போக்குத் துறையில் தொல்காப்பியர் சுட்டிய மாந்தர்கள் சங்க இலக்கியத்திலும் கூற்று நிகழ்த்தியுள்ளமை குறிக்கத்தக்கது.

இற்செறித்தல் துறையில் இடம்பெறும் மாந்தர்களைக் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் என்று பகுத்துக் காணலாம்.

கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தலைவன், தலைவி, தோழி ஆகியோர் ஆவர். இவர்களில் தோழியின் கூற்று மிகுதியாகக் காணப்பெறுகிறது. இதற்கு அடுத்த நிலையில் தலைவியும், தலைவனும் முறையே கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளனர்.

தோழியின் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் தலைவன், தலைவி, செவிலி, உழவர் முதலானவர்கள் ஆவர். அஃறிணையாகிய கிளியிடமும் தோழி கூற்று நிகழத்தியுள்ளாள். இதில் தோழி தலைவனிடம் மிகுதியான கூற்றுக்களை நிகழ்த்தியமையை உணரமுடிகின்றது.

தோழி தலைவனிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி பதினான்கு வகையான பண்புகள் அறியப்பெறுகின்றன. இதில் தலைவியின் பண்புகள் இரண்டும்,

தலைவனின் பண்புகள் இரண்டும், தோழியின் பண்புகள் பத்தும் வெளிப்பட்ட நிலையை உணரமுடிகிறது.

தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் ஆறுவகையான குணநலன்கள் பெறப்பெறுகின்றன. இவற்றில் தலைவிக்கு ஒன்றும், செவிலிக்கு ஒன்றும், தோழிக்கு நான்கும் ஆக பண்புகள் குறிக்கப்பெற்ற நிலையை மதிப்பிடலாம்.

தோழி செவிலியிடம் நிகழ்த்திய கூற்றின்வழி தோழியின் பண்பு ஒன்று புலப்படுகிறது.

தோழி உழவரிடம் நிகழ்த்திய கூற்றின் மூலம் தோழிக்கு ஒன்றும் தலைவிக்கு ஒன்றுமாக இரண்டு குணநலன்கள் அறியப்பெறுகின்றன.

தோழி அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்றின் மூலம் தோழியின் பண்பு ஒன்று உணர்த்தப் பெறுகின்றது.

தலைவி, தோழி, நெஞ்சம் ஆகியவற்றிடம் கூற்று நிகழ்த்துவாள். இதில் தோழியடம் மிகுதியான கூற்றுக்களை அமைத்துள்ளாள்.

தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களிலிருந்து ஐந்து வகையான பண்புகள் அறியப்பெறுகின்றன. இப்பண்புகள் அனைத்தும் தலைவியின் பண்புகளாக அமைகின்றன.

தலைவி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் இருந்து நான்கு பண்புகள் புலப்படுகின்றன. இதில் தலைவனின் பண்பு ஒன்றும், தலைவியின் பண்பு மூன்றுமாக அறியப்பெறுகின்றன.

இற்செறித்தலில் தலைவன் தன் நெஞ்சிடம் மட்டும் கூற்று நிகழ்த்தியுள்ளான். இக்கூற்றிலிருந்து மூன்று வகையான பண்புநலன்கள் வெளிப்படுகின்றன. இவை அனைத்தும் தலைவனின் மனநிலைகளை (பண்புகளை) விளக்கும் முகமாக அமைந்துள்ளன.

இற்செறித்தல் துறையில் கூற்று நிகழ்த்தாத மாந்தர்கள் செவிலி, நற்றாய், தந்தை ஆகியோர். இவர்களின் மனநிலைகள் (பண்புகள்) இத்துறையில் விளக்கம் பெறுகின்றன. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களின் பண்புகள் (மனநிலைகள்) அனைத்தும் தோழி கூற்றில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

உடன்போக்கில் இடம்பெறும் மாந்தர்களைக் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள், கூற்று நிகழ்த்தாத மாந்தர்களைப் பற்றிய செய்திகள் என்று பகுத்துக் கொள்ளலாம்.

கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோர் ஆவர். இத்துறையில் நற்றாய் மிகுதியான கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளாள்.

நற்றாய்க் கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் கண்டோர், தோழி, செவிலி, தெய்வம், அயலோர், சுற்றத்தார் ஆகியோர். இவள் நெஞ்சம், அஃறிணை ஆகியவற்றிடமும் கூற்று நிகழ்த்துவாள். இவற்றில் நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

நற்றாய் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களிலிருந்து பதினைந்து வகையான பண்புகள் அறியப்பெறுகின்றன. இதில் பதினான்கு பண்புகள் நற்றாய்க்கும், ஒரு பண்பு மட்டும் தலைமக்களுக்கும் உரியதாக அமைகின்றது.

நற்றாய் கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் வழி ஐந்து வகையான பண்புகள் பெறப்பெறுகின்றன. இவற்றில் நான்கு நற்றாய்க்கும், ஒன்று தலைவிக்கும் உரியதாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

நற்றாய்த் தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் பெறப்பெறும் பண்புகள் நற்றாய்க்குரியவையாகும்.

நற்றாய்த் தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்களிலிருந்து நற்றாயின் மூன்று பண்புகள் அறியப்பெறுகின்றன.

நற்றாய் செவிலியிடம் நிகழ்த்திய கூற்று, நற்றாய் அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்று ஆகியவற்றிலிருந்து கூற்றிற்கு ஒன்றாக, ஒவ்வொரு கூற்றிற்கும் ஒவ்வொரு பண்புகள் அறியப்பெறுகின்றன. இவைகள் நற்றாய்க்குரியதாக அமைகின்றன.

தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றினைக் கேட்கும் மாந்தர்கள் தலைவியும், தலைவனும் ஆவர். இதில் தோழி தலைவியிடமே மிகுதியாகக் கூற்றுக்களை நிகழ்த்தியுள்ளாள்.

தோழி தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி ஒன்பது பண்புகள் புலப்படுகின்றன. இவற்றில் இரண்டு பண்புகள் தலைவனுக்கும், ஒரு பண்பு ஊராருக்கும், எஞ்சிய ஆறு பண்புகள் தோழிக்கும் உரியதாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

உடன்போக்கில் செவிலி கூற்றினைக் கேட்போர், கண்டோர், நற்றாய், தோழி ஆகியோர். நெஞ்சம், தெய்வம், அஃறிணை ஆகியவற்றிடமும் கூற்று நிகழ்த்தியுள்ளாள்.

செவிலி நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி பனிரெண்டு பண்புகள் அறியப்பெறுகின்றன. இவற்றில் பதினொரு பண்புகள் செவிலிக்கும், ஒரு பண்பு மட்டும் தலைமக்களுக்கும் உரியவை ஆகும்.

செவிலி கண்டோரிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் இருந்து பெறப்பெறும் நான்கு பண்புகளும், செவிலிக்கு உரியனவாக வரையறுக்கப் பெறுகின்றன.

செவிலி நற்றாயிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி மூன்று பண்புகள் பெறப்பெறும். இவற்றில் இரண்டு பண்புகள் செவிலிக்கும், ஒரு பண்பு தலைவனுக்கும் உரியவை.

செவிலி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் அறியப்பெறும் மூன்று பண்புகளும் செவிலிக்குரியவை. ஆகும். செவிலி தெய்வத்திடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி இரண்டு பண்புகள் புலப்படுகின்றன. இவற்றில் ஒன்று செவிலிக்கும், மற்றொன்று தலைவனுக்கும் உரியவை. செவிலி அஃறிணையிடம் நிகழ்த்திய கூற்றின்மூலம் பெறப்பெறும் ஒரு பண்பும் தலைவிக்கு உரியதாகும்.

உடன்போக்கில் நற்றாய், செவிலி, தலைமக்கள் ஆகியோரிடம் கண்டோர் கூற்று நிகழ்த்தியுள்ளனர். நெஞ்சிடமும் கூற்றுக்களை அமைத்துள்ளனர்.

கண்டோர் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களிலிருந்து நான்கு பண்புகள் அறியப்பெறுகின்றன. இவற்றில் மூன்று கண்டோருக்கும், ஒன்று தலைவனுக்கும் உரியவை ஆகும்.

கண்டோர் நற்றாயிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி அறியப்பெறும் இரண்டு பண்புகளும், கண்டோர் செவிலியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் பெறப்பெறும் மூன்று பண்புகளும் கண்டோர் பற்றியவை.

கண்டோர் தலைமக்களிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி மூன்று பண்புகள் அறியப்பெறுகின்றன. இவற்றில் தலைமக்களுக்கு ஒன்றும், கண்டோருக்கு ஒன்றும், தலைவிக்கு ஒன்றுமாக பண்புகள் குறிக்கப்பெறுகின்றன.

உடன்போக்கில் தலைவி, தோழி ஆகிய இருவரிடம் தலைவன் கூற்று நிகழ்த்தியுள்ளான். இவர்களைத் தவிர நெஞ்சிடமும் கூற்று நிகழ்த்தப் பெற்றுள்ளது.

தலைவன் தலைவியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் வெளிப்பெறும் எட்டுப் பண்புகளும், தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் இருந்து அறியப்பெறும் இரண்டு பண்புகளும் தலைவனுக்குரிய பண்புகளாக அமைகின்றன.

தலைவன் தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின் மூலம் பெறப்பெறும் இரண்டு பண்புகளும் தலைவனுக்கு உரியவை ஆகும்.

உடன்போக்குத் துறையில் தோழி, தலைவன், கண்டோர் ஆகிய மூவரிடமும் தலைவி கூற்று நிகழ்த்துவாள். தலைவி தோழியிடம் நிகழ்த்திய கூற்றுக்களின்வழி ஏழு பண்புகள் அறியப்பெறும். இவற்றில் நான்கு பண்புகள் தலைவிக்கும், இரண்டு பண்புகள் அன்னைக்கும், ஒரு பண்பு மட்டும் தோழிக்கும் உரியவை.

தலைவி தலைவனிடம் நிகழ்த்திய கூற்றுகளின் மூலம் அறியப்பெறும் ஒரு பண்பு தலைவிக்கு உரியது ஆகும்.

உடன்போக்குத் துறையில் கூற்று நிகழ்த்தாத மாந்தர்கள் தந்தை, தமையன் ஆகியோர். அவர்களின் பண்புகள் இத்துறையில் விளக்கம் பெறுகின்றன. கூற்று நிகழ்த்தாத மாந்தர்களின் பண்புகள் தலைவி கூற்றிலும், செவிலி கூற்றிலும் குறிக்கப் பெற்றுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. தொல், பொருள், இளம், நூ,490.

2. மேலது, நூ,491.

3. மேலது, நூ,112.

4. மேலது, நூ,109.

5. தொல்.பொருள், நச்சர், நூ,103

6. நற்;44,319,குறுந்;199.

7. (அ) தலைவன் கூற்று நிகழ்த்தும் நூற்பா.

தொல்.பொருள்.அகம்.இளம்.நூ;44.

(ஆ) தலைவி கூற்று நிகழ்த்தும் நூற்பா.

தொல்.பொருள்.அகம்.இளம்.நூ;45.

(இ) தோழி கூற்று நிகழ்த்தும் நூற்பா.

தொல்.பொருள்.அகம்.இளம்.நூ;42.

(ஈ) நற்றாய் கூற்று நிகழ்த்தும் நூற்பாக்கள்.

தொல்.பொருள்.அகம்.இளம்.நூ;449.

மேலது,நூ,40.

தொல்.பொருள்.இளம்.நூ;113.

(உ) செவிலி கூற்று நிகழ்த்தும் நூற்பா

தொல்.பொருள்.இளம்.நூ;113.

(ஊ) கண்டோர் நிகழ்த்தும் கூற்று

தொல்.பொருள்.அகம்.இளம்.நூ;43.

8. காண்க: பின்னிணைப்பு - 3, அட்டவணை -7.

9. நற்;27,57,63,119,191,194,222,223,251,253,258,267,295,306,354, 368,317,363.
குறுந்;244,294,303,335,324,342.
ஐங்;186,194,290,60,260,264,277,289.
அகம்;2,12,60,90,118,150,192,288.

10. நற்;147,10-11.

11. நற்; 11,53,61,68,72,122,132,134,147,175,178,182,206,263,282, 339,344,389,313,372,373,379.
ஐங்; 241.
குறுந்; 159,166,292,353.
அகம்; 20,28,242,248,272,302,358,368.

12. நற்; 313.

13. ஐங்; 28,93,210.

14. மேலது, 28;2-4.

15. நற்;60.

16. மேலது 60; 8-9.

17. நற்;376, குறுந்; 392.

18. நற்,376, 4, 9.

19. குறுந்;57,141,161,246,261. ஐங்;111, 113,115, 224. நற்;377. அகம்;252.

20. ஐங்;111,3-5

21. நற்;287, குறுந்;305,306,401. கலி; 123.

22. குறுந்;306;1-3.

23. நற்;44, 319, குறுந்;199.

24. குறுந்;199;1-2,8.

25. நற்;282. ஐங்; 194,241.

26. நற்; 258,295,376. ஐங்; 186. அகம்;150.

27. அகம்;12.

28. அகம்;150.

29. நற்;29,66,110,143,179,271,293,279.
அகம்;15,105,203,207,219,263,315,393.
ஐங்;371,372,373,374,376,377.

30. நற்;29.2-6

31. நற்;184. அகம்;55,275. ஐங்;375.394.

32. அகம்;275;10.

33. நற்;305. ஐங்;378,379.

34. ஐங்;378.3-5

35. அகம்;35. அகம்;195.

36. அகம்;35,11.

37. ஐங்;313.

38. மேலது,313.1-3

39. ஐங்;391.

40. க. காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப,98.

41 ஐங்;;391.5-6

42. நற்;149. குறுந்;217,262,343,369,383.

43. குறுந்;383.

44. நற்;10,12. குறுந்;115,124,388. அகம்;283. ஐங்;236,280,303,305,364.

45. தொல்.பொருள்.இளம். நூ.105,12

46. குறுந்;388.

47. குறுந்;44,84,144,356,396. அகம்;17,49,89,117,145,153,189,321,385,397.

48. குறுந்;44.3-4

49. நற்;198, ஐங்;380,389.

50. ஐங்;380.1-5

51. குறுந்;15, ஐங்;400.

52. குறுந்;15.2-4

53. அகம்;63,369.

54. மேலது,369;21.

55. குறுந்;378.

56. மேலது;378.

57. அகம்;7.

58. மேலது;7-8.

59. நற்;2,324. குறுந்;7,229. அகம்;165.

60. குறுந்;229,4-7.

61. குறுந்;390, ஐங்;381,382,383.

62. குறுந்; 390,1-2.

63. ஐங்;387,388,390, கலி;9.

64. கலி;9.22-24

65. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப,103

66. ஐங்;386,393.

67. ஐங்;386, 1-4.

68. ஆ. இராமகிருஷ்ணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப,250.

69. நற்;9,76,162,202,264,362. அகம்;99,257. ஐங்;361,363,395,396.

70 தொல்,பொருள், இளம், நூ,495.

71. நற்;9.

72. நற்;384. அகம்;121.

73. நற்;384;8-11.

74. அகம்;261.

75. மேலது, 261;12-15.

76. குறுந்;149. அகம்;95,325. ஐங்;203,286,312,392.

77. ஐங்;312;2-4.

78. ஐங்;384,385,397.

79. ஐங்;385;4-6.

80. கலி;20.

81. மேலது,20.

82. அகம்;145.

83. ஐங்;312.

84. தொல்.பொருள்.களவு.இளம்.நூ.47.

85. அகம்;145.17,19-20.

இயல் –6

பிற்கால வளர்ச்சி

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் துறையைக் குறிப்பிடுவர். அத்துறைகள் அகத்துறை, புறத்துறை என்கிற பாகுபாட்டில் அடங்கும். அவ்வகையில் தொல்காப்பியரின் அகக்கோட்பாடும், புறக்கோட்பாடும் குறிக்கத்தக்கன. தமிழில் அகத்துறைகளும், புறத்துறைகளும் இலக்கிய, இலக்கணங்களில் இடம்பெற்று வளர்ந்துள்ளன. அத்துறைகளைச் சார்ந்த மரபுகள் தொடர்ந்தும், மாற்றம் பெற்றும், இலக்கிய, இலக்கணங்களில் பதிவாகியுள்ளன. அகத்துறைகளைச் சார்ந்த இற்செறித்தல், உடன்போக்கு ஆகிய துறைகள், பிற்கால இலக்கியங்களில் இடம்பெற்றவிதம்மட்டும் கருத்தில் கொள்ளப்பெறுகிறது. இலக்கியங்களிலும் தேர்ந்தவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இவ்வியல் அமைகிறது. இவ்வியலில் ஆழ்நிலை ஆய்வு மேற்கொள்ளப்பெறவில்லை, இவ்விரு துறைகள் குறித்த சில செய்திகள் மட்டும் சான்றுகளாகக் காட்டப்பெற்றுள்ளன.

இலக்கணங்களில் வளர்ச்சி

தொல்காப்பியம் தவிர்ந்த பிற்கால இலக்கண நூல்களாவன: இறையனார் அகப்பொருள் (கி.பி.8), நம்பியகப் பொருள் (கி.பி.13), களவியற் காரிகை (கி.பி.14), இலக்கண விளக்கம் (கி.பி.17), முத்துவீரியம் (கி.பி.19), சுவாமிநாதம் (கி.பி.19) என்பனவாகும். இந்நூல்களில் கூறப்பெற்றுள்ள வளர்ச்சி நிலைகள், முன்னர் உள்ள இரண்டாமியலில் இலக்கண மெய்ம்மைகள் என்ற தலைப்பில் எடுத்துரைக்கப் பெற்றுள்ளதால் இங்குக் குறிப்பிடப் பெறவில்லை.

தமிழ் இலக்கியங்களில் வளர்ச்சி

சங்க மருவிய இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியம், புராண இலக்கியம், சிற்றிலக்கியம், இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்பவைகளைக்

கருத்தில் கொண்டு இவ்வாய்வு அமைக்கப் பெறுகிறது. அவ்விலக்கியங்களில் சில நூல்கள் மட்டும் ஆய்விற்குட்படுத்தப் பெற்றுள்ளன.

சங்க மருவிய இலக்கியம் (கி.பி.100 – கி.பி.500)

சங்க மருவிய கால இலக்கியங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்ற பெயரால் அழைக்கப்பெறும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஆகிய பதினொன்றும் அறம் பற்றியன. களவழி நாற்பது புறம் பற்றியது. கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது மற்றும் கைந்நிலை என்பன அகம் பற்றியன. இவற்றில் அறநூலாகிய திருக்குறளில் இற்செறித்தல்[1] மற்றும் உடன்போக்குத் துறைகள்[2] இடம்பெற்றுள்ளன. அகநூலாகிய ஐந்திணை ஐம்பது[3], திணைமொழி ஐம்பது[4], திணைமாலை நூற்றைம்பது[5] ஆகியவற்றில் இற்செறித்தல் மற்றும் உடன்போக்குச் செய்திகள் குறிக்கப் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக திருக்குறளும், திணைமாலை நூற்றைம்பதும் எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

திருக்குறள்

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பால்களை உடையது. இவற்றில் அறத்துப்பாலின், இல்லற இயலில், வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அகம் சார்ந்த செய்திகளைக் கூறி வருங்கால், இற்செறித்தல் பற்றியும் குறித்துச் செல்கின்றார். இதனை,

சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"[6]

என்ற குறட்பா காட்டும்.

'காப்பு' என்பது தொல்காப்பியத்திலும்[7], சிறை[8], காப்பு[9] என்பன சங்க இலக்கியத்திலும் இற்செறித்தலைக் குறிக்க வழங்கப்பெறும் சொல்லாட்சிகள் ஆகும். இந்நூலும் சங்க இலக்கியத்தை அடியொற்றி சிறை[10] என்னும் சொல்லாட்சியைக் கையாண்டுள்ளமைக் கருதத்தக்கதாகும்.

அகமரபு போற்றப்பெறல்

இன்பத்துப்பாலின், களவியல் என்னும் இயலில், நாணுத்துறவுரைத்தல், அதிகாரத்தில், துறைக்குறிப்பில் 'காப்புச் சிறைமிக்கு[11] என்ற சொல்லாட்சி குறிக்கப்பெற்றுள்ளது. எனினும் அக்குறளில் இற்செறித்தல் துறை பற்றிய செய்தி நேரடியாகச் சுட்டப்பெறவில்லை. இக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர் உரையில் இத்துறையினை வருவித்துக் கொண்டு உரை வரைந்துள்ளார்.

நாணுத்துறவுரைத்தல் அதிகாரத்தில் எட்டாவது குறளில் இடம்பெற்றுள்ள என்னாது என்ற சொல்லாட்சியின் உரையில் இத்துறைச்செய்தி அமைகிறது.

இதனை "என்னாது என்பது முன்னும் கூட்டி மகளிர் என்பது வருவித்துரைக்கப்பட்டது. இது அம்பலின் பிற்பட்ட போதுநிலை, காப்புச்சிறையாவது தலைமகள்மீது ஐயுற்ற செவிலியும், நற்றாயும் அவளை வீட்டைவிட்டு வெளியேறாவாறு காவல் செய்தல்"[12] என்பர். இக்கருத்தின் அடிப்படையில் திருக்குறள் இற்செறித்தலின் சொல்லாட்சி மற்றும் பொருண்மையில் அகமரபைப் போற்றியமை கருதத்தக்கது.

திணைமாலை நூற்றைம்பது

இதன் ஆசிரியர் கணிதமேதாவியார். "இவர் சமண சமயத்தவர். கி.பி.5-ஆம் நூற்றாண்டினர். இதில் திணைக்கு முப்பது பாடல்கள் என நூற்றைம்பது வெண்பாக்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்று குறிஞ்சி, நெய்தல், முல்லை

மூன்றிற்கும 31 பாடல்கள் வீதம் இருப்பதால் மொத்தம் 153 பாடல்கள் அந்நூலிற் காணப்படுகின்றன"[13]என்பர். இந்நூலில் இற்செறித்தலும்[14], உடன்போக்கும்[15] இடம்பெற்றுள்ளன. இங்கு உடன்போக்குச் செய்திகள் விரிவாக விளக்கப்பெறுகின்றன.

நற்றாய் கூற்று

தலைவன் தலைவியைக் கொண்டுதலைக் கழிந்த நிலையில், நற்றாய் மிகுந்த துன்பம் (வருத்தம்) அடைந்தாள். அந்நிலையில் உடன்போகிய தலைமகள் மீண்டுவரும் செய்தி அறிந்த நற்றாய் படிமத்தானிடம்,

"வேறாக நின்னை வினவுவேன் தெய்வத்தால்
கூறாயோ கூறுங் குணத்தினனாய் – வேறாக
என்மனைக் கேறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே உய்க்குமோ தான்"[16]

என்பாள்.

படிமத்தான் என்பதற்குத் "தெய்வம் ஏறப்பெற்றாடுவோன்"[17] என்று உரை கூறுவர். இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'தெய்வத்தால் கூறாயோ' என்றது படிமத்தானிடம் வினவியதாகவும், எல்வளையைத் தன்மனைக்கே உய்க்குமோ அல்லது என் மனைக்கு ஏறக்கொணருமோ? என்றது நற்றாய் கூறியதாகவும் அமைகின்றது. இக்கூற்றுத் தொல்காப்பியம் குறிப்பிடும் தெய்வம் பராவியது[18] என்பதோடு ஒப்பிடற்பாலது. இக்கூற்றினை இறையனார் அகப்பொருள் 'வேலனை வினாதல்'[19] என்ற பெயரால் சுட்டுகின்றது.

செவிலி கூற்று

திணைமாலை நூற்றைம்பதில் சுரத்திடைச் சென்ற செவிலி குரவொடு புலம்பல்[20], தலைவியைத் தேடிச் சென்ற செவிலியிடம் கண்டோர் கூற்று நிகழத்தினார். அச்செய்தியைச் செவிலி கேட்டார்க்குச் சொல்லி ஆற்றுவித்தல்[21] என்கிற துறைகளும் இடம்பெற்றிருப்பது குறிக்கத்தக்கது.

கண்டோர் கூற்று

திணைமாலை நூற்றைம்பதில் உடன்போக்கில் சென்ற தலைவியையும், தலைவனையும் தேடிவரும் தாயிடம், இளைஞன் ஒருவன் கூற்று நிகழ்த்தும் பாங்கு காணப்பெறுகின்றது. இதில் உடன்போன தலைவனையும், தலைவியையும் கண்டதிறம்[22] பற்றிக் கூறப்பெற்றுள்ளது. இக்கூற்று தொல்காப்பியம் குறிப்பிடும் கண்டோர், சேய்நிலைக்கு அகன்றோர் (தலைமக்கள்) செலவின்கண் கூறல்[23] என்பதுடன் ஒப்பிடற்பாலது.

இந்நூலில் சுரத்திடைச் சென்ற செவிலியை ஆற்றுவிப்பதாகவும்[24] தலைவன் தலைவியைச் செலவு விலக்கித் தம் சீறூர்க்கண் தங்கிப் பின்மறுநாள் செல்லுமாறு கேட்டுக் கொள்வதாகவும்[25] கண்டோர் கூற்றுப் பாடல்கள் உள்ளன. இதில் முதல் கூற்று இறையனார் களவியல் குறிப்பிடும் உலகியல்புரைத்தல்[26] என்பதற்கும், இரண்டாவது கூற்று, தொல்காப்பியம் சுட்டும் ஊரது சார்பும் செல்லுந் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்[27] என்பதற்கும் சான்றாகும். இந்நூலில், சங்க இலக்கியத்தை அடியொற்றி, மூவர் கூற்றும் அமைந்துள்ளதால், அகமரபு மாறுபாடின்றிப் போற்றப் பெற்றுள்ளதாகக் கருதலாம்.

பக்தி இலக்கியம் (கி.பி.600–900)

தமிழைப் 'பத்திமையின் மொழி' என்னுமளவு தமிழ்ப் பக்தி இலக்கியம் சிறப்புற்றது. பரிபாடல் காலத்தில் இருந்து, பாரதியாரின் கண்ணன் பாட்டுவரை, பல்வகை இசைத்தமிழ் மரபாக இது வளர்ந்தது. கி.பி.5,6–ஆம் நூற்றாண்டை ஒட்டிக் காரைக்கால் அம்மையாரும், முதலாழ்வார் மூவரும் தோன்றிப் பத்திமை இலக்கிய வளர்ச்சிக்குக் கால்கோளிட்டனர். இப்பக்தி இலக்கியத்தில் பன்னிரு திருமுறைகளும், நாலாயிரத் திவ்யபிரபந்தமும் சிறப்பிடம் பெறுகின்றன. பன்னிரு திருமுறைகளில் இற்செறித்தல்[28] மற்றும் உடன்போக்கும்[29] நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் உடன்போக்கும்[30] இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக நாலாயிரத் திவ்யபிரபந்தம் கருத்தில் கொள்ளப்பெற்று விளக்கப் பெறுகிறது.

நாலாயிரத் திவ்யபிரபந்தம்

பன்னிருஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்யபிரபந்தம் ஆகும். திருமாலிடத்து ஈடுபட்ட தலைமகளின் செயல்கண்டு தாய் இரங்குதல், உடன்போக்கு மேற்கொண்ட தலைமகளை நினைந்து தாய் இரங்குதல் ஆகிய இரு நிலைகளில் தாயின் கூற்று நிகழ்வதாக நாலாயிரத் திவ்விய பிரபந்தம்[31] காட்டுகின்றது. இந்நூலில் உடன்போக்கினை மேற்கொண்ட மகளை நினைந்து, தாய் புலம்பும் முகத்தான்,

"ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு போனான்"[32]

என்ற பாடல் அமைகின்றது. இதில் 'கொண்டு போனான்' என்றது உடன்போக்கினைக் குறிக்கும் சொல்லாட்சியாகும். இச்சொல்லாட்சி தொல்காப்பியர் குறிப்பிடும் 'கொண்டு தலைக்கழிதல்'[33] என்பதுடன் ஒப்புநோக்கத்தக்கது.

அகமரபு வேறுபடல்

தாய் புலம்பும் பாடல்களில், தலைவி உடன்போக்கின்போது, தலைவனுடன் சென்ற இடம் திருமால் கோயில் கொண்ட திருத்தலம்[34] என்கிறாள். இதில் தலைவிக்குரிய தலைவனின் திருநாமத்தைத் தாய் அறிந்துள்ள நிலை பெறப்பெறுகின்றது. இத்தன்மைத்தான தாய் கூற்று அகமரபில் காணப்பெறவில்லை.

மேற்குறித்த செய்திகளின் மூலம் பக்திப்பாடல்கள் மானுட வாழ்க்கையினின்றும் முற்றிலும் விலகிச்செல்வன என்பது புலனாகின்றது. மேலோட்டமாக நோக்கும்போது, அவை சொல்லாட்சி மற்றும் அகப்பொருள் துறைகளைப் பயன்படுத்தி, இருப்பினும், அத்துறை இறைக்காதலுக்காக மடைமாற்றம் செய்யப் பெற்றுள்ளது. இக்காரணத்தின்வழி அகப்பொருள் மரபு பின்பற்றப் பெறவில்லை எனத் துணியலாம்.

காப்பிய இலக்கியம் (கி.பி.500–1200)

தமிழில் காப்பிய இலக்கியம் பல காலங்களில், பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டது. காப்பியங்கள் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், மொழி பெயர்ப்புக் காப்பியங்கள், குறுங்காப்பியங்கள் எனப் பகுக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் மொழிபெயர்ப்புக் காப்பியங்களும் அகமரபைப் போற்றியுள்ளன என்பது கருதத்தக்கது. அவ்வகையில் மொழிபெயர்ப்புக் காப்பியமாகிய கம்பராமாயணத்தில் உடன்போக்குக் குறிக்கப் பெறுகின்றது. இதனைப் பின்வரும் பகுதி விளக்கி நிற்கின்றது.

கம்பராமாயணம்

தலைவனும், தலைவியும் களவொழுக்கம் மேற்கொண்டனர். தலைமக்கள் மணந்து கொள்வதற்குப் பல்வேறு இடையூறுகள் குறுக்கேநின்றன. தலைவி காதல்கொண்ட தலைவனுடன், சேர்த்து வைக்கத் தலைவியின் பெற்றோர் மறுத்தனர். தலைவியின் விருப்பத்திற்கு அவள் பெற்றோர் இணங்காவிடில், ஒருவரும் அறியாவண்ணம், தோழியின் உதவியொடு, தலைவி, தலைவனுடன் செல்வது அக்கால வழக்கம் என்பதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தலைவியைத் தலைவனுடன் அனுப்பும் தோழி தலைவனிடம் "இவளை இன்றுபோல் என்றும் ஆதரவும், அன்பும் கொண்டு பாதுகாப்பாயாக[35] என்று கூறுகிறாள். தோழி ஓம்படை கூறி விடுத்ததைச் சங்கப் பாக்கள்[36] காட்டுகின்றன. அவ்வகையில் இந்நூல் அகமரபைப் போற்றுவது தெரியவருகின்றது. இக்கூற்று இறையனார் களவியல் சுட்டும் ஓம்படுத்துரைத்தலுடன்[37] ஒப்புநோக்கத்தக்கது.

புராண இலக்கியம்

தமிழில் தோன்றியுள்ள புராண நூல்களைப் புராணக் காப்பியங்கள் எனவும் புராணங்கள் எனவும் இரண்டாகப் பகுக்கலாம். வடமொழியில் காணப்படும் பதினெண் புராணங்களைப் போல இவை தனிவகையாகப் பல்கின. தலபுராணங்கள் இவ்வகையைச் சாரும். அவ்வகையில் புராணக் காப்பியங்களில் பெரியபுராணமும், கந்தபுராணமும் அடங்கும். புராணக் காப்பியத்தில் கந்தபுராணம் கருத்தில் கொள்ளப்பெற்றது. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காகச் சில சான்றுகள் பின்வரும் பகுதியில் தரப்பெறுகின்றன.

கந்தபுராணம்

"கச்சியப்பசிவாச்சாரியாரால் எழுதப்பட்டக் கந்தப்புராணம் ஆறு காண்டங்களையும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களையும் உடையது. கச்சியப்ப சிவாச்சாரியார் காஞ்சிபுரத்தில், ஆதிசைவ மரபில் தோன்றியவர். இவர் காலம் கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு"[38] என்பர்.

இற்செறித்தல்

கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்தில் குறிக்கப்பெறும் அகப்பொருள் துறைகளாவன; "களிறுதரு புணர்ச்சி, தோழி களவையறிதல், இற்செறிப்பு, வெறியாட்டு, மடற்கூற்று, குறியிடத்துய்த்தல்"[39] என்பனவாகும். இதில் இற்செறித்தல் குறிக்கப்பெறுவதை,

'செற்ற மெய்தியே யன்னவ டன்னையிற் செறித்தார்"[40]

என்ற அடி உணர்த்துகின்றது. எனினும் இப்பாடல் மானுடம் பற்றியதல்ல. ஆகையால் அகத்துறைப் பொருண்மைக்கு உரியதல்ல.

உடன்போக்கு

இந்நூலில் தலைமக்கள் மேற்கொண்ட உடன்போக்கு[41], உடன்போக்கில் கையடைப்படுத்தல்[42], நற்றாய் தேடல்[43] என்பன போன்ற அகத்துறைகள் இடம்பெற்றுள்ளன. கந்தபுராணத்தில் முருகன், வள்ளியின் உடன்போக்கினை,

"மாத்தவ மடந்தை நிற்ப வள்ளலை
யிகுளை நோக்கித்

தீத்தொழி லெயினர் காணிற் றீமையாய்

விளையு மின்னே

யேத்தருஞ் சிறப்பி னும்மூர்க் கிங்கிவ

டனைக் கொண் டேகிக்

காந்தருள் புரியு மென்றே கையடை

யாக நேர்ந்தாள்"[44]

என்ற பாடல் உணர்த்தும். இதில் 'யிகுளை' என்பது தோழியையும் 'கொண்டேகி' என்பது உடன்போகியதையும் குறித்து நின்றது. 'காத்தருள் புரியும்' என்னும் குறிப்புத் தலைவியைத் தலைவனிடம் தோழி கையடையாகக் கொடுத்ததைக் குறிக்கும்.

அகப்பாடலினின்றும் வேறுபடல்

உடன்போக்கினை மேற்கொண்ட முருகன் வள்ளியை எயினர் தேடுவதாகவும்[45] சோலையில் வளைந்து கொள்வதாகவும்[46], முருகன் அவர்களை அழிப்பதாகவும்[47] வள்ளி இந்நிகழ்ச்சியைக் கண்டு பதைப்பதாகவும்[48] கந்தபுராணம் காட்டுகின்றது. எனவே உடன்போக்குத் துறைகளில் கந்தபுராணம் அகமரபைப் போற்றிருப்பினும், நிகழ்ச்சித் தொடர்புடன் அமைந்து, அகப்பாடலினின்றும் வேறுபட்டு நிற்கின்றது. ஆனால் சங்க இலக்கியத்திலோ (அகப்பாடல்களிலோ) இதைப் போன்று நிகழ்ச்சிகள் நிரல்பட அமைக்கப் பெறவில்லை.

தலைவனும், தலைவியும் உடன்போக்கினை மேற்கொண்ட நிலையில், தலைவியின் தமர் தேடுவர். அச்சூழலில் தலைவன், தலைவியின் தமரைக் கண்ணுற்ற பொழுது அவர்களுடன் போர் புரியாமல் மறைந்து கொள்வதாகச்

சுட்டுவது[49] அகப்பொருள் மரபு. ஆனால் கந்தபுராணத்தில் முருகன் வள்ளியின் தமரை அழித்ததன்வழி அகமரபிலிருந்து வேறுபடுகின்றது.

சிற்றிலக்கியம் (கி.பி.1350 - 1750)

தமிழில் நெடும்பாடல்களாய் அமைந்த பிரபந்த வகைகளைச் 'சிற்றிலக்கியம்' என்று அழைக்கின்றோம். "இதன் வகைகளை பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் முதலியவற்றில் தொன்னூற்று ஆறு இலக்கிய வகைகள் பற்றிக் கூறப்படுகின்றன"[50].

சிற்றிலக்கிய வகைகளுள் தலைமை வாய்ந்தவையாய்க் காணப்படுவன பதினான்கு வகைகளே ஆகும். அவை ஆற்றுப்படை, அந்தாதி, மாலை, பத்து, கோவை, உலா, பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தூது, சதகம், மடல், பள்ளு, குறவஞ்சி என்பனவாம். இவற்றில் கோவை நூலாகிய திருக்கோவையாரும். கலம்பகத்தில் கச்சிக்கலம்பகமும், நந்திக்கலம்பகமும் கருத்தில் கொள்ளப்பெற்றன. மேலும் முத்தொள்ளாயிரத்திலிருந்தும் தொடர்பான சான்றுகள் ஆராயப் பெற்றுள்ளன.

கோவையில் வளர்ச்சி

தமிழில் பல பிரபந்தங்கள் தோன்றியபோது அவை அகப்பொருளமைதியைக் கொண்டு விளங்கின. அவற்றுள் தலைசிறந்தது கோவை என்னும் பிரபந்தமாகும். இவற்றுள் சில அகப்பொருள் இலக்கண நூல்களுக்கு இலக்கியமாக எழுந்தன போலவும் காணப்பெறுகின்றன.

திருச்சிற்றம்பலக்கோவையார்

அகப்பொருள் துறைகள் பொருள் தொடர்பு அமையும் வண்ணம் கோவையாகப் பாடப்படுதலினால் இப்பிரபந்தங்களுக்குக் 'கோவை' என்ற பெயருண்டாயிற்று. இவ்வாறு பாடப்பெற்ற கோவைகளுள் மிகச் சிறந்தது

திருச்சிற்றம்பலக்கோவையே என்பது பல்லோர் துணிபு. "இந்நூலை ஸ்ரீமாணிக்க வாசக சுவாமிகள் பாடத், திருச்சிற்றம்பலமுடையாரே தம் திருக்கையால் எழுதியருளினார் என்ற வரலாறும், இதனையொட்டி எழுந்துள்ள பல ஆராய்ச்சிகளும், களவியற் காரிகை, இலக்கண விளக்கம் ஆகிய இரு நூல்களும் இதனின்று பல செய்யுட்களை மேற்கோள்களாகக் கொண்டுள்ள செய்தியும் இன்ன பிறவும் இக்கூற்றுக்குச் சான்றாகும்"[51] என்பர்.

இற்செறித்தல்

திருக்கோவையாரில் பகற்குறியினை உணர்த்தும் கொளுவானது பதின்மூன்றாவது கொளுவானது[52]. இக்கொளு இருபத்து மூன்று அடிகள் கொண்டது[53]. இவற்றில் பதினொன்று, பதினைந்து, இருபத்து மூன்று ஆகிய அடிகளில் இற்செறித்தலின் துறைகள் குறிக்கப் பெற்றுள்ளன. அவையாவன:

1. இற்செறிவறிவித்து வரைவுகடாதல்
2. தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்
3. பகல்வரல் விலக்கி வரைவுகடாதல்
4. மயிலொடு கூறி வரைவுகடாதல்

என்பனவாகும். தொல்காப்பியர் தலைவி கூற்றில் தமர் தற்காத்த காரணப் பக்கத்தினும்[54] என்று சுட்டியதை, இந்நூல் தோழி கூற்றில் அமைத்துள்ளது. அக்கூற்றாவது தமர் நினைவுரைத்து வரைவுகடாதல் என்பதாகும்.

உடன்போக்கு

திருக்கோவையாரில் உடன்போக்கினை உணர்த்தும் கொளுவானது நாற்பத்தெட்டு அடிகள்[55] கொண்டது. இதில் உடன்போக்கிற்குரிய துறைகளாக ஐம்பத்தாறு துறைகள்[56] சுட்டப்பெற்றுள்ளன. இந்நூலில் இரவுக்குறி பற்றிய

கொளுவானது இருபத்தைந்து[57] அடிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் இருபத்து மூன்றாவது அடியில் இடம்பெறும் ‘அலர் அறிவுறுத்தல்’ என்பதும் உடன்போக்கின் துறையாகக் கொள்ளப்பெறுகிறது. அவ்வகையில் திருக்கோவையார் சுட்டும் உடன்போக்குத் துறைகள் பின்வருமாறு:

6:1 திருக்கோவையாரும் முத்துவீரியமும்

வ.எண்.	திருக்கோவையார்	முத்துவீரியம்
1.	அலர் அறிவுறுத்தல்(++)	–
2.	பருவங் கூறல்	+
3.	மகட்பேச்சுரைத்தல்	+
4.	பொன்னணிவுரைத்தல்	+
5.	அருவிலையுரைத்தல்	+
6.	அருமை கேட்டழிதல்	+
7.	தளர்வறிந்துரைத்தல்	+
8.	குறிப்புரைத்தல்	+
9.	அருமையுரைத்தல்	+
10.	ஆதரங்கூறல்	+
11.	இறந்துபாடுரைத்தல்	+
12.	கற்புநலனுரைத்தல்	+
13.	துணிந்தமை கூறல்	+
14.	துணிவொடுவினாதல்	+
15.	போக்கறிவித்தல்	+
16.	நாணிழந்துவருந்தல்	+
17.	துணிவெடுத்துரைத்தல்	+

18.	குறியிடங்கூறல்	+
19.	அடியொடு வழிநினைந்தவனுளம் வாடல்	+
20.	கொண்டுசென்றுய்த்தல்	+
21.	ஓம்படுத்துரைத்தல்	+
22.	வழிப்படுத்துரைத்தல்	+
23.	மெல்லக்கொண்டேகல்	+
24.	அடலெடுத்துரைத்தல்	+
25.	அயர்வகற்றல்	+
26.	நெறிவிலக்கிக்கூறல்	+
27.	கண்டவர் மகிழ்தல்	+
28.	வழிவிளையாடல்	+
29.	நகரணிமைகூறல்	+
30.	நகர்காட்டல்	+
31.	பதிபரிசுரைத்தல்	+
32.	செவிலி தேடல்	+
33.	அறத்தொடு நிற்றல்	+
34.	கற்பு நிலைக்கிரங்கல்	+
35.	கவன்று உரைத்தல்	+
36.	அடிநினைந்திரங்கல்	+
37.	நற்றாய்க்குரைத்தல்	+
38.	நற்றாய் வருந்தல்	+
39.	கிளிமொழிக்கிரங்கல்	+
40.	சுடரோடிரத்தல்	+
41.	பருவநினைந்து கவறல்	+

42.	நாடத்துணிதல்	+
43.	கொடிக்குறிபார்த்தல்	+
44.	சோதிடங்கேட்டல்	+
45.	சுவடுகண்டறிதல்	+
46.	சுவடுகண்டிரங்கல்	+
47.	வேட்டமாதரைக் கேட்டல்	+
48.	புறவொடு புலத்தல்	+
49.	குரவொடு வருந்தல்	+
50.	விரதியரை வினாவல்	+
51.	வேதியரை வினாவல்	+
52.	புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல்	+
53.	வியந்துரைத்தல்	+
54.	இயைபெடுத்துரைத்தல்	+
55.	மீளவுரைத்தல்	+
56.	உலகியல்புரைத்தல்	+
57.	அழுங்குதாய்க்குரைத்தல்	+

(+) = ஒன்றுபோல் கூறிய கூற்றுக்கள், (++) = புதிய கூற்று

புதிய கூற்று

முத்துவீரியம், திருக்கோவையார் துறைகளைத் தொகுத்து இலக்கணமாக்கியுள்ளது என்பது துறை ஒப்பீட்டால் அறிந்த முடிவாகும்[58] என்பர். இக்கருத்திற்கு ஏற்ப திருக்கோவையாரை, முத்துவீரியத்துடன் ஒப்பிட்டதில் 'அலர் அறிவுறுத்தல்'[59] என்ற புதிய கூற்று இடம்பெற்றுள்ளது தெரியவருகின்றது. இப்புதிய

கூற்றினை இறையனார் களவியல் உரையும்[60] களவியற் காரிகையும்[61] கையாண்டுள்ளன. திருக்கோவையார் அகமரபைப் பின்பற்றியதுடன், வளர்ச்சி நிலையாகப் புதிய கூற்றினையும் சுட்டிச் செல்வது கருதத்தக்கது.

திருக்கோவையார், தொல்காப்பியத்திற்குப் பிறகு பன்னூறு ஆண்டுகள் கழித்துத் தோன்றியது ஆகையாலும், சங்க அகப்பாடல்கள் ஆங்காங்கே நிகழும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு என்பதாலும், இவ்விரு நூல்களின் கருத்துக்களை எடுத்தாள்வதில், முன்னூற்கருத்தைத் தானெடுத்து மொழிதல் என்கிற உத்தியினைத் திருக்கோவையார் பின்பற்றியதாலும், உடன்போக்கை இவ்வளவு விரிவாகக் கையாண்டுள்ளது. இதுதவிர திருக்கோவையார் நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக அமைத்துச் செல்லும் முறையில் அமைவதாலும், உடன்போக்கின் கூற்றுகளை விளக்கமாகவும், மிகுதிப்படுத்தியும் அமைத்துள்ளது.

நந்திக்கலம்பகம்

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றும் நந்திக் கலம்பகமே காலத்தால் முற்பட்டது. “இது தோன்றிய காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டாகும். இந்நந்திவர்மன் காலம் கி.பி. 825–850 என்பர். நந்திவர்மனின் மாற்றாந்தாய் மகன் ஒருவன் புலமை மிக்கவன் என்றும் அவன் நந்தியைக் கொல்வதற்கு அறம் வைத்துப் பாடியதே இந்நூல்"[62] என்றும் கூறுவர்.

இந்நூல் உடன்போக்கைப் புறத்துடன் பொருத்தி விளக்குகின்றது. “தலைமக்கள் உடன்போக்கினை மேற்கொண்ட வழியினைக் குறிக்க விரும்பிய ஆசிரியர், புறச்செய்தியை உவமையாக்கியுள்ளார். நந்தியொடு, வெள்ளாற்றில் நடந்த வெம்போரில், போர் செய்ய முடியாமல் அஞ்சி ஓடிய அரசர் கூட்டம் மறைந்து நின்ற, பருக்கைக்கற்கள் சூழ்ந்த அவ்வழியில் இவர்கள் (தலைமக்கள்) ஏகிய நோக்கமென்ன?"[63] எனச் செவிலி புலம்புகிறாள். இதில் ஏகிய என்பது

உடன்போகியதைக் குறிக்கும் அகமரபைப் புறத்துடன் பொருத்திக் காண்பது ஒரு வளர்ச்சி நிலையாகும்.

கச்சிக் கலம்பகம்

இந்நூலின் ஆசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார் ஆவார். இவரது காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலும் (பாடல்கள்) மூன்று அடிகளில் ஏகாம்பரநாதனின் பெருமையையும், ஓர் அடியில் அகத்துறைச் செய்திகளையும் பெற்றுள்ளன.

இந்நூலில் தாய் கூற்றில் தலைவி உடன்போன செய்தி குறிக்கப்பெறுகின்றது. சிவன்மீது காதல் கொண்டு துன்பம் அடைந்திருந்த என் மகன், வீட்டைவிட்டு வெளிச்சென்றாள் என்று தாய் கூறுவதை,

'வேதனை பெற்றோ வேதனையுற்றாள் வெளியானாள்'[64]

என்ற அடி சுட்டும். இதில் 'வெளியானாள்' என்பது உடன்போகியதைக் குறிக்கும் சொல்லாட்சியாகும். இப்பாடல் மானுட வாழ்க்கையில் இருந்து விலகிச் செல்வதால், அகப்பொருள் மரபு மடைமாற்றம் செய்யப் பெற்றுள்ளது.

முத்தொள்ளாயிரம்

"தமிழ்நாட்டு மூவேந்தரைக் கடைச்சங்கத்தவர் பாடியநூல். இதனை நீதிநூற் கோவையெனவும் அகப் பொருட்டுறையுள்ள வெண்பாக்கள் எனவும் கூறுவர்"[65]. இந்நூலில் இற்செறித்தல்[66] உடன்போக்கு[67] குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டு விளக்கத்திற்காக இற்செறித்தல் மட்டும் விளக்கப்பெறுகிறது.

இற்செறித்தல்

உலாவரும் பாண்டியனைக் காண இயலாவண்ணம், தலைவியை அன்னை கதவைத் தாளிட்டு அடைக்கின்றாள். இதன் விளைவாகத் தலைவிக் கதவின் துளைவழியாக அவனைக் காணுவதை,

"காப்படங்கென் றன்னை கடிமனை யிற்செறித்
தியாப்படங்க ரோடி யடைத்தபின் - மாக்கடுங்கோன்
நன்னலங் காணக் கதவந் துளை தொட்டார்க்
கென்னை கொல் கைம்மா றினி"[68]

என்ற அடிகள் சுட்டுகின்றன. இப்பாடலில் 'இற்செறித்து' என்ற சொல் இடம் பெற்றிருப்பினும் அது பெயரளவில் மட்டும் அகமரபைப் போற்றியுள்ளது. ஏனென்றால் அகத்தலைவன் உலா வருபவனாகவோ, பல பெண்களால் விரும்பப்பட்டவனாகவோ இருப்பதில்லை. இங்கு உலா வருபவன் பெயர் சுட்டப்பெற்றமையால் அகத்தலைவன் அல்லன். பல பெண்களால் விரும்பப்பட்டவன் ஆகையால் அகமரபு போற்றப்பெறவில்லை.

அகப்பொருள் பின்புலம்

அகப்பொருள் துறையைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட பாடல்கள் –

"கடற்றானைக் கோதையைக் காண்கொடாள் வீணி
லடைத்தா டனிக்கதவம் அன்னை - யடைக்குமேல்
ஆயிழையாய்! என்னை யவன்மே லெடுத்துரைப்பார்
வாயு மடைக்குமோ தான்"[69]

"கோட்டெங்கு சூழ்கடற் கோமானை கூடவென

வேட்டாங்கு சென்றவென் நெஞ்சறியாள் - கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்"[70]

என்பனவாகும். இதில் முதல்பாடலில் இடம்பெற்றுள்ள அடைத்தா டனிக்கதவம் அன்னை என்ற தொடர் அன்னைத் தலைவியைக் கதவினை அடைத்துக் காத்ததை அறிவுறுத்துகின்றது. இரண்டாவது பாடலில் தலைவியின் நெஞ்சமானது கோமானிடம் செல்ல, வெறுங்கூட்டினை அன்னை காவல் காக்கின்றாள் என்கிறாள். 'காவல் கொண்டாள்' என்றது இற்செறித்தலைக் குறிக்கும் சொல்லாட்சியாகும். இப்பாடல்கள் "அகப்புறக் கைக்கிளைக்குரியன"[71] என்பர். அவ்வகையில், இப்பாடலில், அகப்பொருளின் பின்புலமாகச் சொல்லாட்சி அமைக்கப்பெற்றிருப்பினும், பொருண்மையின் அகமரபு பின்பற்றப் பெறவில்லை.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியம்

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் இக்கால இலக்கியங்கள் என்ற பெயரால் அழைக்கப்பெறும். அவ்விலக்கியங்களில் உரைநடை, கட்டுரை, நாடகம், சிறுகதை, கவிதைகள், நாவல்கள் ஆகியன அடங்கும். கவிதைகளில் பாரதியார், பாரதிதாசன், முடியரசன், கவிதைகளும், நாடகத்தில் அனிச்ச அடி நாடகமும், காப்பியத்தில் இராவண காவியமும் கருத்தில் கொள்ளப்பெற்றன. இவற்றில் சில சான்றுகளை மையமிட்ட விளக்கங்கள் பின்வரும் பகுதியில் தரப்பெற்றுள்ளன.

பாரதியார் கவிதைகள் (கி.பி.1882-1921)

இதன் ஆசிரியர் சுப்பிரமணிய பாரதியார் ஆவர். கண்ணம்மாவைக் காதலியாகவும், தன்னைக் காதலனாகவும் நினைத்துப் பாடப்பெற்ற பாடல்களில் 'காப்பு மிகுதி' சுட்டப்பெற்றுள்ளதை,

"கடுமை யுடைய தடீ! - எந்த நேரமும்

காவலுன் மாளிகையில்

அடிமை புகுந்த பின்னும் - எண்ணும்போது நான்

அங்கு வருதற் கில்லை

கொடுமை பொறுக்க வில்லை - கட்டுங் காவலும்

கூடிக் கிடக்கு தங்கே

நடுமை யரசி யவள் - எதற்காகவோ

நாணிக் குலைந்திடுவாள்"[72]

என்ற அடிகள் புலப்படுத்துகின்றது.

இதில் குறிக்கப்பெற்றுள்ள 'காவலுன் மாளிகை' என்பதன் வழி தலைவி இற்செறிக்கப்பெற்றது புலனாகிறது. 'கொடுமை பொறுக்கவில்லை கட்டுங் காவலும்' என்ற தொடர் காப்புமிகுதியை உணர்த்துகின்றது. இதன் விளைவாகக் காதலியாகிய கண்ணம்மாவைக் காணமுடியாமல் ஏங்கும் காதலன் (பாரதி) உள்ளம் வெளிப்படுகின்றது. இக்கூற்று நச்சினார்க்கினியர் சுட்டும், தோழி செறிப்பறிவுறுப்ப, தலைவன் ஆற்றானாய்க் கூறியது[73] என்பதுடன் ஒப்புநோக்கத்தக்கது.

பாரதிதாசன் (1891-1964)

தலைவி இற்செறிக்கப் பெற்றுள்ள நிலையை விளக்கும், பாரதிதாசனின் காதற்பாட்டாவது,

"நான்கு பக்கமும் வேடர் சுற்றிட

நடுவில் சிக்கிய மான்போல் இங்கு

ஏன் பிறந்தேன் இவர்கள் வீட்டில்

கரையில் இட்டதோர் மீன்போல்"[74]

என்பதாகும். கரையில் இட்டோர் மீன்போல் என்ற உவமை வாயிலாகத் தலைவியின் இற்செறிப்புக் குறிக்கப்பெறுகின்றது. இவர்கள் வீட்டில் ஏன் பிறந்தேன் என்ற தொடர் மனைப்பட்டுக் கலங்கியதைக் குறிக்கும். இக்கூற்றினைத் தொல்காப்பியமும்[75] சங்கப் பாக்களும்[76] சுட்டும் முகத்தான் பாரதிதாசன் பாடல்களில் அகமரபு பின்பற்றப் பெற்றுள்ளது எனலாம்.

இசையமுது

இசையமுது என்ற நூலின் ஆசிரியர் பாரதிதாசன் ஆவார். இவர் இந்நூலில் உடன்போக்கினைக் குறித்துச் செல்வதை 'பொன்னனும் பொன்னியும் மேற்குப் புறத்தில் போயினர்[77] என்ற பகுதி புலப்படுத்துகின்றது. போயினர் என்ற சொல்லாட்சி தொல்காப்பியம் சுட்டும் 'கொண்டு தலைக்கழிதலுடன்[78] தொடர்புடையது. முடியரசன் கவிதைகளிலும் உடன்போக்குச் செய்திகள்[79] இடம்பெற்றுள்ளன.

அனிச்ச அடி

அனிச்ச அடியின் ஆசிரியர் புலவர்.அ.பழனி ஆவார். இவர் மரபுக் கவிதையை அடியொற்றிக் காப்பியமும், நாடகமும் புனைந்துள்ளார். இந்நாடகத்தில் காணப்பெறும் அகத்துறைகளில் குறிக்கத்தக்கன, ‘‘தோழி கையுறை மறுத்தல், கழற்றெதிர் மறை, தோழி வரைவு கடாயது, இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறியது, வரைவு நீட்டித்தவழித் தோழி இயற்பழித்தாளாகத் தலைவி இயற்பட மொழிந்தது, தலைமகள் பொழுது கண்டழிந்தது, காமமிக்க கழிபடர் கிளவி, தன்னுட்கையாறெய்திடு கிளவி, வெறியாட்டயர்ந்துழித் தோழி அறத்தொடு நின்றது"[80] என்பனவாகும். இதில்,

"புதுப்பெயல் வருதல் வேண்டும்

புகுந்தாடும் வேட்கை மிக்கும்

விதிப்புற்றுத் தயங்குகின்ற

வெப்புநோ யாளன் போல

விதுப்புறம் அவன்றான் அந்த

வேலியின் புறத்தா னேனும்

மதுப்படும் மார்பின் மூழ்கி

மகிழ்ந்தாடும் வகையில் லேனால்"[81]

என்ற பாடல் அனிச்ச அடி நாடகத்தில் அரங்கில் பாடினி பாடுவதாக இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறியது என்ற துறையாகும். இதில் இற்செறித்தல் நேரடியாகச் சுட்டப்பெறவில்லை. ஆனால் தலைவன் விதுப்புற்று வேலியின் புறத்தானாய் நின்றதன்வழி தலைவி இற்செறிக்கப்பட்டது குறிப்பால் விளங்கும்.

இராவண காவியம்

புலவர் குழந்தை இயற்றிய நூல் இராவண காவியம் என்பதாகும். இந்நூலின் காலம் இருபதாம் நூற்றாண்டு .

இந்நூலின்கண் உடன்போக்கில் இடம்பெறும் கண்டோரின் உரையாடல் அமைந்துள்ளது. இதனை,

"தோட்டுணை யாகவே சுரிமென் கூந்தலைக்

கூட்டியே செல்பவன் குற்ற மற்றவன்

ஆட்டிநீ பிரிக்கலை யென்றவ் வன்னையே

மீட்டுமே யூர்செல விடுக்கு வார்களே"[82]

என்ற பாடல் உணர்த்தும். இதில் கண்டோர் தலைவனைக் 'குற்றமற்றவன்' என்று அன்னையின் சினம் நீங்கும்பொருட்டு அறிவுரை நல்கினர். கூட்டியே செல்பவன் என்றது தலைமக்கள் உடன்போக்கினை மேற்கொண்டதும், அன்னையே மீட்டுமே என்றது தலைவியைத் தேடிச்சென்ற அன்னையைக் கண்டோர் மீட்டதும் அறியப்பெறுகின்றன. இக்கூற்று தொல்காப்பியம் சுட்டிய தாய்நிலை கண்டு தடுத்தற்கண் கண்டோர் கூறல்[83] என்பதுடன் ஒப்புநோக்கத்தக்கது.

தொகுப்புரை

தொல்காப்பியரின் அகக்கோட்பாடுகள் பிற்காலத்தில் மரபின் தொடர்ச்சியாகவும் மாற்றம் பெற்றும் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. அகக்கோட்பாட்டு மரபைச் சார்ந்த துறைகளில், அத்தகு பதிவுகள் பிற்கால வளர்ச்சியில் இடம்பெற்ற நிலை இவ்வியலில் கருத்தில் கொள்ளப் பெற்றது.

சங்க மருவிய இலக்கியமாகிய திருக்குறளில் இற்செறித்தல் மற்றும் உடன்போக்குச் செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன. இந்நூலில் இற்செறித்தலின் சொல்லாட்சி மற்றும் பொருண்மையில் அகமரபு மாற்றம் இல்லாமல், போற்றப்பெற்றுள்ளது.

திணைமாலை நூற்றைம்பதில், உடன்போக்கில் நிகழும் நற்றாய் கூற்று, செவிலி கூற்று, கண்டோர் கூற்று ஆகியன குறிக்கப் பெற்றுள்ளன. இந்நூல் ஒவ்வொரு கூற்றிலும் அகமரபைப் போற்றியுள்ளமை கருதத்தக்கதாகும்.

பக்தி இலக்கியங்களான பன்னிரு திருமுறையிலும், நாலாயிரத் திவ்வியபிரபந்தத்திலும் இற்செறிப்பு மற்றும் உடன்போக்குச் செய்திகள் பதிவாகியுள்ளன. திருமுறைகளைக் காட்டிலும், நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் தலைவிக்குரிய தலைவனின் பெயரைத் தாய் அறிந்திருப்பது புலனாகிறது. பக்திப் பாடல்கள் தெய்வம் பற்றியதாதலால், மானுட வாழ்க்கையினின்றும் முற்றிலும் விலகிச் செல்கின்றன. இவை சொல்லாட்சி மற்றும் அகப்பொருள் துறைகளைப் பயன்படுத்தி இருப்பினும், அத்துறை இறைக்காதலுக்காக மடைமாற்றம் செய்யப்பெற்ற நிலையில், அகமரபு பின்பற்றப் பெறவில்லை என்று துணியலாம்.

மொழிபெயர்ப்புக் காப்பியமாகிய கம்பராமாயணத்தில், உடன்போக்கில் தோழி தலைவியை ஓம்படை கூறி விடுக்கும் முகத்தான் அகமரபு போற்றப்பெற்றுள்ளது.

புராண இலக்கியமாகிய கந்தபுராணத்தில் இற்செறித்தல், உடன்போக்குச் செய்திகள் குறிக்கப்பெற்றுள்ளன. இந்நூல் மானுடம் பற்றியதல்ல. ஆகையால் அகத்துறைப் பொருண்மைக்கு உரியதல்ல எனக் கருதலாம்.

சிற்றிலக்கியமாகிய திருக்கோவையார் இருதுறைகளிலும் வளர்ச்சி பெற்று, புதிய கூற்றுக்களை அமைத்து அகமரபைப் போற்றியமையை ஆய்வின்வழி உணரமுடிகிறது. திருக்கோவையாரும் அதன் இலக்கண நூலாகிய முத்துவீரியமும் ஒப்பிடப்பெற்றுப் புதிய கூற்றும் மதிப்பிடப்பெற்றது.

நந்திக்கலம்பகம் புறச்செய்தியோடு இணைத்து அகமரபைப் போற்றியுள்ளது. கச்சிக்கலம்பகம் சொல்லாட்சியில் அகமரபைப் பின்பற்றி இருப்பினும், மானுட வாழ்க்கையில் இருந்து விலகிச் செல்வதால் அகப்பொருள் மரபு மாற்றம் பெற்றிருப்பதாகக் கூறலாம்.

முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களைப் பற்றிக் கூறுங்கால், அகத்துறையின் பின்புலமாக இற்செறித்தலைப் பற்றியும் கூறிச் செல்கின்றது.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் இவ்விரு துறைகள் பாரதியார், பாரதிதாசன், முடியரசன், மு.பழனி, புலவர் குழந்தை ஆகியோரால் ஈர்க்கப் பெற்று, அகமரபு தொடர்ச்சியாகப் பயின்று வந்துள்ள நிலைமையை உணரமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. குறள், பா.எ.,57.
2. குறள்; பா.எ.,1110,1120,1150.
3. ஐந்;ஐம்;12,18,37.
4. திணை,ஐம்;10.
5. திணை, நூற்;5,7,65,90.
6. குறள்; பா.எ.,57.
7. தொல்.பொருள்.இளம்.நூ.
8. நற்;253,9, அகம்;288,11, கலி;48,10.
9. நற்; 132-7, 194,7.
10. பரிமேலழகர் உரை, திருக்குறள், ப,25.
11. குறள்; பா.எ.,1138, 1139.
12. ஞா. தேவநேயன், திருக்குறள் தமிழ்மரபுரை, ப,637.
13. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ், இலக்கிய வரலாறு, பக்.,177-178.
14. திணை. நூற்;5.
15. மேலது, 65,69,71,72,89,90.
16. மேலது, 90.
17. மு. அருணாசலம் பிள்ளை, தொல்,பொருள்,அகம், உரைவளம், ப,355.
18. தொல்,பொருள்,அகம்,இளம், நூ,39.
19. நக்கீரர் , இறையனார் அகப்பொருள், ப,130.
20. மேலது, 65.
21. மேலது, 71.
22. மேலது, 89.
23. தொல்,பொருள்,அகம்,இளம், நூ;43.

24. திணை, நூற்;72,89.

25. மேலது, 69.

26. நக்கீரர், இறையனார் அகப்பொருள், ப,

27. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,43.

28. பன்னிரு திருமுறைகள், தேவாரம், 5/45;1, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 29.

29. மேலது,51,65,86, திரு ஏகம்பமுடையார், திருவந்தாதி;16,21,66, 68,69,70, 71,73,75,77,89, பொன்வண்ணத் தந்தாதி; 56, கோயில் நான்மணி மாலை;22, கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி; 27,28.

30. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்; 286,297,300,1208,300,301,305,1318,1648, 2700,2431,2433.

31. மேலது, 286-96, 1318-27, 1648-67, 2700-10.

32. மேலது, 300.

33. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ;17.

34. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்;287,297,2431,2433.

35. கம்பராமாயணம், நகர் நீங்கு படலம், 335-6.

36. நற்;10, குறுந்;115.

37. நக்கீரர், இறையனார் களவியல் உரை, ப,123.

38. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப,270.

39. கச்சியப்ப சிவாச்சாரியார், கந்தபுராணம், 6:24:114:115, 6:24:22, 6:24:152, 6:24:155, 6:24:136, 6:24:164.

40. மேலது, 6:24:152-4.

41. மேலது, 6:24:167-170.

42. மேலது, 6:24:166.

43. மேலது, 6:24:171.

44. மேலது, 6:24:166.

45. மேலது, 6:24,173-178.

46. மேலது, 6:24,179-181.

47. மேலது, 6:24:184.

48. மேலது, 6:24:185.

49. ஐங்;312.

50. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப,333.

51. வே. இராமநாதன் செட்டியார், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், ப,5.

52. ரா. விசுவநாதய்யர், திருச்சிற்றம்பலக்கோவையார், ப,136.

53. மேலது, ப,136.

54. தொல்,பொருள்,இளம்,நூ,109.

55. திரு.கோ;நூ;16.

56. மேலது;16.

57. திரு.கோ;நூ,14.

58. மேலது;14.

59. த.வசந்தாள், தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்றுப் பார்வை, ப,51.

60. ரா. விசுவநாதய்யர், திருச்சிற்றம்பலக்கோவையார், ப,177.

61. நக்கீரர், இறையனார் களவியல் உரை, ப,118.

62. இரா. இளங்குமரன் (ப.ஆ), களவியற் காரிகை, ப,118.

63. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப,349.

64. நந்திக்கலம்பகம், 32.

65. கச்சிக்கலம்பகம்;19.

66. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப,1332.

67. முத்தொள்ளாயிரம், 49,121,55.

68. மேலது, 98.

69. மேலது, 49.

70. மேலது, 121.

71. த. வசந்நாள், தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்றுப் பார்வை, ப,164.

72. பாரதியார் கவிதைகள், 281.

73. தொல்,பொருள்,களவு,நச்சர்,நூ,12.

74. பாரதிதாசன் பாடல்கள், தொகுதி-4, ப,343.

75. தொல்,பொருள்,இளம்,நூ;109.

76. நற்;287, குறுந்;57,141,161,246,261,305,305,401, கலி;123, அகம்;252, ஐங்;111,113,115,124.

77. பாரதிதாசன், இசையமுது, ப,5.

78. தொல்,பொருள்,அகம்,இளம்,நூ,17.

79. முடியரசன், பூங்கொடி, ப,74.

80. அனிச்ச அடி, அங்கம் 1; களம் 2.

81. அனிச்ச அடி, அங்கம் 1; களம் 2.

82. இராவண காவியம், 69.

83. தொல், பொருள், அகம், இளம், நூ, 43-7.

இயல் –7

முடிவுரை

களவு, கற்பென அகம் பிரிக்கப்பெறும். அக்களவின் வகையாகிய தோழியிற் கூட்டத்தில் இற்செறித்தலும், உடன்போக்கும் அடங்கும்.

'இல்' என்பதற்கு 'வீடு' என்பதும், 'செறித்தல்' என்பதற்குப் 'பெய்தல்', 'நெருங்குதல்' என்ற பொருள்களும் பொருத்தமுடையது எனக் கருதலாம்.

தலைவி புறத்தில் போகாதவாறு பெற்றோரால் வீட்டின் உள்ளேயே அடக்கி வைக்கப்பெற்ற நிலையில், மனம் கலங்கிச் சிதைதல் மனைப்பட்டுக் கலங்குதலாகும்.

'இற்செறித்தல்' என்ற சொல்லாட்சியைத் தொல்காப்பியம் கையாளவில்லை. இவற்றிற்கு ஈடாக 'மனைப்பட்டுக் கலங்குதல்', 'தமர் தற்காத்தல்', 'காப்பின் கடுமை' என்ற வெவ்வேறு சொற்களைக் கையாண்டுள்ளமையை ஆய்வின்வழி உணரமுடிகிறது.

தொல்காப்பியர் இற்செறித்தல் துறையில் தலைவிக்கு இரு கூற்றினையும், தோழிக்கு ஒரு கூற்றினையும் வரையறை செய்துள்ளார். தலைவன் கூற்றினை அமைக்கவில்லை. முதல் உரையாசிரியராகிய இளம்பூரணரும் தலைவன் கூற்றினைச் சுட்டவில்லை, எனினும் நச்சர் தமது உரையில் தலைவன் கூற்றினைச் சேர்த்துள்ளார்.

இளம்பூரணர் தலைவிக்கும் தோழிக்கும் கூற்றுக்களை வரையறை செய்வதில் தொல்காப்பியர் கருத்திற்கு உடன்படுகிறார். நச்சர் தலைவிக்கு ஆறு கூற்றினையும் தோழிக்கு ஒரு கூற்றினையும் தலைவனுக்கு ஒரு கூற்றினையும் குறித்துள்ளார்.

இறையனார் களவியல் 'இற்செறித்தல்' என்ற சொல்லாட்சியை நூற்பாவில் அமைக்கவில்லை. எனினும் உரையில் குறித்துள்ளது. இற்செறித்தலுக்குரிய

கூற்றுகளை ஐந்தாக வகைப்படுத்தியுள்ளது. நச்சர் சுட்டிய தலைவன் கூற்றினை இந்நூல் தோழி கூற்றில் கூறியுள்ளது.

நம்பியகப் பொருளும், இலக்கண விளக்கமும் இற்செறித்தலை ஒருசார் பகற்குறியின் வகையாக்கியும் தோழிக்கு நான்கு கூற்றினையும் தலைவனுக்கு ஒரு கூற்றினையும் அமைத்துள்ளன. சுவாமிநாதமும் இற்செறித்தல் துறையில் இவ்விரு நூல்களை அடியொற்றிக் கூற்றுகளை அமைத்தத்திறம் கருத்திற்குரியதாகும்.

களவியற் காரிகை இற்செறித்தலுன் கூற்றுகளை அமைப்பதில் இறையனார் களவியலைப் பின்பற்றினாலும் கூடுதலாக இரு கூற்றினை விரித்துள்ளது. நச்சர் தலைவிக்குரியனவாகச் சுட்டிய கூற்றினை இந்நூல் தோழி கூற்றில் கொண்டு கூறியமை குறிக்கத்தக்கது.

தொல்காப்பியர் 'உடன்போக்கு' என்பதை நேரடியாகச் சுட்டவில்லை என்றாலும் உரையாசிரியர்கள் நேரடியாகப் பயன்படுத்தியுள்ளனர். 'உடன்' என்ற சொல்லிற்கு 'ஒருங்கு' என்பதும் 'போக்கு' என்பதற்கு 'போகுதல்' என்பதும் பொருத்தமுடையதாகும். இக்குறிப்புகளான் தலைவனும் தலைவியும் ஒருங்கு சேர்ந்து போகுதல் 'போக்குடன்' அல்லது 'உடன்போக்கு' என்பது தெளிவுறும்.

'கடை' என்பது 'பின்', 'கொண்டு' என்பது தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு பெயர்தல் என்பது 'போகுதல்' என்ற பொருள்களில் ஆளப்பெறுவதால் தலைவன் தலைவியைத் தன்பின் அழைத்துக் கொண்டு போகுதல் 'கடைக்கொண்டு பெயர்தலாகும்'.

தோழியின் உதவியால் தலைவனும் தலைவியும் தலைவியின் ஊரைவிட்டு நீங்கிச் செல்வது உடன்போக்காகும்.

உடன்போக்கில் தலைவன் நிகழ்த்தும் கூற்றுகளைத் தொல்காப்பியர் ஆறாகக் குறிப்பர். இளம்பூரணர் மூன்று கூற்றுகளையும், நச்சர் எட்டுக் கூற்றுகளையும், சோமசுந்தர பாரதியார் இரண்டு கூற்றுக்களையும், அருணாச்சலம் பிள்ளை இரண்டு கூற்றுகளையும் கூடுதலாகச் சுட்டியுள்ளனர்.

தலைவி நிகழ்த்தும் கூற்றுகளைத் தொல்காப்பியர் குறிக்கவில்லை என்றாலும் உரையாசிரியர்கள் தங்கள் உரையில் அமைத்துள்ளனர். இளம்பூரணர் நான்கு கூற்றுக்களையும், நச்சர் பத்துக் கூற்றுகளையும், அருணாச்சலம்பிள்ளை மூன்று கூற்றுகளையும் தலைவிக்குரியதாகக் குறித்துள்ளனர்.

தொல்காப்பியர் உடன்போக்கில் தோழி நிகழ்த்தும் கூற்றுக்களை ஆறு என்பர். உரையாசிரியர்கள் இத்துறையில் தோழியின் கூற்றினை மிகுதிப்படுத்தியுள்ளனர் என்பது கருதத்தக்கது.

நற்றாய் நிகழ்த்தும் கூற்றுகளாக இளம் ஆறு கூற்றுகளையும், நச்சர் பதினொன்று கூற்றுகளையும், பாரதியார் ஒன்பது கூற்றுகளையும், அருணாசலம் பிள்ளை மூன்று கூற்றுகளையும் தொல்காப்பியத்தினும் கூடுதலாகச் சுட்டியுள்ளனர்.

தொல்காப்பியம் உடன்போக்கில் செவிலி நிகழ்த்தும கூற்றுகளைத் தொகுத்துச் சுட்டவில்லை. ஆதலால் உரையாசிரியர்களின் உரையில் குறிக்கப்பெற்றுள்ளது. அவ்வகையில் இளம்பூரணர் ஒன்பது கூற்றுகளையும், நச்சர் பதினைந்து கூற்றுகளையும் , பாரதியார் இரண்டு கூற்றுகளையும் அருணாச்சலம் பிள்ளை மூன்று கூற்றுகளையும் அமைத்துள்ளனர்.

உடன்போக்கில் கண்டோர் நிகழ்த்தும் கூற்றினைத் தொல்காப்பியர் ஏழு என்பர். இளம்பூரணரும், சோமசுந்தர பாரதியாரும் ஒவ்வொரு கூற்றினைப் புதியதாகவும், நச்சரும் அருணாச்சலம் பிள்ளையும் தொல்காப்பிய கூற்றுகளுக்கு உடன்பட்டும் உரை வரைந்துள்ளமையை ஆய்வின்வழி உணரமுடிகிறது.

இறையனார் களவியல் உடன்போக்கினைச் சூத்திரத்தில் குறிக்கவில்லை என்றாலும் உரையில் சுட்டிச் செல்கின்றது. இந்நூல் உடன்போக்கிற்குரிய கூற்றுகளை இருபத்து மூன்றாக வரையறை செய்துள்ளது.

நம்பியகப் பொருள் உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி ஆகிய மூன்று துறைகளிலும் உடன்போக்குச் செய்திகளைக் குறித்துள்ளது.

உடன்போக்கிற்குரிய கூற்றுகளைக் களவியற்காரிகை முப்பத்து இரண்டென வரையறை செய்துள்ளது.

இலக்கண விளக்கம் நம்பியகப் பொருளை அடியொற்றி மூன்று துறைகளில் உடன்போக்குச் செய்திகளை விவரித்துள்ளது. இத்துறையில் நம்பியகப் பொருளினும் கூடுதலான கூற்றுகளைக் குறித்துள்ளது.

உடன்போக்கிற்குரிய கூற்றுகளை ஐம்பத்தாறு என்று முத்துவீரியம் சுட்டிச்செல்கின்றது.

சுவாமிநாதம் நம்பியகப் பொருள், இலக்கண விளக்கம் உள்ளிட்டவைகளைப் பின்பற்றி விளக்கிச் செல்கிறது. எனினும் கூற்றுகளை அவ்விரு நூல்களைவிடக் குறைத்துள்ளது.

மனைப்பட்டுக் கலங்குதல், காப்பின் கடுமை, தமர் தற்காத்தல் என்று தொல்காப்பியமும் செறிப்பறிவுறீஇ, இற்செறிப்பு, காப்புமிகுதி என்று சங்க இலக்கியமும் (துறைக் குறிப்பில்) இற்செறித்தலைக் குறித்துச் செல்கின்றன.

இற்செறித்தல் பாடல்கள் நற்றிணை, குறிஞ்சித்திணை மற்றும் தோழி கூற்று ஆகியவற்றில் மிகுந்துள்ளன. ஆண்பாற் புலவர்களும் மிகுதியாக இத்துறையில் இயற்றியுள்ளனர். இம்மிகுதிக்குரிய காரணங்களும் விளக்கப் பெற்றுள்ளன.

கலித்தொகை, நெய்தல், மருதத்திணை, தலைவி கூற்று, பெண்பாற் புலவர்கள் முதலானவற்றில் இற்செறித்தல் பாடல்கள் குறைந்துள்ளன. குறைவிற்குரிய சூழல்கள் ஆராயப் பெற்றுள்ளன.

கபிலர், அம்மூவனாரின் பாடல்கள் ஐங்குறுநூற்றில் மிகுந்தும், உலோச்சனார், குடவாயிற் கீரத்தனார் பாடல்கள் நற்றிணையில் மிகுந்தும் காணப்பெறுகின்றன. மருதனிளநாகனார் பாடல்கள் அகநானூற்றில் மிகுந்துள்ளன.

கபிலர், மருதனிளநாகனார், நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒரு பாடல் பாடிய புலவர்கள், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்களின் பாடல்களில் குறிஞ்சித் திணையும், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், குடவாயிற் கீரத்தனாரின் பாடல்களில் நெய்தல் திணையும் மிகுத்துக் கூறப்பெற்றுள்ளன.

கபிலர், உலோச்சனார், குடவாயிற் கீரத்தனார், நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள், அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்களின் பாடல்களில் தோழி கூற்றும், அம்மூவனாரின் பாடல்களில் தலைவி கூற்றும் மிகுதியாகும். இரண்டு பாடல்கள் பாடிய நக்கீரரும், பரணரும் யார் கூற்றையும் மிகுதியாகச் சுட்டாமல், சமமாகப் பங்கிட்டுள்ளனர்.

காப்பின் கடுமை கூறல், மனைப்பட்டுக் கலங்கல், தலைவன் ஆற்றானாய்க் கூறல் என்கிற இலக்கண மெய்ம்மைகள், சங்கப் பாக்களில் அவ்வக் கூற்றுகளில் மிகுதியும் குறிக்கப் பெற்றுள்ளமை ஆய்வின்வழி மதிப்பிடப்பெற்றது.

'இற்செறித்தல்' என்ற சொல்லாட்சி தொல்காப்பியத்தில் இடம்பெறாமல், சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெற்றிருப்பது உணரப்பெற்றது. இதைத்தவிர தொல்காப்பியம் சுட்டும் காப்பின்கடுமை, தமர் தற்காத்தல், மனைப்படுக் கலங்குதல் என்கிற சொல்லாட்சிகளைச் சங்க இலக்கியமும் அடியொற்றிச் செல்கிறது.

இயற்கை நிகழ்ச்சிகளும், ஐயத்தின் விளைவுகளும் இற்செறித்தலின் காரணங்களாக அமைகின்றன.

குறிஞ்சி, தலைவியின் ஊர், மனை, சிறைப்புறம் ஆகியன இற்செறித்தலின் களங்களாகும்.

தலைவியின் (தாய்) அன்னை தலைவியைக் கடுங்காவலில் வைத்துப் ப்ாதுகாத்ததைச் சங்கப் பாக்களின்வழி அறியமுடிகின்றது.

இற்செறித்தலின் பொழுதாக இரவு பொதுவாகவும், யாமம் சிறப்புநிலையிலும் வைத்து எண்ணப்பெற்றுள்ளது. இவ்விரு பொழுதுகளைக் குறிக்கும் கலைச்சொற்களைச் சங்க இலக்கியம் கையாண்டிருப்பது கருதத்தக்கது.

சங்க இலக்கியத்தில் உடன்போக்குத் துறைக்குறிப்பில் உடன்போகா, கொண்டுதலைக் கழிதல், புணர்ந்துடன் போகா, மகட்போக்கிய மனைமருட்சி என்று குறிக்கப் பெற்றுள்ளன.

உடன்போக்குப் பாடல்கள், ஐங்குறுநூறு, பாலைத்திணை, நற்றாய் கூற்று, ஆண்பாற் புலவர்கள் ஆகியவற்றில் மிகுந்தும், மிகுதிக்குரிய காரணமும் மதிப்பிடப் பெற்றுள்ளன.

இத்துறைப் பாடல்கள் கலித்தொகை, நெய்தல் திணை, தலைவி கூற்று, பெண்பாற் புலவர்களின் பாடல்களில் குறைந்து காணப்பெறுவதற்குரிய காரணங்கள் ஆய்விற்குட்படுத்தப்பெற்றன.

ஓதலாந்தையார் பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், மாமூலனாரின் பாடல்கள் அகநானூற்றிலும், ஔவையார், வெள்ளிவீதியாரின் பாடல்கள் குறுந்தொகையிலும் மட்டும் இடம்பெற்றுள்ளன. பெருங்கடுங்கோவின் பாடல்கள், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள் ஆகியன நற்றிணையிலும், கபிலரின் பாடல்கள் ஐங்குறுநூற்றிலும், கயமனார், குடவாயிற் கீரத்தனார், மருதனிளநாகனாரின் பாடல்கள் அகநானூற்றிலும் மிகுந்துள்ளன.

கபிலரின் உடன்போக்குப் பாடல்களில் மட்டும் குறிஞ்சித்திணையும், எஞ்சிய புலவர்களின் பாடல்களில் பாலைத்திணையும் மிகுதியாகும்.

ஓதலாந்தையார், ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள், மாமூலனார் நற்றிணையில் ஒரு பாடல் பாடிய புலவர்களின் பாடல்களில் நற்றாய் கூற்றும், ஒரு பாடல்கள் பாடிய புலவர்களின் பாடல்களில் செவிலி கூற்றும் மிகுந்துள்ளன.

கபிலர், குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்களின் பாடல்களில் தோழி கூற்றும், பெருங்கடுங்கோ, மருதனிளநாகனார் பாடல்களில் தலைவன் கூற்றும், பெரும்பதுமனாரின் பாடல்களில் கண்டோர் கூற்றும் மிகுத்துச் சுட்டப்பெற்றுள்ளன.

மூன்று பாடல்கள் பாடிய அம்மூவனாரும், இரண்டு பாடல்கள் பாடிய ஔவையாரும், வெள்ளிவீதியாரும் யார் கூற்றையும் மிகுதியாகச் சுட்டாமல், சமமாகப் பாடியுள்ளனர்.

தலைவன் மெல்லக் கொண்டேகல், தலைவி போக்கிற்கு உடன்பட்டமையைத் தோழியிடம் கூறல், தோழி தலைவியை உடன்போக்கிற்கு ஒருப்படச் செய்தல், செவிலி கவன்று உரைத்தல், நற்றாய் மகளின் அச்சத்தின்கண் இரங்கல், கண்டோர் சேய்நிலைக்கு அகன்றோர் செலவின்கண் கூறல், தாய்நிலை கண்டு தடுத்தற்கண் கூறல் என்கிற இலக்கண மெய்ம்மைகள் சங்கப் பாக்களில் அவ்வக் கூற்றுகளில் மிகுதியும் பயின்று வந்துள்ளன.

சங்க இலக்கியத்தில் உடன்போக்கிற்கு ஈடாக முப்பத்து ஒன்பது சொற்களும், போக்கு, போகிய ஆகிய சொல்லாட்சியில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் ஒத்துச் செல்வதும் அறியப்பெற்றன.

சங்க இலக்கியத்தில் உடன்போக்கிற்குரிய காரணங்கள் ஏழாகவும், சூழல்கள் இரண்டாகவும் அமைந்த திறம் மதிப்பிடப்பெற்றது.

உடன்போக்குப் பாடல்களில் உடன்போக்கின் பொழுது பதினைந்து பாடல்களிலும், காலம் பதின்மூன்று பாடல்களிலும் குறிக்கப் பெறுவதோடு, அவற்றைப் பொதுநிலையிலும், சிறப்புநிலையிலும் வரையறுத்துள்ளனர்.

உடன்போக்கின் களமாகப் பாலைத்திணை சோலைகள், பலகாடுகள், பலநாடுகள் சுட்டப்பெற்றுள்ளன.

இற்செறித்தலில் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தலைவன், தலைவி, தோழி ஆகியோர். தோழி தலைவன் (14), தலைவி (6), செவிலி (2), உழவர் (2),

கிளி(1) ஆகியவைகளிடம் நிகழ்த்திய கூற்றுகளில் இருந்து இருபத்தைந்து பண்புகள் பெறப்பெறுகின்றன. இவற்றில் தோழிக்கு பதினெட்டும், தலைவிக்கு நான்கும், தலைவனுக்கு இரண்டும், செவிலிக்கு ஒன்றுமாகப் பண்புகள் குறிக்கப் பெற்றுள்ளன.

தலைவி தோழி (5), நெஞ்சம் (4) ஆகியவற்றிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் தலைவிக்கு எட்டும், தலைவனுக்கு ஒன்றுமாக ஒன்பது பண்புகள் உள்ளன.

தலைவன் நெஞ்சிடம் நிகழ்த்திய கூற்றிலிருந்து பெறப்பெறும் மூன்று பண்புகளும் அவனுக்குரியவை.

கூற்று நிகழ்த்தாத மாந்தர்களாகிய செவிலி, நற்றாய், தந்தை ஆகியோரின் பண்புகள் தோழி கூற்றில் மட்டும் இடம்பெற்றிருப்பது கருதத்தக்கது.

உடன்போக்கில் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆவர். நற்றாய் நெஞ்சம் (15), கண்டோர் (5), தோழி (3), தெய்வம் (3), செவிலி (1), அஃறிணை (1)யிடம் நிகழ்த்திய கூற்றுக்களில் இருந்து பெறப்பெறும் இருபத்தெட்டுப் பண்புகளில் இருபத்தாறு நற்றாய்க்கும், தலைமக்களுக்கு ஒன்றும், தலைவிக்கு ஒன்றும் உரியவை என்பது ஆய்வின்வழி உணரப்பெற்றது.

தோழி தலைவி (9), தலைவனிடம் (8) கூற்று நிகழ்த்தியதன்வழி பதினேழு பண்புகள் அறியப்பெறும். இவற்றில் தோழிக்குப் பதினொன்றும், தலைவனுக்கு இரண்டும், ஊராருக்கு ஒன்றும், நற்றாய்க்கு ஒன்றும், தலைவிக்கு இரண்டும் பொருந்துவதாக உள்ளன.

செவிலி நெஞ்சம் (12), கண்டோர் (4), நற்றாய் (3), தோழியிடம் (3), தெய்வம் (3), அஃறிணை (1) நிகழ்த்திய கூற்றுகளில் இருந்து பெறப்பெறும் பண்புகள் இருபத்தைந்து. இதில் செவிலிக்கு இருபத்தொன்றும், தலைவிக்கு ஒன்றும், தலைவனுக்கு இரண்டும், தலைமக்களுக்கு ஒன்றுமாக அமைந்துள்ளன.

கண்டோர் நெஞ்சம் (4), நற்றாய் (2), செவிலி (3), தலைமக்களிடம் (3) கூற்று நிகழ்த்தியதன் மூலம் கண்டோருக்கு ஒன்பதும், தலைமக்களுக்கு ஒன்றும், தலைவிக்கு ஒன்றும், தலைவனுக்கு ஒன்றுமாகப் பன்னிரெண்டு பண்புகள் அறியப்பெற்றன.

தலைவன், தலைவி (8), நெஞ்சம் (2), தோழியிடம் (2) நிகழ்த்திய கூற்றின்வழிப் பெறப்பெறும் பன்னிரெண்டு பண்புகளும் தலைவனுக்குரியவை.

தலைவி, தோழி (7), கண்டோர் (3), தலைவனிடம் (1) கூற்று நிகழ்த்தியதன் மூலம் அறியப்பெறும் பதினொன்று பண்புகளில் தலைவிக்கு ஏழும், செவிலிக்கு மூன்றும், தோழிக்கு ஒன்றுமாக அமைந்துள்ளன.

உடன்போக்குத் துறையில் கூற்று நிகழ்த்தாத மாந்தர்களாகிய தந்தை தமையனாரின் பண்புகள் தலைவி, செவிலி கூற்றில் குறிக்கப்பெற்றுள்ளன.

தொல்காப்பிய அகக்கோட்பாடுகள் மரபின் தொடர்ச்சியாகவும் மாற்றம் பெற்றும் பிற்கால இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

சங்க மருவிய இலக்கியமாகியத் திருக்குறளில் இற்செறித்தலின் சொல்லாட்சி மற்றும் பொருண்மையில் அகமரபு பின்பற்றப் பெற்றுள்ளமை கருதத்தக்கதாகும்.

திணைமாலை நூற்றைம்பதில் குறிக்கப்பெறும் உடன்போக்குச் செய்திகள் அகமரபைப் போற்றியுள்ளமை கருதத்தக்கதாகும்.

பக்தி இலக்கியமாகிய நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் சொல்லாட்சி மற்றும் அகப்பொருள் துறைகள் பின்பற்றப் பெற்றிருந்தாலும், அத்துறைகள் இறைக்காதலுக்காக மடைமாற்றம் செய்யப்பெற்ற நிலையில் அகமரபு பின்பற்றப் பெறவில்லை.

மொழிபெயர்ப்புக் காப்பியமாகிய கம்பராமாயணத்தில் தோழி ஓம்படை கூறிவிடுக்கும் முகத்தான் அகமரபு போற்றப் பெற்றுள்ளது.

புராண இலக்கியமாகிய கந்தபுராணத்தில் இரு துறைகள் பற்றிய செய்திகள் குறிக்கப்பெற்றிருந்தாலும், மானுடம் பற்றியதல்ல ஆகையால் அகமரபிற்கு உரியதல்ல எனக் கருதலாம்.

சிற்றிலக்கியமாகிய திருக்கோவையார் இருதுறைகளிலும் வளர்ச்சி பெற்று, அகமரபைப் போற்றியுள்ளதிறம் கருதத்தக்கதாகும்.

நந்திக் கலம்பகம் அகமரபைப் போற்றியுள்ளது. கச்சிக் கலம்பகம் மானுட வாழ்க்கையில் இருந்து விலகிச் செல்வதால் அகமரபு மாற்றம் பெற்றுள்ளதாகக் கருதலாம்.

முத்தொள்ளாயிரம் அகத்துறையின் பின்புலமாக இற்செறித்தலை அமைத்துள்ளது.

இற்செறித்தல், உடன்போக்குத் துறைகள் பாரதியார் உள்ளிட்ட இக்காலப் புலவர்களால் ஈர்க்கப்பெற்று, அகமரபு தொடர்ந்து பயின்றுள்ளமை ஆய்வின்வழி உணரப்பெற்றது.

பிற்கால வளர்ச்சியில் இற்செறித்தலும் உடன்போக்கும் என்னும் தலைப்பு விரிந்த ஆய்வுப் பரப்பைப் பெற்றுள்ளது. அவ்வகையில் இத்தலைப்பில் ஆய்வினைத் தொடர்ந்து மேற்கொள்ள வாய்ப்புண்டு. இவ்விரு துறைகளையும் இன்றைய சமுதாயச் சூழல்களோடு ஒப்பிட்டும் ஆய்வினை மேற்கொள்ளலாம். துறைகளை மையமிட்ட இத்தகு ஆய்வினைப் பகற்குறியும் இரவுக்குறியும் என்று ஏனைத் துறைகளுக்கும் மேற்கொண்டு ஆய்வினை விரிவாக நிகழ்த்தலாம். தனித்துறைகளை மையமிட்ட ஆய்விற்கு இவ்வாய்வு தூண்டுகோலாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

முதன்மைச் சான்றாதாரங்கள் :

இளங்குமரன், இரா., (ப.ஆ) – **களவியற் காரிகை**
கழகம்,
சென்னை, 1973.

கோபாலையர், தி.வே., – **இலக்கண விளக்கம் பொருளதிகாரம்**
(அகத்திணையியல்,புறத்திணையியல்)
கழகம்,
சென்னை, 1976.

சண்முகம், செ.வை., (பதிப்பும் உரையும்) – **சுவாமிநாதம்**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், 1975.

சாமிநாதையர், உ.வே., (ப.ஆ) – **குறுந்தொகை**
கபீர் அச்சுக்கூடம்,
சென்னை, 1962, (நா.ப).

துரைசாமிப்பிள்ளை, ஔவை,சு., – **ஐங்குறுநூறு : இரண்டாம் தொகுதி**
(குறிஞ்சி, பாலை)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், 1957.

,, – **ஐங்குறுநூறு : முதல் தொகுதி**
(மருதம், நெய்தல்)
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், 1957.

தொல்காப்பியர், – **தொல்காப்பியம் – பொருளதிகாரம் :**
இளம்பூரணர் உரையுடன்
கழகம்,
சென்னை, 1977, (ஏ.ப).

நக்கீரனார்,	-	களவியல் என்ற இறையனார் அகப்பொருள் கழகம், சென்னை, 1958. (ம.ப)
நச்சினார்க்கினியர், (உ.ஆ)	-	கலித்தொகை கழகம், சென்னை, 1958, (ஐ.ப.).
நாராயணசாமி ஐயர், அ., (உ.ஆ)	-	நற்றிணை கழகம், சென்னை, 1956
நாற்கவிராச நம்பி,	-	நம்பியகப் பொருள் கா. ர. கோவிந்தராச முதலியார் (குறிப்புரை) கழகம், சென்னை, 1973. (ம.ப)
வேங்கடசாமி நாட்டார், ந.மு., வெங்கடாசலம், ரா (உ.ஆ)	-	அகநானூறு(களிற்றியானைநிரை), கழகம், சென்னை, 1945.
,,	-	அகநானூறு (மணமிடைபவளம்) கழகம், சென்னை, 1944.
,,	-	அகநானூறு (நித்திலக் கோவை) கழகம், சென்னை, 1944.

துணைமைச் சான்றாதாரங்கள்

1.அகத்தியலிங்கம், ச., - **சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1997.

அரங்கநாத முதலியார், - **கச்சிக்கலம்பகம்**
ஐந்தாம் பகுப்பு,
கழகம்,
சென்னை, 1950.

அருணாசலம், மு., - **தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம்**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை, 1975.

அறவாணன், க.ப., - **அற்றை நாள் காதலும் வீரமும்**
பாரி நிலையம்,
சென்னை, 1978.

அறவாணன், க.ப., & தாயம்மாள் அறவாணன் - **தொல்காப்பியக் களஞ்சியம்**
பாரி நிலையம்,
சென்னை, 1975.

ஆறுமுகம், நா., - **கலித்தொகை ஓர் ஆய்வு**
பாரி நிலையம்,
சென்னை, 1985.

இராகவையங்கார், மு., - **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**
மானாமதுரை, 1960.

இராசமாணிக்கனார், மா., - **இல்வாழ்க்கை**
ஏ.டி.எஸ். நாகலிங்கம் அண்டு கம்பெனி,
மதுரை.

இராசாராம், சு., – **அகமாந்தர்களில் கண்டோர்**
பாக்யா வெளியீடு,
கல்லல், 1995

இராமகிருட்டிணன், அ., – **அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு**
சர்வோதய இலக்கியப் பண்ணை,
மதுரை, 1982.

இராமநாதன் செட்டியார், மீ.பொன்., (உ.ஆ) – **அம்பிகாபதி கோவை**
கழகம்,
சென்னை, 1952.

இராமநாதன் செட்டியார், வே., – **சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள்**
(நான்காவது மாநாடு)
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-1, 1961.

இராமநாதன் செட்டியார், வெ.ப.கரு., – **சங்க காலத் தமிழர் வாழ்வு**
வெள்ளையன் பதிப்பு கழகம்,
கண்டனூர், 1958.

இரமேஷ் சாமியப்பா, – **அகப்பாடல்களின் செவிலி**
நீலாப்பதிப்பகம்,
பட்டுக்கோட்டை, 1995

இலக்குவனார், சி., – **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்**
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை, 1962.

,, – **தொல்காப்பிய ஆராய்ச்சி**
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை, 1961.

இளங்கோவடிகள் - **சிலப்பதிகாரம்,**
கழகம்,
சென்னை, 1956

இளந்திரையன், சாலை., - **சமுதாயபோக்கு**
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை-5, 1980 (இ.ப.)

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், - **கந்தபுராணம் : பகுதி-2**
பிரஸிடென்ஸி அச்சியந்திரசாலை,
சென்னை, 1908.

காந்தி, க., - **தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, 1980.

காளிமுத்து, கா., - **தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளும் குறுந்தொகையும்**
பூம்புகார் பிரசுரம் பிரஸ்,
சென்னை, 1983.

குருசாமி, ம.ரா.போ., - **வாழ்வும் வழியும்**
மெர்குரி புத்தகக் கம்பெனி,
கோயம்புத்தூர், 1969.

குழந்தை புலவர், - **தொல்காப்பியர் காலத் தமிழர்**
பாரி நிலையம்,
சென்னை, 1959.

,, - **தொல்காப்பியம் பொருளதிகாரம் உரை**
வேலாப் பதிப்பகம்,

ஈரோடு, 1968.

,, - **இராவண காவியம்**
வேலா வெளியீடு,
சென்னை, 1971, (இ.ப).

சங்குப்புலவர், தி., - **ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள்**
கழக வெளியீடு,
திருநெல்வேலி, 1955.

சஞ்சீவி, ந., - **சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்**
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை, 1973.

சண்முகம், இராம., - **சங்க இலக்கியங்களில் வரைவு கடாதலும், அறத்தொடு நிற்றலும்**
சரவணா பதிப்பகம்,
மதுரை-20, 1993.

சண்முகம்பிள்ளை, மு., - **அகப்பொருள் மரபும் திருக்குறளும்**
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை, 1980.

சண்முகம்பிள்ளை, மு.,(ப.ஆ) - **குறுந்தொகை**
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர், 1974.

சரளா இராசகோபாலன் - **சங்க இலக்கியத்தில் தோழி**
ஒளிப் பதிப்பகம்,
சென்னை-18, 1986.

,, - **சங்க இலக்கியம் (அகம்)**
ஒளிப் பதிப்பகம்,
சென்னை-18, 1988.

சாரங்கபாணி, இரா., - **சங்கச் சான்றோர்கள்**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, 1993.

சிதம்பரனார், சாமி., - **குறுந்தொகை பெருஞ் செல்வம்**
இலக்கிய நிலையம்,
சென்னை -94. (ஆ.இ)

சிவலிங்கனார், ஆ., - **தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை -113. (ஆ.இ)

,, - **தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை -113, 1994

சுந்தர சண்முகனார், - **தமிழ் நூல் தொகுப்புக்கலை**
பாரி நிலையம்,
சென்னை, 1972.

சுப்பிரமணியன், கா., - **சங்க காலச் சமுதாயம்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை -98. (ஆ.இ)

சுப்பிரமணிய பாரதி, சி., - **பாரதியார் கவிதைகள்**
பாரதி பதிப்பகம்,
சென்னை, 1981, (ஓ.ப).

சுப்பிரமணிய பிள்ளை, கா., - **பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து**
தமிழ்நெறி விளக்கப் பதிப்பகம்,
சேலம், 1939.

சுப்புரெட்டியார், ந., - **அகத்திணைக் கொள்கைகள்**
பாரி நிலையம்,
சென்னை-1, 1981.

,, - **தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை**
பழநியப்பா பிரதர்ஸ்,
திருச்சி, 1963.

செயராமன், நா., - **நெய்தற் பாடல்கள்**
குமரன் பதிப்பகம்,
மதுரை, 1978.

,, - **களம் கண்ட கருத்துகள்**
குமரன் பதிப்பகம்,
மதுரை, 1977.

தமிழண்ணல் - புதிய நோக்கில் தமிழ் இலக்கியவரலாறு,
மீனாட்சி புத்தக நிலையம்,
மதுரை, 1984.

“ - **தமிழியல் ஆய்வு**
? ? ?

திருவள்ளுவர், - **திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்**
கழகம்,
சென்னை, 1946.

துரைசாமி, வே., (ப.ஆ)	-	**பாண்டிக்கோவை** ஸ்டார் பிரசுரம், திருவல்லிக்கேனி, சென்னை, 1957.
துரைசாமிப்பிள்ளை, ஔவை,சு.,	-	**நற்றிணை மூலமும் விளக்கவுரையும்** அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை-17, 1968.
,,	-	**சேர மன்னர் வரலாறு** சாந்தி நூலகம், சென்னை, 1960.
துரையரங்கசாமி, மொ.அ.,	-	**தொல்காப்பிய நெறி** மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1963.
தொல்காப்பியர்,	-	**தொல்காப்பியம் - பொருளதிகாரம் :** (அகத்திணையியல்,புறத்திணையியல்) **நச்சினார்க்கினியர் உரையுடன்** கழகம், சென்னை, 1983.
,,	-	**தொல்காப்பியம் - பொருளதிகாரம் :** **(களவியல், கற்பியல், பொருளியல்)** **நச்சினார்க்கினியர் உரையுடன்** கழகம், சென்னை, 1958.(ம. ***ப***)
நாராயண வேலுப்பிள்ளை, எம்.,	-	**திருக்கோவையார் மூலமும் உரையும்** தமிழ் நிலையம், சென்னை. (ஆ.இ)

பழநி, ஆ., – **அனிச்ச அடி**
கழகம், மறு பதிப்பு,
சென்னை, 1974.

பாலகிருட்டினன், நா., – **தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றிணை ஓர் ஆய்வு**
இளங்கோ பதிப்பகம்,
சென்னை-90, 1988.

பாஸ்கரதாஸ், ஈ.கோ., – **அகப்பொருள் பாடல்களில் தோழி**
திருமனை வெளியீடு,
கோவை, 1979.

,, – **அகப்பொருள் பாடல்களில் தலைவி**
தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்,
சென்னை, 1982.

பொய்யாமொழிப்புலவர், – **தஞ்சைவாணன் கோவை**
சொக்கப்ப நாவலர் உரை,
கழகம்,
சென்னை, 1955.(ம. ப)

மாணிக்கம், வ.சுப., – **தமிழ்க்காதல்**
பாரி நிலையம்,
சென்னை, 1962.

மாணிக்கவாசகர் திருக்கோவையார் என்னும் திருச்சிற்றலம்பக் கோவையார்
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு
திருப்பனந்தாள், 1952.

மார்க்கபந்து சர்மா, எஸ், ஆர்., – **கபிலர் ஓவியம்**
தொல்காப்பியர் நூலகம்,
சென்னை, 1961.

முத்துக்கணேசன், (உ.ஆ) - **முத்தொள்ளாயிரம்**
பாரி நிலையம்,
சென்னை, 1965, (மூ.ப).

முத்துவீர உபாத்தியாயர், - **முத்துவீரியம்**
கு. சுந்தரமூர்த்தி (ப.ஆ),
கழகம்,
சென்னை, 1965.

ரமா, தி., - **திருவள்ளுவரின் களவியல் கோட்பாடு**
தியாகராசா பதிப்பகம்,
காரைக்குடி -2, 2001

வசந்தாள்.த தமிழக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் ஒரு வரலாற்றுப் பார்வை,
சென்னை பல்கலைக் கழகம்,
சென்னை, 1990.

வண்ணமுத்து, மா., - **அம்மூவனார் பாடல்களில் ஓர் ஆய்வு**
சோலை நூலக வெளியீடு,
மதுரை, 1976.

வரதராசன், மு., - **குறுந்தொகை விருந்து**
பாரி நிலையம்,
சென்னை, 1965.

,, - **நெடுந்தொகை விருந்து**
பாரி நிலையம்,
சென்னை, 1952.

,, - பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை,
மா.ரா.போ.குரசாமி(மொ.பெ.ஆ),

பாரி நிலையம்,
சென்னை, 1964.

விசுவநாதன், அ., - **சங்க இலக்கியச் சிந்தனைகள்**
மங்கை பதிப்பகம்,
காரைக்குடி-3, 1995.

விசுவநாதன், எஸ் ,(ப.ஆ) - **பாட்டும் தொகையும்**
? ? ?

வீராசாமி ,தா,வே (ப.ஆ) - தொல்காப்பியம்
பொருளத்திகாரம்
அகத்திணையியல் உரைவளம்,
மதுரை 21
மதுரைப் பல்கலைக் கழகம்
(1975)

வெங்கடாசாமிரெட்டியார், கி., (ப.ஆ) - **நாலாயிரத்திவ்யப்பிரபந்தம்**
திருவேங்கடத்தான் திருமன்க்ஷம்,
சென்னை, 1981, (இ.ப).

வெள்ளைவாரணன், க., - **தொல்காப்பியம் களவியல் உரைவளம்**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை, 1983.

வைத்தியநாத தேசிகர், - **கப்பற்கோவை**
உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
சென்னை, 1958.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., - **சங்க இலக்கியம்**
பாரி நிலையம்,
சென்னை, 1967.

,, - **குறுந்தொகைச் சொற்பொழிவுகள்**
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை-1. (ஆ.இ)

,,	–	**சங்க இலக்கியம் பாட்டும் தொகையும்**
(தொகுப்பும் பதிப்பும்)		பாரி நிலையம்,
		சென்னை, 1967, (இ.ப).
ஜகந்நாதன், ம.,	–	**நந்திக்கலம்பகம்**
		அருணோதயம்,
		சென்னை, 1968, (இ.ப).
ஜான் சாமுவேல், ஜி.,	–	**சங்க அகப்பாடல் மரபுகள்**
		ஒரு புதிய பார்வை
		திறனாய்வுச் சிந்தனைகள்,
		மணி பதிப்பகம்,
		சென்னை, 1977.

அகராதி & கலைக்களஞ்சியம் :

கந்தையாமுதலியார், ந.சி.,	–	**தமிழ் புலவர் அகராதி,**
		ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
		சென்னை, 1960.
கோபால கிருZணக்கோன்		மதுரைத் தமிழ்ப் பேரகராதி,
இ,மா, (வெ.ஆ)		எக்ஸெல்ஸியர் பவர்பிரஸ்,
		மதுரை (ஆ.இ).
பிங்கல முனிவர்	–	**பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு**
		கழகம்,
		சென்னை, 1968.
மதிவாணன், இரா.,(ப.ஆ).	–	**செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்**
		பேரகரமுதலி
		உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
		தரமணி,
		சென்னை-113, 1993.
----	–	**வாழ்வியற் களஞ்சியம், தொகுதி–4**
		தமிழ்ப் பல்கலைக் கழகம்,
		தஞ்சாவூர்.

கட்டுரைகள் :

அறவாணன், க.ப., – **உடன்போக்கு**
(ஆ.கோ 9-1) மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைச் சார்பு வெளியீடு, மதுரை, 1977.

சுப்பிரமணியம், ச.வே., – **ஒன்று நன்று குறுந்தொகையில் உள்ளுறை**
தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1976.

மாதையன், பெ., – **இற்செறிப்பும் சங்க காலப் பெண்டிர் நிலையும்**
..?.... ..?... ..?... ..?...

முத்துச்சண்முகம், – **"இலக்கியத்தில் தாய்" தேவகிருபை தியாகராசன் வையை வியாழவட்டக் கருத்தரங்கு மலர்**
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1975.

வெங்கடராமச் செட்டியார், செ., – **கவைமகள் நஞ்சுண்டா அங்கு அஞ்சுவல்**
செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 53, பரல் 9, 1979.

முனைவர் பட்ட ஆய்வேடுகள் :

ரத்தினம், க., – **சங்க அகப்பாடல்களில் கூற்று**
பி.எச்.டி. ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1976.

வசந்தா, து., - **நற்றிணை – ஓர் ஆய்வு,**
பி.எச்.டி. ஆய்வேடு,
மதுரைக் காமராசர்
பல்கலைக் கழகம்,
மதுரை, 1976.

இளம் முனைவர்பட்ட ஆய்வேடுகள் :

கொழந்தைசாமி, ப., - **தமிழ்ப் புதுக்கவிதைகளில் அகப்பொருள் மரபுக் கூறுகள்**
எம்.ஃபில் ஆய்வேடு,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை, 1985.

செந்தூரன், ச., - **சங்க இலக்கியத்தில் உடன்போக்கு**
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
எம்.ஃபில் ஆய்வேடு,
மதுரை, 1986.

தனலெட்சுமி, வெ., - **குறுந்தொகையில் உடன்போக்கு**
எம்.ஃபில் ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி, 2000.

மரகதம், கரு., - **களவியல் ஒப்பீடு**
எம்.ஃபில் ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி, 1994.

மீனாட்சி, அ., - **திருக்கோவையாரும் இறையனார் களவியலும் ஒப்பீடு**
எம்.ஃபில் ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி, 1994.

முத்துப்பாண்டியன், ம., - **பாலைப் பாடல்கள்**
எம்.ஃபில் ஆய்வேடு,
அழகப்பா பல்கலைக் கழகம்,
காரைக்குடி, 2000.

ஆங்கில நூல்கள் :

Meenakshisundaram, T.P., - **Tolkappiyars Literary Theory proceedings of the first International conference Seminar of Tamil Studies**, Volume-II, Kulalumbur, 1966, (F.E).

Nagu, Dr. R.K., - **Palaittinai in Sangam Literature Aniyakam**
Madras, 1981, (F.E).

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு-1

அ .இற்செறித்தலைக் காட்டும் நூற்பாக்கள்

நம்பியகப் பொருள்

சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலும்
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலும்
முன்னின்று ணர்த்தலும் முன்னின் றுணர்த்தி
ஓம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்
தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலும் (நூ;154)

இலக்கண விளக்கம்

சிறைப்புற மாகச் செறிப்பறி வுறுத்தலும்
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலும்
முன்னின் றுணர்த்தலு முன்னின்று உணர்த்தி
யோம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்
தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலும் (நூ;513)

சுவாமிநாதம்

சிறைப்புறமாச் செறிப்புஉணர்த்தல் முல்லையின்பு றச்சொற்
செப்பியுணர்த்து தல்முன்னின்று உணர்த்துதல் முன்னின்று உணர்த்தி
உறுத்தி ஓம்படைசாற்றல் தஞ்சம்இலாது இறைநெஞ்
சொடுகிளத்தல் ஈரேழும் ஒருசார்எற் குறியாந்; (நூ;98)

ஆ .உடன்போக்கினை உணர்த்தும் நூற்பாக்கள்

தொல்காப்பியம்

தன்னும் அவனும் அவளுஞ்சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறந்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியு மவ்வழி உரிய (நூ;39)

ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்
தாமே செல்லுந் தாயரும் உளரே (நூ;40)

தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன (நூ;42)

பொழுது மாறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்பும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டுதடுப்பினும் விடுப்பினும்

சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப (நூ;43)

ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும் (நூ;44)

எஞ்சி யோர்க்கு மெஞ்சுதல் இலவே (நூ;45)

போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
அன்னவை பிறவுஞ் செவிலி மேன. (நூ;113)

நம்பியகப் பொருள்

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை

போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே. (நூ;180)

உடன்போக்கின் வகை

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை உடன்போக் கிருநான்கு வகைத்தே. (நூ;181)

உடன்போக்கின் விரி

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலும்
ஆங்கவன் மறுத்தலும் அவளுடன் படுத்தலும்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலும் தலைவி
நாணழி பிரங்கலும் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலும் தலைவி
ஒருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்தியல் உரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலும்
அவன்சுரத் துய்த்தலும் அசைவறிந் திருத்தலும்
உவந்தலர் சூட்டி உண்மகிழ் துரைத்தலும்
கண்டோ ரயிர்த்தலும் காதலின் விலக்கலும்
தம்பதி அணிமை சாற்றலும் தலைவன்
தன்பதி அடைந்தமை தலைவிக் குணர்த்தலும்
என்றிவை ஒன்பதிற் றிருவகைக் கிளவியும்
ஒன்றிய அன்பின் உடன்போக்கு விரியே. (நூ;182)

கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை

செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் தேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே. (நூ;183)

செவிலி புலம்பல்

செவிலி புலம்பல்

வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
இனைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலும்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலும்
தெய்வம் வாழ்த்தலும் இவ்வொரு மூன்றும்
இலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய. (நூ;184)

நற்றாய் புலம்பல்

செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடும்
அயலார் தம்மொடும் பயிலிடந் தம்மொடும்
தாங்கல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற் குரிய. (நூ;185)

அனைமருட்சி

நிமித்தம் போற்றலும் சுரந்தணி வித்தலும்
தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கலும்
இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலும்
அச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலும்
எனவிவை ஐந்துமனை மருட்சிக் குரிய. (நூ;186)

கண்டோர் இரங்கல்

ஆயமும் தாயும் அழுங்கக் கண்டோர்
காதலின் இரங்கல் கண்டோ ரிரக்கம் (நூ;187)

செவிலி பின்தேடிச் செல்லல்

ஆற்றாத் தாயைத் தேற்றலும் ஆற்றிடை
முக்கோற் பகவரை வினாதலும் மிக்கோர்
ஏதுக் காட்டலும் எயிற்றியொடு புலம்பலும்
குரவொடு புலம்பலும் சுவடுகண் டிரங்கலும்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலும்அவர்
புலம்பல் தேற்றலும் புதல்வியைக் காணாது
கவலைகூர் தலும்எனும் இவையொன் பானும்
செவிலிபின் தேடிச் சேறற் குரிய. (நூ;188)

மீட்சி

தெளித்தல் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே. (நூ;190)

மீட்சியின் விரி

தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலும்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலும்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலும் ஆங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் ஆங்கவர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலும் நற்றாய் கேட்டவண்
உளங்கோள வேலனை வினாதலும் எனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே. (நூ;191)

களவியற் காரிகை

உற்ற நெறிகை யடைசுரத்
துய்த்தல் சுரத்துமையோர்
பற்றி விருந்து விலக்கல்
பதியின் அளவுரைத்தல்
சிற்றிடைத் தோழிதன் னைவினா
விச்செ விலியிரங்கல்
நற்றரு வேயனை யாண்மென்மை
கூறனற் றுறாய்க்குரைப்பே (நூ;51)

நற்றா யிரங்கனற் செஞ்சுடர்
தன்னைப் பரவனண்ணிப்
பெற்றாள் கருமா மகளுக்
குரைத்தல்பின் சேறல்சுரத்
துற்றா ளிரங்கல் புறவோ
டுரைத்த லடிச்சுவட்டைச்
சுற்றா லுரைத்தல் சுரத்து
வினாதல் துடியிடையே (நூ;52)

துடியா ரிடையாட்கை யங்கிளத்
தல்சேர் விடஞ்சொல்லுதல்
தொடியார் செவிலியை யாற்றல்
துடரகந் தான்றணித்தல்
வடியார் வரவது முந்துறுப்
பேய்ந்த கிளைமகிழ்ச்சி
யடியான வேலன் றனைவினா
வீன்றாட் புகழ்வதுவே (நூ;53)

வேட்டான் மணங்கண் டுரைத்தலக்
கற்பு நிலைவிளம்பல் (நூ;54)

இலக்கண விளக்கம்

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை

போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவி வெளிப்படு தொகையே. (நூ;534)

உடன்போக்கின் வகை

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த நேற்றலென்
றியாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே (நூ;535)

உடன்போக்கின் விரி

பாங்கி தலைவற்கு குடன்போக் குணர்த்தலு
மாங்கவன் மறுத்தலு மவளுடன் படுத்தலுந்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலுந் தலைவி
நாணழி பிரங்கலுந் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலுந் தலைவி
யொருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்திய லுரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலும்
அவன்சுரத் துய்த்தலு மசைவறிந் திருத்தலு
முவந்தலர் சூட்டி யுண்மகிழ்ந் துரைத்தலுங்
கண்டோ ரயிர்த்தலுங் காதலின் விலக்கலுந்
தன்பதி யணுமை சாற்றலுந் தலைவன்
றன்பதி யடைந்தமை தலைவிக் குணர்த்தலு
மென்றிவை யொன்பதிற் றிருவகைக் கிளவியு
மொன்றிய வன்பி னுடன்போக்கு விரியே (நூ;536)

கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை

செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கஞ்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கவ்வையை வகைத்தே. (நூ;537)

கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரி

வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
யினைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலுந்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலுந்
தெய்வம் வாழ்த்தலு மிவ்வொரு மூன்றுஞ்
செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையில்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடு
மயலார் தம்மொடும் பயிலிடந் தன்னொடுந்
தாங்கல ளாகிச் சாற்றிய நான்கு
நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலுந்
தன்மகண் மென்மைத் தன்மைக் கிரங்கலு
மிளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலு
மச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலு
மாகிய வைந்தும் போகிய விறைமக
ளாயமுந் தாயு மழுங்கக் கண்டு
காதலி னிரங்குங் கண்டோ ரிரக்கமு
மாற்றாத் தாயைத் தேற்றலு மாற்றிடை

முக்கோற் பகவரை வினாதலு மிக்கோ
ரேதுக் காட்டலு மெயிற்றியொடு புலம்பலுங்
குரவொடு புலம்பலுஞ் சுவடுகண் டிரங்கலுங்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலுமவர்
புலம்ப றேற்றலும் புதல்வியைக் காணாது
கவலைகூர் தலுமெனு மிவையொன் பானுமென்
றித்திற மியம்பிய வெழுமூன்று மொன்றுங்
கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரியே. (நூ;538)

மீட்சியின் வகை

தெளித்தன் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே. (நூ;539)

மீட்சியின் விரி

தலைவிசே ணகன்றமை செவிலித்தாய்க் குணர்த்தலுந்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலுந்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலு மாங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் பாங்கியர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலு நற்றாய் கேட்டவ
னுளங்கொள வேலனை வினாதலு மெனவுடன்
விளம்பிய விருமூன்று மீட்சியின் விரியே. (நூ;540)

முத்துவீரியம்

பருவங் கூறலும் படைத்து மொழிதலும்
மருவமர் கோதையை மகட்பேச் சுரைத்தலும்

பொன்னணி வுரைத்தலும் பொருள்விலை கூறலும்
அன்னமென் னடையா ளருமைகேட் டழிதலும்
தளர்வறிந் துரைத்தலுந் தாழ்குழ லாடன்
உளநினை வுரைத்தலு முடன்கொண்டு சேறலுக்
கருமை யுரைத்தலு மாதரங் கூறலும்
மருவிய தடங்கயல் வாழா ளென்றலும்
பொருவரு கற்பின் புனைநல னுரைத்தலும்
துணிந்தமை கூறலுந் துணிவு கேட்டலும்
துணிவறி வித்தலுந் தொல்லைநாண் விடலும்
துணிவெடுத் துரைத்தல் கொண்டகலென வுரைத்தலும்
அடிவழி நினைந்துநின் றவனுளம் வாடலும்
கொடியிடை யாளைக் கொண்டுசென் றுய்த்தலும்
ஓம்படுத் துரைத்தலும் வழிப்படுத் துரைத்தலும்
தேம்படு கோதையைத் திறலடு வேலோன்
பையக்கொண் டேகலும் பயங்கெட வுரைத்தலும்
மையமர் கண்ணியை வழியயர் வகற்றலும்
நெறிநனி விலக்கலும் நெறியிடைக் கண்டவர்
செறிவெடுத் துரைத்தலுஞ் சேயிழை யாளுடன்
வழிவிளை யாடலும் வழியெதிர் வருவோர்
எழினக ரணிமை யிதுவென வுரைத்தலும்
நகரங் காட்டலு நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தலும் பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்டலும்
அறத்தொடு நிற்றலு மதுகேட் டழுங்கலும்
திறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்தலும்
அடிநினைந் திரங்கலு மதுதாய்க் குரைத்தலும்
மரவடல் போகவா டியுரைத்தலும்
கிளிமொழிக் கிரங்கலு கிளர்சுடர்ப் பராய்தலும்
அளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்தலும்
நாடத் துணிதலு நற்றாய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தலும்
சோதிடங் கேட்டலுஞ் சுவடுகண் டறிதலும்

ஏதமுற் றவைகண் டிரங்கி யுரைத்தலும்
வேட்ட மாதரைக் கண்டு வினாவலும்
புறவொடு புலத்தலுங் குரவொடு வருந்தலும்
திறலருந் தவத்தொடு செல்லா நின்ற
மாவிர தியரை வழியிடை வினாவலும்
வேதியர் தம்மை விரும்பி வினாதலும்
புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவலும்
மணந்தரு குழலாள் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்தலும்
ஆங்கவ ரியைபணி யவட்கெடுத் துரைத்தலும்
மீள வுரைத்தலு மீளா தவளுக்
கூழ்முறை யிதுவென வுலகியல் புரைத்தலும்
அழுங்குதாய்க் குரைத்தலு மாகிய வெல்லாம்
உழுங்கொலை வேலோ னுடன்போக்கு விரியே (நூ;850)

சுவாமிநாதம்

இறைதவிரும் போக்கேகற் பொடுபுணர்ந்த கவ்வை
மீட்சிஎன வேதொகை மூன்றாம் உடன்போய் வரைவே (நூ;110)

போக்குஉணர்த்தல் நேராமை நேர்வித்தல் நேர்தல்
போக்கல், விலக்குதல், புகழ்தேறுஏற்றல், எட்டுவகைத்தாய்த்
தூக்குசகி இறைக்குஉடன்போக் குஉணர்த்தல் அவன்மறுத்தல்
தோழிஉடன் படுத்தல், உடன் படுத்தல் அவட்கு உணர்த்தல்

ஏற்கும்நாண் அழிபுஇரங்கல் கற்புஉயர்ச்சி கூறல்
இசைந்து, எழுதல் சுரத்துஇயல்பு சொல், இறைவி மறுத்தல்
ஆக்குறுகை யடைகொடுத்தல், வைகிருளில் விடுத்தல்
அவன்சுரத்தின் உய்த்தல்அசைவு அறிந்திருத்தல் உடனே. (நூ;111)

உடன்கலந்துபூச் சூட்டிமகிழ்ந்து உரைத்தல் அதைக்கண்டோர்
அயிர்த்தல்அவர் விலக்கல்பதி அணிமை சொலல், ஊர்
அடைந்தமைகூ றுதல், பத்தொன் பானும் உடன்போக்காம்.

அணிசெவிலி புலம்பல்,நற் றாய்புலம்பல் மனைமருட்சி
இடுங்கண்டோர் மொழி,செவிலி பின்தேடிச் சேறல்
என்றுஐந்தாய்ச் செவிலிபாங்கி யைவினவல்; பாங்கி
மடந்தைபோக்கு உணர்த்தல் தேற்றினர்க்கு எதிர்சொற்று அழுங்கல்
வருசெவிலி அறிவின்மை சொலல், தெய்வந் தொழலே. (நூ;112)

தொழுசெவிலி நற்றாய்க்குச் சொல்லநற்றாய் இரங்கல்
தோழியாரட் டம்அயலார் தோழியொடும் புலம்பல்
அழுசகிபாற் புலம்பு(ல்)நிமித் தம்போற்றல் சுரத்தை
ஆற்றுவித்தல் தன்மகள்மென் மைத்தன்மைக்கு இரங்கல்
எழில் இளமைக்கு இரங்கல் அச்சமதற்கு இரங்கல் கண்டோர்
இரங்கல் ஆற்றாத் தாயைச் செவிலிதேற் றுதல்பின்
னுழிநடத்தல் வழியின்முக் கோற்பகவரை வினாதல்
மற்றுஏது காட்டல் எயிற் றியைவினா வுதலே. (நூ;113)

வினையில்குர வொடுபுலம்பல் சுவட்டினைக்கண் டிரங்கல்
மேற்கலந்து வருவோரை வினவல், அவர் தேற்றல்
அனைமகட்கா ணாதுதுன்பம் உறல்இருபத் தெட்டும்
அறிந்திடுகற் பொடுபுணர்ந்த கவ்வையாம்; தெளிதல்
தனிமகிழ்ச்சி வினவல்செப் பல்நால்வகைத்தாய்ச்; செவிலி
தலைவிசேண் அகன்றமைதாய்க்கு உணர்த்தல் நம்மூர்ச் சார்ந்தோம்
என இறைவிக்கு இறைசொலல்தம் வரவுமுன் செல்வோரோடு
இகுளையர்க்கே சொலிவிடுத்தல் அவள் அவர்க்கு ஓதுதலே
(நூ;114)

ஓதுபாங்கியர் நற்றாய்க்குஉணர்த் தல்நற்றாய் இறைவன்
உளங்கொள்வே லனைவினவல், ஆறும்மீட் சியதாம். (நூ;115)

பின்னிணைப்பு -2

இற்செறித்தல் துறைப்பாடல்கள்

1. அலரச்சத்தாற் தோழி சிறைப்புறமாகக் காப்புமிகுதி சொல்லியது, நற்;11;63.

2. இரவுக்குறிக்கண் இற்செறிப்பு உணர்த்தி வரைவு கடாயது, குறுந்;244.

3. இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப்பறிவுறீஇயது, குறுந்;335.

4. இற்செறித்த பின்னர்த் தோழி வரைவு கடாவுழிமுதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்றாற்கு அவள் சொல்லியது, ஐங்;289.

5. இற்செறிப்பான் அறிந்து ஆற்றாளாகி நின்ற தலைமகள் ஆற்றவேண்டி உலகியல் மேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறியாரெனச் சொல்லியது, நற்; 372.

6. இற்செறிப்பாள் எனக்கூறி வரைவுகடாயது, நற்;317,368.

7. செறிப்பறிவுறீஇ இரவும் பகலும் வாரலென்று வரைவு கடாயது, அகம்;118, குறுந்;324.

8. தலைமகனைச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது, குறுந்;342.

9. தலைவன் சிறைப்புறமாக உழவற்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பறிவுறீஇயது, நற்;60.

10. தலைவன் சிறைப்புறமாகத் தினைக்குச் சொல்லுவாளாய்ச் செறிப்பறிவுறீஇயது, நற்;251.

11. தோழி காப்பு மிகுதிக்கண் தலைமகட்கு உரைந்தது, நற்;132,267, குறுந்;166.

12. தோழி கிளிமேல் வைத்துச் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது, நற்;376.

13. தோழி சிறைப்புறமாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ப் புனம் அழிவுரைத்துச் செறிப்பறிவுறீஇயது, நற்;259,313.

14. தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ப் புனமழிவுரைத்துச் செறிப்பறிவுறீஇயது, நற்;306.

15. பகற்குறிக்கண் தோழி செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது, நற்;253,258,295,354, குறுந்;294,303, ஐங்;186, அகம்; 2,60,90,288.

16. பகற்குறிக்கண் மனைக்கண் நிகழ்ந்தது கூறிச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது, ஐங்;194.
17. பகற்குறியும், இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவு கடாயது, குறுந்;353, நற்;263.

18. தோழி சிறைப்புறமாகத் தலைவிக்கு உரைப்பாளாய்ச் சொல்லியது, நற்;72,61.

19. தோழி தலைமகன் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுப்பான் வேண்டிச் சொல்லியது, நற்;191.

20. செறிப்பறி வுறீஇயது, நற்;373.

21. சிறைப்புறமாகத் தோழி தலைவிக்குரைப்பாளாய்ச் செறிப்பறிவுறீஇயது, நற்;68.

22. தோழி, தலைமகனைச் செறிப்பறிவுறீஇ இரவுக்குறி மறுத்தது, அகம்;192.

23. இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது, அகம்;242,248,272.

24. பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது, அகம்;358,368,302.

25. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது, அகம்;252.

26. வரைவு நீட்டிப்பத் தோழி சிறைப்புறமாகச் சொல்லியது, நற்;153.

27. சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇ வரைவுகடாயது, நற்;57,282.

28. சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறீஇயது, நற்;27,119,178,194.

29. இற்செறிப்பிற் பிற்றைஞான்று தலைமகன் குறியிடத்து வந்து சொல்லியது, நற்;44.

30. காப்பு மிகுதிக்கண் ஆற்றானாகிய தலைமகன் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது, நற்;319.

31. தோழி தலைமகன் வரவுணர்ந்து சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது, நற்;222.

32. சிறைப்புறமாகத் தலைவன் கேட்பச் சொல்லியது, நற்;339.

33. காப்புக் கைமிக்க காலத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉமாம், நற்;379, குறுந்;57.

34. சிறைப்புறமாகத் தோழி சொல்லியது, நற்;147,175.

35. வரைவுநீட்டிப்பத் தலைமகளாற்றாமையறிந்த தோழி சிறைப்புறமாகச் சொல்லி வரைவுகடாயது, நற்;182.

36. தலைமகன் சிறைப்புறத்தானாகாத் தோழி சொல்லியது, நற்;206,344.

37. இற்செறிப்பாரென ஆற்றாளாய தலைவியை அஃதிலர் என்பதுபடத் தோழி சொல்லியது, நற்;134.

38. பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு, இரவுக்குறி வாரா வரைவல் என்றாற்கு, அதுவும் மறுத்து வரைவு கடாயது, அகம்;12.

39. பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது, அகம்;20.

40. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது, அகம்;28, நற்;122.

41. இரவுக்குறி வந்த தலைமகனை யெதிர்பட்டு நின்று தோழி சொல்லி வரைவு கடாயது, அகம்;112.

42. பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை இடத்துாய்த்து வந்து, செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது, அகம்;150.

43. காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் சொல்லியது, நற்;287, கலி;123, குறுந்;305,306,401.

44. பகற்குறிவந் தொழுகா நின்றகாலத்துத் தலைமகன் கேட்பச் சொல்லியது, நற்;389.

45. வரையாது வந்து ஒழுகுந் தலைவற்குத் தோழி தலைவியாற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையுங் கூறி வரைவுகடாயது, கலி;48.

46. இற்செறித்த விடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு, இது தெய்வத்தினால் ஆயிற்று," என்று தமர் வெறியெடுப்புழி. அதனை விலக்கக் கருதிய தோழி செவிலிக்கு அறத்தொடுநின்றது, ஐங்;28,210,241.

47. வரையாது ஒழுகும் தலைமகன் இரவுக்குறி வந்துழித் தோழி சொல்லியது, ஐங்;60, நற்;292.

48. முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறிநாற்றத்தால் பண்டையளவன்றி வண்டுகள் மொய்த்தனவாக, "இதற்குக் காரணம் என்ன? என்று வினாவிய செவிலித் தாய்க்குக் கூறுவாள் போன்று தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது, ஐங்;93.

49. இற்செறிப்பாரெனக் கேட்ட தலைமகள் வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது, ஐங்;111,115,224.

50. கேட்ப நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இதுவெனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது, ஐங்;113.

51. வரையாது வந்தொழுகும் தலைமகனைப் பகற்குறிக்கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது, ஐங்;264,277.

52. இற்செறித்த பின்னர்த் தோழி வரைவுகடாவுழி முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்றாற்கு அவள் சொல்லியது, ஐங்;289.

53. தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தது, குறுந்;159.

54. இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்பு மிகுதியான் எதிர்ப்படப் பெறாத தலைமகள், பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது, குறுந்;161,141.

55. காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது, குறுந்;166, நற்;132.

56. தோழி செறிப்பறி வுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது, குறுந்;199.

57. பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி இனிப்புனம் காவற்கு வாரேம் எனக் கூறி வரைவு கடாயது, ஐங்; 260, 290.

58. பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை என்னை யாற்றுவிக்குமென்றாகாதோ எம்பெருமான் கவலாது செல்வது யான் ஆற்றுவிக்கும் இடத்துக் கவன்றால் நீ ஆற்றுவியெனச் சொல்லியது நற் ;363

59. வரைவிடைக் கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறமாக தோழி சொல்லியது,குறுந் ;392

அட்டவணை:1
இற்செறித்தலைப் பாடிய புலவர் வகைப்பாடு

வ.எ.	ஆண்பாற் புலவர்கள்	பெண்பாற் புலவர்கள்
1.	அஞ்சியாந்தையார்	1. ஔவையார்
2.	அம்மூவனார்	
3.	அண்டர்மகன் குறுவழுதியார்	2. கழார்க் கீரனெயிற்றியார்
4.	இருந்தையூர்க் கொற்றன்புலவனார்	
5.	இளம்போதியார்	3. குப்பைக் கோழியார்
6.	இளவெயினனார்	
7.	உலோச்சனார்	4. நக்கண்ணையார்
8.	உரோடோகத்துக் கந்தரத்தனார்	
9.	உறையூர் முதுகூற்றனார்	
10.	ஐயூர் முடவனார்	
11.	ஓரம்போகியார்	
12.	கண்ணனார்	
13.	கபிலர்	
14.	கவைமகனார்	
15.	காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்	
16.	காவிரிப்பூம்பட்டிச் செங்கண்ணனார்	
17.	குடவாயிற் கீரத்தனார்	
18.	கூடலூர் கிழார்	
19.	கொள்ளம்பக்கனார்	
20.	கொற்றங்கொற்றனார்	
21.	சிறுமோலிகனார்	
22.	சிறைக்குடி ஆந்தையார்	
23.	சீத்தலைச் சாத்தனார்	
24.	செங்கண்ணனார்	
25.	தங்கால் பொன்கொல்லன் வெண்ணாகனார்	
26.	தும்பிசேர் கீரனார்	
27.	தூங்கலோரியார்	

வ.எ.	ஆண்பாற் புலவர்கள்	பெண்பாற் புலவர்கள்
28.	நக்கீரர்	
29.	நல்லந்துவனார்	
30.	நல்லூர் சிறுமேதவியார்	
31.	நல்வேட்டனார்	
32.	நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்	
33.	பரணர்	
34.	பாண்டியன் அறிவுடைநம்பி	
35.	பிரான்சாத்தனார்	
36.	பெருங்குன்றூர்கிழார்	
37.	பெருங்கௌசிகனார்	
38.	பேரிசாத்தனார்	
39.	பொதும்பில்கிழார்	
40.	பொதும்பில்கிழான் வெண்கண்ணனார்	
41.	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	
42.	மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார்	
43.	மதுரைப் பெருங்கொல்லனார்	
44.	மதுரைப் பெருமருதனிளநாகனார்	
45.	மதுரை மருதனிளநாகனார்	
46.	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	
47.	விற்றூற்று மூதெயினனார்	
48.	வினைத்தொழிற் சோகீரனார்	

அட்டவணை: 2 – திணையும் இற்செறித்தலும்

வ.எண்.	நூ.பெ	பா. எ	குறிஞ்சி	மருதம்	நெய்தல்
1.	நற்	11			√
2.	"	27			√
3.	"	44	√		
4.	"	53	√		
5.	"	57	√		
6.	"	60		√	
7.	"	61	√		
8.	"	63			√
9.	"	68	√		
10.	"	72			√
11.	"	119	√		
12.	"	122	√		
13.	"	132			√
14.	“	134	√		
15.	"	147	√		
16.	"	175			√
17.	"	178			√
18.	"	182	√		
19.	"	191			√
20.	"	194	√		
21.	"	206	√		
22.	"	222	√		
23.	"	223			√
24.	"	251	√		
25.	"	253	√		
26.	"	258			√
27.	"	259	√		
28.	“	263			√
29.	"	267	√		
30.	"	282	√		
31.	"	287			√
32.	"	295			√
33.	"	306	√		
34.	"	313	√		
35.	"	317	√		
36.	"	319			√
37.	"	339	√		
38.	"	344	√		
39.	"	354			√
40.	"	363			√

வ.எண்.	நூ.பெ	பா.எ	குறிஞ்சி	மருதம்	நெய்தல்
41.	“	368	√		
42.	"	372			√
43.	"	373	√		
44.	"	376	√		
45.	"	379	√		
46.	"	389	√		
47.	குறுந்	57			√
48.	"	141	√		
49.	"	159	√		
50.	"	161	√		
51.	"	166			√
52.	"	199	√		
53.	"	244	√		
54.	"	246			√
55.	"	261	√		
56.	"	292	√		
57.	"	294			√
58.	"	303			√
59.	"	305		√	
60.	"	306			√
61.	"	324			√
62.	"	335	√		
63.	"	342	√		
64.	"	353	√		
65.	"	392	√		
66.	"	401			√
67.	ஐங்	28		√	
68.	“	60		√	
69.	“	93		√	
70.	"	111			√
71.	"	113			√
72.	"	115			√
73.	"	186			√
74.	"	194			√
75.	"	210	√		
76.	"	224	√		
77.	"	241	√		
78.	"	260	√		
79.	"	264	√		
80.	"	277	√		
81.	“	289	√		
82.	கலி	48	√		

வ.எண்.	நூபெ	பா எ	குறிஞ்சி	மருதம்	நெய்தல்
83.	கலி	123			√
84.	அகம்	2	√		
85.	"	12	√		
86.	‘‘	20			√
87.	"	28	√		
88.	"	60			√
89.	"	90			√
90.	"	112	√		
91.	"	118	√		
92.	"	150			√
93.	"	192	√		
94.	"	242	√		
95.	"	248	√		
96.	"	252	√		
97.	"	272	√		
98.	"	288	√		
99.	"	302	√		
100.	"	358	√		
101.	"	368	√		

குறிஞ்சி = 61, மருதம் =5, நெய்தல் = 35

அட்டவணை:3 –கூற்றும் இற்செறித்தலும் :

வ.எண்.	நூ.பெ	பா.எ	கூற்று	கேட்போர்
1.	நற்	11	தோழி	தலைவி
2.	"	27	"	தலைவன்
3.	"	44	தலைவன்	நெஞ்சம்
4.	"	53	தோழி	தலைவி
5.	"	57	"	தலைவன்
6.	"	60	"	உழவர்
7.	"	61	"	தலைவி
8.	"	63	"	தலைவன்
9.	"	68	"	தலைவி
10.	"	72	"	"
11.	"	119	"	தலைவன்
12.	"	122	"	தலைவி
13.	"	132	"	"
14.	"	134	"	"
15.	"	147	"	"
16.	"	175	"	"
17.	"	178	"	"
18.	"	182	"	"
19.	"	191	தோழி	தலைவன்
20.	"	194	"	"
21.	"	206	"	தலைவி
22.	"	222	"	தலைவன்
23.	"	223	"	"
24.	"	251	"	"
25.	"	253	"	"
26.	"	258	"	"
27.	"	259	"	தலைவி
28.	"	263	"	"
29.	"	267	"	தலைவன்
30.	"	282	"	தலைவி
31.	"	287	தலைவி	நெஞ்சம்
32.	"	295	தோழி	தலைவன்
33.	"	306	"	"
34.	"	313	"	தலைவி
35.	"	317	"	தலைவன்
36.	"	319	தலைவன்	நெஞ்சம்
37.	"	339	தோழி	தலைவி
38.	"	344	"	"
39.	"	354	"	தலைவன்
40.	"	363	"	"
41.	"	368	"	"
42.	"	372	"	தலைவி
43.	"	373	"	"
44.	"	376	"	கிளி

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	கூற்று	கேட்போர்
45.	நற்	379	தலைவி	தோழி
46.	"	389	தோழி	தலைவி
47.	குறுந்	57	தலைவி	தோழி
48.	"	141	"	"
49.	"	159	தோழி	தலைவி
50.	"	161	தலைவி	தோழி
51.	"	166	தோழி	தலைவி
52.	"	199	தலைவன்	நெஞ்சம்
53.	"	244	தோழி	தலைவன்
54.	"	246	தலைவி	தோழி
55.	"	261	"	"
56.	"	292	தோழி	தலைவி
57.	"	294	"	தலைவன்
58.	"	303	"	"
59.	"	305	தலைவி	நெஞ்சம்
60.	"	306	"	"
61.	"	324	தோழி	தலைவன்
62.	"	335	"	"
63.	"	342	"	"
64.	"	353	தோழி	தலைவி
65.	"	392	தோழி	வண்டு
66.	"	401	தலைவி	நெஞ்சம்
67.	ஐங்	28	தோழி	செவிலி
68.	"	60	"	தலைவன்
69.	"	93	"	செவிலி
70.	"	111	தலைவி	தோழி
71.	"	113	"	"
72.	"	115	"	"
73.	"	186	தோழி	தலைவன்
74.	"	194	"	"
75.	"	210	தோழி	செவிலி
76.	"	224	தலைவி	தோழி
77.	"	241	தோழி	தலைவி
78.	"	260	"	தலைவன்
79.	"	264	"	"
80.	"	277	"	"
81.	"	289	"	"
82.	கலி	48	"	"
83.	"	123	தலைவி	நெஞ்சம்
84.	அகம்	2	தோழி	தலைவன்
85.	"	12	"	"
86.	"	20	"	தலைவி
87.	"	28	"	"
88.	"	60	"	தலைவன்
89.	"	90	"	"

வ.எண்.	நூ.பெ	பா. எ	கூற்று	கேட்போர்
90.	அகம்	112	தோழி	தலைவன்
91.	"	118	தோழி	தலைவன்
92.	"	150	‘‘	‘‘
93.	"	192	‘‘	‘‘
94.	"	242	‘‘	தலைவி
95.	"	248	‘‘	‘‘
96.	"	252	தலைவி	தோழி
97.	"	272	தோழி	தலைவி
98.	"	288	‘‘	தலைவன்
99.	"	302	‘‘	தலைவி
100.	"	358	‘‘	‘‘
101.	"	368	‘‘	‘‘

தலைவி = 16, தோழி =82, தலைவன்=3.

அட்டவணை:4
இற்செறித்தல் துறையில் பாடிய புலவர்கள்

கபிலர் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	222	குறிஞ்சி	தோழி
2.	"	253	"	"
3.	"	267	"	"
4.	"	368	"	"
5.	"	373	"	"
6.	"	376	"	"
7.	குறுந்	246	நெய்தல்	தலைவி
8.	ஐங்	210	குறிஞ்சி	தோழி
9.	"	224	"	தலைவி
10.	"	241	"	தோழி
11.	"	260	"	"
12.	"	264	"	"
13.	"	277	"	"
14.	"	289	"	"
15.	கலி	48	"	"
16.	அகம்	2	"	"
17.	"	12	"	"
18.	"	118	"	"
19.	"	248	"	"

உலோச்சனார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	11	நெய்தல்	தோழி
2.	"	63	"	தோழி
3.	"	191	"	"
4.	"	223	"	"
5.	"	287	"	தலைவி
6.	"	354	"	தோழி
7.	"	363	"	"
8.	"	372	"	"
9.	அகம்	20	"	"

அம்மூவனார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	குறுந்	303	நெய்தல்	தோழி
2.	"	306	"	தலைவி
3.	"	401	"	"
4.	ஐங்	111	"	"
5.	"	113	"	"
6.	"	115	"	"
7.	"	186	"	தோழி
8.	"	194	"	"

ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	132	நெய்தல்	தோழி
2.	"	134	குறிஞ்சி	தோழி
3.	"	175	நெய்தல்	"
4.	"	178	"	"
5.	"	182	குறிஞ்சி	"

மதுரை மருதனிளநாகனார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	194	குறிஞ்சி	தோழி
2.	அகம்	90	நெய்தல்	தோழி
3.	"	358	குறிஞ்சி	"
4.	"	368	"	"

ஓரம்போகியார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	ஐங்	28	மருதம்	தோழி
2.	"	60	"	"
3.	"	93	"	"

குடவாயிற் கீரத்தனார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	27	நெய்தல்	தோழி
2.	"	379	குறிஞ்சி	தலைவி
3.	அகம்	60	நெய்தல்	தோழி

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	344	குறிஞ்சி	தோழி
2.	அகம்	272	"	தோழி
3.	"	302	"	"

நக்கீரர் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	நற்	258	நெய்தல்	தோழி
2.	குறுந்	161	குறிஞ்சி	தலைவி

பரணர் பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	குறுந்	199	குறிஞ்சி	தலைவன்
2.	"	292	குறிஞ்சி	தோழி

நற்றிணையில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

வ.எண்.	ஆ.பெயர்	பா.எண்	திணை	கூற்று
1.	இளம்போதியார்	72	நெய்தல்	தோழி
2.	இளவெயினனார்	263	"	தோழி
3.	உரோடோகத்துக் கந்தரத்தனார்	306	குறிஞ்சி	"
4.	ஐயூர் முடவனார்	206	"	"
5.	ஔவையார்	295	நெய்தல்	"
6.	காவிரிப்பூட்பட்டினத்துச் செங்கண்ணனார்	389	குறிஞ்சி	"
7.	கொள்ளம்பக்கனார்	147	"	"

வ.எண்.	ஆ.பெயர்	பா.எண்	திணை	கூற்று
8.	கொற்றங்கொற்றனார்	259	"	"
9.	சிறுமோலிகனார்	61	"	"
10.	சீத்தலைச்சாத்தனார்	339	"	"
11.	செங்கண்ணனார்	122	குறிஞ்சி	"
12.	தங்கால் பொன்கொல்லன் வெண்ணாகனார்	313	குறிஞ்சி	"
13.	தூங்கலோரியார்	60	மருதம்	"
14.	நல்லூர் சிறுமேதாவியார்	282	குறிஞ்சி	"
15.	நல்வேட்டனார்	53	"	"
16.	பிரான்சாத்தனார்	68	"	"
17.	பெருங்குன்றூர்கிழார்	119	"	"
18.	பெருங்கௌசிகனார்	44	"	தலைவன்
19.	பொதும்பில்கிழார்	57	"	தோழி
20.	மதுரைப் பூவண்டனாகன் வேட்டனார்	317	"	
21.	மதுரைப் பெருமருதனிள -நாகனார்	251	"	"
22.	வினைத்தொழிற் சோகீரனார்	319	நெய்தல்	தலைவன்

குறுந்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

வ.எண்.	ஆ.பெயர்	பா. எண்	திணை	கூற்று
1.	அஞ்சியாந்தையார்	294	நெய்தல்	தோழி
2.	இருந்தையூர்க் கொற்றன் புலவனார்	335	குறிஞ்சி	தோழி
3.	உறையூர் முதுகூற்றனார்	353	"	"
4.	கண்ணனார்	244	"	"
5.	கழார்க் கீரனெயிற்றியார்	261	குறிஞ்சி	தலைவி
6.	கவைமகனார்	324	நெய்தல்	தோழி

வ.எண்.	ஆ.பெயர்	பா.எண்	திணை	கூற்று
7.	காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்	342	குறிஞ்சி	"
8.	குப்பைக் கோழியார்	305	மருதம்	தலைவி
9.	கூடலூர் கிழார்	166	நெய்தல்	தோழி
10.	சிறைக்குடி ஆந்தையார்	57	நெய்தல்	தலைவி
11.	தும்பிசேர் கீரனார்	392	குறிஞ்சி	தோழி
12.	மதுரைப் பெருங்-கொல்லனார்	141	"	தலைவி
13.	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	159	"	தோழி

கலித்தொகையில் ஒருபாடல் பாடிய புலவர்

வ.எண்.	ஆ.பெயர்	பா. எண்	திணை	கூற்று
1.	நல்லந்துவனார்	123	நெய்தல்	தலைவி

அகநானூற்றில் ஒருபாடல் பாடிய புலவர்கள்

வ.எண்.	ஆ.பெயர்	பா. எண்	திணை	கூற்று
1.	அண்டர்மகன்குறுவழுதியார்	150	நெய்தல்	தோழி
2.	நக்கண்ணையார்	252	குறிஞ்சி	தலைவி
3.	நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்கிழார்	112	"	தோழி
4.	பாண்டியன் அறிவுடைநம்பி	28	"	"
5.	பேரிசாத்தனார்	242	குறிஞ்சி	"
6.	பொதும்பில்கிழான் வெண்கண்ணனார்	192	குறிஞ்சி	"
7.	விற்றூற்று மூதெயினனார்	288	"	"

பின்னிணைப்பு-3

உடன்போக்குத் துறைப்பாடல்கள்

1. உடன்போக்கின்கண் இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது, ஐங்;38, நற்;2, குறுந்;7.

2. தலைமகள் இடைச்சுரத்தினது ஊரின்கண் எல்லிடைத் தங்கியவழி அவ்வூர்ப் பெண்டிர் பார்த்து இரங்குதல் கண்டார் சொல்லியது, ஐங்;382.

3. உடன்போகிய தலைமகள் வளைத்த கொம்பிற் பூக்கொண்டு தனக்கும் பாவைக்கும் வகுக்கக் கண்டார் கூறியது, ஐங்;383.

4. உடன்போகிய தலைமகள் ஆண்டு எதிர்வரும் அந்தணர்க்குச் சொல்லியது, ஐங்;384.

5. வரைவு மறுத்துழி உடன்போய தலைமகள் இடைச்சுரத்துக் கண்டாரை, "யான் போகின்ற படியை யாய்க்கு நீர் கூறவேண்டும்" எனச் சொல்லியது, ஐங்;385.

6. புணர்ந்துடன் போகிய தலைமகளை இடைச்சுரத்துக் கண்டார் அவள் தாய்க்குச் சென்று கூறியது, ஐங்;386.

7. பின்சென்ற செவிலியால் வினாவப்பட்ட அந்தணர் அவட்குச் சொல்லியது, ஐங்;387, கலி;9.

8. தேடிச் சென்ற செவிலிக்கு இடைச்சுரத்துக் கண்டார் அவளைக் கண்ட திறம் கூறியது, ஐங்;388,390.

9. பின்சென்ற செவிலித்தாய் வினவப்பட்டோர் கண்டோம் என்புழிச் சொல்லியது, ஐங்;389.

10. தலைமகள் புணர்ந்துடன் போகியவழி நற்றாய் உடன்போக்கு அறநெறி என்று மகிழ்ந்து கூறி அங்ஙனம் கூட்டிய நல்வினையைத் தன்னெஞ்சிற்கு விளக்கிப் புலம்பியது, ஐங்;371.

11. தலைமகள் உடன்போகியவழி நற்றாய் தன் ஒழுக்கத்தால் ஊர் அலரெடுத்து உரைத்தலை நினையாது சென்றவள் என்னையும் உள்ளினள் கொல்லோவெனக் கவன்றுரைத்தது, ஐங்;372.

12. தலைமகளைத் தலைமகன் கொண்டுகழிந்த கொடுமை நினைந்து நற்றாய் சொல்லியது, ஐங்;373.

13. தலைமகள் உடன்போயவழி அவள் இளமை நினைந்து இரங்கித் தாய் கூறியது, ஐங்;374.
14. சேரியும் அயலும் தேடிக் காணாது வந்தாரைக் கண்டு தலைமகள் தாய் சொல்லியது, ஐங்;375.

15. தலைமகள் போயவழி நற்றாய் விதியை வெகுண்டு சொல்லியது, ஐங்;376.

16. தலைமகள் உடன்போயவழி அவள் பந்து முதலாகிய கண்ட நற்றாய் கலங்கிச் சொல்லியது, ஐங்;377.
தலைமகள் உடன்போயவழி அவள் தோழி ஆற்றாமை கண்ட நற்றாய் சொல்லியது, ஐங்;378.

17. தலைமகள் உடன்போகியவழித் தெருட்டுவார்க்குச் செவிலித்தாய் கூறியது, ஐங்;380.

18. புணர்ந்துடன் போகியவழித் தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட நற்றாய் அதனை முன்னே அறிவித்து நாம் மணம்புணர்த்த ஒழுகாது போயினாள் என நொந்து சொல்லியது, ஐங்;379.

19. புணர்ந்துடன் போகிய தலைமகன் தலைமகளைக் கரணவகையான் வரைந்தானாக, எதிர்சென்ற தோழிக்கு இனி யான் இவளை வரைந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும் என்றானாக அவள் சொல்லியது, ஐங்;280.

20. உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃதொழிந்து தானே வரைவிடைவைத்துப் பிரிய நினைந்ததனைக் குறிப்பினாள் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது, ஐங்;286.

21. உடன்போக் கொழித்துத் தனித்துச் செல்வல் என்ற தலைமகற்குத் தோழி கூறியது, ஐங்;305.

22. உடன்போயின தலைமகள் மீண்டு வந்துழி, நின் ஐயன்மார், பின் துரந்து வந்தவிடத்து நிகழ்ந்தது என்னை?" என்ற தோழிக்கு, நிகழ்ந்தது கூறித் தலைமகன் மறைதற்கு உதவி செய்த மலையை வாழ்த்தியது, ஐங்;312.

23. தலைமகள் புணர்ந்துடன் போகியவழிச் செவிலி ஆற்றாமை கண்ட நற்றாய் அவட்குச் சொல்லியது, ஐங்;313.

24. புணர்ந்துடன் போகிய தலைமகன் இடைச்சுரத்துக்கண் விளையாட்டு வகையால் பூத்தொடுக்கின்ற தலைமகளைக் கண்டு புகழ, அவள் அதற்கு நாணிக் கண்புதைத்தவழிச் சொல்லியது, ஐங்;361.

25. புணர்ந்துடன் செல்கின்ற தலைமகன் இடைச்சுரத்துத் தலைமகளை நலம்பாராட்டியது, ஐங்;363.

26. உடன்போக்கு நயந்த தலைமகன் அதனைத் தோழிக்கு உணர்த்த அவள் முடிப்பாளாய்ச் சொல்லியது, ஐங்;364.

27. உடன்போகா நின்ற தலைமகன் தலைமகட்கு உரைத்தது, நற்; 9,292,362, 76, அகம்;257.
28. உடன்போக்குந் தோழி கையடுத்தது, நற்;10.
29. தோழி உடன்போக்கு அஞ்சுவித்தது, நற்;12.
30. மனைமருட்சி, நற்;66,110,142,179,184,271,293.
31. தோழி தலைவியை உடன்போக்கு வலித்தது, நற்;149.
உடன் போதுவலென்ற தலைவிக்குத் தலைவன் சொற்றது, நற்;162.
32. பின்சென்ற செவிலி இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது, நற்;198.
33. உடன்போகாநின்ற தலைமகன் தலைமகளை வற்புறீஇயது, நற்;264.
34. நற்றாய் தோழிக்குச் சொல்லியது, நற்;305.
35. உடன்போகாநின்றான் மலிந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது, நற்;384.
36. உடன்போக்குத் துணிந்தவழி அதற்கு இரவின்கண் தலைமகன் வந்தது அறிந்த தோழி தலைமகளைப் பாயல் உணர்த்திச் சொல்லியது, ஐங்;200.
37. உடன்போய் மீண்ட தலைமகள் நீ சென்ற நாட்டு நீர் இனிய வல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய் எனக் கேட்ட தோழிக்குச் சொல்லியது, ஐங்;203.
38. உடன்போக்கு நேர்வித்த பின்பு தலைமகன் உடன்கொண்டு போவான் இடையாமத்து வந்துழித் தலைமகட்குத் தோழி சொல்லியது, ஐங்;235.
39. களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம்மெலிவும் உணர்த்தித் தோழி உடன்போக்கு நயந்தாள் போன்று வரைவுகடாயது, ஐங்;236.
40. மகட்போக்கிய தாய் சொல்லியது, அகம்;15,105,195,203,207,219,263,275, 315,383, நற்;29,279.
41. மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது, அகம்;7,17,89,117,145,153,189,321,369,385,397, குறுந்;84,144,356,396.
42. மகட்போக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது, அகம்;35.
43. உடன்போயின தலைமகளை நினைந்து செவிலித்தாய் மனையின்கண் வருந்தியது, அகம்;49.
44. புணர்ந்துடன் போன தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலிலாட்டியர்க்கு உரைத்தது, அகம்;55.

45. தலைமகள் புணர்ந்துடன் செல்லச் செவிலி தன் மகளுக்குச் சொல்லியது, அகம்;63.

46. வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமைத் தோழி சொல்லியது, அகம்;65.

47. போக்குடன்பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது, அகம்;95.

48. உடன்போகிய தலைமகளைத் தலைமகன் மருட்டிச் சொல்லியது, அகம்;99.

49. தோழியால் தலைமகளை உடன்வரும் எனக்கேட்ட தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது, அகம்;121.

50. மகட்போக்கிய தாயது நிலைமை கண்டார் சொல்லியது, அகம்;165.

51. உடன்போக்கு நேர்ந்த தோழி, தலைமகட்குச் சொல்லியது, அகம்;259.

52. உடன்போக்கு வலித்த தோழி தலைமகட்குச் சொல்லியது, அகம்;283.

53. கொண்டு நீங்கக் கருதி யொழிந்த தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது, அகம்;325.

54. புணர்ந்துடன் போயினகாலை இடைச்சுரத்துப்பட்டதனை மீண்டுவந்த காலத்துத் தோழிக்குத் தலைமகன் சொல்லியது, அகம்;261.

55. உடன்போய் வதுவை அயரப்பட்ட தலைவி, தலைவனொடு இன்று வரும் எனக் கேட்ட செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது, ஐங்;400.

56. உடன்கொண்டு போன தலைமகன் தலைவியைத் தன் இல்லத்துக்குக் கொண்டுபுக்குழி அவன்றாய் அவட்குச் சிலம்புகழீஇக் கடன் செய்கின்றாள் எனக் கேட்ட நற்றாய் ஆண்டு நின்றும் வந்தார்க்குச் சொற்றது, ஐங்;399.

57. தலைமகள் மீண்டுவந்துழி அவட்குத் தோழி கூறியது, ஐங்;398.

58. உடன்போய் மீள்கின்ற தலைமகள் தன்னூர்க்குச் செல்கின்றாரைக் கண்டு கூறியது, ஐங்;397.

59. உடன்போய் மீள்கின்ற தலைமகன் தலைமகட்குச் சொல்லியது, ஐங்;395,396.

60. உடன்போய தலைமகள் வந்துழித் தாய் சுற்றத்தார்க்குச் சொல்லியது, ஐங்;394.

61. தலைமகள் உடன்போய் மீண்டு வந்துழி அயலோர் அவள் தாய்க்குச் சொல்லியது, ஐங்;393.

62. உடன்போய் மீண்டு வந்த தலைமகள் வழிவரல் வருத்தம் கண்டு ஆற்றாளாகிய தோழிக்குச் சொல்லியது, ஐங்;392.

63. உடன்போகிய தலைமகள் மீடற்பொருட்டுத் தாய் காகத்திற்குப் பராய்க்கடன் உரைத்தது, ஐங்;391.

64. இடைச்சுரத்துக் கண்டோர் தம்முள்ளே சொல்லியது, குறுந்;229, நற்;324.

65. புணர்ந்துடன் போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுதும் செலவும் பகையுங்காட்டிச் செலவுவிலக்கியது, குறுந்;390.

66. உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது, குறுந்;149.

67. உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள் நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது, குறுந்;15.

68. இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது, குறுந்;44.

69. உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தோழி தலைமகற்குக் கூறியது, குறுந்;115.

70. புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது, குறுந்;124.

71. உடன்போக்கு நயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது, குறுந்;217,343.

72. உடன்போக்கு நேர்ந்த தோழி, கிழத்திக்கு உடன்போக்குணர்த்தியது, குறுந்;262, 369, ஐங்;254, அகம்;221,285.

73. மகட்போக்கிய செவிலி, தெய்வத்திற்குப்பராயது, குறுந்;378.

74. உடன்போக வருந்துந் தலைமகளை நாணுக்கெடச் சொல்லியது, குறுந்;383.

75. தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை உணர்ந்த தலைமகன் சுரத்து வெம்மையும், தலைமகள் மென்மையும் குறித்துச் செலவழுங்களலுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியது, குறுந்;388, ஐங்;303, கலி;20.

அட்டவணை:5 – உடன்போக்கைப் பாடிய புலவர் வகைப்பாடு

வ.எண்.	ஆண்பாற் புலவர்கள்	பெண்பாற் புலவர்கள்
1.	அம்மூவனார்	ஔவையார்
2.	ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்	வெள்ளிவீதியார்
3.	இனிச்சந்தநாகனார்	
4.	ஈழத்துப் பூதன்தேவனார்	
5.	உலோச்சனார்	
6.	உறையூர் மருத்துவன் தாமோதரனார்	
7.	உறையூர் முதுகொற்றன்	
8.	ஒரோடோகத்துக் கந்தரத்தனார்	
9.	ஓதலாந்தையார்	
10.	கண்ணகாரன் கொற்றனார்	
11.	கண்ணம்புல்லனார்	
12.	கபிலர்	
13.	கயமனார்	
14.	கருவூர் கண்ணம்பாளனார்	
15.	காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்	
16.	குடவாயிற் கீர்த்தனார்	
17.	சேந்தம்பூதனார்	
18.	சேரமான் இளங்குட்டுவன்	
19.	தங்கால் முடக்கொல்லனார்	
20.	தாமோதரனார்	
21.	நக்கீரர்	
22.	படுமரத்து மோசிக்கீரனார்	
23.	பூதன் தேவனார்	
24.	பெருங்கடுங்கோ	
25.	பெரும்பதுமனார்	
26.	போதனார்	
27.	மதுரை ஆசிரியன் கோடங் கொற்றனார்	
28.	மருதனிளநாகனார்	

வ.எண்.	ஆண்பாற் புலவர்கள்	பெண்பாற் புலவர்கள்
29.	மாங்குடி மருதனார்	
30.	மாமூலனார்	
31.	மோசிக்கீரனார்	
32.	மோதாசனார்	
33.	வண்ணப்புறக் கந்தரத்தனார்	

அட்டவணை:6

திணையும் உடன்போக்கும்

வ.எண்.	நூ.பெ	பா. எ	குறிஞ்சி	நெய்தல்	பாலை
1.	நற்	2			√
2.	"	9			√
3.	"	10			√
4.	"	12			√
5.	"	29			√
6.	"	66			√
7.	"	76			√
8.	"	110			√
9.	"	143			√
10.	"	149		√	√
11.	"	162			√
12.	"	179			√
13.	"	184			√
14.	“	198			√
15.	"	202			√
16.	"	264			√
17.	"	271			√
18.	"	279			√
19.	"	293			√
20.	"	305			√
21.	"	324			√
22.	"	362			√
23.	"	384			√
24.	குறுந்	7			√
25.	"	15			√
26.	"	44			√
27.	"	84			√
28.	“	115	√		
29.	"	124			√
30.	"	144			√

வ.எண்.	நூ.பெ	பா. எ	குறிஞ்சி	நெய்தல்	பாலை
31.	"	149			√
32.	"	217	√		
33.	"	229			√
34.	"	262			√
35.	"	343			√
36.	"	356			√
37.	"	369			√
38.	"	378			√
39.	"	383			√
40.	"	388			√
41.	“	390			√
42.	"	396			√
43.	ஐங்	200		√	
44.	"	203	√		
45.	"	235	√		
46.	"	236	√		
47.	"	254	√		
48.	"	280	√		
49.	"	286	√		
50.	"	303			√
51.	"	305			√
52.	"	312			√
53.	"	313			√
54.	"	361			√
55.	"	363			√
56.	"	364			√
57.	"	371			√
58.	"	372			√
59.	"	373			√
60.	"	374			√
61.	"	375			√
62.	"	376			√
63.	"	377			√
64.	"	378			√
65.	"	379			√
66.	"	380			√
67.	"	381			√
68.	“	382			√
69.	“	383			√
70.	"	384			√
71.	"	385			√
72.	"	386			√
73.	"	387			√

வ.எண்.	நூ.பெ	பா.எ	குறிஞ்சி	நெய்தல்	பாலை
74.	"	388			√
75.	"	389			√
76.	"	390			√
77.	"	391			√
78.	"	392			√
79.	"	393			√
80.	"	394			√
81.	“	395			√
82.	"	396			√
83.	"	397			√
84.	"	398			√
85.	"	399			√
86.	“	400			√
87.	கலி	9			√
88.	"	20			√
89.	அகம்	7			√
90.	"	15			√
91.	"	17			√
92.	"	35			√
93.	"	49			√
94.	"	55			√
95.	"	63			√
96.	"	65			√
97.	"	89			√
98.	"	95			√
99.	"	99			√
100.	"	105			√
101.	"	117			√
102.	"	121			√
103.	"	145			√
104.	"	153			√
105.	"	165			√
106.	“	189			√
107.	“	195			√
108.	"	203			√
109.	"	207			√
110.	"	219			√
111.	“	221			√
112.	"	257			√
113.	"	259			√
114.	"	261			√
115.	"	263			√
116.	“	275			√

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	குறிஞ்சி	நெய்தல்	பாலை
115.	"	263			√
116.	"	275			√
117.	"	283			√
118.	"	285			√
119.	"	315			√
120.	"	321			√
121.	"	325			√
122.	"	369			√
123.	"	383			√
124.	"	385			√
125.	"	397			√

குறிஞ்சி = 8 , நெய்தல் = 2, பாலை = 115.

அட்டவணை:7

கூற்றும் உடன்போக்கும்

வ.எண்.	நூ.பெ	பா. எ	கூற்று	கேட்போர்
1.	நற்	2	கண்டோர்	நெஞ்சம்
2.	"	9	தலைவன்	தலைவி
3.	"	10	தோழி	தலைவன்
4.	"	12	தோழி	தலைவன்
5.	"	29	நற்றாய்	நெஞ்சம்
6.	"	66	"	"
7.	"	76	தலைவன்	தலைவி
8.	"	110	நற்றாய்	நெஞ்சம்
9.	"	143	"	"
10.	"	149	தோழி	தலைவி
11.	"	162	தலைவன்	தலைவி
12.	"	179	நற்றாய்	நெஞ்சம்
13.	"	184	நற்றாய்	கண்டோர்
14.	"	198	செவிலி	கண்டோர்
15.	"	202	தலைவன்	தலைவி
16.	"	264	தலைவன்	தலைவி
17.	"	271	நற்றாய்	நெஞ்சம்
18.	"	279	நற்றாய்	நெஞ்சம்
19.	"	293	நற்றாய்	நெஞ்சம்
20.	"	305	நற்றாய்	தோழி
21.	"	324	கண்டோர்	நெஞ்சம்
22.	"	362	தலைமகன்	தலைவி
23.	"	384	தலைமகன்	நெஞ்சம்
24.	குறுந்	7	கண்டோர்	நெஞ்சம்

வ.எண்.	நூ.பெ	பா. எ	கூற்று	கேட்போர்
25.	"	15	செவிலி	நற்றாய்
26.	"	44	செவிலி	நெஞ்சம்
27.	"	84	செவிலி	நெஞ்சம்
28.	"	115	தோழி	தலைவன்
29.	"	124	தோழி	தலைவன்
30.	"	144	செவிலி	நெஞ்சம்
31.	"	149	தலைவி	தோழி
32.	"	217	தோழி	தலைவி
33.	"	229	கண்டோர்	நெஞ்சம்
34.	"	262	தோழி	தலைவி
35.	"	343	தோழி	தலைவி
36.	"	356	செவிலி	நெஞ்சம்
37.	"	369	தோழி	தலைவி
38.	"	378	செவிலி	தெய்வம்
39.	"	383	தோழி	தலைவி
40.	"	388	தோழி	தலைவன்
41.	"	390	கண்டோர்	தலைமக்கள்
42.	"	396	செவிலி	நெஞ்சம்
43.	ஐங்	200	தோழி	தலைவி
44.	"	203	தலைவி	தோழி
45.	"	235	தோழி	தலைவி
46.	"	236	தோழி	தலைவன்
47.	"	254	தோழி	தலைவி
48.	"	280	தோழி	தலைவன்
49.	"	286	தலைவி	தோழி
50.	"	303	தோழி	தலைவன்
51.	"	305	தோழி	தலைவன்
52.	"	312	தலைவி	தோழி
53.	"	313	நற்றாய்	செவிலி
54.	"	361	தலைவன்	தலைவி
55.	"	363	தலைவன்	தலைவி
56.	"	364	தோழி	தலைவன்
57.	"	371	நற்றாய்	நெஞ்சம்
58.	"	372	நற்றாய்	நெஞ்சம்
59.	"	373	நற்றாய்	நெஞ்சம்
60.	"	374	நற்றாய்	நெஞ்சம்
61.	"	375	நற்றாய்	அயலோர்
62.	"	376	நற்றாய்	நெஞ்சம்
63.	"	377	நற்றாய்	நெஞ்சம்
64.	"	378	நற்றாய்	தோழி
65.	"	379	நற்றாய்	தோழி
66.	"	380	செவிலி	அயலோர்
67.	"	381	கண்டோர்	தலைமக்கள்
68.	"	382	கண்டோர்	தலைமக்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	கூற்று	கேட்போர்
69.	"	383	கண்டோர்	தலைமக்கள்
70.	"	384	தலைவி	அந்தணர்
71.	"	385	தலைவி	கண்டோர்
72.	"	386	கண்டோர்	நற்றாய்
73.	"	387	அந்தணர்	செவிலி
74.	"	388	கண்டோர்	செவிலி
75.	"	389	செவிலி	கண்டோர்
76.	"	390	கண்டோர்	செவிலி
77.	"	391	நற்றாய்	காக்கை
78.	"	392	தலைவி	தோழி
79.	"	393	அயலோர்	நற்றாய்
80.	"	394	நற்றாய்	சுற்றத்தார்
81.	"	395	தலைவன்	தலைவி
82.	"	396	தலைவன்	தலைவி
83.	"	397	தலைவி	கண்டோர்
84.	"	398	தோழி	தலைவி
85.	"	399	நற்றாய்	தோழி
86.	"	400	செவிரி	நற்றாய்
87.	கலி	9	முக்கோற்பவர்	செவிலி
88.	"	20	தலைவி	தலைவன்
89.	அகம்	7	செவிலி	மான்
90.	"	15	நற்றாய்	நெஞ்சம்
91.	"	17	செவிலி	நெஞ்சம்
92.	அகம்	35	நற்றாய்	தெய்வம்
93.	"	49	செவிலி	நெஞ்சம்
94.	"	55	நற்றாய்	கண்டோர்
95.	"	63	செவிலி	தோழி
96.	"	65	தோழி	தலைவி
97.	"	89	செவிலி	நெஞ்சம்
98.	"	95	தலைவி	தோழி
99.	"	99	தலைவன்	தலைவி
100.	"	105	நற்றாய்	நெஞ்சம்
101.	"	117	செவிலி	நெஞ்சம்
102.	"	121	தலைவன்	நெஞ்சம்
103.	"	145	செவிலி	நெஞ்சம்
104.	"	153	செவிலி	நெஞ்சம்
105.	"	165	கண்டோர்	நெஞ்சம்
106.	"	189	செவிலி	நெஞ்சம்
107.	"	195	நற்றாய்	தெய்வம்
108.	"	203	நற்றாய்	நெஞ்சம்
109.	"	207	நற்றாய்	நெஞ்சம்
110.	"	219	நற்றாய்	நெஞ்சம்
111.	"	221	தோழி	தலைவி
112.	"	257	தலைவன்	தலைவி

வ.எண்.	நூ.பெ	பா. எ	கூற்று	கேட்போர்
113.	"	259	தோழி	தலைவி
114.	"	261	தலைவன்	தோழி
115.	"	263	நற்றாய்	நெஞ்சம்
116.	"	275	நற்றாய்	கண்டோர்
117.	"	283	தோழி	தலைவன்
118.	"	285	தோழி	தலைவி
119.	"	315	நற்றாய்	நெஞ்சம்
120.	"	321	செவிலி	நெஞ்சம்
121.	"	325	தலைவி	தோழி
122.	"	369	செவிலி	நெஞ்சம்
123.	"	383	நற்றாய்	நெஞ்சம்
124.	"	385	செவிலி	நெஞ்சம்
125.	"	397	செவிலி	நெஞ்சம்

தோழி = 25, தலைவி =11, நற்றாய் =35, கண்டோர் =15, செவிலி =24,

தலைவன் = 15.

அட்டவணை:8

உடன்போக்கைப் பாடிய புலவர்களின் பாடல்கள்

ஓதலாந்தையார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூற்பெயர்	பாடல் எண்	திணை	கூற்று
1.	ஐங்	303	பாலை	தோழி
2.	"	305	"	தோழி
3.	"	312	"	தலைவி
4.	"	313	"	நற்றாய்
5.	"	361	"	தலைவன்
6.	"	363	"	தலைவன்
7.	"	364	"	தோழி
8.	"	371	"	நற்றாய்
9.	"	372	"	நற்றாய்
10.	"	373	"	நற்றாய்
11.	"	374	"	நற்றாய்
12.	"	375	"	நற்றாய்
13.	"	376	"	நற்றாய்
14.	"	377	"	நற்றாய்
15.	"	378	"	நற்றாய்
16.	"	379	"	நற்றாய்
17.	"	380	"	செவிலி
18.	"	381	"	கண்டோர்

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
19.	"	382	"	கண்டோர்
20.	"	383	"	கண்டோர்
21.	"	384	"	கண்டோர்
22.	"	385	"	கண்டோர்
23.	"	386	"	கண்டோர்
24.	"	387	"	கண்டோர்
25.	"	388	"	கண்டோர்
26.	"	389	"	கண்டோர்
27.	"	390	"	கண்டோர்
28.	"	391	"	கண்டோர்
29.	"	392	"	கண்டோர்
30.	"	393	"	கண்டோர்
31.	"	394	"	கண்டோர்
32.	"	395	"	தலைவன்
33.	"	396	"	தலைவன்
34.	"	397	"	தலைவி
35.	"	398	"	தோழி
36.	"	399	"	நற்றாய்
37.	"	400	"	செவிலி

கயமனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	நற்	12	பாலை	தோழி
2.	"	198	"	செவிலி
3.	"	279	"	நற்றாய்
4.	"	293	"	நற்றாய்
5.	"	305	"	நற்றாய்
6.	"	324	"	கண்டோர்
7.	குறுந்	356	"	செவிலி
8.	"	378	"	செவிலி
9.	"	396	"	செவிலி
10.	அகம்	7	"	செவிலி
11.	"	17	"	"
12.	"	145	"	"
13.	"	189	"	"
14.	"	195	"	நற்றாய்
15.	"	219	"	நற்றாய்
16.	"	221	"	தோழி
17.	"	259	"	தலைவன்
18.	"	275	"	நற்றாய்
19.	"	321	"	செவிலி

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
20.	"	383	"	நற்றாய்
21.	"	397	"	செவிலி

பெருங்கடுங்கோ பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
1.	நற்	9	பாலை	தலைவன்
2.	"	202	"	தலைவன்
3.	"	384	"	தலைவன்
4.	குறுந்	124	"	தோழி
5.	"	262	"	தோழி
6.	கலி	9	"	முக்கோற்பவர்
7.	"	20	"	தலைவி
8.	அகம்	99	"	தலைவன்
9.	"	261	"	தலைவன்

கபிலர் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
1.	குறுந்	115	குறிஞ்சி	தலைவி
2.	ஐங்	203	"	"
3.	"	235	"	தோழி
4.	"	236	"	தோழி
5.	"	254	"	"
6.	"	280	"	"
7.	"	286	"	தலைவி
8.	அகம்	203	"	தலைவி

ஆசிரியர் பெயர் இல்லாத பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	நற்	10	பாலை	தோழி
2.	"	162	"	தலைவன்
3.	"	179	"	நற்றாய்
4.	"	184	"	நற்றாய்
5.	"	271	"	நற்றாய்
6.	அகம்	117	"	செவிலி
7.	"	165	"	கண்டோர்

மாமூலனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	அகம்	15	பாலை	நற்றாய்
2.	"	55	"	நற்றாய்
3.	"	65	"	தோழி
4.	"	325	"	தலைவி

அம்மூவனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	நற்	76	பாலை	தலைவன்
2.	ஐங்	200	நெய்தல்	தோழி
3.	அகம்	35	பாலை	நற்றாய்

குடவாயிற் கீர்த்தனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
1.	குறுந்	369	பாலை	தோழி
2.	அகம்	315	"	செவிலி
3.	"	385	"	செவிலி

மருதனிளநாகனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	நற்	362	பாலை	தலைவன்
2.	அகம்	121	பாலை	தலைவன்
3	"	283	"	தோழி

ஔவையார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	குறுந்	15	பாலை	செவிலி
2.	"	388	"	தோழி

பெரும்பதுமனார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	நற்	2	பாலை	கண்டோர்
2.	குறுந்	7	"	"

வெள்ளிவீதியார் பாடிய பாடல்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	குறுந்	44	பாலை	செவிலி
2.	"	149	"	தலைவி

நற்றிணையில் பாடிய புலவர்கள்

வ.எண்.	0நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்	264	பாலை	தலைவன்
2.	இனிச்சந்தநாகனார்	66	"	நற்றாய்
3.	உலோச்சனார்	149	நெய்தல்	தோழி
4.	கண்ணகாரன் கொற்றனார்	143	பாலை	நற்றாய்
5.	பூதன்தேவனார்	29	பாலை	செவிலி
6.	போதனார்	110	"	நற்றாய்

குறுந்தொகையில் பாடிய புலவர்கள்

வ.எண்.	நூ.பெ	பா. எ	திணை	கூற்று
1.	ஈழத்துப் பூதன்தேவனார்	343	பாலை	தோழி
2.	உறையூர் முதுகொற்றன்	390	"	கண்டோர்
3.	படுமரத்து மோசிக்கீரனார்	369	"	தோழி
4.	மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்	144	"	செவிலி
5.	மோசிகீரனார்	84	"	"
6.	மோதாசனார்	229	"	கண்டோர்
7.	தங்கால் முடக் கொல்லனார்	217	"	தோழி

அகநானூற்றில் பாடிய புலவர்கள்

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
1.	உறையூர் மருத்துவன் தாமோதரனார்	257	பாலை	தலைவன்
2.	ஒரோடோகத்துக் கந்தரத்தனார்	95	"	தலைவி
3.	கண்ணம்புல்லனார்	63	"	செவிலி
4.	கருவூர் கண்ணம்பாளனார்	263	"	நற்றாய்
5.	காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்	285	"	தோழி

வ.எண்.	நூ.பெ	பா.எ	திணை	கூற்று
6.	சேந்தம்பூதனார்	207	"	நற்றாய்
7.	சேரமான் இளங்குட்டுவன்	153	"	செவிலி
8.	தாமோதரனார்	105	"	நற்றாய்
9.	நக்கீரர்	369	"	"
10.	மாங்குடி மருதனார்	89	"	செவிலி
11.	வண்ணப்புறக் கந்தரத்தனார்	49	"	"